122

# ஞானயோக அடிகள்

## நினைவு மலர்



1958

5
1-59

உ

சைவம்

திருச்சிற்றம்பலம்

# ஞானியார் அடிகள் நினைவுமலர்

(சொற்பொழிவுத் தொகுப்பு)

சைவ சித்தாந்த மகா சமாஜம்
16, வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4
1958
விலை ரூபா 2

JL
R673n
N58

# உள்ளுறை


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஐந்தொழிற் குறிக்கும் அவை நிருத்தம் | 29 | தமிழ் மறை | ௯௪ |
| கந்தபுராண நுட்பம் | 182 | தேசியத் திருத்தொண்டர் | 78 |
| காஞ்சி திருமணம் | 89 | உவமை | 128 |
| திருத்தினைச் செந்தமிழ் | 217 | பதி பசு பாச விளக்கம் | 129 |
| குரு தரி | ௨௰ | பதிப்புரை | ௪ |
| சித்திரக் குறிப்புகள் | ௨௦ | பெரியபுராணப் பெருமை முறை | 262 |
| இலக்கிய வகைகள் | 62 | விசாரணை | 91 |
| சேக்கிழார் காவியமும் பெரிய புராணமும் | 136 | [illegible] | 113 |
| கலை ஒழுக்கம் | 160 | மீனாட்சி திருமணம் | 197 |
| சொற்குறிப்பு அகராதி | 265 | மூர்த்தி நிலைகள் | 40 |
| தியாகப் பெருமை | 107 | முருகன் தமிழ்மாலை | 9 |
| நாயன்மார் | 94 | முருகன் பெருமை | 169 |
| திருமுறை [illegible] | [illegible] | முன்னுரை | உ |
| திரு. வி. க. [illegible] | | வெளியீட்டுரை | 50 |
| திருவெண்[illegible] | | [illegible] சன்மார்க்கம் | 153 |
| [illegible] | 35 | [illegible] விளக்கம் | 68 |
| | | [illegible] பிரசாரம் | 1 |


84253

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

உ

# முன்னுரை

சைவ உலகில் ஒரு தனி ஞாயிறாயும் தமிழுக்கு ஒரு தனி மதியமாயும் விளங்கியவர், நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தைத் தோற்றுவித்த திருக்கோவலூராதீனம் திருப் பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் [illegible] சுவாமிகள் ஆவர். அப்பெருந்தகையின் நினைவு மலராய் இப் புத்தகம் இந்த மயிலத்தில் நடைபெறும் சமாஜத்தின் 33-ஆம் மாநாட்டில் வெளிவருகிறது.

தமிழ் செய்த மாதவத்தால் இவ்வுலகில் உதித்த இப் பெரியாரின் உயரிய சிறப்புகளை [illegible] [illegible] திருவருள் [illegible] திருப்பியில் தமிழ் மக்கள் [illegible] [illegible] [illegible]. [illegible] பக்கங்களும் பலவகை [illegible]. அருளாளரின் சொற் பொழிவுகள் [illegible]. அவர்கள் சொற்பொழிவு கேட்கும்போது தொல்காப்பியராகவும், திருவள்ளுவராகவும், சேக்கிழாராகவும், இளங்கோ முனிவராக வும் விளங்கினர் என்று பலவாறாக வாழ்த்தினர் தமிழ்முனிவர் திரு. வி. கல்யாணசுந்தரனார் வியந்துரைப்பது [illegible].

நம் சமயக் குரவர்கள் பால் ஞானப்பாலைப் [illegible] [illegible] பல அரிய சைவ நூல்களை இயற்றியும் [illegible] செய்தும் வந்தவர்கள். [illegible] பல இடங்களில் சென்று சைவ சமய உண்மைகளை மக்களுக்கு [illegible] [illegible] சைவாசாரியர்கள், சந்நிதானங்களில் [illegible] பல பெரியார்கள் தந்த ஞான பொக்கிஷத்தைச் சைவ உலகம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



[illegible]

[illegible]

"[illegible]
[illegible]!"

—[illegible]

இங்ஙனம்:

[illegible] } [illegible] முதலியார், பி. ஏ.,
27-12-1938 } தலைவர், சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை.

# பதிப்புரை

['சித்தாந்தம்' பத்திரிகையில் . [illegible]]

" [illegible]
[illegible]"

—[illegible]

" [illegible]
[illegible]"

—[illegible]

[illegible] 7-7-1903 [illegible]



[illegible] 1928-[illegible] "சித்தாந்தம்" [illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் [illegible]

[illegible]



[illegible]

"[illegible]"

[illegible]

[illegible]

[illegible] "[illegible]" [illegible] அடிகளார் வடமொழி தென்மொழி [illegible] பல மொழிகளைப் பல ஆண்டுகள் முயன்று பயின்று தேர்ந்த "பல்கலைக் குரிசில்" ஆவர். இங்ஙனம் செந்தமிழ் [illegible] அடிகளார் செந்தமிழ்[illegible].

[illegible]



[illegible]

"[illegible]"

[illegible]

"[illegible]"

"ஞானியார் விழாமலர்" [illegible]

[illegible]



[illegible] (Microscope) [illegible]

[illegible]

[illegible] (31-1-46) [illegible]

[illegible]

# திரு. வி. க. சிறப்புரை

(திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து எடுத்தது)

ஞானியார் சுவாமிகளின் முழுப்பெயர் சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் என்பது. சுவாமிகள் திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் மடத்தின் தலைவரா யிருந்தவர். அம்மடத்தின் கிளையொன்று திருப்பாதிரிப்புலியூர்ப் அப்பதியிலேயே சுவாமிகளின் உறைவிடமாயிருந்தது.

தமிழ் நாட்டில் எத்தனையோ மடங்கள் உள்ளன. அவைகள் என்ன செய்கின்றன? இல்லை. அம்மடங்களுள் ஒன்றாகிய ஞானியார் மடம் மட்டும் என்ன செய்கிறதோ? இன்ன என்ன செய்தது எது? ஞானியார் சுவாமிகளின் பார்த்த விசேஷம்.

ஞானியார் சுவாமிகள் தென்மொழியில் பெரும்புலமை வாய்ந்தவர்; வடமொழியில் புலமையுடையவர். சுவாமிகட்கு தூய்மையும் தெளிவும். இவை எல்லாவற்றிலும் மேலாகச் சுவாமிகளிடத்தில் இயற்கைப் புலமை அமைந்திருந்தது.

சுவாமிகளை யான் முதல் முதல் 1918-ம் ஆண்டிலே வேலூரிலே காண நேர்ந்தது. ஒரு ஆண்டு விழா மேடையிலே கண்டேன். அந்நாள் நன்னாள்.

நேருக்கு சுவாமிகளை யான் கண்டதில்லை. அவரது சொற்பொழிவைப் பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இளமையில் யான் கண்ட சுவாமி விவேகானந்தரையே. ஞானியார் சுவாமிகள் பேச்சைக் கேட்ட பின்னர் தமிழ் நாட்டில் மற்றுமொரு சுவாமி இருத்தலைக் கண்டேன். தமிழ் நாட்டுக்கும் கொண்டாட்டமாக விவேகானந்தர் இவ்வீரர் என்று என் நெஞ்சம் சொல்லியது.

ஞானியார் சுவாமிகள் அறுபத்தொன்று நிறைவுபெற்று ஆண்டு நிறைவுற்றபோது, அப்பதியில் மணிவிழாப் பெருவிழா (1939) கொண்டாடப்பட்டது. அவ்விழா மலரில்





என் சிறு மொழியும் இடம் பெற்றது. அம்மொழியின் இரண்டொரு பகுதியை அடியிற் காட்டுகின்றேன். [illegible]

......[illegible]......

......[illegible]......

......[illegible]

[illegible]

[illegible] ......

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



[illegible] என் ஞானியாரை [illegible] என்று கேட்டார். [illegible]

ஞானியார் [illegible] (1942) [illegible]

[illegible]

1941-ம் ஆண்டு [illegible]

—திரு. வி. க.

# ஞானியார் சுவாமிகளுடைய சரித்திரக் குறிப்புகள்

(பழைய 'சித்தாந்த' இதழ்களில் இருந்து எடுக்கப்பெற்றது)

[illegible]

[illegible] (17-6-1875) [illegible] 10½ [illegible]

| | | | |
|---|---|---|---|
| | புதன் சுக்கிரன் | சூரியன் இராகு | |
| | இராசி | | |
| சனி | | | குரு |
| லக் | கேது | செவ்வாய் | |



[illegible]

[illegible]

[illegible] (20-11-1889) [illegible]

1908 [illegible]

கூச் சென்ற விழாக்களில் தலைமைவகித்த பெரியார்கள் பலர். அவர்கள் மூலம் சுவாமிகளது கல்வியறிவு, ஒழுக்கம், சொற்திறம் முதலியன விளங்கிப் பரவுற்றன. பாண்டித்துரைத் தேவர் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கம் தொடங்குதற்கு மூலகாரணமாக விளங்கியவர்கள் நம் சுவாமிகளேயாவர்.

அதைக் கேள்வியுற்ற ஜே. எம். நல்லசாமி பிள்ளை, நாகை வேதாசலம் பிள்ளை (உயர்திரு. மறைமலை அடிகள்) முதலிய சைவப் பெருமக்கள், சென்னையில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கட்குப் பின், சைவத்தை வளர்க்க ஒரு பெருங் கழகம் அமைக்க வேண்டுமென்று கருதித் திருப்பாதிரிப்புலியூர் சென்று, சுவாமிகளிடம் தம் கருத்தைத் தெரிவிக்கச் சுவாமிகளும் தம் திருமடத்திலேயே (7-7-1905) விசுவாவசு ஆனி மீ "சைவசித்தாந்த மகாசமாஜம்" அமைத்துத் தந்தார்கள். சுவாமிகளுடைய நன்கொடையின் ஆதரவில் 1928 ஜனவரி மீ "சித்தாந்தம்" மலர் மீண்டும் தொடங்கி வெளியிடப்பட்டது.

அன்றுமுதல் இன்றுவரை "சித்தாந்தம்" சிறப்புற நடந்துவரும் பெருமைக்குக் காரணம், சுவாமிகளுடைய ஆசீர்வாதமும், காலஞ் சென்ற திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களின் தளரா உழைப்புமாகும்.

1929 மே மீ சுவாமிகளவர்கள் தம்முடைய மடத்திலேயே பெரிய சைவர் மகாநாடு ஒன்றைக் கூட்டித் திரு. மறைமலை அடிகளார் தலைமையில் ஆறு நாட்கள் நடத்தித்தந்தனர். அம் மகாநாட்டுக்கு வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும்நல்லுலகிலுள்ள சைவசபைகள் எல்லாம் பிரதிநிதிகளை அனுப்பிவைத்தன. அம்மகாநாட்டில் சைவத்தின் அடிப்படையான கொள்கைகள், தேவையான சீர்திருத்தங்கள், வளர்ச்சி முறைகள் முதலியன சொல் சொல்லாக ஆராய்ந்து முடிவு செய்யப்பெற்றன. அவையே இன்றும் சமாஜத்தின் குறிக்கோளாக உள்ளன. அம் மகாநாட்டின் தீர்மானத்தின்படியே சமாஜம் பன்னிருதிருமுறைகளையும், பதினான்கு சாத்திரங்களையும், சிறுநூல்களையும், அன்றி வெளியீடுகளையும் ஆயிரக்கணக்கில் அச்சிட்டு அடக்கவிலைச் சுத்தப் பதிப்புகளாகத்



தமிழ்மக்கள் இல்லங்கள் தோறும் சேர்ப்பித்து வந்தது. சுவாமிகள் மாநாட்டிற்கு வந்திருந்தோர்களை எல்லாம் உபசரித்த பெருமையைப்பற்றி "நவசக்தி" "லோகோபகாரி" முதலிய பழைய பத்திரிகைகளில் வியந்து எழுதப்பட்டுள்ளது.

அவ்வருடம் ஜூன் மாதத்தில் சுவாமிகளுக்கு முதுகில் ஒரு பிளவை ஏற்பட்டு "தமிழ்நாடு செய்த தவத்தால்" குணமடைந்தார்கள். அப்போது அவர்களுடைய ஜாதகத்தில் ஆறுமிடத்திலுள்ள ராகுதசையினாரம்பம் என்னலாம்.

1929 டிசம்பர் மீ திருவெண்ணெய் நல்லூரில் நடந்த சமாஜ ஆண்டு விழாவில் தலைமை வகித்தார்கள்.

1932ல் குடியேற்றம் என்ற வழியில் தவறிவிழுந்து கால் முறியப்பெற்று, இறையருளாலும் குருவருளாலும் எலும்பு கூடிக் குணமடைந்தார்கள்.

1933 மே மீ திரு. பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் அவர்களின் தலைமையில் புலனையில், சுவாமிகளுடைய சஷ்டியப்த பூர்த்திவிழா நடைபெற்றது. அவ் விழாவில் திரு. த. வே. உமாமகேசுரம் பிள்ளை - கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் அவர்களுக்குச் சுவாமிகள் "செந்தமிழ்ப் புரவலர்" என்ற பட்டத்தை அளித்தார்கள்.

1934ல் இரண்டாம் முறை சென்னைக்கு விஜயம் செய்த போது மயிலாப்பூரில் அவ்வாண்டு நடந்த சமாஜ மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்கள்.

1935ல் திருக்கோவலூர்த் திருமேனிச்சரத்தில் ஒரு மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்கள்.

1936ல் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ பாடலேசுவரர் திருக்கோவில் தருமகர்த்தாவாகப் பணிபுரியும் பேற்றைத் தமிழ்நாடு பெற்றது. அக்கோவில் வைகாசித் திருவிழா அறிக்கையாகத் தயாரித்துச் சுவாமிகள் வழங்கிய ஒரு அரிய நூலில் திருவிழாக்களைப் பற்றிப் பன்னிரு திருமுறைகளிலும், சங்க

இலக்கியங்களிலும் காணப்படும் குறிப்புக்களெல்லாம் தொகுக்கப்பட்டுள்ளன.

1937ல் வேலூரில் நடந்த சமாஜ ஆண்டு விழாவிலும் சுவாமிகள் தலைமை வகித்தார்கள்.

1938ல் கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவிற்குத் தலைமை வகித்துக், கரந்தைப் புலவர் கல்லூரியைத் துவக்கி வைத்தார்கள். சங்கத் தலைவருக்குத் "தமிழவேள்" என்ற பட்டம் தந்தனர்.

அவ்வாண்டு இடது துடையில் ஒரு கட்டியேற்பட்டுத் தக்க சிகிச்சையினால் பாடலேசன் திருவருள் துணைகொண்டு குணமடைந்தார்கள்.

1939 நவம்பர்மீ அவர்கள் பட்டத்துக்கு வந்த ஐம்பதாவது ஆண்டு நிறைவுவிழா மிகச் சிறப்பாகத் திருமடத்தில் ரசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் தலைமையில் நடந்தது.

1941 டிசம்பர்மீ 25உ திருச்சிராப்பள்ளியில் சமாஜ முப்பத்தாறுவது ஆண்டு நிறைவுவிழா சுவாமிகளின் தலைமையில் நடந்தது. அதுவே சமாஜத்திற்கு அவர்கள் ஆற்றிய கடைசிப் பணியாகும்.

19-1-1942 திங்கட்கிழமை காலை அங்கிருந்து பழனிக்குச் சென்றனர். 23-1-1942 வெள்ளிக்கிழமை பழனியையடைந்து, பழனிச் சைவசித்தாந்த சபை முதலாண்டு விழாவில் தலைமை வகித்து 31-1-42 சனிக்கிழமை மாலையில் "சிவராஜயோகம்" என்ற சொற்பொழிவாற்றினார்கள். அதுவே அவர்கள் செய்த கடைசிச் சொற்பொழிவு.

சொற்பொழிவு முடிந்தவுடன் இரவு சுமார் 9½ மணிக்குத் தமது இருப்பிடம் சென்று வெள்ளித்தேர்க் காட்சி கண்டு, சிறிது ஓய்வெடுத்துக்கொண்டு காலை 8 மணிக்கு எழுந்து தேவார திருவாசகங்கள் கந்தரலங்காரப் பாடல்களை ஓதிக்கொண்டே பல்லக்கிலேறிப் பழனியைவிட்டுப் புறப்பட்டனர். புறப்பட்டு எட்டுமைல் தூரம் சென்றவுடன்



பொழுது புலர்ந்தது. சுவாமிகள் காலைக்கடனை முடித்துச் சிறிது வெந்நீர் வைக்கச் சொன்னார்கள். வெந்நீர் ஒருவாய் அருந்தினார்கள். மற்றொரு வாய் அருந்துவதற்குள் அவர்களுடைய சரீரம் செயலற்றுவிட்டது. திருப்பாதிரிப்புலியூர்த் திருமடத்திற்கு அவர் சரீரம் கொண்டுவரப்பட்டு 1-2-42 ஞாயிற்றுக்கிழமை சுமார் இரவு 11 மணிக்குக் கொலுவிருத்தப்பட்டது. 2-2-42 மாலை 4 மணிக்குச் சமாதிக்கிரியைகள் முற்றுப்பெற்றன.

திருஞான சம்பந்தர் திருநாளாகிய வைகாசி மூலத்திற் றோன்றிப் பழனியப்பன் திருநாளாகிய தைப்பூசத்தில் பரிபூரணம் எய்தியது, சிவபுண்ணியவசத்தால் சுவாமிகளுக்கு ஏற்பட்ட பாக்கியமாகும். அநாயாச முடிவையும் அத்திருவருளே அவர்களுக்கு இனிது கிடைக்கச் செய்தது.

ம. ப. தியாகராச முதலியார், பி. ஏ.,
செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாஜம்.

உ

# குரு துதி

**[ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்தது]**

[ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் **1932**-ஆம் ஆண்டில் தமக்கு ஏற்பட்ட கால்என்பு முறிவை, மிக முயன்று பார்த்தும் பொருந்துவிக்க இயலாமல் மருத்துவர்கள் கைவிட நேர்ந்தவழி, தமது திருக்கோவலூர் ஆதீனத்தினை நிறுவிய முதற் பெருங் குரவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மீது '**குருதுதி**' எனப் பல பாடல்கள் பாடி வழிபட்டு, மிக விரைவில் குருவின் திருவருளால் முறிந்த கால்என்பு கூடப்பெற்று நலம் எய்தித் தமது திருத்தொண்டினை நாளும் இனிது நடத்தும் நிலையுற்றார்கள். அப்பாடல்களிற் சிதைந்தன பல; கிடைத்தன சில. கிடைத்த சில பாடல்கள் "சித்தாந்தம்" இதழின்கண் முன்பு (மலர் 16, இதழ் 1) வெளிவந்தன. அப்பாடல்கள் ஈண்டு எடுத்துப் பதிப்பிக்கப்பெற்றன.]

உலகி லுயர்ஞான மோங்க வுதித்தாய்
தலைமைபெறு ஞானமெனச் சாற்றி—மலநீங்க
நின்னை யடைந்தேனை நீயே யகற்றிவிடின்
தன்னை யறிவேனோ சாற்று. 1

கோவற் பதிவாழ் குருபரனே யாறுமுக
தேவவெனக் கியாவருளர் செப்புவாய்—ஓவலிலா
ஆணவத்தி லாழ்ந்த அடியேற் கொளிஞானம்
பூணுறச்செய் வாரைப் புகன்று. 2

புகலாக நின்பாற் புகுந்தேனைக் காத்து
திகரிலா ஞானநேர் வித்துத்—தகைபெறுநின்
தாமரைநேர் சீரடியிற் சார்விக்க வேண்டுகிறேன்
கோமளமார் ஞானகுரு வே. 3

கொடியேனை யாண்டு குறையகற்றத் தோன்றிப்
படியாதி தத்துவத்தின் பாங்கை—மடியுடையேற்
கைய மகல அறிவித்த ஞானகுரு
வையமதி லாறுமுக வன். 4



வன்னெஞ்சே யாறுமுக வள்ளல் குருராயன்
பொன்னடியைப் போற்றுதற்குப் போகுதம்வா—நின்னொடுநான்
பன்னாளு மொத்துநடந் தென்ன பயன்கண்டேன்
என்னொடுவா வுண்டுபய னெண். 5

எண்ணம் பலநமக் கிவ்வுலகிற் செய்தற்கே
எண்ணுவன செய்ய இயலவில்லை—எண்ணியதைச்
செய்யும் வலந்தந்து செய்விப்பா னாறுமுக
அய்யன் அவனடிசேர்ந் தால். 6

அன்பரெலாம் போற்றுமெழி லாறு முககுருவை
இன்புறுவா னெய்தினேன் ஏழையேன்—துன்பமெலா
மோட்டினான் இன்ப உருவாகத் தானிருத்தல்
காட்டினான் கண்டுகொள வே. 7

கண்டுணர வல்லேனோ காட்டாயே லிவ்வுலகிற்
பண்டைமல வாணவத்தால் பாழ்பட்டேன்—தொண்டர்க்கு
வேண்டுநலங் கூட்டுவிக்கும் வித்தகனே யாறுமுக
ஆண்டவனே செய்க அருள். 8

அப்பணியுஞ் செஞ்சடையெம் அப்ப னருட்பெருக்கால்
இப்புவியோ ருய்ய எழுந்தருளும்—ஒப்பில்
உருவே யருவே யுபயமே ஞானம்
குருவே யருள்வதெந்நாள் கூறு. 9

காயமே மேலாக் கருதுமய லென்றொழியும்
ஆயபொரு ளாசை யகல்வதென்றோ—தூயர்
துதிக்குமுயர் கோவற் சுருதிசொல் தேவே
கதிக்குநின் தாளே கதி. 10

கதியெனக்குன் காற்கமலம் காண்பார் வியக்கும்
மதியெனக்குன் வாய்வருநல் வாய்மை—பதியெனக்கு
நீயன்றி வேறுண்டோ நேரில் குருபரனே
தாயன்றிச் சேய்க்குயார் சாற்று. 11

முன்னைந் தெழுத்தின் முதலி லுளநமவைப்
பின்னைந் தெழுத்தினிலே பின்னிறுத்திப்—பின்மூன்றாற்
காரண ஐந்தெழுத்தைக் கட்டுரைத்தாட் கொண்டனையே
ஆரணஞ்சொல் கோவலழ கா. 12

ஒன்றுக்கும் பற்றேனை யுன்னியன் றாட்கொண்டாய்
இன்றேன் விடுக்கின்றா யெங்குருவே—என்றும்
இயல்பொன் றுயர்ந்தோர்க் கென்பர் பெரியார்
மயல்போக்கு மாகுரு வே. 13

நின்னரு ளின்றே னிலையின் புறுவேனோ
முன்வரு மாறு முககுருவே—இன்னலெலாம்
பாற்றி யிருவினையாற் பாரினுதிக் காவண்ணம்
தேற்றுவா யென்னைத் தெரிந்து. 14

நானெங்கே நூலெங்கே நன்குணர்த்தும் போதமெங்கே
ஆனமயல் போவ தெங்கே யாரியனே—தேனென்ன
இன்சொ லெனுமைந்தை யென்செவியி லேற்றாயேல்
வன்சொல்லி லாறுமுக வா. 15

வாவென் கருணை வழங்கி யருகிருத்தித்
தாவிலா வைந்தெழுத்தைச் சாற்றினை—யோவிலா
தெண்ணினே னெண்ணவெண்ண உற்றமுன் றொன்றாகப்
பண்ணினையீ தென்ன பகர். 16

பகர்ந்தனை யன்றொருகாற் பஞ்சாக் கரத்தைப்
பகர்ந்தனன்யான் போகின்ற பாசம்—நுகர்ந்திடுமா
ஞானந் தனைநல்கும் நாளும் வருமோதான்
வானஞ்சொ லாறுமுக வா. 17

குருவே சிவமெனக் கூறினை ரென்ன
உருகே னறிந்தும்மீ துண்மை—தெரியாமைக்
கெல்லையிலை இன்புறுவ தெங்ஙனநான் தேசிகனே
சொல்வா யெனக்கொரு சொல். 18

நான்செய்த தீவினையோ நாடி னளவில்லை
கான்செய் மலர்நிகர்நின் காற்றுணையை—வான்வாழுந்
தேவர் பரவுந் திருக்கோவ லூர்வந்து
சேவிக்க மாகுருவே செய். 19

ஓடி யுழலுள்ள முன்பாத தாமரையை
நாடும் படியருளை நல்குவாய்—பாடு
மடியாரைக் காத்தருளு மாறுமுக தேவே
படிமீதில் யாரெனக்குப் பற்று. 20



பற்று மிடமறியேன் பற்றிப் பலபேரை
யுற்ற துணையா வுணர்ந்துழன்றேன்—சற்றும்
பயனில்லை யென்றுணரப் பண்ணியருள் செய்க
மயல்போக்கு ஞானகுரு வே. 21

கோவலூர் வந்த குருபரனே யாறுமுக
தேவனே நின்னடியைச் சேர்ந்திடுவேன்—ஆவல்
தருதுன்பந் தேர்ந்திலேன் சற்சனரைச் சாரேன்
பருகுவது முண்டோவின் பம். 22

இன்பமென்றா லெங்கே யெனவே யெழுமுள்ளம்
துன்பமென் றால்மிகவே தூரப்போம்—வன்பந்தம்
போக்குங் குருபரனே பொய்யனேற் கென்றருள்வாய்
வாக்கு மனங்கடந்த வா. 23

உன்னரு ளில்லையே லுண்ணும் உணவுண்டோ
உன்னரு ளில்லையேல் ஓதலெங்கே—உன்னருள்
இவ்வளவுஞ் செய்வித்தும் ஏழை யுணர்ந்திலனே
பவ்வநேர் தேசிகநீ பார். 24

ஞானம் நினதா நவில்வ ருலகிலுளார்
நானற ஞானமிக நல்கியெனை—மோனநிலை
நிற்கச்செய் கோவ னிகரிலாச் சண்முகனே
கற்பதற் குண்மைநீ காட்டு. 25

காட்டென்றால் காட்டுவையோகண்டவர்க்கின்பளிப்போய்
ஆட்கொண்ட நீயன்றி யாருளர்—தாட்கமலந்
தந்து பவப்பிணியைத் தாரணியி லோட்டற்குப்
பந்தமகல் சண்முககண் பார். 26

குருவி னடியிணையைக் கூடுகநீ நெஞ்சே
உருகி யவனுரைத்த வுண்மைப்—பொருளைத்
தெரிந்தெண்ணி யெண்ணித் தெளிகவெப் போதும்
மருந்துபிற விக்கவனு மம். 27

அவனுமம் அல்லல் அகற்றும் அவன்பேர்
பவநாசம் செய்யுமிப் பாரில்—தவஞ்செய்வோர்
போற்றுதிருக் கோவலூர்ப் புண்யகுரு வாறுமுகன்
ஆற்றலுறு மாசாரி யன். 28

மறதி மிகவுடையேன் வந்துனை வாழ்த்தேன்
பிறாற் பெருமதிப்பைப் பேணித்—தறையினில்யான்
குற்றம் பலசெய்வேன் கோவற் குருபரவென்
பற்றற நீகடைக்கண் பார். 29

பார்த்து விடிலென்றன் பாவம் பறைதருமே
தீர்த்தந் தருகோவற் றேசிகனே—மூர்த்தம்
நினைநினைக்கின் ஞானநிலை நேர்ந்திடுமென் றோர்வேன்
தனைநினைக்கத் தண்ணளிசெய் வாய். 30

பொய்யகன்ற நிட்டானு பூதியைநான் வாசியேன்
செய்ய நினதடியைச் சிந்தனைசெய்—துய்யும்
வகையறியேன் கோவல் வருகுருவே வாழ்த்துந்
தகைநீ யெனக்கறியச் சாற்று. 31

சாற்றுநா ளென்றோ தருகோவ லாரியனே
மாற்றந் தெரிந்துரைக்கு மாண்பிலேற்—காற்றவுமே
போற்று மறைமுடியிற் பொன்று வொருமொழியென்
ஏற்ற முறுமொழியை யே. 32

ஒருமொழியை நீயருளி னுற்றிடுவே னின்பம்
ஒருமொழியே யின்பமுறு விக்கும்—ஒருமொழியுந்
தேறு வடியேன் தெளிந்தின்பம் பெற்றிடுவான்
பேறுங் குருபாநீ பேசு. 33

பேசிடுவேன் வீண்சொற்கள் பேசிப் பயன்சொற்கள்
ஆசகல நின்றிலனென் னாரியனே—பாசமைந்தும்
பாற்றிப் பதிஞானம் பல்குமா பார்த்தருள்செய்
தேற்று தொழிலின தே. 34

மருவார்ந்த கொன்றையணி வள்ளல்வாழ் கோவற்
குருமணியை ஞானமிலேன் கூடித்—திருவென்பாள்
கண்ணருள் பெற்றேன் கலைமா னருள்பெற்றேன்
எண்ணு முமையருளோ டிங்கு 35

இங்கன்றி அங்கும்யா னின்பம் பெறுதற்குப்
பொங்குசிவ ஞானம் பொருந்துவேன்—எங்கும்
நினதுருவாக் கண்டு நிலைத்தசுகம் என்றோ
அனக பெறுவ தறை. 36



குருவரு ளின்றிக் குலவுவாழ் வுண்டோ
குருவரு ளின்றிக் குறுகும்—திருவுண்டோ
எல்லாரும் போற்று மெழிற்கோவ லாறுமுக
நல்லானே நல்குதிரு வாழ்வு. 37

நின்னருளி னாயேன் நினைப்பேன் நினதடியை
நின்னருளி னாயேன் நிகழ்த்துவேன்—நின்புகழை
நின்னருளி னாயேன் நினைவணங்கும் பேறுற்றேன்
என்ன குறையு மிலேன். 38

குறையேது நின்னடைந்த கூரறிஞர் கட்கு
மறையோது ஞானகுரு வள்ளால்—தறையில்
உயர்கோவல் வந்த உறுபெருந் தேவே
மயர்வகற்றி யாள்கருரு வே. 39

குருவே குருவே குருவே குருவே
குருவே யெனப்பலகால் கூறி—வருவேன்
பலநாளா கோவற் பதிவாழ் குருவே
நலவழியி லென்னை நடத்து. 40

எல்லாஞ் சிவமென் றியம்பவுங் கேட்டேற்குப்
பொல்லா வினைகள் பொருந்துதல்ால்—நல்ல
அறிவெய்தப் பெற்றிலனே யாரியனே நின்னைக்
குறிக்கும் வழியினைநீ கூறு. 41

நின்றாட் கமலமலர் நீதியறி யேன்றலையிற்
பொன்று வழகாப் பொருந்தாதோ—குன்றுத
கோவலூர் ஞான குருபரனே யாறுமுக
தேவவெனை நீயருளாற் றேற்று. 42

தேற்றிடினீ யானுந் தெளிவுறுவே னின்னருளாற்
போற்றி வழிபடுவேன் புன்மையேன்—ஆற்றுள்ளே
முன்வரு பெண்ணை முழுதணியுங் கோவல்வாழ்
பன்னுகுரு வேகடைக்கண் பார். 43

நீசொல் உபதேசம் நித்தலும் நான்செபியேன்
தேசஞ்சொ லாறுமுக தேசிகனே—மாசற்ற
நல்லொழுக்கங் கல்விவளம் நல்லவர்தம் நட்புடனே
நில்லென் றொருசொல் நிகழ்த்து. 44

தெரிவையர்த மாசை திகழாசை யாசை
விரிநிலத்தி னாசை விரும்பி—உரவோர்
துதிகோவ லாறுமுக தூயகுரு நின்னைக்
கதியென் றடையேனைக் கா. 45

தக்கதொரு காலத்தில் தக்கதொரு நல்லிடத்தில்
தக்கதொரு சாதனையைச் சாதித்துத்—தக்கவர்கள்
போற்றுகுரு வாறுமுக புங்கவநிற் சாரேனைத்
தேற்றுவ தெந்நாளோ செப்பு. 46

என்னைப் பொருட்படுத்தி யென்னைநீ கொண்டதன்றித்
தன்னையெனக் கீந்த தயாநிதியே—பன்னுவதென்
நின்னை மறப்பனெனி னீசனே னுய்வேனோ
மன்னுகோ வற்குருவே. 47

குருபூசை யாலே குவலயம் ஓங்கும்
குருபூசை யாலே குடிகள்—மருவுவரே
செல்வம் புகழாயுள் சேர்ந்த வுளமனைவி
புல்லும் புதல்வர்தம் பேறு. 48

கோவல்வாழ் ஞான குருபூசை செய்தோர்கள்
தாவில் வளமிகவித் தாரணியில்—ஓவாது
பெற்றுவப்ப தன்றியே பேரின்ப மும்பெறுவர்
கற்றவர்கள் சொல்விது காண். 49

உ
சிவமயம்

# ஞானியார் நினைவு மலர்

## 1. விநாயகப் பிரபாவம்*

உலகத்திலுள்ள மக்களனைவரும் உயர்வையே விரும்புகிறார்கள். மக்களின் உயர்வு அவர்கள் ஊக்கத்தின் அளவினதாகும். "வெள்ளத் தனையமலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனைய துயர்வு" என்ற திருக்குறளை நோக்குக. எடுத்துக்காட்டுவமையணி வாயிலாகத் திருவள்ளுவர் ஊக்கமே உயர்வுக்குக் காரணம் என்பதைஇனிது விளக்குகிறார். ஊக்கமுடன் முயற்சிப்போரைத் தடைசெய்து அவர்கள் மனத்தைக் கலங்கவைப்பது இடுக்கண். இவ்விடுக்கண் தெய்வத்தால், பொருளின்மையால், மெய்வருத்தத்தால் வருதல்கூடும். "வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக்கெடும்" என்ற குறட்குப் பரிமேலழகர் உரை கூறுமிடத்துத் "தன்உள்ளத்தான் ஒன்றனை நினைக்க அத்துணையானே கெடும்" என்று குறிக்கிறார். எவ்வொன்றனை நினைக்க அதன் துணையால் இடும்பை கெடும்? அவ்வொன்றே விக்நேஸ்வரர் என்ற விநாயகர். "பிடியதனுருவுமை கொளமிகு கரியது வடிகொடு தனதடி வழிபடு மவர் இடர்கடி கணபதி" என்று திருஞானசம்பந்தரும் "என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்......அத்தி முகத்தான்" என்று நம்பியாண்டார் நம்பிகளும் பிறரும் திருமுறைகளுட் கூறுவனவற்றை நோக்குக.

இனி விநாயகர் என்ற சொல்லின் பொருளைச் சிறிது கவனிப்பாம். வி+நாயகர்=நாயகனில்லாதவர் (விமலன்=மலமில்லாதவன் என்பதைப்போல). அதாவது தம்மை நடத்துபவரில்லாதவர், சுதந்திரர், ஈண்டு கடவுட்டன்மைகள் எட்டனுள் ஒன்றாகிய தன் வயத்தனாதல் வலி

*கோவூர் ஸ்ரீசுந்தரேசுவரர் ஆலயத்தில் நடந்த பிரஹ்மோத்ஸவத்தில் முதல்நாள் (22-6-39ல்) ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் நிகழ்த்திய உபந்நியாசத்தின் சுருக்கம். திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் குறிப்பெடுத்தெழுதியது.

யுறுத்தப்படுதலை நோக்குக. விநாயகருடைய அஷ்டோத்தர சஹஸ்ர நாமங்களுள் ஒன்று " ஓம் அநீஶ்வராய நம: " என்பது. இதன் பொருள் தன்னை நடத்தும் ஈசுவரன் அல்லது நாயகன் இல்லாதவன் என்பதாகும். மேலும் " முதாகராத்த மோதகம் சதாவிமுக்திதாயகம் கலாதராவதம்ஸகம் விலாசலோக ரக்ஷகம் அநாயகைகநாயகம் விநாசிதேபதைத்யகம் நதாசுபாசுநாசகம் நமாமிதம் விநாயகம் " என்ற சுலோகத்தில் அநாயகைகநாயகம் என்ற தொடரை ஆராய்க. அநாயக+ஏகநாயகம் என்ற பதங்களாக இத்தொடர் பிரிகின்றது. அதாவது தமக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும் தாமே எல்லா நாயகர்கட்கும் நாயகராகிய ஏகநாயக நிலையிலும் உள்ளவர் விநாயகர் என்று இத்தொடர் பொருள் தருகின்றது. வி+நாயகர்=விசேஷமான, எல்லோருக்கும் மேலான நாயகர் என்றும் பொருளுண்டு. இவ்விருபொருளும் முடிவில் ஒரு கடவுளையே குறித்தலை நோக்குக.

சிவஞான சுவாமிகள் கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழில் இவ்வுண்மையை அழகாகக் கூறுகிறார்.

" ஏர்கொண்ட தன்னைத் தளைப்பவரும் ஊருநரும் இலரென்ப
துலகு தேறற்கு - எடுத்தவெம் பாசமோ டங்குசந்தன் காத்தேந்தி
மததாரை சிதறிப், பார்கொண்ட எண்திசைத் தறுகட் களிற்றுடல்
பனிப்பச் செவிக்கா லெழீஇப் - பகிரண்ட முற்றும் புகுந்துலாய்க்
கலைசையிற் பதியுமோர்களிறு "

இப்பாடலில் விநாயகர் கையிலுள்ள பாசம் அங்குசம் ஆகிய இரண்டும் குறிக்கும் உண்மை அழகாக விளக்கப்படுகிறது. பாசமும் அங்குசமும் யானைப் பாகன் கையிலிருப்பவை. ஆனால் இங்கு யானையிடம் உள்ளன. எனவே இந்த யானையை அடக்கும் பாகர் (அல்லது நடத்தும் நாயகர்) இல்லை, இந்த யானை நாயகனில்லாத விநாயக யானை. பாசமும் அங்குசமும் பாகனிடத்துள்ளவை, இங்கு விநாயகரிடமுண்மையால் இவர் ஒரு பாகராகின்றார். இவர் நடத்தும் யானைகள் யாவை? உயிர்களாகிய யானைகளை நடத்துகிறார். இக்கருத்தை மிக அழகாக,

" மும்மை மலமா மத முற்றுப்போத முழுத்தறியற வீசி
முகிழ்த்தலர் அன்பின் சங்கிலியுதறி முதிர்ந்த அருட்கூடத்



திம்மென நீங்கி வெளிக்கொடு புவன மெனுங்கடுவன மோடி
எப்பாகர்க்கு மடங்கலவாகி யியங்கும் உயிர்க்கரிகள்
தம்மை விடாது தொடர்ந்து பிணிப்பத் தகும் அங்குசபாசம்
தாங்குதல் கண்டும் "

என்று ஷை பிள்ளைத் தமிழில் மற்றொரு பாடல் கூறுவதை நோக்குக.

சாதாரண வழக்கத்தில் பெண் தன் கணவனை நாயகன் என்கிறாள், வேலைக்காரன் எஜமானனை நாயகன் என்கிறான், வன்னிய குலத்தவர்கள் நாயகர் என்றே பட்டப் பெயர் வைத்துள்ளார்கள். இவ்வாறு கூறப்படுவோரெல்லாரும் உடல்பற்றிய நாயகம் செலுத்துபவர்களேயாவர். உயிரைச் செலுத்தும் நாயகம் விநாயகருக்கே உரியது. ஒரு பாகன் யானையை மேடுபள்ளம் தவிர்த்துச் சமபூமியில்நடத்துவான். அஃதே போல் விநாயகரும் உயிர்க்கரிகளை, மேடாகிய விருப்பம் பள்ளமாகிய வெறுப்பு என்பவற்றைத் தவிர்த்துச் சமபூமியாகிய இருவினை யொப்பின் வழிநடத்துகிறார்.

இத்தகைய நாயகரை நாம் அறிந்துகொள்ள வேண்டாமா? " தம்மானை யறியாத சாதியாருளரே " என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுவதை மறக்கலாமா? விநாயகருடைய பெருமைகளைப் பல உபநிடதங்கள் விரிவாகக் கூறுகின்றன. கணபதி உபநிஷத்தில் " த்வம் ஆநந்தமய:த்வம் பிரஹ்ம மய: த்வம் சச்சிதாநந்த அத்விதீயோஸி " என்றும் " த்வம் குணத்ரயாதீத:, த்வம் தேஹத்ரயாதீத:, த்வம் காலத்ரயாதீத:" என்றும், " சர்வம் ஜகத் இதம் த்வத்தோஜாயதே, சர்வம் ஜகத் இதம் த்வத்தஸ்திஷ்டதி, சர்வம் ஜகத் இதம் த்வயிலயமேஷ்யதி " என்றும் கூறப்பட்டுள்ளன. இவற்றின் பொருள் சுருக்கமாகக் கீழ்வருமாறு:—விநாயகர் ஆநந்த மயமாயிருப்பவர், பெருமையுடையவர், சச்சிதாநந்த ஸ்வரூபி, குணங்கடந்தவர், தேகங் கடந்தவர், காலங்கடந்தவர், முத்தொழில் நடத்துபவர் என்பதாம். இப்பெருங் கடவுளை வழிபடுமாறு இவ்வுபநிடதம் இறுதியில் " யஏவம்வேதா மஹாவிக்நாத் பிரமுச்சதே மஹா தோஷாத்பிரமுச்சதே சர்வ வித்பவதி சர்வ வித்பவதி " என்று கூறுகிறது.

விநாயகரைப் பிரணவ ஸ்வரூபி என்று கூறுவது அனைவரும் அறிந்த தொன்று. "ஓம் ப்ரண வானன தேவாய நம:" என்ற மந்திரம் அவர் நாமாவளியிலிருப்பதை யறிக. ஓம் என்ற பிரணவம் தமிழ் நாட்டில் பிள்ளையார் சுழியாக மாறிச் சுருங்கிப் பழைய வழக்கில் சாசனங்கள் முதலியவற்றின் முதலிலும் இறுதியிலும் எழுதப் பெற்றது. பழைய காலத்தில் வேதம் ஓதுவோர் ஓம் என்றே தொடங்குவர். இக்காலத்தில் ஹரி ஓம் என்கின்றனர். பதினொராந் திருமுறையில் மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையுள் (அ-வது பாட்டில்) அதிராவடிகள் "மொழியின் மறை முதலே...எங்கள் கணபதியே" என்று கூறுவதை மறத்தலாகாது. பிரணவத்துக்கு வரிவடிவமும் ஒலிவடிவமும் உண்டு. வரிவடிவம் விநாயகர் உருவத்திலும் ஒலிவடிவம் அவருடைய ஆற்றலிலும் திகழ்கின்றன. ஓம் என்பது சமஷ்டிப் பிரணவம், அகார உகார மகாரங்களாகப் பிரித்தறிவது வியஷ்டிப் பிரணவம். அ+உ=ஓ என்பது வடமொழியிற் குணசந்தி யெனப்படும் (பாத+உதகம்=பாதோதகம் என்புழிப்போல), ப்ர + நவ = ப்ரணவ (=என்றும் புதியது) என்று வடமொழியிற் புணரும். பிரணவ சப்தம் "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே" என்ற திருவெம்பாவை வாக்கியத்தின் கருத்தை நினைவூட்டுகிறது. "ஓம் இத்யேகாக்ஷரே மந்த்ரஸ்தித : ஸர்வகத சிவ :", "ஓம் இத்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வஸந்தேயோகின : பிரணவம் சர்வவர்நாணும் ஜீவபீஜமுதாஹ்ருதம்", ஓம் "நமோ ஹம்பதார்த் தாய சர்வவேதா யத்பத மாமநந்தி தபாம்ஸி சர்வாணிச யத்வதந்தி யதிச்சந்தோ பிரஹ்மசரியம் சரந்தி தத்தேபதம் .சங்க்ரஹேண ப்ரிவீமி ஓம் இத்யேதத்", "ஹரஸ்ஸர்வஸ்ய ஹாரணத் விபுத்வாத் விஷ்ணுருச்யதே பகவான் சர்வ விக்ஞாநாத் அவநாதோமிதிச்ம்ருத :" என்ற வேதாகம வாக்கியங்கள் பிரணவத்தை ஒரு சிறிது விளக்குவன.

விநாயகருக்குப் பிரணவமேயன்றி விநாயக காயத்ரி என்ற மந்திரமு முண்டு. பதினாறுவகை மூர்த்தங்கள் விநாயகருக்குண்டு. கலியாண மாகாத ஒருவனைப் பார்த்து நம்மவர் 'விநாயகருக்குப் பெண்பேசி முடித்தால் இவனுக்கும்,



முடியும்" என்று கேலி செய்கின்றனர். இது பெரும் பாவம். விநாயகருக்கு சித்தி, புத்தி, வல்லபை என்ற மூன்று சக்திகள் உண்டு. பல ஆலயங்களில் தேவிமார்களுடன் விநாயகர் காட்சியளிக்கிறார்.

விநாயகருடைய உருவத் திருமேனியை உற்று நோக்கினால் பல அரிய உண்மைகள் புலனாகும். அவர் ஆணுமல்லர், பெண்ணு மல்லர், அலியுமல்லர். தலை யானைத்தலை, உடல் தேவ வுடல், கால் பூதக் கால், ஒற்றைக் கொம்பு முதலிய உறுப்புக்கள் உணர்த்தும் உண்மையை மிக அழகாகச் சிவஞான சுவாமிகள் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் காப்புச் செய்யுளில்,

"மணிகொண்ட கோடொரு மருங்குண்மையாற் பெண்மைவடி
  வென்றுமஃ தின்மையோர்
மருங்குண் மையாலாண் மைவடிவென் றுமீதுகீழ்
  மாறியதிருக் காட்சியால்
அணிகொண்ட உயர்திணையதென்று மஃறிணை யென்றும்
  யார்க்கும் கிளக்க அரிதாம்
ஐங்கரச் சிந்தூரத்தின் கழற்செஞ் சரணம்
  அஞ்சலித்துத் துதிப்பாம்"

என்று விவரித்தலைக் கண்டு மகிழ்க.

யானைக்குக் கன்னத்தில் மதஜலம் கசிவது வழக்கம். அஃதேபோல் விநாயகருக்கும் கன்னத்தில் மதம் பொழிகின்றது. என்ன மதம்? வலப்பக்கம் அறக்கருணையும் இடப்பக்கம் மறக்கருணையுமாகிய மதங்கள். "கருணை யென்னும் வெள்ள மதம் பொழிசித்தி வேழத்தை நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்" என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்துட் கூறுவதையும் "மதப்பேர் பெற்ற அருள்" என்று செந்தில் நிரோட்டக யமக அந்தாதி காப்புச் செய்யுள் கூறுவதையும் நோக்குக.

விநாயகருக்குள்ள பல பெயர்களுள் தமிழ்நாட்டில் தாழ்ந்த அறிவுடைய மக்களுக்கும் தெரிந்தது பிள்ளையார் என்பது. முதலியார், செட்டியார், சாஸ்திரியார் என்ற சாதிப் பெயர்களுள் வரும் ஆர் விகுதி பிள்ளைமார் என்ற

விடத்துக் காணப்படுவதில்லை. பிள்ளையார் என்ற சொல் பிள்ளைமாரைக் குறிக்காது விநாயகரையே குறிக்கும். முருகன், வீரபத்திரன், விநாயகன் ஆகிய மூவரும் சிவகுமாரர்களாயினும் பிள்ளையார் என்ற சொல் விநாயகரையே குறிக்கும். பிள்ளையார் கோயில் என்றால் விநாயகர் கோயில் என்று பொருள் படுமே தவிர முருகன் கோயில் வீரபத்திரன் கோயில் என்று பொருள் படுவதில்லை. இதிலிருந்து விநாயகரே சிறந்த பிள்ளையாகக் கருதப்படுதல் விளங்கும். இதற்குத் தகுந்த காரணமு முண்டு. சிறந்த பிள்ளை தாய் தந்தையரை வணங்கும், வழிபடும். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். குருவும் கடவுளும் பின்னறி தெய்வங்களே. பிள்ளையாருக்கு ஐந்து கைகளுண்டு. துதிக்கையில் குடங்கொண்டு நீர் திரட்டித் தமது அம்மையப்பரைப் பூசிக்கிறார். சதுர்புஜங்களுள் பின்னுள்ள இரண்டினில் உயிர்களாகிய நமக்காகப் பாசாங்குசங்களை வைத்துள்ளார். முன் கைகளுள் வலது கையில் ஒடித்த கொம்பு கொண்டு கயமுகாசுரனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றுகிறார். இடது கையில் மோதகம் தமக்கென வைத்திருக்கிறார். எனவே ஐந்து கைகளுள் தமக்கொன்று, தேவர்க்கொன்று, தாய் தந்தையர்க்கொன்று, நமக்கென்றிரண்டு உபயோகிக்கிறார். இவ்வுண்மையை அழகாகக் கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்துள்,

“ பண்ணியம் ஏந்தும் கரம் தனக்காக்கிப் பானிலா மருப்பமர் திருக்கை, விண்ணவர்க்காக்கி யாதனக்கலச வியன்கரம் தந்தைதாய்க் காக்கிக், கண்ணிலாணவ வெங்கரி பிணித்தடக்கிக் கரிசினேற் கிருகையுமாக்கும், அண்ணலைத் தணிகை வரைதளர் ஆபத்சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்”

என்று கூறுகிறார்.

தமக்கும் தாய் தந்தையர்க்கும் தேவர்க்கும் ஒவ்வொரு கையையும் நமக்கு மட்டும் இரண்டு கைகளையும் உபயோகிக்கும் விநாயகர் நமக்கு வேண்டுவன வெல்லாம் தருவார். நமக்கு வேண்டுவன இவையென்பதை நாமறியோம். நாம் விரும்புவனவற்றையே வேண்டுகிறோம். இது தவறு.



நமது பக்குவமறிந்து வேண்டுவனவற்றை நாம் கேளாமலே அவர் தருவார். “கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்” என்ற திருவாக்கின்படி வழிபாடொன்றே நமக்குரியது. பிள்ளையார் பூசை நாடோறும் செய்து வழி படுவோரிடத்திலே இலக்குமி என்று மிருப்பாள்.

“ நல்லார் பழிப்பில்...விநாயகனே என்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே ”

என்று கபிலதேவ நாயனார், மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை இறுதிச் செய்யுளுட் கூறுவதை என்றும் ஞாபகத்து வைக்கவும்.

நமக்குள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் விநாயகரே போக்குவார். விநாயகரை வழிபடும் அன்பர்களை ஆணவமலம் துன்புறுத்த எண்ணுவது நெருப்பைக் கடித்துத் துன்புறுத்த எறும்பு எண்ணுவதற்குச் சமானம் என்று நம்பியாண்டார்நம்பிகள் உவமைச் சுவை மலியக் கூறுகிறார்.

“ மருப்பை யொருகைக் கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பை யடிபோற்றத் துணிந்தால்—நெருப்பை
அருந்த எண்ணுகின்ற எறும்பன்றே அவரை
வருந்த எண்ணுகின்ற மலம் ”

அவ்வாறே கன்ம மலமும் நசிக்கும் செய்தியைக் கபிலதேவ நாயனார்,

“ கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல்—மணங்கெண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம் ”

என்று கூறுகிறார்.

மாயாமலம் அகல்வதை அதிராவடிகள் “ மணிசிந்து கங்கைதன் மாணக்குருளையை...பிடித்தோர்க்கில்லை பேது

றலே'' என்று கூறுகிறார். ஒளவையார் அகவலுள் "மாயாப் பிறவி மயக்கம் அறுத்து'' என்பதும் நினைதற்பாலது.

விநாயகருடைய நிறம் சிவப்பு. சில கோயில்களில் சிவப்புப்பொடி பூசிய விநாயக உருவங்களைக் காணலாம். சிவப்பு வஸ்திரம் சிவப்புப் புட்பங்கள் முதலியன விநாயகருக்குப் பிரீதியானவை என்று நூல்கள் கூறுகின்றன. விநாயகருக்குரிய நைவேத்திய வ்கைகளை அருணகிரிநாதர் "இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடன்நெய் எள்பொரிய வல்துவரை இளநீர்வண் டெச்சில் பயறப்பவகை பச்சரிசி பிட்டுவெள ரிப்பழம் இடிப்பல்வகை தனிமூலம் மிக்கஅடிசிற்கடலை பக்ஷணம்'' என்றும், "முப்பழம் அப்பமும் நிகழ் பால் தேன் நெடியவளை முறி இக்கொடு லட்டுகம் நிரவில் அரிசி பருப்பவல் எள்பொரி நிகரில் இனிய கதலிக்கனிவர்க்கமும் இளநீரும்'' என்றும் கூறுகிறார். விநாயக சதுர்த்தி முதலிய சிறந்த நாட்களில் ஆயிரம் மோதகம் நிவேதனம் செய்வது சிறந்ததெனா நூல்கள் கூறுகின்றன.

விநாயகர் குருவாக வந்து உபதேசம் செய்து அருள் புரிவதை ஒளவையார்,

> " குருவடி வாகிக் குவலயந் தன்னில்
> திருவடி வைத்துத் திறமிது பொருளென
> வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி "

என்று கூறுகிறார். முத்தி தருவதையும் "இருத்தி முத்தி இனிதெனக் கருளி'' என்று குறிக்கிறார். ஒளவையாரைத் தும்பிக்கையாற்றூக்கித் திருக்கோவலூரிலிருந்து விண்ணுலகிற் சேர்ப்பித்த விநாயகர் உதவியும் மறத்தற் பாலதன்று. நாமும் விநாயகரை வழிபட்டு மேல்நெறி சேருவோமாக.

---

# 2. முருகன் நுண்மாண்

இறைவன் உருவம், பெயர், தொழில் ஒன்றும் இன்றிப் பரவியவன். இந்நிலவுலகில் விரவிய உயிர்கட்கு வீடு தந்திடும் கருணையால், உலகைப் படைத்துக் காத்து அழித்து அருள் செய்யும் அவன் ஓர் இலக்கியம் (=லக்ஷியம்.) அவனிடத்துள்ளது ஓர் இலக்கணம் (=லக்ஷணம்.) இவ்விலக்கணம் பொது, சிறப்பு என இருவகைப்படும். இதை முறையே தடஸ்த லக்ஷணம், ஸ்வரூப லக்ஷணம் என்பர். அவனுக்கு அளவுபடாத உண்மை, அறிவு, இன்பம் (ஸத், சித், ஆநந்தம்) இருப்பது சிறப்பிலக்கணம். உருவம், பெயர், தொழில் ஏற்றல் பொது இலக்கணம். மேலும், உயிர்கட்கு போகம் தந்து, அதன் இழிவினை உணர்த்தி, அதனினும் மேம்பட்ட வீடுபேற்றில் விழைவு வரச் செய்து, அதற்குரிய சாதனம் தந்து ஒழுகவைத்து வீடு நல்க, அவன் உருவம் கொள்வான். அவன் உருவும், அருவும், உருவருவும் ஆனவன், மிக்க அருளால் மேனி கொண்டவன். இந்த உண்மைகளைக் கந்தபுராணம் கீழ்வருமாறு விளக்குகின்றது :—

> உருவோடு தொழில் பெயர் ஒன்றும் இன்றியே
> பாவிய நீஅவை பரித்து நிற்பது
> விரவிய உயிர்க் கெலாம்வீடு தந்திடும்
> கருணையதே அலாற் கருமம் யாவதே.

—உற்பத்தி காண்டம், திருஅவதாரப் படலம் - 34

> தன்னை நேரிலாப் பரம்பொருள் தனியுருக்கொண்ட
> தென்ன காரணம்என்றி யேல்ஐந் தொழில் இயற்றி
> முன்னை ஆருயிர்ப் பாசங்கள் முழுவது மகற்றிப்
> பின்னைவீடு பேறருளுவான் நினைந்த பொருளே.

—மகே - சூரன்அமை - 119

> ஞானந்தான் உருவாகிய நாயகன் இயல்பை
> யானுநீயுமாய் இசைத்தும் என்றாலஃ தெளிதோ
> மோனந்தீர் கலாமுனிவரும் தேற்றிலர் முழுதும்
> தானும் காண்கிலன் இன்னமும் தன்பெருந் தலைமை.

—மகே - சூரன்அமை - 128

கரும காரணத்தால் தோன்றிய நமது உடல், இரதம் (=மச்சை), உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம் ஆகிய எழுவகைத் தாதுக்களை உடையது. உயிர்களைக் காக்கக் கருதி, அருள் காரணத்தால் தோன்றிய அவன் திருவடிவம், மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை ஆகிய ஆறு அத்துவாக்கள் (=வழிகள்) எனும் பகுதிகளின் தொகுப்பாகும்.

"மந்திரமே சோரியாவான் பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்
ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்களே சத்த தாதுவா—வைத்த
கலையே அவயமாக் காட்டும் அத்துவாவின்
நிலையே வடிவமாய் நின்றோய்."

—கந்தர் கலிவெண்பா

அவன் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளாய்த் தோன்றுவான், கருதுவார் கருதும் உருவினன். "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்பர் அருணகிரிநாதர்.

இறைவன் பல காலத்தில், பல இடங்களில், பல அன்பர்கட்குப் பலவகைப் பேறுகளை அளிப்பதற்கென்றே கொண்ட திருவுருவங்களுள் முருகன் திருவுருவும் ஒன்று. ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன். தனக்குத்தானே மகனாகிய தத்துவன். அவன் பரனோடு பேதகமல்லன். மாற்றம் மனம் கழிய எங்கும் நீக்கமற நின்று, எல்லாவற்றையும் தன் அகத்தே தாங்குவதால் பிரமம் எனப்படுகிறான். இந்த நிலை யோகிகட்குப் புருவமத்தியில் ஆயிரம் இதழ்களையுடைய தாமரைமேல் தேவ அங்குஷ்ட ப்ரமாணத்தில் சோதியாகக் காட்சியளிக்கும். அந்த சோதியே இவ்வுலகம் உய்ய விசித்திர உருக்கொண்டு குழந்தை வடிவில் வரும்.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள்ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகம் உய்ய

—உற்பத் - திருஅவ - 22



இந்த நுண்பொருளை உறுதிப்படுத்த முருகன் திரு அவதாரம் இலக்கியமாயிற்று. மனவாசகம் கடந்தவன் பரசிவத்தின் புருவமத்தியில் அழற்கண்ணினின்றும் சோதியாகத் தோன்றி, நிலம் நீர் தீ வளி வான் ஆகிய ஐம்பொருள் உறவு கொண்டு, சரவணப் பொய்கையில், தாமரை மலர்மேல் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் கொண்டு முருகனாகத் திருஅவதாரம் செய்தான் என்பது புராண வரலாறு.

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த்தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந்தருளினானே."

—உற்பத் - திருஅவ - 96

உருவம் வந்த பிறகு பெயர், தொழில் முதலியன பற்றிய விவரங்களைக் காணலாம்.

**பெயர் :**—"மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள்" என்பது கந்தரலங்காரம். முருகனுடைய திருநாமங்கள் பல. அவற்றுள் சில கீழ்வருமாறு :—முருகன் = தெய்வத் தன்மை உடையவன், என்றும் இளமை அழகு முதலியன உடையவன் ; கந்தன் = சேர்க்கப்பட்டவன், சத்ருக்களை அழிப்பவன்; வேள் = விரும்பப்படுபவன், தலைவன்; சாமி = எல்லாம் உடையவன், உலகம் உயிர்கள் எல்லாவற்றையும் தனது உடைமைப் பொருளாகக் கொண்டவன் ; குகன் = காப்பவன், இருதய குகையில் இரகசியமாக அருள்பவன் ; கார்த்திகேயன் = கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றவன் ; சரவணபவன் = கங்கைக் கரையிலுள்ள தருப்பை வனத்தில் உருவுடன் காட்சியளித்தவன் ; கடம்பன் = கடப்ப மலர்மாலை தரித்தவன் ; விசாகன் = விசாக நாளிற் பிறந்தவன் ; காங்கேயன் = கங்கையில் தோன்றியவன் ; குமரன் = என்றும் இளமையுடைய குமரத்தன்மையுடையவன், தாழ்ந்த குறிக்கோள்களை அழிப்பவன் ; இவ்வாறே அவனுடைய ஆயிர நாமங்கட்கும் காரணங்கள் உள்ளன. இவற்றிற்கு ஆதாரமாக ஸ்கந்தபுராணச் செய்யுள்கள் பற்பல உள.

வடமொழி மறையின் முடிவில் "சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம்" என்று மும்முறை

ஓதப்பெறுதல் காண்க. இதன் விளக்கத்தைக் காஞ்சிப் புராணம்,

> " எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும்......சுப்பிர
> மணியன் ஓம்எனவும் முக்காற் கூறும் "

என விவரிக்கும்.

நாமம் பலவிருப்பினும் சிறப்பாக முருகனென நந்தண்டமிழிலும் ஸ்கந்தனென வடமொழியிலும் வழங்கும். முருகனிலுள்ள முருகு ஒரு பெயர்ச்சொல் பண்புப் பெயர், அது அன்விகுதிப் புணர்ந்து முருகையுடையவன் முருகனென ஆயிற்று.

அன்றும் இன்றும் இனியும் கடவுளுக்குக் காணப்படும் இலக்கணங்களைக் குறிக்கும் பண்புப் பெயரே முருகு ஆகும். இறை இலக்கணம் அனைத்தையும் அமையப் பெற்றவன் என்ற பொருளில் முருகன் என்னும் சொல் நிற்கிறது.

> " விரிகடல் வியன் தானை யொடு
> முருகு உறழப் பகைத்தலைச் சென்று "

—மதுரைக்காஞ்சி - 180

இதற்கு உரை வகுத்த புலவர் நச்சும் நச்சினார்க்கினியர் "முருகு உறழப் பகைதலை சென்று—முருகன் பகைவர் மேற் செல்லுமாறு போலத் தடையறப் பகைவரிடத்தே சென்று, முருகு-தெய்வத்தன்மை; ஆகுபெயராய் நின்றது" என்றனர். மற்றும் நிகண்டு, முருகு, இளமை, நாற்றம், முருகவேள், விழா வனப்பாம் எனக் கூறுகிறது. இயற்கை மணமும், மாறு இளமையும், கடவுட்டன்மையும், அழியா அழகும், அறிவிற் சிறந்த எச்சமயத்தவருங் கொள்ளும் ஆண்டவனுக்குரிய இயல்புகளாம். இவ்வியல்புகள் அமைந்த ஒன்றைத் தமிழ் மக்கள் முருகன் என்று வழுத்துகிறார்கள். இவற்றான் முருகன் சமஷ்டி (எல்லாம் சேர்ந்த Eclectic) தெய்வமென்பது தெளிவு. (வியஷ்டி தனித்தனி பிரிந்தது) இதன் விரிவு பின் பகுதியில் விளங்கும். இனித் தொழில் உருவத்தினின்று தெளிதலின் செவ்வேள் சிறப்பை ஸ்கந்த புராணத்தில் நின்று காண்பாம்.

> " முருகாவென உனையோதுந் தவத்தினர் மூதுலகில்
> அருகாத செல்வமடைவார் வியாதி யடைந்து நையார்
> ஒருகால முந்துன்ப மெய்தார் பரகதி யுற்றிடுவார்
> பொருகாலனுடு புகார் சமராபுரிப் புண்ணியனே."



> "தேறுமுக மின்றித் திரிந்தேமை யாளவன்றோ
> ஆறுமுகம் கொண்டே யவதரித்தான் எம்பெருமான்."

இறைவன் உருவம் நால்வகைத்து. அவை அங்கம் பிரத்தியங்கம் சாங்கம் உபாங்க மென்பன.

அங்கம் - சிரசு, முகம், இருதயம் 3. பிரத்தியங்கம் - மார்பு, கழுத்து, முலை, தோள், கொப்பூழ், மறைவிடம், வயிறு, கண், மூக்கு, செவி, கை, தாள், விரல், தொடை, முழந்தாள், கணைக்கால் 16.

சாங்கம் :—(குணரூபமென்பது, அங்கத்துடன் கூடிய வகுப்புகள்).

குணத்திரயம் - திரிசூலம். சத்தியம் - பரசு. பிரதாபம் - வாள். துரகபேத்தியம் - வச்சிரம். அனுக்கிரகம் - அபயம். ருத்தியாதி சுத்தமாயை - நரகம். அதோமாயை - பாசம். விவர்ணம் - அங்குசம். சத்தநாதம் - மணி. பாசசங்காரம் - அக்கினி. (10)

**உபாங்கம்** :—(அவனைவிட்டு நீங்காமற் சமீபத்திலிருப்பது) கலை, புரிநூல், மாலை, கந்தம், நகை, இருக்கை, ஆவரணம். (7) இதன் விரிவை வாதுளம், " அங்க, பிரத்யங்க, ஸாங்கஞ்ச, உபாங்கஞ்ச " என்று ஆரம்பிக்கும் அடிகளில் காண்க. மற்றும் இப்பகுதியை சிவஞானசித்தியார் சுபக்கம் அறுவர் உரை 47-வது பாட்டில் பார்க்க.

சிவபெருமானுக்கு மகேச்சுர மூர்த்தங்கள் இருபத்தைந்து கூறப்படுதல்போல, முருகக் கடவுளுக்கும், ஞானசத்திதரர், கந்தர், தேவசேநாபதி, சுப்பிரமணியர், கஜாரூடர், சரவணபவர், கார்த்திகேயர், குமாரர், சண்முகர், தாரகாந்தகர், சேநாபதி, பிரமசாத்தர், கல்யாணர், பாலசுப்பிரமணியர், கிரௌஞ்சத்துவஞ்சர், மயூரவாகனரெனப் பதினாறு மூர்த்தங்கள் குமார தந்திரம் கூறுகிறது :

அகத்தின் அழகு முகத்தில் தெரிதலின், அங்கத்தில் தலைசிறந்தது முகம். அம்முகங்களின் நுண்மாண்பு சில வருமாறு :

(1) **உலகில் வேதத்தால் கூறும் வைதிக சமயம் ஆறு.** அவை கடவுளை ஓங்காரவடிவினராக வழிபடும் காணபத்தி

யம் (கணபதி) பேரின்ப வடிவினனாக வழிபடும் கௌமாரம் (குமரன்) பேரொளி வடிவினனாக வழிபடும் சௌரம் (சூரியன்). எங்கும் நிறைந்தவனாக வழிபடும் வைணவம் (விஷ்ணு). தாயாக வழிபடும் சாக்தேயம் (சக்தி). தந்தையாக வழிபடும் சைவம் (சிவன்). இவ்வைதிக சமயத்தின் ஆறு தெய்வத்தின் கூட்டே முருகனது ஆறுமுகம்.

> *ஆறுசமயக் கடவுள்வேறு வேறின்றி யான்*
> *ஒருவனே அங்கங்கிருந்து*
> *அன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும்*
> *அறிவித்த வதன மணியே.*
>
> —போரூர் பிள்ளைத்தமிழ் சிறுபறை 3

> *ஆறு திசையுஞ் சமயங்களாறு மவுணர்களைக்*
> *கீறும் வைவேற் பெருமான் முகமாறுங் களத்தும் - (9)*
>
> எல்லாக் கடவுளுமோர் வடிவாகி யிருந்தே செவ்வேள் (98)
>
> —ஆறெழுத்தலங்காரம்

> *ஆறுசமய முந்தன்முக மாமென் றறியு மன்பர்*
> *வீறு சிந்தைக்கிடை வீற்றிருக்குங் குகன் (98)*
>
> —மயிலலங்காரம்

ஆகையால் முருகன் வழிபாட்டால் ஆறு தெய்வ வழிபாட்டின் பயனைப் பெறலாம்.

(2) எழுதாமறை நான்கு. அவற்றில் கையாளப்படுவது: இருக்கு, எசுர், சாமம். இவற்றின் இடையிலுள்ள எசுருக்கு 101 சாகைகள். அவற்றின் நடுவினது 51-வதாகிய போதாயன சாகை. இது எழு காண்டமாக வகுக்கப்பட்டது. இதன் மத்தியிலுள்ளது நாலாவதாகிய சதருத்திரிய காண்டம். இதன் நடுவிலிருக்கிற 5-வது பிரசனத்தின் இதயத்திலிருப்பது நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து. இதனை "மும்மறையின் நடுமறையில் முனிவிலெழு காண்டத்தில்" என்ற சித்தாந்த சிகாமணி செய்யுளில் காண்க. முதன்மறையாகிய இருக்கின் முதல் பதம் அக்கினி. நடுமறையாகிய எசுரின் நடுச்சொல் சமுத்திரம். கடை மறையாகிய சாமத்தின் கடைக்கிளவி வாயு. முதல் வேதத்தின் முதலெழுத்தாகிய அகாரமும் நடுவேதத்தின் நடுவெழுத்தாகிய உகாரமும் கடைவேதத்தின் கடையெழுத்தாகிய மகாரமும் சேர்ந்து ஓம் ஆயிற்று. அ+உ+ம்=ஓம். பாதம்+உதகம்=பாதோ



தகம் என்பதுபோல அ+உ=ஓ. ஓ+ம்=ஓம் இது சமஷ்டிப் பிரணவம். அ, உ—ம் வியஷ்டி பிரணவம். ஐந்தெழுத்தும் பிரணவம் ஒன்றும் கூடிய ஆறும், முருகனுக்கு முகமாயிற்று. இதனை,

> *முகத்தி லொன்றதா வவ்வெழுத் துடையதோர் முருகன்*
> *நகைத்து முன்னெழுத் தினுக்கு உரைபோருள் என நவில*
> *மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித்*
> *திகைத் திருந்தனன் கண்டிலன் அப்பொருள் திறனே*
>
> —உற்ப. அயனைச்சிறை 10

> *நன்முக மிருமூன் றுண்டால் நமக்கவை தாமேகந்தன்*
> *றன்முக மாகியுள்ள தாரகப் பிரம மாகி*
> *முன்மொழி கின்ற கந்த மூவிரண்டெழுத்து மொன்ற*
> *யுன்மக னுமத் தோரா றெழுத்தென வுள்ளவன்றே.*

> *ஆதலின் நமதுசக்தி அறுமுகம் அவனும் யாமும்*
> *பேதகமன்றல்நம் போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்*
> *ஏதமில் குழவிபோல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்*
> *போதமு மழிவில்வீடும் போற்றினர்க்கு அருள வல்லான்.*
>
> —உற்ப. திருவிளை, 18, 19

(3) முருகன், இறைவனது கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மேல்கீழ்த் திசைகளை நிரலே நோக்கிய ஈசானம், தத்புருஷம், அகோரம், சத்தியோசாதம், வாமம், அதோமுகம் ஆகிய ஆறுமுடையவன்.

> *வந்திக்கு மலரோனாதி வானவர் உரைத்தல் கேளாப்*
> *புந்திக்குள் இடர் செய்யற்க புதல்வனைத் தருதுமென்னா*
> *அந்திக்கு நிகர்மெய் யண்ணல் அருள்புரிந் தறிஞாயோர்*
> *சிந்திக்குந் தனதுதொல்லைத் திருமுக மாறுங் கொண்டான்.*
>
> —உற். அவ. 43

> *"ஐந்து முகத்தோடு அதோமுகமுந் தந்து*
> *திருமுகங்கள் ஆறாகி"*

எனக் கலிவெண்பா கூறுதல் காண்க.

(4) அதோ முகத்திற்குப் பதிலாக அம்பிகை அல்லது மாயனது முகத்தை முகம் ஆறு என்பர். இஃதேயன்றி

இறைவனது அனாதி மல முத்தத்துவம் முதலிய ஆறு குணங்களே முருகனது முகமாக வந்ததை,

ஏவர்தம் பாலுமின்றி எல்லைதீர் அமலற்குள்ள
மூவிரு குணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவணத் தண் பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளு மாற்றால் அறுமுகங் கொண்டா னன்றே.

—உற்ப. திருவவ. 94

இஃதேயன்றி முருகாற்றுப்படையும் கலிவெண்பாவும் இம்முகங்கள் பற்றிக் கூறுவது கவனிக்கற்பாலது. "கருணை கூர் முகங்களாறும்" உயிர்கட்குக் கருணை பொழிவதால் 'முகம்பொழி கருணை போற்றி' என்றதும் உன்னற்பாலது.

"பேறுதரும் தெய்வம் யாவைக்கும் யான் பெருந்தேவ னென்றே
வீறுமுகம் கொண்டுபோரூர் முருகன் விளக்கியதே."

கண் :—

"கருத்தே புகுந்து கதிகாட்டுங்
கண்ணே வருக !"

—சந்நிதிமுறை

பிரத்தியங்கத்தில் தலைசிறந்தது கண். 'கண்ணென்ப வாழுமுயிர்க்கு' என்ற பொய்யாமொழியை ஓர்க. முருகனுக்கு ஒவ்வொரு முகத்திலும் கண்கள் மூன்றென்பர் சிலர்; இரண்டென்பர் பலர். மூன்றென்பது ஞாயிற்றுக்குக் காரணமாகிய ஞாயிற்றுக்கண், திங்கட்குக் காரணமாகிய திங்கட்கண், எரிக்குக் காரணமாகிய அழற்கண் என்பன. இம் மூன்று கண்களும் மூன்று இதழ்களோடு கூடிய வில்வம் போன்றும், நாசி அதன் காம்பு போன்றும் உள்ளன. இவற்றுள் அமயம் நேர்ந்துழி திறப்பது அழற்கண். பலரும் ஏற்கும் ஏனைய இரண்டும் எக்காலத்தும் திறந்திருப்பன. கந்தனுக்குக் கண்கள் பதினெட்டென்பது புலவர் புராண ஆசிரியரான தண்டபாணி சுவாமிகள் நூற்களில் மலிந்துள்ளன. அவற்றில் சுவை,நயம் பயப்பவை சில வருமாறு:

"அட்ச மாறிரண்டுள்ளா யெனத்துதி செய்துஅழல்
விழி ஆறையும் மறைப்பார்
புட்சரபம் போற்பொலிவதால் அடியேன்
புழுங்குவ துணர்ந்தருள் புரிவாய்" —குருபரமாலை



அக்கினிக் கண்ணால் அரனீன்ற மைந்தனுக்குஅச்
சக்கிலை யென்பாருந் தவத்தரோ ? —வெண்பாமாலை

"கந்தக் கடம்பமலர் மார்பா ! கதிர்வேற் படைக் காவலவா ?
கண்களாறு மூன்றுடை யானே! கருணைக்கடலே! கதித்துணையே!
சந்தப் புலவர்க் கெளியானே ! தமியேற் கருளாய் ! * *
* * * * —கௌமார விஜயம்

" * * * *
* * பரிதியாறு புரையு
மணிமுடிச் சிரு மறுவிலா மதிய
மூவிரண் டன்ன முகங்களும் பொலிந்த
நீற்றொடு திலக நிலவிய நுதல்களும்
அலர்ந்து குவியா அறுமூ விழிகளும்
பத்தர் சொல்லன்றிப் பருகாப் பன்னிரு
செவிகளும் * * * "

—ஒருபாவொருபஃது

வடமொழியில் ஸ்கந்தபுராணமும், ஷண்முகத் தியானமும் இதனை வலியுறுத்தும்.

பிரத்தியங்கத்தின் சிறப்பு மலிந்த பாடல்கள் இருமொழியிலும் பல. அவற்றுள் வடமொழியில் ஒன்று வருமாறு :—

"புஜே சௌரிய தைரியம், கரே தான தர்மம்,
கடாக்ஷே சாந்தி, ஷடாஸ்யேசு காஸ்யம்,
ஹிருதப்ஜே தயா யஸ்யதம் தேவமன்யம்,
குமாரன்ன ஜானே ! நஜானே !! நஜானே !!! "

(இ-ள்) தைரியமுள்ள தோளும், தானதர்மம் புரியும் கைகளும், சாந்தமுடைய (கண்ணோட்டம்) கடைக்கண்ணும், புன்முறுவலுடைய ஆறுமுகமும், தயையுடைய இருதயமும் உடைய குமாரக் கடவுள் போன்ற வடிவை மும்மையும் அறிந்தோமில்லை. இதனைத் தமிழர் 'நிலவுமிழும் புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாய், இருண்மலத்துண் மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித்தற்கு மலயாக

முறவே கடைக்கண்பாலித்து, விண்டபருவ மலர்பூத்தாங்கு அருள்பொழியுங் கண்மலரீராறும், பாரப்புயசைலம் பன்னிரண்டு, பறியாக் கருணைத் திருவுருவாய், அறனெலாமோருருக் கொண்டோய்' என்றதும் அது. (கந்தர் கலிவெண்பா)

மயிலையு மவன்றிருக் கை அயிலையுமவன்
கடைக்கணியலையு நினைந்திருக்க-வாருமே" —திருவகுப்பு

**சாங்கம் :**

சாங்க வகுப்பில் ஆயுதங்கள் விவரிக்கப்படுகிறது. முருகனுக்குப் பன்னிரு கைக்கு ஆயுதங்கள் மாறுபட்டுக் கூறப்படுகிறது. அவை முன்னர் கூறிய மூர்த்தங்கட்கு ஏற்றதோர் அமைப்பென்க. இப்படைகளைப் பற்றித் திருமுருகாற்றுப்படை, திருச்செந்தூர் கலிவெண்பா கூறுவதை கண்டு நோக்கிக் கொள்க. இறைவன் வேல்தரும் சமயம் தந்த பிற ஆயுதங்களையும் ஓர்க.

"பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும்
பொருவிலா வுருவமுந்தொன்றொ
னன்றுபெற்றுடைய வுருத்திரகணத்தோர்
நவிலருந்தோ மரங்கொடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குசமு
மணிமலர்ப் பங்கயத்தண்டம்
வென்றிவின் மழுவு மாகிவீற் றிருந்தார்
விறன்மிகு மறுமுகன் கரத்தில்" —கந்தபுராணம்

**சேந்தூர் அகவல்.**

"பன்னிரு கமல பாணியு மவற்றின்
சூலமும் வேலுந் துரோணமுஞ் சரமும்
பாலமும் குலிசமும் பரிசையும் வாளும்
மாழியும் மழுவும் அபயமும் வரதமும்"

என்றும், ஷண்முகத் தியானம்,

"ஷட்வக்திரம் வலிவாகனம் திரிநயனம் சித்ராம்ப ராலங்க்ருதம்
ஸக்திம் வஜ்ரமஸிம் த்ரிசூலமபயம் கேடம் தனுஸ் சக்ரகம்



பாசம் குக்குடமங்கு ஸஞ்சவரதம் தோபிர் தாணம் சதா
த்வயாயேத்ஸ்வித ஸித்திதம் சிவஸுதம் ஸ்கந்தம் சுராராதிதம்"

என்றும், ஜெயந்தன் சிறையில் கனவில் கண்ட காட்சியை, கந்தபுராணம்,

"வீறு கேதனம் வச்சிர மங்குசம் விசிக
மாறி லாதவே லபயமே வலமிடம் வரத
மேறு பங்கய மணிமழுத் தண்டுவில் லிசைந்த
வாறி ரண்டுகை யறுமுகங் கொண்டு வேளடைந்தான்

என்றும், ஆயுத வகைகளில் மாறுபட்டுக் கூறுவதைச் சிந்திக்க. முருகன் கரத்துள்ள படைக் கலங்களெல்லாம் பல தெய்வத்தின் படைகளென்பது மறக்கற்பாலதன்று. ஆன்றோர் கடவுள் வணக்கம் கூறுங்கால் ஏனைய தெய்வங்களின் இயல்பை எடுத்துக்கொண்ட வடிவத்தில் காட்டி சமஷ்டிக் கடவுளென்று தெளிவு படுத்தப் பிற தெய்வப்படைகளை அமைத்துக்காட்டல் மரபு.

தணிகைப் புராண சிவசக்தி வணக்கம் இம்முறை பற்றி நிற்பது காண்க.

"ஓரணி சிருக்கு மணிவடஞ் சங்கு
திகிரி சூலப்படை யிலைவேல்
போரணி பாச மங்குசம் கழைவில்
பூங்கணை வேறு வேறணியா
ஆரணன் மாயன் அரனிப முகத்தன்
அனங்க னென் றிவர்தொழிற் கெல்லாங்
காரண மாத றெளித்தருள் கொழிக்குங்
கன்னியை யுன்னியேத் தெடுப்பாம்."

மேலே காட்டிய ஆயுத வர்ணனையால் முருகனும், ஏனைய தெய்வத்தொழிலை ஆற்றும் திறனுடைய சமஷ்டிக் கடவுளென்பது வெள்ளிடைமலை.

முருகன் படைகளில் கோழிக்கொடியும் வேலுமே கொண்டாடப்படுவது. இதனை அருணகிரி,

"ஆடும்பரி வேலணி சேவ லெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

" பக்கரை விசித்ரமணி பொற்கலனை யிட்டநடை
பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவமலர்த் தோடையும் அக்குவடு பட்டொழியப்
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும் ;
திக்கது மதிக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றிய பனிரு தோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக் கருள்கை மறவேனே "

என்று அநுபூதியினும் திருப்புகழினும் சிறப்பித்தலால் அவற்றை இனி விவரிப்பாம்.

**சேவற்கொடி :**

" வாக்காலு மிக்க மனத்தாலும் எக்காலுந்
தாக்கா துணர்வரிய தன்மையினை—நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமரு ணல்கக் கொடி "

முருகனது வலது திருக்கரம் ஆறனுள் ஒன்றிலிருப்பது வீறுகேதனம். கேதனம், கொடி, துவசம், சத்தி, வானி, தோகை, பதாகை, விலோதனம், படங்கு முதலியன ஒரு பொருள் குறிக்கும் பலவரி சொற்கள். இக்கொடி ஆண்டலை, மயூரம், கோழியென மூவகைப்படும். ஆண்டலைக் கொடியென்பது தலைமட்டும் ஆணுக ஏனைய உறுப்பெல்லாம் பக்ஷியின் வடிவுடையது.

" காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
ஆறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியினுங் கந்துடை நிலையினும்
ஆண்டலைக் கோடி யொடு மண்ணி—"

இம் முருகாற்றுப்படை அடிகட்கு நச்சினார்க்கினியர், " மாண்தலை கொடியொடு மண்ணி "—மாட்சிமைப்பட்ட தலைமையினுடைய கோழிக்கொடியோடே பண்ணி, இனி 'ஆண்டலைக் கொடி ' என்று பாடமாயின் பேய் முதலியன பலியை நுகராமல் தலை ஆண் மகன்றலையும், உடல் புள்ளின் வடிவுமாக எழுதிய கொடியென்க " என உரை பகர்ந்தமை



காண்க. பிற்றை நாளில் ஆண்டலையை வேறுபடுத்தாமல் 'கோழி, குருகு, காலாயுதம், குக்குடம், ஆண்டலைப்புள், வாரணமென நிகண்டில் கோழிக்கே கூறியதும் காண்க. இதனை பின்பற்றியே அருணகிரியும் ' மாண்டலையின் கொடியோ டெழுதரிதாம் வடிவோங்கிய பாங்கையும் ' என்றருளினர். இக்கொடி குறிஞ்சிநில மக்கள் முருகனை வழிபடும் காலத்து வைத்துக் கொள்வதேயன்றி ஏனையோரால் பாராட்டப்படவில்லை.

விடையேறிய சிவனுக்கு விடைக்கொடி; சிங்கமிவர்ந்த உமைக்குச் சிம்மக்கொடி. கருடன் கொண்ட மாலுக்கு கருடக்கொடி. அன்னமிவர்ந்த பிரமனுக்கு அன்னக் கொடி. அதுபோன்று மயில்மீது வரும் முருகனுக்கு மயிற் கொடி என்ப. ஊர்தி எதுவோ அதுவே கொடி யென்ற மரபு கொண்டு ஷண்முகத் தியானம் ' மயூரதுவசரத சகிதம் ' எனவும், திருப்புகழ் ' நினது திருவடி, சத்தி, மயிற் கொடி நினைவும் ' எனவும் கூறுகிறது. இவை யாவற்றினும் கோழிக்கொடியே விவகரிக்கப்படுவது. கோழி இருபாலுக்கும் பொதுப் பெயர். இவற்றில் ஆணுகிய சேவலே படங்காயுள்ளது. சேவல் என்ற கிளவி பொதுவாகப் புள் வகுப்பின் ஆண்பாலைக் குறிக்கும். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகார மரபியல் 48-வது சூத்திரம் கூறுதல் ஓர்க.

" சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணு
மாயிருந் தூவி மயிலலங் கடையே."

(இ-ள்) பறப்பனவற்றுள் ஆண்பாற்கெல்லாஞ் சேவற் பெயர் உரித்து. அவற்றுள் மயிற்காயின் அஃதாகாது.

' காமர் சேவலேமஞ் செப்ப ' எனவும், ' வளைக்கட் சேவல் வாளாது மடியின் ' எனவும், ' தொகு செந்நெற்றிக் கணங்கோள் சேவல் ' எனவும், ' கானங் கோழிக் கவர் குரற்சேவல் ' எனவும், ' உள்ளூர்க்குரீஇத் துள்ளு நடைச் சேவல்' எனவும் வரும். பிறவும் அன்ன. மாயிருந்தூவி மயில் என்றதனுன் அவை தோகை யுடையவாகிப் பெண்பால் போலுஞ் சாயலவாகலான் ஆண்பாற் றன்மை இலவென்பது கொள்க. எனவே செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படுமென்பது.' மற்றோரிடத்து ' குதிரையுள்ளாணினைச் சேவலென்றதும் இக்காலத் தரிதாயிற்று.

அதுவுஞ் சிறகொடுசிவ ணாதாயினும் அதனைக் கடுவிசை பற்றிப் பறப்பது போலச் சொல்லுதல் அமையுமென்பது கருத்து ' என்றார் நச்சினார்க்கினியர்.

இனி உலகை நோக்கின் மிகத் தூக்க நிலையிலிருந்து தூக்கத்திலிருப்பதாக அறியாதும், அதிக சுகத்திலிருப்பதாகத் தெரியாதும், இவற்றிற்கு இடையில் துக்கம் போகவும் சுகம் வருவதுமான நிலைகள் காண்கிறோம். அவை முறையே இருட்டு, வெளிச்சம், இருட்டுப் போகவும் வெளிச்சம் வரவும் உள்ள நிலைகள். அவையே இரவு, பகல், வைகறை போல்வன. இவை தாம் முறையே உயிர் உடலோடு கூடாத நிலை, உடலற்ற நிலை, உடலிலுள்ள நிலையில் நிகழ்வன. மேற்காட்டியவற்றில் உயிர் உடலோடு கூடிய வைகறையன்ன நிலையில் நாமிருக்கிறோமென்பது பெற்றோம். இந்நிலையில் சேவலே துயிலெழுப்புகிறது. நாதமே விழிக்கச் செய்வது. அந்த நாதத்துவமே கோழிக்கொடியாதலும் காண்க.

" மன்னுலகாக்கதி ரெழுச்சொளி பரப்பமா
முதநச நாத முழுதும்
அலமில்பவத் துயிலறக் கூவு சேவலுடன்
அம்புலீ யாட வாவே!"

" கொக்கறு கோவென்றே உண்மையெழுத் தோதும்
குக்குடமே ! சிற்சகமே ! . . . .
பக்குவத்தைக் கண்டோருள் நாத நிலைகண்டே
பாவி நெஞ்சத் தடக்கியுனைப் பேரின்பஞ் சார்வார்."

நாதங்கொண்டு இறைவனை அறிய வேண்டும். நாதமே இறைவனென்றது முருகன். கடவுள் நாத அந்தன்—நாத தத்துவன் ஆவன். 'தேமேவு நாதமுனாதாந்த முடிவும்' என்றதுமது. சேவற்கொடி ஏனைய படைக்கலத்தினும் உயர்ந்திருப்பதின் காரணம் யாவும் நாதத்தில் ஒடுங்க அதுவும் இறைவனிடம் ஒடுங்குமென்பதே.

இனி வைகறையை நோக்கின் திருவாசகப் பள்ளியெழுச்சி ' கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகளியம்பின ' என்று விடியலின் குறிகள் சில கூறுகிறது. அவர் அவ்வாறு அருளியதன் கருத்தென்னை ? குயில் பஞ்சம



நாதத்தைக் காதுக்கினிமையாகக் கூவின. கோழி இறைவன் நாமத்தை கூவிற்று. குருகு (வலியான்) மிருத்யுஞ்ச மந்திரத்தை ஒலித்தது என்பது. கோழி கொக்கறுகோ என்றமை கொக்கு - (சூரனாகிய) மாமரத்தை, அறு - வீழ்த்திய, கோ - இறைவன் என முருகன் சரித்திரக் கதையை ஒப்பிட்டுக் காட்டுவர். அந்தக் கோழியின் கூற்று " இருளினுள்ளவர்களைத் தன்னைப்போல் முருகன் பெயரை வைகறையில் தினம் கூறினால் பிறவியிருள் நீங்கி ஞான பானு எழும் " என்றதைத் தெரிவிக்கின்றது.

" என்றனைக் கைப்பிடித் தாளுது மிறைவன்
எழில்பெறு மலர்விழி மலர்ந்தெழு சமயம்
உன்றன துயிலுள் போக்குவன் நோக்கால்
ஒல்லையில் வருகென வெல்லினைக் கூவி
நின்றன இருங்கொடி யமைத்தது முறையோ
நீறு மிளைதொறுங் கூவின மிகவும்
இன்றெனை யாண்டுகொண் டருளிய பொருள்
இறைவனே ! பள்ளி யெழுந் தருளாயே !"

இக்கோழி குறித்துச் சரிதை பலவுண்டு "உற்ற வினில் ஊழியாம் போது மூலவா உடுக்கொறித்த கோழி" யெனத் தணிகைத் தசாங்கம் கூறுவதைக் கல்லாடம் நன்கு விவரிக்கிறது.

" போழ்படக் கிடந்த வொரு கூறெழுந்து
மின்னன் மாண்ட கவிரலர் பூத்த
சென்னி வாரணக் கொடும்பகை பயித்
தேவர்மெய் பனிப்புற வான்மிடை புகுந்திரன்
பொறியிற் கொறிப்பப் புரிந்த பொருளுடைத்
தாமரை பூத்த கைமலர் கமைத்தோய் " [26—31]

(உ - ரை) பிளவுபடக் கிடந்த வேறொரு கூறெழுந்து கொடிய பகையாகிய விளக்கம் பொருந்திய அழகு மாட்சிமைப்பட்ட முருக்கம்பூப் போன்ற செஞ்சூட்டுப் பொலிவு பெற்ற தலையையுடைய கோழியாகித் தேவர்களுடம்பு நடுக்கமடைய, பொறிபோல ஆகாயத்தில் நெருங்கின நக்ஷத்திரங்களைக் கொறித்தலால் அது விரும்பின கருமத்தை (தேவர்க்கு இடுக்கணில்லாது) திருவுளம் பற்றித் தாமரை

மலரை மிகர்த்த திருக்கரத்தின் வலது பக்கத்தில் கொடியாக அமைத்துக் கொண்டோய்! வள்ளியைக் கவர்ந்து சென்ற முருகனை, குறவர் முதல்வனும் கொடுந் தொழிலெ யினரும் வளைத்துக்கொண்ட சமயம் கோழியின் ஆர்ப்பால் இறந்தனர். கந்தபுராணம்,

"என்றிவை குமரி செப்ப வெம்பிரா னருளாற் பாங்கர்
நின்றதோர் கொடிமான் சேவ னிமிர்ந்தெழுந் தார்ப்புக் கொள்ளக்
குன்றவர் முதல்வன் மூனும் குமரும் தமரும் யாரும்
பொன்றின ராகி மாண்டு பொள்ளெனப் புவியில் வீழ்ந்தார்"

—தக்ஷ - வள்ளி - 184

'ஏதங் கருதினர் சென்மின்! என்றேயும் இதங் கருதும், போதஞ் சிறந்தவர் வம்மின் என்றேயும் புகல்வன போல், வாதஞ் செறியக் கொடியாடும்' (போரூர் அலங். 46) எனக் கொடியின் அசைப்பை அலங்கரிப்பர். மற்றும் இச் சேவலின் நிறத்தை வெண்மை யென்பர் பலர். செம்மை என்பர் சிலர்.

"நீநிறக் குடுமி வெண்சேவலை யுயர்த்து
வண்சிறை மயிற்பரி யுடர்த்துஞ்
சேவகப்பெருமானை வேதபுரி வருமிளஞ் சேயைப்
புரக்க வென்றே" —முத்து. பிள்-காப்பு-7

"செக்கச் சிவந்தகழற் செந்திலான் சேருட்கா
மிக்க கவுமார விசயத்தின்—தக்கதினை
பாதுறழ் வெண்சேவலொடு பைங்கிளியும் பன்னிருகை
வேலுமயில் வாகன மே.
—தண்டபாணி

"காத மணிக்கும் குரற் புலிவி
னகம் போற்றண்டச் செஞ்சூட்டு
கலந்த பொறிச் செஞ்சிறைச் சேவல்
நனிகக் காத்திற் பிடித்தோனே"

—போரூர்-பெருங்கழி நெடில்

"அமர் குடுமிமலர் கொண்டம் மிறைத்தருள
அரிய நுநது கோடி யெங்குந் தழைத்தருள
அரியோடயன் முனிவரண்டம் பிழைத்தருள—திருப்புவேளை



வேல் :

"ஆறும் பரிவேல் அணிசேவ லெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்!

'கொன்றையார்க்குப் பரசொடு கடியசூலம் பிறுகவில் படைகள்; மாலுக்கு சிலை ஆழி சங்கு வாள் கதை படைகளைத்தாரும்' 'அறுமுகன் உறுபடைவேல்' என்று மிகண்டு உரைத்தவிடத்து முருகனுக்கு ஒரே படை வரைந்த தனிப் பெரும் பெருமை ஆய்வாம். வேல்—செந்தமிழ் சொல். வேலின் வெல் குறுகி ஒலித்தலின் வெல்வது வேல். படையின் காரியமாகிய வெற்றியை வேல் அகத்தமைத்து ஒலித்தலால் இது காரணப்படை போலும்! பரமன் வேல் அருளிய சமயத்தைக் கந்தம்,

"ஆயதற் பின்னரேவின் முதண்டத்தைம் பெரும் பூதமு மழவ
தேய பல்லுயிரு மொருதலை முடிப்ப தேவர்மேல் விடுக்கினு மவர்தம்
மாயிருர் திறனும் வாங்களுஞ்சிந்தி மன்னுயி ருண்ப தேப்படைக்கும்
நாயக மாவதோரு தனிச்சுடர் வேலைவிடுத்தே மதலைகைகொடுத்தான்"
—உற்ப. படையெழு. 38

என்றும், 'அரன்பாற் படையரசை வாங்கினன்' எனப் பாம்பன் சுவாமிகள் குமார சுவாமியமும், 'குகன் கையில் தோற்றும் வெற்றி வேலாயுதத்திற்கு மேலாயுதமென்ன வேறில்லையே; பன்னிருகைக் குகவேள் பூண்ட சத்திப் படைத் தெய்வமே' எனத் தண்டபாணி சுவாமிகள் வேல் அலங்காரமும் ஒத்து ஒலித்தல் காண்க.

வேல் - அயில் - சத்தி - எஃகம் - ஞாங்கர் - உடம்பிடி ஒருபொருள் தரும்பல சொற்கள். இவற்றுள் வேலும் எஃகமும் ஆயுதப் பொதுப் பெயராகும். பழம் - பொதுப் பெயராயினும் வழக்கில் சிறப்பாக வாழைப்பழத்தைக் குறித்தல் போல வேலென்ற ஆயுதப் பொதுப்பெயர் சிறப்பாக முருகன் படையை உணர்த்திற்று. இதனைப் புலவர் புராணத்தார் 'வேலென்ற பேரொன்றை யாயுதமியாவும் விளங்கு பொதுப்பாலென்ற அணியினும் உள்ளன' எனச் சிறப்பித்தலும் சிந்திக்க உரியன. படைக்கலம் எப்பொழுதும் கூர்மையாயிருத்தல் வேண்டும். அக்கூர்மை இதனிடம்

சிறத்தலின் கூர்மை தெரிக்கும் அயில் வேலுக்குப் பெயரா யிற்று.

வெல்வது வேல் எனில் அக்கருவியேயோ வெல்வது? அல்ல. பின் யாது? வீரன் ஏறிய பரியா? கையிற் பிடித்த கலமா? நின்ற நிலமா? உடுத்த உடையா? அன்று; அன்று. பின் என்னை? இவையன்ன துணை புடையவன் பகைவர் தம் படைவலி கண்டு எங்ஙனம் வெல்வதென ஆய்ந்து முடிவுகட்டும் ஞானமாகும். ஞானம்—அறிவு வெல்லும். பிற துணைபுரியும். வேலுக்கு வடமொழி சத்தி. 'சத்திதான் தடையிலா ஞான' மென்பது சித்தி. இவற்றால் வேல், சத்தி, ஞானம், அறிவு ஒருபடித்தாதல் காண்க. இச்சத்தி விழைவு (இச்சை), செயல் (கிரியை), அறிவு (ஞானம்) என முத்திறப்படும். இவற்றில் அறிவே, ஞானமே, சத்தியாக, வேலாகச் செங்கையி லுள்ளது. இவ்விறையறிவு மாயையினை நிவர்த்தித்து மருளைப் போக்கித் தலைவனை அணுக அருளும். 'ஞானம் கொண்டே காணும் சிவபதம்' என்ற சிவப்பிரகாசர் செம்மொழியும் கண்டு நோக்குக.

இவ்வேல் அடியவரை அணுகுங்கால் அறக் கருணை வடிவும், அடியவர் பகைவரை அணுகுங்கால் மறக் கருணை வடிவும் ஏற்று மாயை அகற்றும் தன்மையது.

" ஏனை முருகன் றொட்ட விறுதலை படைத்த ஞாங்க
ராயிர கோடி யென்னு மருக்கரிற் றிகழ்ந்து தோன்றித்
தீயழற் சிகழி கான்று சென்றிட வவுணன் கொண்ட
மாயிரு ஞால முற்றும் வல்விரைந் தகன்ற தன்றே. 465

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் லுறுத்திப் பாணி
யிடம்பிடித் திட்ட தீயிற் றோய்ந்துமுன் னியற்றி யன்ன
வுடம்பிடித் தெய்வ மிவ்வா றருகெழு செலவின் வேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுத றடிந்த தன்றே. 487

புங்கவர் வழுத்திச் சிந்தும் பூமழை யிடையி னேகி
யங்கியின் வடிவ நீங்கி யருளுருக் கொண்டு வான்றோய்
கங்கையிற் படிந்து மீண்டு கடவுள ரிடுக்கண் தீர்த்த
வெங்கடம் பெருமான் செங்கை யெய்தி வீற்றிருந்த தவ்வேல்."

—யுத்த - சூரபன்மன் வதை - 491



'திருவருட் சத்தி வடிவான வேற்படை, என்னில் வேதாகமங்கள் பகர்ந்த தெய்வத் திருவமெல்லா மதுதானா விளங்கிடு முண்மையதே' என்றது வேல் அலங்கார அலங் கரிப்பு. வேல் இறைவனது ஞானமாதலால் கச்சியப்பர் தெய்வப் படைக்கலமென மேல் காட்டிய 487 செய்யுளி லும் பிறவிடத்தும் சேர்த்தனர்.

" தேயுவின் வடித்த வண்டத் திறங்களும் பிறங்கு ஞாலத்
தாயிர கோடி யண்டத் தவ்வியு மொன்றிற் றென்ன
மீயுயர் தொழுதி யாண்டோர் வெருவுறத் தோற்றங் கொண்டு
நாயகன் றனது தெய்வப் படைக்கலம் நடந்த தன்றே."

—யுத்த - சூரபன்மன் - 481

வேல் பெறுதல் உணர்ச்சி பெறுதல் என்ற பொருளில் சீவக சிந்தாமணியில் வருதல் வருமாறு :—

" வீழ்ந்த மயில்போல் விசயை கிடந்தாளைத்
தாழ்ந்த பலதட்பந் தாஞ்செய்ய வேல்பெற்று
போழ்ந்தகன்ற கண்ணாள் புலம்பா வெழுந்திருப்பச்
சூழ்ந்துதொழு திறைஞ்சிச் சொன்னா ளவன்றிறமே"

—கனகமாலை - 264

விசயை, மயில்போல வீழ்ந்து கிடந்தவளைத் தாழ்ந்து பல குளிர்ச்சிகளைச் செய்ய உணர்ச்சி பெற்று அரசனுயிரைப் போழ்ந்தகன்ற கண்ணாளெழுந்திருப்ப, கைகுவித்து வணங் கிச் சூழ்ந்து அவன் பிழைத்தபடி கூறினளென்க என்றது புலவர் நச்சினார்க்கினியர் உரை.

முருகப்பெருமான் தனது இரு துணைவியரோடும் வேலுடனும் மயில்மீதே வதியுங்கால் அப்பெருமானைக் கடவுளாகவும், வேலினையும், இரு துணைவியரையும் முறையே அறிவு, விழைவு, செயலென்னும் மூவகை யாற் றல்களாகவும், மயிலினை அவன் திருவடிக் கீழிருந்து, தனது அறிவு, விழைவு, செயல்களின் வழி சிறக்கப்பெற்றுப் பேரின் பம் நுகரும் வீடெய்திய உயிராகவுங் கருதுவதே சமய நூலார் கொள்கையாம். உயிரினது அறிவின்கண் இறைவ னது அருள் மன்னுதலின் அறிவுக்கறிவாய் நிற்கும் அவனது அறிவாற்றலைத் தமக்கு நினைவூட்டுவார் 'வேலு

மயிலுந் துணை' என்னும் சொற்றொடரை வாய்ப்பாடாக வழங்குவாராயினர். வேலென்பது இறைவனது அறிவையும் மயிலென்பது அவ்வறிவுக்குட்பட்ட உயிரினறிவையும் குறிக்கும்' எனத் திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் 'வேலு மயிலும் துணை' எனும் சொல் அடுக்கை மக்கள் எழுதலும் கூறலும் தம்மில் பதம்பெற வழக்கில் அடிபட்டதையும் மிகப் பொருத்தமாக விளக்கியிருக்கிறார்.

'முத்தி நல்கும் குகவேல் செங்கை வேலை உன்னுதலே மாலின்றிய மனத்தோராயிடினும் வயங்குகதிர் வேலின்றிக் கந்தனைப் பூசை செய்தாற் பயன் வீணபடுமே - வேற்படையைப் பேணிப் பரவும் பெரியார்க்குப் பின்னைப் பிறப்பில்லையே' என ஆமாத்தூரார் அருளியதின் நிட்ப நுட்பம் யாது? ஞானம் - அறிவு இன்றி இறைவனை வழிபடுதல் உயிர் அற்ற உடலை ஒக்கும் என்பதே. மற்றும் அறிவு விளக்கமே பண்டை நாளில் மக்களுக்குத் தலையாய குறிக்கோளாக இருந்தமைக்கு வேல் பூசனையே சிறந்த எடுத்துக் காட்டாகும். 'ஞானந்தான் உருவாகிய நாயகன்' என்ற கந்தத்தின் கலிப்பும், 'பழநிப் பதியிற்றிரு, ஞானபூரண சக்தி தரித்தருள் பெருமாளே' என்ற அருணகிரி அருள்வாக்கும் சிந்திக்கும்போது முருகனுக்கும் வேலுக்கும் வேறுபாடின்மை காண்க. இது குறித்தே தமிழர் வேலை வணங்குவதைத் தமக்கு வேலையாகக் கொண்டனர் போலும்!

"தோகைமே லுலவும் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை"

—சைவ எல்லப்பர் (செவ்வந்தி)

இனி அமயம் நேர்ந்துழி வேல் ஆற்றிய வேலையின் நுட்பத்தை நுவலும் கட்டுரை எழுத எண்ணி இம்மட்டோடு விரிவஞ்சி முடிப்பாம்.

"கோழிக் கொடியை மின்வேலை மயிலைக் குறித்தவரை
ஊழிக் கனலும் அணுகாது." —சிதம்பர சுவாமிகள்

---

# 3. "ஐந்தொழில் குறிக்கும் அபய திருக்கரம்"*

முருகன் திருவுருவம் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு திகழ்வது. அத்தத்துவ உருவகம் கந்தபுராணம். இந்நூலில் எல்லா உறுப்புகட்கும் உயர்சிறப்புகள் மிளிர்கின்றன. அவற்றை அறையத் தலைப்பட்டுத் தலைமையாகிய சிரம் செப்பி, வலது கரங்கள் பற்றிக் கூறிவந்தோம். சென்னல், அபய திருக்கரத்தின் ஐந்தொழில் குறிப்பைப் பகரப்புகுந்து படைத்தல் காத்தல் முடித்தோம். ஏனைய முத்தொழிலை அக்கரம் குறித்தல்பற்றி இன்று இயம்புவோம்.

"...........பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம்உய்ய"

என்றும்,

"முகங்களும் மூர்த்தன் காரும் விழிகளின் அருளும் வேலும்
வேறுள படையின் சீரும் அழகிய காமீ ரதும்
அணிமணித் தண்டை யார்க்குஞ் செழுமலர்-அடியும்"

என்றும் கந்தம் பலமுறை கூறுதலின் கரம் பன்னிரண்டென்பதை உணர்க. அப்பன்னிரு கரங்களில் வலது இடது கரங்கள் பற்றி,

"வீறு கேடகம் வச்சிரம் அங்குசம் விசிகம் மாறிலாத
வேல் அபயமே வலம் ; இடம் வரதம் எறுபங்கயம்
அணி மழுத் தண்டுவில் இசைந்த ஆறிரண்டு கை"

என்றனர். ஆகலின், அபய திருக்கரம் வலக்கையாகும்.

ஐந்தொழிலை சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம் அனுக்கிரஹம் என்பர் வடநூலார். இதனை முறையே

---

*இது ஞானியார் சுவாமிகள் தமது திருமடத்தில் 1931-ம் வருடம் நிகழ்த்திய சொற்பொழிவு. திரு. தி. செ. நாராயணசாமி எழுதிய கைக்குறிப்பு.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பர் நந்தமிழர். இவ்வைந்தும் அருளின் பாற்படுவன. இதனைச் சிவஞான சித்தியார் சுபக்கம் சுட்டுதல் காண்க.

“அழிப்பு இளைப்பாற்றல் ; ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல் ; நுகரச் செய்தல் காப்பது ; கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்களெல்லாம் மறைப்பு ; அருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு ; பார்த்திடின் அருளே எல்லாம்.”

(உரை) ஒடுக்கந் தோற்றம் நிலை மறைப்பு அருளென்னும் ஐந்தும் முறையே, இளைப்பாற்றலும், கன்மம் கழிவு முகத்தான் மலபாகம் வரச் செய்தலும், கன்மம் கழியுமாறு அதனை நுகர்வித்தலும், கன்ம வொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலும், பந்தம் விடுவித்தலுமாகிய உறுதிப்பயத்தனவாகலான் ஐந்தொழிலும் அருட்செயலே யாகலின், இவற்றுள் சில மறத்தொழிலே போலுமெனப் பழித்தலை யொழிவாயாக. மற்றும் இதனைச் சிவப்பிரகாசம் :

“ஏற்றவினை யாவருளின் திருவிளை யாட்டாக
இயம்புவர்க ளதுக்கவிடக் கடனின்ற தெதற்கே
யூற்றமிக வருள்புரித லேது வாக
வுரைசெய்வ ரொடுக்கமிளைப் பொழித்தல் மற்றைத்
தோற்றமல பாகம்வரக் காத்தல் போகந்
துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்த லாகும்
போற்றலரு மருளருளே யன்றி மற்றுப்
புகன்றவையு மருளொழியப் புகலொ ணாதே”

என்று கூறுதல் காண்க.

மேற்கூறியவற்றுள் சம்ஹாரம் (சம்-ஹிரு-அரம்) செவ்வையாய் ஒடுக்கிக்கொள்ளுதல்—அழித்தல்—இளைப்பாற்றல் எனப் பொருள்படுவது அறிந்தோம். அஃதும் பிறவும் அருளே என்றும் தெளிந்தோம். அழித்தல் அருள் என்பதால், மக்கள் முருகனை அழித்தல் தெய்வம் எனக் கூறும் கூற்று அறியாமை யன்றோ? இனி எதனை அழிப்பது? எதனின்று நீங்கி இளைப்பாறுவது? என்ற இன்ன பிற கடாவிற்கு விடை ஆராய்வாம்.

“இன்பமும் பொருளும் அறனும்” என்ற மக்களின் உள்ள விருப்பங்களை இயற்கைப்படி முறையில் வைத்தனர்



தொல்காப்பியனார். ஆதலின் மக்கள் அவாவுவதில் தலையாயது இன்பம். இக்காரணம் பற்றியே அஃது முதலில் வைக்கப்பெற்றது. பிற இதன் சார்பின் எழுந்தவை. இது நிற்க, இன்பம் மக்களது வேட்கையெனின் அதன் எதிர் மறையாக துன்பம் ஒழிதல் வேண்டுமன்றோ? துன்பத்தை அழித்து, இளைப்பாற்றிவைக்க வல்லவன் எவன்? இறைவன் ஒருவனே துன்பத்தை அழிக்க வழி வகுக்க வல்லவன். அவன் வகுத்த வழி யென்னை? அஃதே அழித்தலென்னும் அருள்வழி. துன்பம் துன்பம் என்றோமே அஃது எத்துன்பம்? யாம் கருதும் எல்லாம் துன்பமேயோ? மற்று அழித்தற்குரிய துன்பம் எவை? இதனை வைராக்கிய தீபத்தில் சாந்தலிங்கர் சாற்றுதல் காண்க.

“உடலிறப் பவத்தோ டாம்பெருந் துயராய்த்
தறுகணைத் துயரென்ப டக்கா
லிடையுறு திதிக்கட் டெயு முப்பதிலோர்
நிலையிற் பிணியுறு மிடத்தும்
விடலரும் பசிநோய் காமநோய் தணிப்பான்
மிகுபொரு டேடுத துயரின்
டைபிற வறுமைக் காக்குந துயர்வேர்
றாவிறு மிருபாற் றுயரே”

மேற்கூறிய துன்பங்களை மூன்றாகத் தொகுக்கலாம். அவை பிறப்பிலே - இருப்பிலே - இறப்பிலேயாம். பிறப்பின் “ஐம்பெருந் துன்பங்களை” சிதம்பர சுவாமிகள் உரையின் காண்க. இருப்பிலேயுள்ள துன்பங்கள் பாலகுமார விருத்த பருவத்தில் வருவன. ஈண்டு, திருவிளையாடலில் விருத்த குமார பாலரான படலம் நினைவிற்கு வருகிறது. திருவிளையாடலில் உள்ள முறை முதுமையினின்று இளமையாதல். இளமையாதல் இறைவன் கொண்டுள்ள பொருளில் அன்று. உருவத்திலும் இளமை யாதலாகும். அவ்வாறு முறைப்படுத்திக் கூறியது இறைவன் ஆற்றல் உணர்த்துவான் கருதியாகும். மற்றும் விரிக்கிற் பெருகும். ஈண்டு வரும் துன்பங்கள் அறியாமையாலும் பூர்வ கர்மத்தாலும் வரும் பிணித்துன்பம் ; நீங்காப் பசிநோய்த் துன்பம் ; விட வரும் காமநோய்த் துன்பம் ; இவற்றைத் தணிப்பான் கருதிப் பொருளை ஈட்டலிலும் பாதுகாத்தலிலும் வரும் துன்பம் ; நரைதிரை மூப்பால் துன்பம் ; இறப்பின்

துன்பமோ யாவற்றினும் மிகுந்தது. அதன் அளவைக் கூற நம்மனோரால் முடியுமோ? அம்மம்ம! அது அளவைக் கடந்தது. அதுபற்றியே, "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கென் கடவேன்" என்று மணிவாசகரும், "சங்கொத்த மேனிச் செல்வா! சாதல் நாள் நாயேன் உன்னை எங்குற்றாய் என்றபோது" என்று நாவரசும், "இறப்பொடு பிறப்பை எண்ணினால் நெஞ்சது பகீரெனும் துயிலுறு திருவிழியும் இரவு பகலாய்" என்று தாயுமானச் செல்வரும் செப்பிப் போந்தனர்.

இங்கு நாம் பெறலரும் பெற்றி ஒன்றுண்டு. அஃது செயற்கரிய செய்யும் பெரியார் துன்பச் சகிப்பை இன்பமாய்க் கொண்டது. அது நம்மனோர்க்கு எளிதில் வருவதன்று. ஞானவாசிட்டம், அருந்தவத்தினர் துன்பத்தைச் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்போல் சலியாது தாங்கி, வருவதையும் முகமலர்ச்சியுடன் எதிர் நோக்குவர் என்று கூறுகிறது. பெரியார் சரிதங்கள் காணில் துன்பச் சகிப்பின் அளவே அவர்களை மேன்மைப் படுத்தியதை அறிவோம்.

நிற்க முருகன் இளைப்பாற்ற வைத்த அருளுடையோன் எவன்? சூரபதுமன். அவன் ஆற்றல் என்னை? மக்கள் ஆற்றல் பாற்பட்டதோ? அன்று.

"மாயையின் வலியோனுமி
மால்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம்
அரசு செய்தக நூற்றெட்டுக்
காயமதழி வின்றுமிக் கடவுளர்க்
கலக்கம் செய்த பேருர் முதல்வன்"

இவ்வாயிரத்தெட்டு பிருதிவி அண்டங்களை நூற்றெட்டு சதுர்யுகங்கள் ஆண்டவன் திறன் என்ன? அவனை அவன் தந்தையாம் காசிபனுக்கு வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் என்ற பஞ்ச அங்கமுடைய பஞ்சாங்கம் கூற அமைத்தான்!

"விரிஞ்சன் மால்தேவராலும் வெலற்கரும் விறலோனுமிப்
பெருஞ்சார் பதமும்வேத வொழுக்கமும் பிறவும்மாற்றி
அருஞ்சிறை யவர்க்குச் செய்த அவுணர்கோன்."



இவனது இடுக்கண் ஆற்றாது இறைவனிடம் தேவர் முதலோர் முறையிட்ட முறையீடு பல கந்தத்தில் செறிந்து கிடக்கின்றன.

கோவே! எங்கள் குரவனே! தேசிகனே!
தேவே! மேலோர் திருவே! செய்தவனே!
யாவே! மற்றை யதீதே! இன்பதுன்பம்
யாவே யாயில் எமக்கோர் குறையுண்டோ?

பார்த்துப் பணித்த பணிசெய்து நின்றன்னை
யேத்தித் திரிதல் எமக்குக் கடனாகும்;
தீர்த்துத் துயர்நெறி திருத்தி மெய்ம்மை யென்றும்
காத்துப் புரத்தல் உனக்குக் கடன் ஐயா!

கந்தநம! ஐந்துமுகர் தந்தமுரு கேசநம! கங்கை புதல்வன்
மைந்தநம! பன்னிரு புயத்தநம! நீபமலர் மாலை புனையுந்
தந்தைநம! ஆறுமுக ஆதிநம! சோதிநம! தற்பர மதாம்
எந்தைநம! என்றும் இளையோய்நம! குமாரநம! வென்று தொழுதார்.

"நண்ணினர்க் கினியாய போலம்! ஞானநா யகனே போலம்!
பண்ணவர்க் கிறைவ போலம்! பரஞ்சுடர் முதலே போலம்!
எண்ணுதற் கரியா போலம்! யாவையும் படைத்தா போலம்!
கண்ணுதற் பெருமா னல்கும் கடவுளே போல மோலம்!

தேவர்கள் தேவா போலம்! சிறந்தசிற் பரனே போலம்!
மேவலர்க் கிடியே போலம்! வேற்படை விமலா போலம்!
பாவலர்க் கெளியா போலம்! பன்னிரு புயத்தா போலம்!
மூவரு மாகி நின்ற மூர்த்தியே போல மோலம்!"

இங்கு முறையிட்டால் வேண்டிய வேண்டியாங்கு அளப்பரும் ஆற்றலுடையானையும் ஒடுக்கி அருள்புரிவான் என்பது சிந்திக்கற் பாற்று.

ஒவ்வொரு திங்களும் ஒரு நக்ஷத்திரத்தின் பெயர் வாய்ந்தது. சித்திரை - சித்திரை; விசாகம் - வைகாசி; மூலம் - ஆனி; உத்திராடம் - ஆடி; அவிட்டம் - ஆவணி; பூரட்டாதி - புரட்டாசி; அசுவினி - ஐப்பசி; கார்த்திகை - கார்த்திகை; மிருகசீரிடம் - மார்கழி; புனர்பூசம் - தை; மகம் - மாசி; உத்திரம் - பங்குனி. அம்மீன் அம்மதியில் பௌர்ணமியுடன் சேரும். நக்கீரர் களவியலுரையில் பெரிய திருவிழாக்களாகக் கூறப்படும் மதுரை

ஆவணியவிட்டம், உறையூர் பங்குனி யுத்திரம், களவழியும் குறிக்கும் கார்த்திகை விழா, மற்றும் மார்கழித் திருவாதிரை; தைப்பூசம் மாசிமகம் இன்னபிற விழாவரும் நாளின் மதியின் வடிவு ஓர்க. அசுவினி மீன் நிறைமதியுடன் சேர்கின்ற ஐப்பசி மதியில் வளர்பிறையில் பிரதமை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி ஆகிய நான்கு நாள் சமராபுரி இறைவன் சமர்புரிந்தான் என்பது சரிதம். சஷ்டி திதியிலே சூரபதுமனை சம்ஹரித்தான்—அழித்தான்—இப்பாற்றினை—ஒடுக்கிக் கொண்டான்—அஃதும் முறையிட்டார் செய்த கருணைத் திறம்.

இவ்வாறு அழித்ததைக் கந்தபுராண யுத்த காண்டம் - சூரபன்மன் வதைப்படலம் 464-ம் செய்யுள் குறிக்கிறது.

"அங்கவர் மொழியும் வெய்யோ னாற்றலுந் தெரிந்து செவ்வேள்
செங்கைய தொன்றில் வைகுந் திருநெடு வேலை நோக்கி
யிங்கிவ னாகம் போழ்ந்தே யெழுதி யிமைப்பி னென்னுந்
தன்மை யுடைய சீர்த்திச் சூர்மேற் செல்லத் தொட்டான்."

இப்பாவிலுள்ள சிறப்பு காண்க. அங்கவர்மொழி - தேவர் முதலாகிய சாதுக்கள் முறையிடு (பிரார்த்தனை) வெய்யோன் - சூரியன் (சூரபதுமன்) தபனனை - தகிக்கச் செய்யும் தன்மையுடையோன் - என்பில்லா புழு தவழ்தல் போல. 'என்பிலதனை வெயில் போலக் காயுமே' என்ற குறளும் நோக்குக; தெரிந்து-தெரிதல் - ஆராய்தல். இதற்கு இரண்டு செயப்படுபொருள். மொழியும் ஆற்றலும் தெரிந்து; செங்கை - காத்தல் காமாதல் பற்றிச் செங்கை யென்றனர்; வைகும் - எப்போதும் இருக்கிற; திரு - வடமொழி சிதைவு அல்ல - மரியாதையின் நின்றது; நோக்கி - 'நோக்கரிய நோக்கே' என்ற திருவாசக - சிவபுராணம் குறிக்கும் நோக்கென்க; ஆகம் போழ்ந்து - உடலைப் பிளந்து - இங்கு பிரித்தல் தொழில் ஒன்றே குறிக்கிறது. கொல் என்னும் வினை குறிக்கவில்லை. சூர் + பதுமன் = சூரபதுமன்; சூர் - மயில், பதுமன் - கோழி. இவ்வினை கருணை உணர்த்திற்று. தொட்டான் - தொடுத்தான். பின்னும் இதனை:

"விடம் பிடித்தமலன் செங்கண் வெங்கண நுதத்திப் பாவி
விடம்பிடித் திட்ட தீயிற் றெரிந்தது முன்னியற்றி பன்ன



உடம்பிடித் தெய்வமின்னா தருநெடு செவ்வினேமி
மடம்பிடித் திட்ட செஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே"

மற்றும் அவன் அருள் பெற்றதை:

"தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமு னுற்றால்
தூய ராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசம ரந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்"

என்று கூறுதல் காண்க.

---

# 4. திருவெண்ணெய்நல்லூரில் சுவாமிகள் பேருரை

[தொகுத்தவர் : உதவிக் காரியதரிசி-திரு. கந்தநரசிம்மன்]

மெய்யன்பர்களே!

இத் திருத்தொண்டில் அடியேனை ஈடுபடுத்திய இறைவன் திருவருளை மறவாதிருக்கும் கடமை உண்டு. அத் திருவருளும் தங்களன்பும் துணையிருக்க, அடியேன் இக் கடமையைக் கூடியவரை செய்வேன் என்று துணிகிறேன்.

நாட்டின் பெருமை: நாம் கூடியிருக்கும் இந்த நாடு நடுநாடெனப்படும். சேர சோழ பாண்டியராகிய மூவருக்கும் உரியதாக நடுநிலைமையிலிருந்தமையால் இதை நடுநாடென்று நூல் வழங்கும். நம் பெரியோரையும், நம்மையும் நம் சந்ததிகளையும் உய்விக்கத் தோன்றிய திருநாவுக்கரசு சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தோன்றிய நாடு இதாம். மேலும், மெய்கண்ட தேவர் பெருமான் திருவவதாரம் செய்ததும் இந்த நாட்டிலேதான். அருணந்தி சிவாச்சாரியர் தோன்றியதும், நாயன்மாரில் ஏழு பேர் அவதரித்ததும் இந்த நாட்டில்தான். இப்படிச் சமயாசாரியரும், சந்தானாசாரியரும் தோன்றிய இந்நாட்டில் இப்போது சைவமிருக்கும் நிலையைப் பார்த்தால் வருந்தத் தக்கதே.

ஊர்ப் பெருமை : இந்த ஊரை 'நல்லூர்' என்று பெரியோர் வழங்கினர்கள். வெண்ணெய்க் கோட்டை கட்டி உலகன்னையாம் மங்களாம்பிகை தவம் செய்த ஊரானதால் இதற்கு வெண்ணெய் நல்லூர் என்று பெயர். "பித்தா பிறைசூடி" என்ற தேவாரப் பாட்டிலும் இவ்வூரின் பெயர் வருவது காண்க. "நல்லார் தொழும் வெண்ணெய் நல்லூர்" என்றும் வரும். மேலும் இவ்வூரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிவபெருமான் தடுத்தாட்கொண்டதைப் பற்றிக் கூறுகையில், சேக்கிழார் சுவாமிகள் இதை "நல்ல அந்தணர் வாழும் வெண்ணெய் நல்லூர் நண்ணி" என்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

ஆலயச் சிறப்பு : நாமிருக்கும் ஆலயத்தின் பெயர் அருட்டுறை. நம் முதல் ஆசையானது அநுபவிக்கவேண்டிய பொருள் மேலேயே செல்கிறது. இது ஜன்ம ஜன்மமாக வருவது. இரண்டாவதுள்ளது அதிக ஆசையுள்ளவன் அதிக பணம் தேடுவது. அதன்பின், போக இச்சை உண்டாகிறது. இதனால் அநேக குற்றமிழைக்க நேரிடுகிறது. ஆனால் நமக்கு வேண்டுவன முக்கியமாக மூன்று. அவைதான் அருள் அன்பு அறம் என்பன. மனிதன் இரண்டுகால் பசு போன்றவன். பசுவுக்குப் புல், நீர், நிழல் தேவையானவை. அம்மூன்றும் கிடைத்ததும் அது ஒருவித விடுதலை அடைவதுபோல, மனிதன் ஆணவம் கன்மம் மாயை என்ற கட்டுக்களினின்று விடுபட்டு வீடுபெற அருள்வேண்டும். விடுபட்டடைவது வீடு. நமக்கு அவ்வீட்டை அடைவிக்கத் துறையாயிருப்பது அருள். ஆகவே, இது அருள்துறை எனப்பட்டது. கடுவன் இளவெயினனார் என்ற தமிழ்ப் புலவர் பரிபாடலுள்,

"யாமிரப்பவை பொன்னும் பொருளும் போகமும்அல்ல
நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்"

என்றார்.

"நின்னையாம் இரப்பவை நுகரப்படும் பொருள்களும் அவற்றை உளவாக்கும் பொன்னும் அவ்விரண்டானும் நுகரும் நுகர்ச்சியுமல்ல : எமக்கு வீடு பயக்கும் நின்னருளும் அதனை யுண்டாக்க நின்னிடத்து யாம் செய்யுமன்பும் அவ்விரண்டானும் வரும் அறனுமாகிய இம்மூன்றுமே



என இதற்குப் பரிமேலழகர் மிக அழகாக உரை செய்திருக்கிறார். சைவர்கள் எப்போதும் இறவி உழைக்கவேண்டியது அருளே, அருள் துறையே. அதனாலேயே அன்புண்டாகும். அன்பால் அறம் வளர்க்கலாம். அப்படிப்பட்ட அருள் துறையில் நாமிருக்கிறோம்.

நாமிருப்பது குணிப்பொருள். அதாவது நம்மிடம் சிற்சில குணங்களிருக்கின்றன. முக்கியமானவை இன்பம் பற்றவும், அதற்கெனத் தொழிலைப் பற்றவும் செய்யும் குணங்களாம். இவை அறிவை மறைத்து அசாக்கிரதையை வெளிப்படுத்தும் குணங்கள். அதாவது அழிவுடைய தேகத்தில் அழிவில்லாத தேகியை இறுக்கிக் கட்டுவது குணம். பகவத் கீதையிலும் ஸ்ரீ கிருஷ்ணன் ௧௪-ம் அத்தியாயம் ௫-ம் சுலோகத்தில்,

"ஸத்வ ரஜஸ்தம இதிகுணா: ப்ரக்ருதி ஸம்பவா:
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிந மவ்யயம்"

என்று கூறுவது காண்க.

நாம் செய்யவேண்டுவது நம் குணதோஷங்களை அறியவேண்டுவதே. நம் துன்பங்களை எப்படி நீக்குவதென்று நினைக்கவேண்டும். முற்சொன்ன முக்குணங்கள் நமக்கிருப்பதுபோல இறைவனுக்கில்லாமையால் இறைவன் நிர்க்குண: என்ற பெயருமுடையவன். அவன் ஆத்மாவுக்கு வரும் துன்பத்தைத் தவிர்ப்பவன்.

"சிவ: மஹேஸ்வர: ருத்ர: விஷ்ணு: பிதாமஹ:
ஸம்ஸார வைத்ய: ஸர்வக்ஞ: பரமாத்மா"

என்ற எட்டுப் பெயர்களில் இறைவனை 'ஸம்ஸார வைத்திய' என்றதால் இறைவன் ஜீவர்களின் உயிருக்கு வந்த ஜன்ம ரோகமாகிய மலத்தைத் தொலைக்க வேண்டி வைத்தியன் மருந்து கொடுப்பதுபோல், நம்மைப் பற்றிய மலம் மாயை இவைகளை நீக்கி ஆனந்த நிலையை யடைவிக்கிறான் என்பதறிகிறோம். நேயத்தால் - அன்பால் - பொன்னம்பலவன் நம்மை ஆனந்த வெள்ளத்தில் அழுத்துகிறான்.

சிவ : என்பதிலும் ஒரு முக்கிய அர்த்தமுண்டு. அதாவது ஒவ்வொன்றிலும் தங்கியிருப்பவன் என்று பொருள். அப்பொருளை உணர்த்தவே இறைவன் என்று நந்தமிழர் உரைத்தனர்.

'சிவம்' என்பதற்கு மங்களம் என்றும் பொருளுண்டு. அம்மங்களமாகிய சிவத்தின் சம்பந்தமுடையதே சைவம். அதைப் பற்றியதே சைவ சாத்திரம். ஆனால் இதைச் சைவ சித்தாந்த சாத்திரமென்பர். இது திருக்கைலாயத்தில் நால்வர்க்குரைத்ததாகும். சித்தாந்தம் என்னும் முடிபு என்று பொருள். சிவபெருமானைப் பற்றிய முடிந்த முடிபுகளாகையின் இது சைவ சித்தாந்த சாத்திரமெனப்படும். சைவத்தைப் பரப்பி எல்லாருக்கும் இன்பம் அளித்தவரே இத் திருவெண்ணெய் நல்லூரில் பிறந்த குருமூர்த்தியாகிய மெய்கண்டதேவ ஸ்வாமிகள். 'திருவளர் நாட்டம் கருணையில்' என்ற பாட்டில் பட்டினத்தார் உரைப்பதுபோல், திருவருள் நாட்டத்தால் யாவும் மெய்யாகி இறைவனே மெய்யாகத் தோன்ற அவ்விறைவனைக் கண்டவராதலின் அவருக்கு மெய்கண்டார் என்னும் பெயர் வந்தது. காலாந்தமாகச் சைவம் நூல்களால், ஆசாரியர்களால், வளர்ந்தது. ஆனால் தற்போது சைவாது நிலை வருந்தத்தக்கதா யிருக்கிறது. ஆண் மக்கள் மட்டுமின்றிப் பெண் மக்களும் நன்குணர்ந்து சைவ நெறியில் நிற்றல் வேண்டும். பெண்மக்களால்தான் சைவம் சிறப்புற்றதென்பதைச் சேக்கிழார் ஸ்வாமிகள்,

"மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள்தெய்வம் வளவர்
திருக்குலக் கொழுந்து"

என்ற பாட்டில் மிக அழகாகப் பாடி ஒரு பெண் சைவத் திருநீற்றைப் பரப்பிய பெருமையைக் கூறியிருக்கிறார். ஆகையால் முக்கியமாகப் பெண்கள் சைவத்தைப் பரப்ப முந்துதல் வேண்டும். இந்த ஊருக்குச் சமீபத்தில் நரசிங்க புரத்தில் இருந்தாண்ட அரசர்கள் நம் சைவத்தை வளர்த்தார்கள். அரசிகளும் மடங்களும், ஆசாரியர்களும் சைவத்தை வளர்த்தார்கள். ஆனால் நம் தற்போதைய அரசாங்கம் சைவத்தைப் பரப்பாவிடினும் நாம் பரப்பத் தடை செய்யாது சுதந்திரம் கொடுத்திருக்கிறது. தமிழ்நாட்டிற் பலர் - சைவர்கள் - பிற சமயத்தில் சேரும் நிலையிலிருக்கின்றனர். ஆனால் சைவ சித்தாந்தத்தைப் பற்றி, திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த (Pope) போப் என்பாரும் (Godwin) குட்வின் என்பாரும் போற்றிப் போற்றி எழுதியிருப்பது நோக்கத்தக்கது.



சமீபத்தில் கனம் வைசிராய் தமிழ்நாட்டுக்குப் போந்த போது நம் சைவ சித்தாந்தத்தின் சார்பாக எவரேனும் ஏதேனும் பத்திரிகை வாசித்துக் கொடுத்தார்களா? இல்லை. ஆனால் சென்னையில் மகம்மதியர் அவருக்குப் பத்திரிகை வாசித்துக் கொடுத்தார்கள். அப் பத்திரிகைக்குக் கனம் வைசிராய் இறுத்த மறுமொழி நோக்கற்குரியதாகும்.

நாம் செய்யவேண்டுவது நம் சைவ சித்தாந்தத்தைப் பரப்புதலே. இவ்வேலையைச் சைவ மடங்களின்மேல் ஏற்றி விடுவது வழக்கமா யிருக்கிறது. ஆனால் அது இயற்கையே. அதற்காகச் சைவ மடங்கள் தற்கால நிலையுணர்ந்து உதவி செய்ய முன்வருவது சிறப்பாகும். இதற்கோ ரறிகுறி, திருவாவடுதுறை மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ வைத்தியலிங்க ஸ்வாமிகள் நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கு ரூ. 100 நன்கொடை யளித்திருப்பதாகும்.

கிறிஸ்தவ மதத்தவர் "All India Reverenda Conference" என்று பெரிய, ஒரு மகாநாடு கூட்டுவதுபோல நாமெல்லோரும் சேர்ந்துழைத்தால் தமிழ் நாடெல்லாம் சைவம் தழைத்தோங்கும்.

---

# 5. திருநந்திதேவர்*

உலகத்திற் பல ஜீவன்கள் இருந்தபோதிலும் மனிதனை மட்டும் உயர்வாகக் கருதுவானேன்? மனிதனிடத்து ஓர் உயரிய குணம் இருக்கிறது. அதுவே தன்னைப்பற்றி ஆராயும் குணம். இவ்வித அறிவே உயர்ந்ததாகும். இதுவே ஆன்மாவைத் தூய்மைப்படுத்தவல்லது. மற்றவையெல்லாம் ஒரு சமயம் இருந்து மறு சமயம் மறைவன. அவை சிற்சில இடங்களுக்கோ சிற்சில சமயங்களுக்கு மட்டுமோ பயன்படுவன.

பின்னர் உடம்புக்கும் உயிருக்குமுள்ள சம்பந்தம் என்ன? உடல் வேறு; உயிர் வேறு. இந்நிலையை அறியக் கூடிய அறிவு இன்னும் நமக்கு வரவில்லை. தற்போதைய நம்முடைய அறிவு ஐந்தாகப் பிரிந்து நிற்கிறது. ஒன்று பலவாகப் பிரியும்போது பலம் குறைவது இயற்கை. பள்ளத்தின் வழி நீர் ஓடுவதுபோல ஐம்புலன்களின் வழி ஓடும் அறிவு கண்ணின் வழியே வெகுதூரம் செல்கிறது. மற்றவை நம்மிடமே உள்ளன. அவை சிறிது தூரத்தில் உள்ளவைகளையே அறியும் தகுதியுடையன.

கண்ணால் பார்க்கப்படுவதே உலகம். ஆங்கிலத்தில் பார்ப்பதற்கு லுக் (Look) என்று சொல்கிறோம். பார்ப்பது லோகம். இது லுக் என்பதன் தாதுவினடியாகப் பிறந்தது. இவ்வுலகத்துப் பொருள்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. உலகத்தை நன்றாகப் பார்ப்பவனே தன்னைப் பார்க்கிறான். இல்லாதவன் தன்னைப் பார்ப்பது இல்லை. எதிரில் உள்ளதைமட்டும் அறிவது அறிவன்று. இவ்வித அறிவை யுடையவன் மனிதனாகக் கருதப்படமாட்டான். சாதாரண உலகில் பெரியோர் வைத்துவிட்டுப்போன சொத்தைக்கொண்டு காலந் தள்ளுபவனுக்கு மதிப்பு

---

*இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளிச் சந்தில் 25—4—37-ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. கே. த. கிருஷ்ணசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது. சித்தாந்தம் மலர் 10, இதழ் 5-ல் வெளியிடப்பட்டது.



அதிகமா? அல்லது தானாகவே கஷ்டப்பட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்து அதனால் ஆம் பயனை அனுபவிப்பவனுக்கு மதிப்பு அதிகமா? பின்னவனுக்கே மதிப்பு அதிகம் என்று கூறுவதில் தடை சொல்வார் யார்? அதனால் உயர்ந்த பொருள்களைக் காண்பதே அறிவாகும். உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்று அறிந்து கொள்வது மட்டும்தானா நம்மறிவுக்குத் தகுதி? நம்மறிவு அதையும் தாண்டிச் செல்லுதல் வேண்டும்.

உலகத்துக்கு வேறொரு பெயர் ஜகத் என்பது. ஜ — தோன்றுவதைக் காட்டும் ஓரெழுத்து. க — மறைவது. இவ்வுலகம் தோன்றி மறைவதென்பதை இப்பதம் குறிக்கிறது. தோன்றின பொருள் மறையும்; மறைந்த பொருள் தோன்றும். ஐந்து பூதங்களும் ஓரே காலத்தில் இருந்தது இல்லை. ஒவ்வொரு பூதத்துக்கும் சக்தி உண்டென்பதைத் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆகாய சக்தியினால் இக்காலத்தில் எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றன. இவ்வைந்து பூதங்களும் தோன்றின காலத்தை அறிவது அரிது.

ஆகாசம், வாயு, தேயு, நீர், மண் என்ற முறைப்படியே இவை ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. இவை ஒன்று சேர்ந்ததே உலகம். சிலர் உலகம் இயற்கையென்பர். அன்னார் உலகத்தில் சூடு, குளிர் முதலிய இருவித குணங்களிருப்பதை அறியார். இரண்டுவித வேறுபட்ட குணங்களிருப்பின் அஃது இயற்கை உலகமாகுமா? இதனால் இவ்வுலகம் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதே. உலகம் உண்டானபோதே நாம் உண்டானோம். உலகத்திலுள்ள ஐந்து பூதங்களும் ஒன்றுபட்டிருத்தலால் இதை ஒரு சித்புருஷன் ஆட்டிவைத்தல் வேண்டும்.

இவ்வுலகத்தை ஈசாவாஸ்யம் என்றும் கூறலாம். ஈசனால் படைக்கப்பட்டதே ஈசாவாஸ்யம். அவனே தன்னால் படைக்கப்பட்ட உலகத்தைக் காப்பாற்றுபவன். உயிரற்ற பொருள்களைக் கூட்டிவைக்க ஒருவன் இருப்பதாலேயே அவை ஒன்று சேர்ந்து இயங்குகின்றன.

இவற்றைக் கூட்டுவிப்பவனை நீ எவ்வாறு உணர்வாய் என்ற கேள்வி எழலாம். நமக்குப் பக்கத்திலுள்ள காற்றை

நாம் காண்கிறோமா? காணாததால் காற்று இல்லையென்று கூறிவிட முடியுமா? சில சமயங்களில் அக்காற்று உஷ்ணமாய் இருப்பதையும் சில சமயங்களில் அது குளிர்ச்சியாயிருப்பதையும் உணர்கிறோம். அதனால் காற்றென்பது உண்டென்று நிரூபிக்கிறோம். அதுபோலக் காணாததைக் கண்டு கூறுவோரே பெரியோர். இதை வேறோர் உதாரணத்தாலும் விளக்குவாம்.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு சிறு பையன் சேர்ந்து இரண்டு மாதங்களே ஆயினவென்று வைத்துக்கொள்வோம். வேறொருவன் இரண்டு வருஷங்களாக வாசிக்கிறான். கல்வி உத்தியோகஸ்தர் வரும்போது 'ட' என்ற எழுத்தைக் கரும் பலகையில் எழுதி முன்னவனைக் கேட்டால் அவன் என்ன கூறுவான்? ஒரு கோடு என்பான். பின்னவனோ 'ட' என்ற ஒலியைக் குறிப்பதென்பான். இருவருக்கும் வித்தியாசம் என்ன? முன்னவன் கண்டதைக் கண்டவாறே கூறினான். பின்னவனோ கண்டதை மனத்தில் கொண்டு கண்ணுக்குக் காணப்படாத ஒன்றைக் கூறினான். இவ்விருவரில் பின்னவனையே நாம் மெச்சுகிறோம். அப்படியே பெரியோரும்.

உயிரற்ற பொருள்கள் ஒன்று சேர்ந்தபோது மனிதனைக் காட்டிலும் அறிவுடையனவாகின்றன. உதாரணமாகக் கடிகாரத்தை எடுத்துக்கொள்வோம். அஃது உயிரற்ற பொருள். ஆயினும் மனிதன் அறிவுக்கு எட்டாதகால அளவை அது காட்டுகிறது. எனவே, அது மனிதனைக் காட்டிலும் அறிவுள்ளது. அச்சிறப்பு அதற்கு எவ்வாறு வந்தது? அதற்குள் ஒரு சித் புருஷன் இருந்து அதனை ஆட்டிவைப்பதனாலன்றோ?

நல: என்ற பதத்துக்கே கடவுள் என்பது பொருள். இது காப்பாற்றுபவன் என்பதை உணர்த்துகிறது. காக்க உள்ளவனே கடவுள். அக்கடவுள் இரக்கம் அல்லது அன்புமயமாகவே இருக்கிறார். இதனாலேயே திருநாவுக்கரசு சுவாமிகள் வேதாரண்யத் தேவாரத்தில்,

"இரக்கமொன்றிலீர்........."

என்று கடவுளைச் சுட்டுகிறார். தயை இல்லாவிடில் ஆன்மாக்கள் ஜீவிக்கமாட்டா. அதனால் கடவுளிடம் அன்பு உண்டு



இதை நாம் காண்பதில்லை. இதற்கு உதாரணமாக எதைக் கூறுவது? முன்னர்க் கூறிய காற்றையே கூறலாம். இக்காலத்தில் காற்றுக்கு எடை உண்டு என்பது கண்டு பிடிக்கப்பட்டபோதிலும் நாம் அதைக் காண்கிறோமா? இல்லையே! கடவுள் சோதனைக்கு அகப்படாதவன். அதனாலேயே பெரியோர் அக்கடவுளைச் 'சோதனைக்கப்படாச் சோதீ! உன்னைச் சோதிக்கத் துணிந்தேன்' என்று கூறினர். உலகத்தைப் பார்க்கப் பார்க்கவே நமக்குக் கடவுள் நினைவு உண்டாகிறது.

பால் தயிராகத் திரிதல்போலப் பஞ்சபூதம் இத் தேகமாகத் திரிந்தது. பஞ்சபூத பரிணாமமே உலகம் என்பர். கரணம் தப்பினால் மரணம் உண்டாவது நிச்சயம். கரணத்தை நாம் இருதயம் (Heart) என்று கொள்ளலாம். பிரிந்துகிடக்கிற பஞ்சபூதங்களையும் கடவுள் அன்பால் ஒன்று சேர்த்துக் காக்கிறார். நாம் அவரிடம் அன்பு பாராட்டவில்லையேல் அவர் நம்மை வெறுப்பார். கடவுளுக்கு எல்லாரிடத்தும் ஒரேவிதமான அன்பு உண்டு.

இக்காலத்தில் சிறிய உதவி செய்தவருக்கும் நாம் வந்தனம் (Thanks) செலுத்துகிறோம். கடவுள் அன்புக்கு நாம் கைம்மாறு காட்டுகிறோமா? ஈசன் நமக்கு இவ்வளவு பெரிய உலகத்தைக் கொடுத்தான். அதை நாம் மறந்துவிட்டோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று திருவள்ளுவர் கூறுகிறார். செய்த நன்றியை மறப்பது கொலை செய்தலுக்குச் சமமாகும்.

கடவுளிடத்து நாம் நன்றியை எவ்வாறு காட்டுதல் கூடும்? அவனைப் பற்றிய நினைவு சதா நம்மிடம் இருத்தல் வேண்டும். ஆனால் அவனோ நம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவன். அதனாலேயே மணிவாசகனார் கடவுளை "மாற்றம் மனங் கழிய நின்ற மறையோனே" என்றார். தைத்திரியோபநிஷத்தும் வாக்கு மனம் கடந்ததே கடவுள் என்று கூறுகிறது.

அப்படிப்பட்ட கடவுளைக் காணுதல் எவ்வாறு? உருகிய உள்ளத்துக்கு அவன் வெளிப்படுவான். 'உள்ளம் உருகின் உடனாவர்' என்பது திருவுந்தியார்.

'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'—பட்டினத்தார்.

'அழுதால் உன்னைப் பெறலாமே.........'—மணிவாசகனார்.

அவனைத் தவிர நம்மைக் காப்பார் ஒருவர் இல்லை. அதனால் அவனொருவனே நமக்குக் கதி.

இதுவரை கடவுளைப் பற்றியும், அக்கடவுளைப் பற்றிய நினைவே சதா நம்மிடம் ஏன் இருத்தல் வேண்டுமென்பது பற்றியும் பேசினோம். இனி நந்தி தேவரைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

நந்தி என்ற பதத்துக்கே சந்தோஷமா யிருப்பவன் என்பது பொருள். பிறரைச் சந்தோஷப்படுத்துபவனும் அவனே. நந்தியோடு 'ஆ' சேர்த்தால் ஆநந்தி என்றாகிறது. ஆனந்த மயமோ நந்தி. சந்தோஷம் நிலைத்திருப்பதன்று; ஒரு காலத்தில் மறையக் கூடியது. ஆனால் ஆனந்தமோ என்றும் நிலைத்திருப்பது. நந்தி, நம்பன் முதலியன கடவுள் பெயர்கள்.

இனி நந்திக்குரிய வேறுபல பெயர்களைக் கவனிப்போம்.

தேவர் என்பதும் நந்தியின் பெயர். தேவர்க்குரிய சிறப்புக்கள் என்ன? அவர் அதிக வயதுள்ளவர்; அமுதம் சாப்பிட்டவர்; பொன்னுலகத்தில் இருப்பவர்; கிழத்தனம் இல்லாதவர்; காளைப் பருவம் உடையவர்; நல்லனவற்றைச் செய்து புகழுடம்பு பெற்றவர்.

"ஆதியிலும் திருநந்தி அந்தியிலும் திருநந்தி
வாதனையால் விளையாட வரும்இடமும் திருநந்தி
நீதிலாத் திருநந்தி நிகழ்பெருமைத் திசைமுகனும்
ஓதிடினும் அவர்க்குவாய் ஒருகோடி போதாவே"

என்று ஞானக் கூத்தர் நந்திபெருமான் பெருமையைக் கூறியிருக்கிறார்.

ஒருவர்க்கு ஆசை உண்டாயின் அன்பு குறையும்; அதனால் அறிவு குறையும். அதனால் பிறவாமலிருக்க ஆசைப் படுங்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்'—திருக்குறள்

ஆசைகளைப் பூர்த்தி செய்தவர் திருநந்தி. 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.' பிறர்க்கு உபகரிப்பதே



செல்வர்க்கு அழகு. நந்தி ஆனந்தச் செல்வர். அவர் நமக்கு உதவி செய்யாமல் இரார். இதனாற்றான்,

"செம்பொருளாமைத் திறன் தெரித்து
நம்பல மறுத்தநம் நந்தி வள்ளல்"

என்று கூறப்பட்டிருக்கிறது. தெரித்து என்பது என்னைத் தெரியும்படிச் செய்து என்ற பொருளில் வந்திருக்கிறது.

ஒருவன் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் அறியாமையே மிகும் என்று திருவள்ளுவர் திருக்குறளில் கூறியிருக்கிறார். அதனால் படிப்பதாலேயே நம் சந்தேகங்கள் தெளிவுறா. நாம் ஒரு குருவைக் கொள்ளுதல் வேண்டும். திருநந்திதேவரே நமக்கேற்ற குரு. குருவுக்கு மேகத்தை ஒப்பிடலாம். சமுத்திரத்திலுள்ளது உப்பு நீர். அது குடிக்க உதவாது; குளிக்க உதவாது. அதுபோலவே சாத்திரக்குப்பை. சாத்திரக்குப்பை நமக்கு உதவாது. ஆனால் மேகமாகிய குரு என்ன செய்கிறார். மேகம் சமுத்திர நீரை உட்கொண்டு நமக்குச் சுத்த நீரை அளிப்பதுபோலக் குரு சாத்திரக் குப்பைகளின் உட்பொருளைக்கொண்டு நமக்கு உபதேசமாக வழங்குகிறார். அதனால் கடவுள் குருவாக வந்த மூர்த்தமே திருநந்திதேவர்.

"அம்மலைக் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நன்குரு மரபுக் கெல்லாம் முதல்குரு நாதனாகி"

என்று நந்திதேவரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

இளைப்பை பதித்தால் பிரவர்த்தியை விடுகிறோம். ஓடுகின்ற அறிவு பிரவர்த்தியின்பாற் பட்டது. அதைக் கட்டுப்படுத்தலே நிவர்த்தி மார்க்கமாகும். நாம் நிவர்த்தி மார்க்கத்தில் செல்ல எண்ணுகிறோம். இதைக் கற்றுக் கொடுப்பவர் கோயிலிலுள்ள நந்திதேவர். ஆகமம் இதையே கூறுகிறது. ஆகமம் என்பதற்கு வருகிறது என்பது பொருள். மந்திரியாக இருந்த மணிவாசகனார் பரமகுருவின் வாயை நோக்கி அமுதைப் பெறுகிறோம்.

இனி நந்திக்குரிய குணங்கள் யாவை என்பதை ஆராய்வோம். அவர்க்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நந்தியெம்பெருமானுக்கு நந்தியென்பது நிஷாநாமம். நாமம் மட்டும் இருந்து பிரயோசனம் இல்லை. அதனாலேயே அவர்க்கு அதிகாரம் வழங்கப்பட்டது. பெயர் இருந்து

அதிகாரம் இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லாமையைத் திருக்குறள் விளக்குகிறது. சிவபெருமான் நந்திக்கு அதிகாரம் கொடுத்தமையைத் திருவையாற்றுப் புராணம்,

“ வருசந்தி மிசைக்கொண்டு வானுலவுந் திரிபுரங்கள்
கருசந்தி விழவைத்த கண்ணுதலோ னென்றலைக்
குருசந்தி யையாறன் குலவுமணி மைந்தனுக்குத்
திருநந்தி தேவனெனத் திருநாமஞ் சாற்றினனே ”

என்ற செய்யுளில் கூறுகிறது.

நந்திதேவர்க்குரிய அங்கங்கள் என்ன? இதைத் திருவையாற்றுப் புராணம்,

“ மற்றிணையி லாக்கயில மிவைதன் நந்திக்கு
நெற்றியிற்கண் நாலுபுயம் நெருப்புருவம் பிறைகொண்முடி
சற்றுமொரு குறையில்லாச் சாரூபம் பணித்தருளிப்
பெற்றியினு லருட்சிலைப் பிரம்புமருள் செய்தனனே ”

என்று கூறுகிறது.

நெற்றிக்கண் ஆசையில்லாமையைக் காட்டுகிறது. ஆசையை உண்டாக்கவந்த மன்மதனை எரித்தது நெற்றிக் கண். நான்கு புயங்கள் சாதாரண மனிதரல்லர் என்பதைக் காட்டுகின்றன.

நெருப்பின் நிறம் தனியேயிருக்கும் தன்மையுடையதல்ல. சார்ந்ததன் நிறத்தையே அஃது உடையது. அதனால் நெருப்பின் நிறம் வெண்மை என்னலாம். நந்தியின் வடிவம் வெண்மை. இது நெருப்பைக் குறிக்கிறது. கடவுள் அழல்வடிவினன். அதனால் கடவுளின் அம்சமே திருநந்தி.

நந்திதேவர்க்குச் சந்திரனும் உண்டு. சந்திரன் இரவில் சஞ்சரிப்பவன். அதனால் அவன் தோஷசஞ்சாரி. தோஷத்தில் சஞ்சரித்து நன்மை உண்டாக்குபவன். இதுவே குருவின் நோக்கம்.

நந்திதேவர்க்கு அளித்திருப்பது சாரூப முத்தி. முத்தி மூன்று வகைப்படும்; பழிபடுமுத்தி, பதமுத்தி, பரமுத்தி. முத்தி அல்லாதது பழிபடுமுத்தி. படிப்படியாக வருவது பதமுத்தி. எல்லாவற்றையும் கடந்தது பரமுத்தி. பரமுத்தியே சாரூபமுத்தி. கடவுளிடமிருந்து எல்லாப் பாக்கியமும் கொண்டவர் சாரூப முத்தியடைந்தவர். இஃது ஒரு குறைவுமில்லாதது. சிவபெருமான் உருத்திரெல்லார்க்கும் சாரூப



முத்தி அளித்திருந்தபோதிலும் நந்திபெம்பெருமானுக்கு அளித்ததுபோல அதிகாரம் தரவில்லை. அதிகாரம் அடிக்கவும் அணைக்கவும் உபயோகப்படுகிறது.

திருநந்திதேவர்க்குப் பிரம்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதற்காக? சந்நிதானத்தை மறைப்பவர்களை அடிப்பதற்காக. அடிபட்டவரே ஆண்டவனை நினைப்பர்.

நந்திதேவர் உடைவாளையும் உடையவர். இதுவும் அதிகாரத்துக்கு அறிகுறி.

நந்திதேவரின் வலது கையில் மழுவும் இடது கையில் மானும் உண்டு. இவ்விரண்டும் வேதத்தைக் குறிப்பன. பட்டினத்தார் திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதில்,

“ வேதம் மான்மழுவே......”

என்று கூறியிருக்கிறார். வேதமாகிய மான்குட்டியைத் தாங்கியிருக்கிறார் என்பது வேதமாகிய பொருளைத் தாங்கியிருக்கிறார் என்று பொருள்படும். வலது கையிலுள்ள மழு வீரத்தைக் காட்டுவது; ஆண்மையை உணர்த்துவது. மழுவை விட்டதாக எந்தச் சரிதமும் கூறவில்லை. மழு சம்ஹரிக்கும் தன்மையுடையது. அதனால் கடவுள் சம்ஹார கர்த்தாவாகிறார். எல்லாவற்றையும் சம்ஹரிப்பவனே உண்டாக்கவல்லவன். இதுவே கடவுள் சக்தி. சம்ஹாரன் என்ற பதத்துக்கு ஒழுங்காக இழுத்துக்கொள்பவன் என்பது பொருள். சம்ஹாரம் ஒய்வு பெறுதல். இது கடவுளின் அன்பின்பாற்பட்டது. எல்லா ஜீவன்களையும் ஒரே காலத்தில் ஒய்வுபடுத்துதலே மகா சம்ஹாரம். இவ்வதிகாரம் திருநந்திதேவர்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாட்சியாகப் பிரம்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

திருநந்திதேவர் ஒரு சித்தருமாவர். சித்தன் வாழ்வு பற்றித் திருவேரகத்தைப் பற்றிய திருமுருகாற்றுப்படை உரையில் நச்சினார்க்கினியர் கூறியிருக்கிறார். சித்திசெய்யத் தொடங்கியவன் ஞானியாகமாட்டான். நினைவு இல்லாமல் சித்தி கைவரப் பெற்றவரே சித்தர். திருவையாற்றுப் புராணம்,

“ யோசனைகள் பன்னிரண்ட மிருமுன்ன திருமலையிற்
பேசரிய சாரூபம் பெற்றவனை யாவருக்கும்
பாசமிலாச் சித்தருக்கும் பாரிடங்க ளானவர்க்கு
மாசின்மே லதிகார வமைவித் தருள்செய்தான் ”

என்று செப்புவதால் நந்தியெம்பெருமானுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டமை கூறப்பட்டிருக்கிறது.

இவ்வளவு அதிகாரத்தோடு கூடிய நந்திக்கு ஆலயத்தின் காவல் தரப்பட்டிருக்கிறது. இதை மேற்படி புராணம்,

"எழுமதில் புடைசூழ்ந்த விருநான்கு வாயிலுக்கும்
வாழியதன் நிரைப்பணிய வருமடியார் யாவரையும்
ஒழுங்கு காலங்க ளறிந்தவர்க்குத் தொல்பணிக்கு
மாழிரும் புலித்தன் ஆலயத்தினுள் காவல் கொடுத்தான்"

என்று கூறுகிறது.

இக்காவலின் திறத்தை மன்மதன் சரித்திரம் விளக்குகிறது. மன்மதன் சிவபெருமான்மீது பாணத்தை விடத் துணிந்தான். நந்தி 'உம்' எனவே அவன் பெருமூர்ச்சை விட்டான். நந்தியின் காப்பைக் கண்டதும் அவன் பயம் கொண்டான். பெரிய புராணம்,

"நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்."

என்பதால் நந்தி கோயில் காவல் பூண்டமை விளங்குகிறது.

ருத் என்றால் துக்கம் என்று பொருள். ரன் ஓட்டுகிறவன். அதனால் ருத்ரன் துன்பத்தை ஓட்டுபவன். "இடும்பை நோய் ஓட்டும் உருத்திரன்" என்று சிவஞான முனிவர் கூறுகிறார். இப்பெயரும் திருநந்திதேவர்க்குப் பொருத்தமாகும். எப்படி? ஒரு காலத்தில் தேவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து சிவபெருமானிடம் சூரபன்மனைப்பற்றி முறையிடச் சென்றனர். பிரமனே முதலில் சென்றார். அவர் நந்தியை நோக்கி,

"நந்தியெம் போதுகேள் மக்கள்பால் தன்பெயராம்
சிந்தை செய்திடேல்"

என்று கூறினர். இக்கூற்றைக் கண்டு நந்திதேவர் பரிதாபப்



பட்டார். துன்பப்படுபவரைக் கண்டு பரிதாபப்படல் சான்றோர் இயல்பு.

உடனே நந்திதேவர் உள்சென்று பரமனுடைய ஆக்ஞையைப் பெற்றுத் தேவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். இதனாலேயே நந்திதேவர்க்குத் துபவன் என்ற பெயரும் உண்டாயிற்று. நந்திக்குச் சைலாதிபதி என்ற ஒரு பெயரும் உண்டு. அவர்க்குத் தண்டித்தற் பணியும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரு சமயம் பிரம்மா செய்த யாகம் ஒன்றுக்கு நந்திதேவர் அனுப்பப்பட்டார். ஆங்குத் தக்கன் சிவபெருமானை இழித்துக்கூறினன். நந்தியெம்பெருமான் இருகாதுகளையும் பொத்திக்கொண்டு 'சிவ, சிவ' என்றார். இதுவே மந்திரம் சொல்லவேண்டிய முறை. நம்முடைய காதுக்கும் கேளாதபடி நாம் மந்திரத்தைச் சொல்லுதல் வேண்டும். உடனே தக்கன் தலைபோகவென்றும், அவ்விடத்தில் ஆட்டுத்தலை உண்டாவதாகவென்றும் நந்திதேவர் சாபம் போட்டார். ஆட்டுத்தலை மற்றொருநாளும் அழியாது என்பதனால் அவ்வாறு சபித்தார் போலும்.

காசியில் விஸ்வநாதருக்குத் துரோகம் செய்ய எண்ணிய வியாசரைத் தண்டித்தவரும் திருநந்திதேவரே.

'அனைத்தானும் நல்லவைகேட்க அனைத்தானும் ஆன்ற பெருமைதரும்' என்ற திருக்குறள்படி உபதேச அளவே நமது குணமும் இருக்கும். அவ்வளவே பெருமையும்.

சனற்குமாரர் பிரமதேவருடைய புத்திரர்; முருகப் பெருமானுடைய சிஷ்யர்; என்றும் இளமையுடையவர்.

பரமேஸ்வரிடத்து உபதேசம் பெற்றவர் அனந்த தேவர். அவர் ஸ்ரீகண்டருக்கு உபதேசித்தார். அவர் நந்திதேவர்க்கும், நந்திதேவர் சனத்குமாரர்க்கும், சனத்குமாரர் சத்திய ஞானதரிசனிக்கும், அவர் மெய்கண்டாருக்கும் உபதேசித்தனர். இது பரம்பரையாக வந்த உபதேசம். உபதேசம் இருவகைப்படும்; ஒன்று நூல் வகையாக வருவது; மற்றொன்று பரம்பரை வழியாக வருவது.

"எந்தை சனற்குமரன் ஏத்த இயல்பாய் நந்தி உரைத் தருளும் ஞானநூல்" என்றார் பெரியாரும். ஆசாரிய முறையில் நமக்கு அநுக்கிரகம் பண்ணுகிறவர் திருநந்தி தேவரே.

# 6. மெய்கண்டார்*

இச் சிறந்த உலகத்தில், உயர்ந்த மக்கட் பிறப்பெய்திய நமக்கு விருப்பு வெறுப்பு என்னும் இரண்டு முண்டு. நாம் விரும்புவதெல்லாம் நன்மையைப் பெறவேண்டு மென்பதற்கே. அப்படி விரும்பப்படும் பொருள்கள் பல உள. முயற்சி செய்தால் அவற்றைப் பெறலாம். முயற்சி செய்வதற்கு மனம், வாய், உடல் ஆகிய மூன்று கருவிகள் நம்மிடத்துள்ளன. அவற்றில் மனமே சிறந்தது. மனம் ஒரு கருவி. நாம் அதை உடையோம். கருவி உடையானுடைய ஏவற்படி நடக்கவேண்டியதாயிருக்க, நம் மனம் நம் ஏவற்படி கேட்கிறதில்லை. அதற்கு மாறாக மனத்தின் வழியே நாம் செல்லுகின்றோம். அதனால் நாம் உடையார் என்ற நிலையும், மனம் நமது உடைமைப் பொருள் என்ற நிலையும் போய்விடுகிறது. உடைமைப் பொருளாகிய மனத்தை நம் ஏவற்படி நடத்தும் நிலை நமக்கு வாய்க்கவில்லை. அந்நிலையைச் சம்பந்தர், நாவுக்கரசர் முதலிய பெரியோர்கள் அடைந்திருந்தனர்.

" நாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமணத் தன்னன்பு வைத்தநிலை யாரும்
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னொடும் போதகன் பாயே "

என்று திருமூலர், தம் ஏவற்படி நடவாததினால் இடர்ப்பட்ட மனத்தைப் பார்த்து இரக்கங்கொண்டு அது நன்மையடைதற்குத் தான் போமிடத்து வரும்படி அழைக்கிறார். தன் மனத்தை அவர் எங்கு அழைக்கின்றார் என்று வினவின்,

" அறிவார் அமரர் தலைவனை நாடித்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே "

*1937-ஆம் ஆண்டில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் கச்சி - முனிசாமி உடையார் குறிப்பெடுத்தது.



என்ற பாட்டில் பேரின்பத்தைக் காட்டுவிக்க வல்ல பெரியாரிடத்தில் சேரத் தன் மனத்தை அழைக்கின்றார் என்பது விளங்குகின்றது. எனவே, நாம் நன்மையைப் பெறவேண்டின் நம் மனத்தைப் பெரியாரிடத்தில் செலுத்தல் வேண்டும். பெரியார் மிகுந்த அறிவுடையார்.

" அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்."

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "

என்ற திருக்குறட் பாக்களால் பெரியவர்கள் மிகுந்த அறிவுடையவர்கள் என்பதும், பொருளற்றவற்றைப் பொருளாக மதியாது மெய்ப்பொருளைக் காண்பதே சிறந்த அறிவென்பதும் விளங்குகின்றன. மெய்ப்பொருளைக் கண்டவர்கள் யாரோ அவர்கள் தான் பெரியவர்கள். இதனால் மெய்கண்டாருடைய பெருமை விளங்குகின்றது.

இறைவன் அருளிய வேதத்தில் சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உதவும்படி சிறிய பொருள்களும் பெரிய பொருள்களும் பேசப்பட்டிருக்கின்றன. சிறிய பொருள்கள் தள்ளத்தக்கன. பெரிய பொருள்கள் கொள்ளத்தக்கன. இவ்வேதத்தில் அருமையாகப் பேசப்படுகின்ற பொருள் எதுவோ அதுவே குருவாகத் தோன்றி நந்திக்கு அருள, அந்நந்தி வழியில் வந்தது சிவஞான போதமாகும். அதை இயற்றியவர்தான் மெய்கண்டார். அவர் அந்நூலை நம் தாய்மொழியாகிய தமிழில் வழங்கினார்; வழங்கினதோடு நில்லாமல் அதை மற்றவர்கள் அறியும்படியும் உணர்த்தி, அதன் பயனாக அஞ்ஞானத்தைப் போக்கும்படிச் செய்தவர்.

சிவஞான போதத்தை மெய்கண்டார் சூத்திர ரூபமாக அருளினார். அருகிய எழுத்துக்களானும் பெருகிய பொருளை அறிவிப்பன சூத்திரங்கள். தமிழில் சூத்திர ரூபமாக உள்ள நூல்கள் வெகுசில. அவைகளும் இலக்கண நூல்கள். அறிவு நூல்களில் சூத்திர ரூபமாக உள்ளது சிவஞான போதமொன்றே.

" சிறிய அறிவில் பெரிய மக்களைப் பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிவெலாம் அகத் தடக்கியே தாள்
நெறியின் நீடிய சிவஞான போதத்தைக்
குறிய நீர்த்தமிழால் உரை ஞானியைப் பணிவாம் "

என்ற செய்யுளால் இவ்வுண்மை பெறப்படுகின்றது.

மெய்கண்டார் காலத்திலேயே இருந்த அருணந்தி சிவாச்சாரியார், தாம் இயற்றிய இருபா இருபஃதில்,

" மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்
வெண்ணெய் நல்லூர் மெய்கண்டான் "

" கண்ணகல் ஞாலத்துக் கதிரவன் தானென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ "

" காரா இருகக் கலியாழ் வேலையின்
போரா இன்பத் திறத்திய பெரும "

என்றமையால் ' மெய்கண்டதேவர் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுடைய மலத்தை அகற்றுகின்றவர், தன்னை எதிர்ப்பட்டாருடைய அஞ்ஞானத்தைக் கதிரவன் தோன்றி இருளை ஒழிப்பதுபோல் போக்குகின்றவர், மேலும் எதிர்ப் படாதவர்களுக்கும் அழியாத இன்பத்தைத் தருகின்றவர் ' என்ற உண்மைகள் விளங்குகின்றன. மனவாசகங் கடந்தார் தாம் இயற்றிய உண்மை விளக்கத்தில்,

" பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதானந்தப் பொருளாம்
மெய் காட்டும் மெய்கண்டான் "

என்றபடியால் மெய்கண்டதேவர் தம்மை அடைந்தோர்க்குத் தேகாதி பிரபஞ்சம் யாவும் பொய் என்பதைக் காட்டி, அதனால் அப் பொய் அறிவைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் தருகின்றவர் என்பதையும்,

" வித்தக மெய்கண்ட தேவர் "

என்றபடியால் அவர் நிறைந்த ஞானத்தையுடையவர் என்பதையும் விளக்கிக் காட்டினர். மேற்கூறியவாற்றால் மெய் கண்டாருடைய பெருமை விளங்கிற்று.

மெய்கண்ட தேவர் இருந்த காலத்தைப் பற்றிச் சற்று ஆராய்ந்து அவர் வரலாற்றில் செல்லல் இக்கால முறையின்



படி அவசியமாகும். மெய்கண்டாருடைய மாணவர் அருணந்தி சிவாச்சாரியார், அவருடைய மாணவர் மறைஞான சம்பந்தர், அவருடைய மாணவர் உமாபதி சிவாச்சாரியார். உமாபதி சிவாச்சாரியார் சாலிவாகன சகாப்தம் 1235-ல் இருந்தவர் என்பது அவர் இயற்றிய சங்கற்ப நிராகரணம் என்ற நூலால் தெரிகிறது. இப்போது நடப்பது சாலிவாகன சகாப்தம் 1859 (கி. பி. 1937) ஆகவே உமாபதி சிவம் இற்றைக்கு 654 ஆண்டுகட்கு முன் இருந்தவராவர். இவருக்குக் குரு பரம்பரையில் மூன்றாவதாக இருந்த மெய்கண்டாருடைய காலம் இற்றைக்கு 685 அல்லது 690 ஆண்டுகட்கு முன்னாகும் என முடிவு கட்டலாம்.

நடு நாட்டிலே திருப் பெண்ணாகடம் என்ற ஊரில் அச்சுதகளப்பாளர் என்ற வேளாளர் பிள்ளைப்பேறின்மையால் பல தவங்கள் செய்தும் பயனற்றவராகிவிடத் தம் குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் சென்று குறையிரந்து நிற்க, அவர் தமிழ்மறையாகிய தேவாரத்தில் கயிறு சாத்திப் பார்க்க,

" பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே "

என்ற திருஞான சம்பந்தர் தேவாரம் கிடைத்தது. இப் பாட்டின் கருத்தைக் குருவானவர் விளக்கிக் காட்ட அவராணையைச் சிரமேற்கொண்டு அச்சுதகளப்பாளர் தம் மனைவியுடன் திருவெண்காடடைந்து முக்குள நீராடிச் சிவபெருமானை வழிபடுவாராயினர். அவ்வழிபாட்டின் பயனாய் அவதரித்த பிள்ளைக்கு அவர்கள், அத்தலத்து இறைவன் பெயராகிய சுவேதவனப் பெருமான் என்ற பெயரையே பிள்ளைத் திருநாமமாகச் சூட்டினர். பின்னை, திருவெண்ணெய்நல்லூரில் அம்மான் வீட்டில் வளர்ந்து வரும் காலத்தில் வயது மூன்றாயிற்று. அக்காலத்தில் ஒரு நாள் பரஞ்சோதி முனிவர் ஆகாய வழியாய்ச் செல்லும் போது, செலவு தடைப்பட்டமை கண்டு கீழிறங்கிச் சுவேதவனப் பெருமானின் பக்குவத்தை யறிந்து மெய்ஞ்

ஞானத்தை உபதேசித்துக் குழந்தைக்கு மெய்கண்டார் என்னும் திருநாமத்தையும் சூட்டிச் சென்றனர். மெய்கண்டார் தாம் உபதேச மூலமடைந்த பொருளைப் பொல்லாப் பிள்ளையாரிடம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து தம்முடைய சீடர்களுக்குமுபதேசித்துச் சிவஞானபோதம் என்னொரு நூலையும் செய்தருளினர்.

சிவஞானபோதம் ஓர் அருஞ் செந்தமிழ் நூல். "உயர் சிவஞான போத" மென்றும், "யாரும் வெல்லாத சிவஞான போத" மென்றும் அதைத் தக்கோர் மதித்தனர். சிவஞான போதம் என்ற சொற்றொடர் சிவம், ஞானம், போதம் என்னும் முச்சொற்களால் ஆக்கப்பட்டு இறைவன் அருளால் வரும் அநுபூதி ஞானம் அல்லது பரஞானத்தின் வேறாய நூலாராய்ச்சியால் உண்டாம் ஆராய்ச்சி ஞானம் அல்லது அபர ஞானத்தை உணர்த்தும் நூல் எனும் பொருளைத் தருகின்றது. திருவாதவூரரை ஆட்கொள்ள இறைவன் மானுடச்சட்டை தாங்கி ஒரு சிவயோகி வேடம் பூண்டு திருப்பெருந்துறையில் வீற்றிருந்த போது அவர் கையிலிருந்த சுவடி யாதென்று வாதவூரர் கேட்கப் "பொய்ம்மையிலாச் சிவஞான போதம்" என்று இறைவன் அருள, "சிவம் எது? ஞானம் எது? போதம் எது?" என்ற மாணிக்கவாசகர் கேள்விக்கு "நின்ற சிவம் ஒன்று, அதனைத் தேர்தல் ஞானம், ஆய்ந்து தெளிதல் போதம்" என்று சிவபெருமான் "சிவஞான போதம்" என்ற சொற்றொடருக்கு உரை கூறினர்.

சிவஞான போதத்தில் விளக்கப்படுவது வேதத்தில் சொல்லப்படும் ஆறு முடிவுகளில் ஒன்றாகிய சித்தாந்தமாம்.

"வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போ தாந்தமும்
ஓதத்தகு மெட்டி யோகாந்த அந்தமும்
ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே"

என்ற திருமந்திரப் பாட்டு ஆறுவித அந்தங்களை உணர்த்துகின்றது. இதில் சித்தாந்தத்திற்கு அடையாக "மிக்க" என்ற பிரயோகம் நோக்கற்பாலது.

"நித்தம் பரனொ டுயிருற்று நீள்மலஞ்
சுத்தமுதல் ஐந்தும் தத்துவத்தால் நீக்கிச்
சுத்த மசத்துந் தொடராவகை நீங்கிச்
சித்தன் பரன்பால் அடைதல் சித்தாந்தமே"



என்ற செய்யுளால் சித்தாந்த மெதுவென்பது விளங்குகின்றது. சித்தாந்த மென்ற சொல்லுக்கு முடிந்த முடிவு என்பது பொருள். வேதம், உபநிஷத் இவைகளில் கூறப்படும் முடிவான பொருள் சித்தாந்தமாம். இதைப் பின்பற்றி ஒழுகுதலின் பயனை,

"சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டுஞ் சிவனையே"

என்ற திருமந்திரச் செய்யுள் ஓதுகின்றது. மேற்கூறியவாற்றால் சைவமான வேதத்தின் முடிவு ஞான சித்தாந்தமாகு மென்பதும், உயிர்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைவதற்கு அதுவே ஒப்பற்ற நெறியாகு மென்பதும் பெறும்.

ஆகமங்களும் புராணங்களும் சித்தாந்தத்தையே வற்புறுத்துகின்றன. உபநிஷத்தின் முடிவு சித்தாந்தம். அது வைதிகம், அவைதிகமன்று என்று மகுடாகமமும், சித்தாந்தம் வேதத்தின் சாரம் என்று சுப்ரபேதாகமும், சுருதி சாரம் சித்தாந்தம் என்று வாயுசம்ஹிதையும், ஆகமங்களின் முடிவாகச் சொல்லப்பட்ட பதி, பசு, பாசம் என்ற இரகசியமான பொருளாகிய சித்தாந்தத்தைத் தட்சிணாமூர்த்தி சனகாதி முனிவர்களுக்குச் சொன்னார் என்று வடமொழி ஸ்காந்தமும் கூறுகின்றன. உமாபதிசிவம் சித்தாந்தத்தை "வேதத் தலைதரு பொருள்" என்றார். குமரகுருபர சுவாமிகளும் சித்தாந்தத்தையே போற்றினர்.

வேதாகமங்களிலும் புராணங்களிலும் வடமொழிப் புலவர்களாலும் தென்மொழிப் புலவர்களாலும் விதந்தோதப்பட்ட சைவ சித்தாந்தத்தை விளக்கவந்த சிவஞான போதம் பொது, உண்மை என்றிரண்டு அதிகாரங்களால் அமைக்கப்பட்டது. பொதுவதிகாரம் பதிபசு பாசங்களின் பொது இலக்கணத்தையும், உண்மையதிகாரம் அவற்றின் சிறப்பிலக்கணத்தையும் சாற்றுகின்றன. பொது இலக்கணம் தடத்த இலட்சணம் என்றும் சிறப்பிலக்கணம்

சொரூப இலட்சணம் என்றும் சொல்லப்படும். ஒரு பொருள் மற்றொன்றோடு கலந்துள்ள இலட்சணம் தடத்தமாம். வேறொன்றோடு கூடாதபோதுள்ள இலட்சணம் சொரூபமாம். பொது அதிகாரத்தில் முப்பொருள் உண்மை சொல்லப்படுகிறது. ஒரு பொருளைப் பிரமாணத்தாலும் இலட்சணத்தாலும் தெரிந்துகொள்ளலாம். பிரமாணம் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என மூவகைத்து. பிரத்தியட்சம் புறப்புறச் சமயத்தாராகிய உலோகாயதருக்கே உரியதாதலால் அது சிறந்த பிரமாணமன்று. ஆகமப் பிரமாணம் மற்ற சமயத்தாருக்குத் தவிர சைவத்தில் மந்த அறிவுடையோர்களுக்கும் பொருந்தாது. எல்லாராலும் கொள்ளக்கூடியது அனுமானப் பிரமாணமாகும். அனுமானத்தால் கண்டதைக் கொண்டு காணாதது நிச்சயிக்கப்படும். பொதுவதிகாரம் பிரமாண இயல், இலக்கண இயல் என்றிரண்டியல்களை உடைத்தாய்ப் பிரமாண இயல் மூன்று சூத்திரங்களால் கடவுள், உலகம், உயிராகிய முப்பொருள்களின் உண்மையை விளக்கி, இலக்கண இயல் மூன்று சூத்திரங்களால் உயிரின் இலக்கணம், உலகத்தின் இலக்கணம், கடவுளின் இலக்கணம் ஆகியவற்றைக் கூறுகின்றது. உண்மை அதிகாரம் சாதனம், பயன் எனுமிரண்டியல்களாலாகி, முதலியற்கண் மூன்று சூத்திரங்களால் சாதனம் செய்யுமதிகாரி, சாதனம் செய்யப்படும் பொருள், சாதனம் செய்யு முறை இவற்றை விளக்கி, இரண்டாவதியல் மூன்று சூத்திரங்களால் பாச விடுதி, ஈசனையடைதல், சிவன் முத்தர் இலக்கணம் ஆகியவற்றைப் பேசுகிறது.

இந்நூல் அமைப்புக்கும் நூற்காப்புக்கும் ஓர் இயைபுண்டு.

"கல்லால் நிழல்மலை—வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்—நல்லார் புனைவரே"

என்பது நூற்காப்பு. இக்காப்பு பன்னிரண்டு பதங்களாலாய நான்கடிகளையுடைய ஒரு செய்யுள். நூல் பன்னிரண்டு சூத்திரங்களாலாய நான்கியல்களையுடைத் தென்பதைக் காப்புச் செய்யுள் உணர்த்துகின்றது. முதலடியின் கடைச் சொல்லாகிய "மலை" என்பது "மலைவில்லார்"



என்று புணர்ச்சியால் சம்பந்தப்படுவது, நூலின் முதலியலின் கடையும் இரண்டாவதியலின் முதலும் சம்பந்தப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. முதலியலின் கடைச் சூத்திரமும் இரண்டாவதியலின் முதற் சூத்திரமும் பசுவைப் பற்றியே பேசுகின்றன.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் எனும் நான்கு சாதனங்களுள் கேட்டலும் சிந்தித்தலும் பொது அதிகாரத்தில் ஆறு சூத்திரங்களாலும், தெளிதலும் நிட்டை கூடலும் உண்மையதிகாரத்தில் ஆறு சூத்திரங்களாலும் விளக்கப்படுகின்றன. எனவே, பொது அதிகாரம் விஷயங்களை ஆராய்கின்றவர்களுக்குரிய தென்பதும், இரண்டதிகாரங்களும் சாதன முடையார்க்குரிய தென்பதும் பெறரும்.

இந்நூல் தமிழில் வழங்கப்பட்டதாதலால் தமிழ்நாடு இது வழங்கப்படுமெல்லையாகும். ஆனால் இஃது இக்காலத்துப் பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பல தேசங்களிலும் பரவப் பெற்றிருத்தலால், இந்நூற்கு வழங்குமெல்லை கோலல் அரிது.

வேதாகமங்கள் பொருள்களை ஓரிடத்திற் சொல்வது போல் மற்றோரிடத்தில் சொல்வதில்லை. அவைகளை ஆய்ந்து ஒற்றுமை செய்து காட்டவே சிவஞான போதம் தோன்றிற்று. பொருள்களெல்லாம் மூன்று பிரிவுகளில் அடங்கும். அவை உலகம், உயிர், கடவுள் என்பனவாம். ஆனால் பல நூல்கள் பல திறமாக அவற்றைக் கூறுகின்றன. சுவாயம்புவம் என்னுமாகமம் சிவம், பதி, பசு, கர்மம், ஆணவம், சுத்த மாயை, அசுத்த மாயை எனப் பொருள்களை ஏழாகவும், பௌட்கரம் சிவத்தை ஒழித்து ஆறாகவும், பாரமேயம் பதி, பாசம், ஆணவம், கர்மம், மாயை, என ஐந்தாகவும், சர்வஞ்ஞானோத்தரம் சிவம், பதி, பாசம், பசு என நான்காகவும், இரௌத்ரவம், மிருகேந்திரம் ஆகிய ஆகமங்கள் பதி, பசு, பாசம் என மூன்றாகவும் கூறுகின்றன. இவ்வாகமங்கள் அனைத்தும் ஒரே கருத்துடையனவாயிருப்பினும் பொருள்களைப் பலதிறப்படுத்திக் கூறினமையின் அவற்றை ஒற்றுமைப்படுத்திக் காட்டச் சிவஞான போதம் தோன்றிற்று.

நிலையில்லாத பொருள்களின் சம்பந்தமான பிறவிக்கு அஞ்சி நிலைத்த பொருள்களின் சம்பந்தமான இன்பத்தை நுகர விரும்புவோரே இந்நூல் கேட்க அதிகாரியாவர். சரியை, கிரியை, யோக நூல்களைக் கற்ற பிறகு இந்நூலைக் கற்றால் நூற்பொருள் நன்கு விளங்கும். அன்றேல், விபரீதமாகுமென்பது பெரியார் துணிபு. இதைக் கற்றலினால் அறியாமை நீங்க ஆராய்ச்சி ஞானம் உண்டாகும்.

இனிச் சிவஞான போதம் நிலைநாட்டுவது சுத்தாத்துவிதத்தை.

"பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ"

என்னும் தாயுமானவர் பாடல் இங்குக் குறிக்கத் தக்கது. சுத்தாத்துவிதம் என்று கூறற்குக் காரணம் சிவாத்வைதம், விசிட்டாத்வைதம், கேவலாத்வைதம் என்பவற்றினின்றும் வேறுபடுத்திக் காட்டற்காம். அத்வைதம் எனும் வடமொழிச் சொல் ந+த்வைதம் எனப் பிரிக்கப்படும். 'ந' என்ற சப்தத்திற்கு "சப்தகல்பத்ருமம்" எனும் வடமொழி நூல் ஆறுவிதப் பொருள்களைக் கூறுகிறது. நன்கு வேண்டற்பாலன மூன்று பொருள்கள். அவை அன்மை, இன்மை, மறுதலையாகும். பிராமண குலத்திற் பிறந்தும் பிறப்பொழுக்கத்தினின்றும் தவறினானை அப்பிராமணன் என்று கூறுமிடத்து 'ந' என்னும் சொல் அன்மைப் பொருளில் வழங்கப்படுகிறது. அப்பிரகாசம், அமலம் என்றவிடத்து அது இன்மைப் பொருளில் வழங்கப்படுகிறது. அநீதி, அதர்மம் என்றவிடத்து அது மறுதலைப் பொருளில் வழங்கப்படுகிறது. ஆதிசங்கரர் அதை இன்மைப் பொருளில் கொண்டார். மத்வர்கள் மறுதலைப் பொருளில் கொண்டனர். மெய்கண்டார் அன்மைப் பொருளில் வழங்குகின்றார். கடவுளுக்கும் உயிருக்குமுள்ள அத்வைத சம்பந்தத்தை மெய்கண்டார் விளக்கும் முறையே சிறந்ததென்றாகும்.

இரண்டு பொருள்களின் சம்பந்தம் ஐக்கியம், தாதான்மியம், சமவாயம், சையோகம் எனப் பலவகைப்படும். ஆற்று நீர் கடல் நீரோடு கலத்தல் ஐக்கியமாம். கடவுளும்



உயிரும் சம்பந்தப்படுவது இதைப்போல் அன்று. "என்றும் தெய்வம் தெய்வமே" என்றபடியால் உயிர் கடவுளோடு கூடிக் கடவுளாகாது. ஒரு மணியின் நிறம் அம்மணி வடிவமாயிருத்தல் தாதான்மியமாம். இது குணகுணி சம்பந்தமாகும். அதாவது குணியின் ரூபமாய்க் குணம் இருத்தல். உயிர் கடவுளின் குணமல்லவாதலாலும், உயிர் ஒரு குணி, கடவுள் ஒரு குணியாதலாலும், குணியும் குணியும் கூடுதல் தாதான்மியம் அல்லவாதலாலும், கடவுளும் உயிரும் சம்பந்தப்படுவது தாதான்மியமன்று. இதையே தார்க்கிகர்கள் சமவாய சம்பந்தமென்பர். சையோகமாவது விரலும் விரலும் கூடுதலாம். ஈண்டு விரல் முழுமையும் கூடுதலில்லை. கடவுளும் உயிரும் சம்பந்தப்படுதல் இதுவெனின், பூரண வியாபகமுடைய கடவுள் தன்மைக்குக் குறைபேற்படுமாதலின் அது சையோகமன்று. உயிர் ஏகதேச வியாபகமுடையதாதலின் அகண்டத்தில் கடவுளோடு முழுமையுங் கூடாது. இனி மெய்கண்டார் கூறும் அத்துவிதம் யாதென்பது ஆராய்வாம். முற்கூறிய தாதான்மிய சம்பந்தம் இருவகைப்படும். சூரியனும் கிரணமும்போல் ஒரே பொருள் குணியாகவும் குணமாகவுமிருந்து இரண்டாய் நிற்றற்கு ஏதுவாயிருப்பதொன்று. ஈண்டு பிற பொருள்களைப் பார்க்கச் சூரிய கிரணம் இன்றியமையாததெனினும் சூரியனைப் பார்க்க அவனே துணையாயிருப்பதை அறிகிறோம். வேறுபட்ட இரண்டு பொருள்கள் ஒன்றுகூடி இரண்டல்லாத் தன்மையை எய்தல் மற்றொருவித தாதான்மியமாம். தாள் தலை என்ற இரண்டு வேறுபட்ட சொற்கள் புணரும்போது தாடலை என்றாகிறது. இங்கு டகரம் ஒரு எழுத்தன்று. இரண்டு எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து ஒன்றாகாமலும் இரண்டுமல்லாமலும் நிற்கிறது. இதைப் போல் கடவுள், உயிர் ஆகிய இரண்டு வேறுபட்ட பொருள்கள் ஒன்று கூடும்போது ஒன்றாகாததும் இரண்டல்லாமையுமாகிய நிலையை எய்துகின்றன. இதுவே மெய்கண்டார் கூறும் அத்துவிதமாம்.

மேலும், பாணினி வியாகரணத்திற்கு உரை செய்த பதஞ்சலியார் அகரத்தை அன்மைப் பொருளிலேயே எடுத்தாளுகிறார். த்வைதம், அத்வைதம் என்பன என்னும் பெயர்ச் சொற்கள். வடமொழியில் 'அ' என்பது ஒன்று

இரண்டு என்னும் எண்களின்மேல் தவிர மற்ற எண்ணுப் பெயர்கள்மேல் வாராது. (அ+ஏகம்=அநேகம்; அ+துவைதம்=அத்வைதம்) ஒன்று என்பதை உணர்த்த ஏகம் என்ற சொல் இருக்க, இரண்டன்மையை உணர்த்தும் அத்வைதம் என்ற சொல்லை உபயோகிப்பதே கடவுளும் உயிரும் ஒன்றுமல்ல இரண்டுமல்ல என்ற சித்தாந்த உண்மைக்குச் சான்றாகும். ஆனால் ஒன்றே என்று மறைகள் கூறுவது முற்றறிவுடைய பதியை. சிற்றறிவுடைய உயிர்கள் பாசத்தோடு கூடினமையின் கடவுள் ஆகா. உலகமோ அறிவற்றது. ஆயின் கடவுள் இல்லையேல் ஒன்றுமில்லை என்பது அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாம் என்பது போலாம். அகரம் மற்ற உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் இயக்குவதுபோல் கடவுள் அடிமைகளாகிய உயிர்களையும் உடைமையாகிய உலகத்தையும் இயக்குகிறார். கடவுள் இன்றேல் உயிரும் உலகமும் இயங்கா.

முதற் சூத்திரத்தில், காணப்படும் உலகைக்கொண்டு, காணப்படாத கடவுளை நிச்சயித்து, இவ்வுலகம் அவன் அவள் அது எனும் மூவகைப் பாகுபாடுடையதாய், தோன்றல், இருத்தல், அழிதல் ஆகிய முத்தொழிலுடையதாய், தோன்றுங்கால் தான் ஒடுங்குதற்கு ஏதுவாயிருந்த கடவுளினின்றும் தோன்றுகிறது என்று கூறி, இரண்டாஞ் சூத்திர முதல் அதிகரணத்தில் உலகத்தைத் தோற்றுவிக்குங்கால் கடவுள் உயிர்களோடு கூடி ஒன்றாயும், இரண்டாயும், ஒன்றிரண்டாயும் இருக்கும் தன்மையை ஆசிரியர் விளக்குகின்றார். உயிரைப் பற்றியுள்ள மும்மலங்களில் ஆணவமலம் பரிபாகமாதற் பொருட்டு இருட்டியும், கர்மமலம் பரிபாகமாதற் பொருட்டு ஒடுக்கமும், மாயாமலம் பரிபாகமாதற் பொருட்டு இரட்சையும் ஆகிய முத்தொழிலைக் கடவுள் புரிகிறார். இச் செயல்களைப் புரியும்போது அவர் பதியாகின்றார். இது கடவுளின் தடத்த லட்சணம் அல்லது பொது இயல்பெனப்படும். இத் தொழில்களைச் செய்யும்போது கடவுள் உயிருடன் கூடி நிற்கின்றார். அப்படிக் கூடி நிற்கின்ற நிலை மூன்று விதப்படும். அவை அபேதம், பேதம், பேதாபேதம் என்பனவாம். உயிரும் உடம்பும் கூடியிருக்கும் நிலை அவ்வாறேயாகும். ஒருவன் "என்னை



அடித்தான்" என்றபோது உடலைத் தானாகவும், "என் உடம்பு" என்றபோது உடலைத் தன்னின் வேறாகவும், உடலுக்கிட்ட பெயரால் அழைக்கத் தான் செல்லலால் உடலுக்குடனாயும் இருத்தல் இவ்வுண்மையை விளக்குகிறது. உயிர்கள் உலகில் இருக்க உடலும் உயிரும்போல் அவற்றோடு கலந்து அவையாயிருந்து அபேதமாயும், அவை பொருள்களை அறிய அகரமும் மற்ற உயிர் எழுத்துக்களும் போல் வேறாய் பேதமாயும், அவை பொருள்களை அனுபவிக்கப் பண்ணும் இசையும் போலவும் பழமும் சுவையும் போலவும், அறிவும் கண்ணும் போலவும், உடனாய்ப் பேதாபேதமாயும் கடவுள் இருக்கிறார். ஆகவே, இறைவன் நாமாகவும், நம்மின் வேறாகவும், நம்முடனாகவும் இலனேனில் நாம் இருக்கவும், அறியவும் அநுபவிக்கவும் இயலாதென்பது பெற்றாம். இனி இம் மூன்று நிலைகளையும் ஒரே உதாரணத்தில் விளக்க ஆசிரியர் உருக்கிய அரக்கையும் அதனோடு சேர்த்தமைத்த கற்பொடியையும் காட்டுகிறார். கற்பொடியானது அரக்கோடு கலப்பினால் ஒன்றாயும், பொருண்மையால் வேறாயும், நீக்கமின்மையால் உடனாயும் இருத்தல்போல் முதல்வன் உயிர்களோடு ஒருங்கு கூடி நின்று நீக்கமின்றி நிற்றலினால் தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம்.

ஆசிரியர் கடைசி சூத்திரத்தில் சிவன்முத்தர் இலக்கணம் கூறுகின்றார். இச்சை அறிவு செயல்கள் இறைவனுக்கும் உள, நமக்கும் உள, சிவன் முத்தர்க்கும் உள. இறைவன் அவைகளை உயிர்கள் காரணமாகச் செலுத்துகின்றான். நாம் நிலையில்லாத அற்ப இன்பத்தை அளிக்கும் உலகப் பொருள்கள் மாட்டுச் செலுத்துகின்றோம். சிவன் முத்தர்களோ தம்மை விட்டுக் கழிந்த மலம் சேராமலிருக்கும்படி இச்சையையும், அன்பரோடுகூட அறிவையும், அடியார் வேடத்தையும், ஆலயத்தையும் அரனெனத் தொழச் செயலையும் செலுத்துகின்றனர்.

---

# 7. சிவஞான சுவாமிகள்*

இவ்வுலகில் நாம் பிறந்தது எதற்காக? நம் கருவி கரணங்களைக் கொண்டு நாம் செய்யவேண்டுவனவற்றைச் செய்தற்காகவேயாம். கருவி கரணங்களைத் தொழிற்படுத்தினால்தான் நமக்கு மேன்மை உண்டு. இல்லையேல் உலகில் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றும் நாம் தாழ்வையே அடைவோம். இதுபற்றியே 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' என்ற முதுமொழியும் எழுந்தது. திருவள்ளுவரும்,

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

என்று கூறினர்.

ஒவ்வொருவரும் படுக்கையைவிட்டு எழுந்தவுடனே செய்யும் காரியங்கள் மூன்று வகைப்படும். ஒன்று, நாம் இறைவனடியடைந்த பெரியோர்களை நினைத்தல் வேண்டும். இரண்டாவது, அன்று நமக்கு நேர உள்ள இடையூறுகளை நினைத்தல் வேண்டும். மூன்றாவது, இவ்விடையூறுகளை நினைத்தலோடு மட்டும் நிறுத்தாது அவைகளைப் போக்க ஆண்டவனை நோக்கி அழுதல் வேண்டும். இவையே நாம் தினந்தோறும் எழுந்த உடனே செய்ய வேண்டிய கருமங்கள். முன்காலத்தில், தினந்தோறும் எழுந்தவுடனே பஞ்சாங்கம் பார்க்கும் வழக்கம் இருந்து வந்தது. இது தின சுத்தி எனப்படும். அன்றைய தினத்தை மட்டும் கவனித்து விட்டுப் பஞ்சாங்கத்தைக் கீழே வைத்துவிடும் வழக்கம் பெரும்பான்மையோரிடம் இல்லை; பக்கத்து நாட்கள் மீதும் நாட்டம் செல்லும். அவ்வாறு பஞ்சாங்கத்தைப் பார்க்கும் பழக்கத்தை நாம் விட்டுவிட்டதால் பெரியோர்களைப் பற்றி மறந்துவிட்டோம்.

---

* 26—4—37-ல் மயிலையில் நிகழ்த்திய சொற்பொழிவு—திரு. கே. த. கிருஷ்ணசாமி முதலியார் பி.ஏ.,எல்டி. அவர்களின் குறிப்பு.



இன்று சித்திரைத் திங்கள் ஆயில்ய நாள்; இது, சிவஞான சுவாமிகள் திருநாள். சென்னைக்குச் சுமார் இருபது மைல் தூரத்திலுள்ள தொட்டிக்கலை கிராமத்தில் அவர்தம் திருவுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்தம் பெயரிலிருந்தே நமக்கு வேண்டியதைப் பெறுகிறோம். நமக்கு வேண்டுவதென்ன? சிவஞானம். அவர்கள் சிவஞான சுவாமிகள்; சிவஞானத்தைத் தமக்குச் சொந்தமாக உடையவர்கள். நாம் கேட்குந்தோறும் கேட்குந்தோறும் அவர் இல்லையென்னாது அவர்தம் உடைமையைப் பகிர்ந்து நமக்குக் கொடுப்பார். அப்பாகத்தை நாம் பெற முந்திக் கொள்வோமாக. சிவஞானமே எல்லா மதங்களின் முடிவாகும். இதை நமது சுவாமிகள், காஞ்சிபுராணத்தில் வெகு அழகாகக் கூறியிருக்கிறார்கள். 'விலகி வீழ் அருவித் தாரை.........ஏகமாய் கூடும் தோற்றம்' என்ற செய்யுளில் ஒவ்வொரு மதத்தின் உண்மையும் வேகவதி நதியில் வந்து சேரும் ஒவ்வோர் அருவித் தாரைக்கு உவமையாகக் கூறப்படுகிறது. அவ்வருவித் தாரைகள் திரண்டு வேகவதி என்னும் நதியாதல்போல், இவ்வுண்மைகளெல்லாம் திரண்ட முடிபு சிவஞானமாகிறது. அத்திரண்ட முடிபையே பொருளாகக் கொண்டிருப்பவர் சிவஞான முனிவர்.

இனி சிவஞான முனிவரது பிறப்பு வளர்ப்பைப் பற்றிச் சிறிது கவனிப்பாம். தென் பாண்டி நாட்டில் பாபவிநாசத்துக்கு (பாபநாசம்) அருகில் விக்கிரமசிங்கபுரம் என்றொரு கிராமம் உண்டு. அவ்வூரில் வேளாள குலத்திற் பிறந்த ஆனந்தக் கூத்தருக்கும், அவர்தம் அருமைப் பத்தினியாரான மயிலம்மையாருக்கும் பிறந்தவர் நம சிவஞான முனிவர். நமது சுவாமிகளிடம் குழந்தைப் பருவத்திலேயே சிவபெருமான் பேற்றைப் பெறுதற்குரிய குணநிசயங்கள் காணப்பட்டன.

மக்களுக்குக் கல்வியை யூட்டுதல் பிதாவின் முதற் கடமையல்லவா? ஆனந்தக் கூத்தர் தம் கடமையை நிறைவேற்ற எண்ணியவராய்த் தமது அருமை மகனாரைப் பள்ளியில் வைத்தார். ஒருநாள், சிவஞான முனிவரான குழந்தை பள்ளிக்குச் செல்லும் வழியில் விபூதிதாரணரான இரண்டு அடியார்கள் எதிரில் வரக்கண்டது. அவ்விருவரும் திருவாவடுதுறை ஆதீன அடிகண்மார். அவர்களைக் கண்டதும்

குழந்தை ஆனந்த பரவசம் மேலிட்டது; பள்ளிக்குச் செல்வதை ஒழித்து அவர்கள் இருவரையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றது. சிவஞான முனிவர் தந்தையினைத் தாவி, தாயாரிடஞ் சென்று அடியார்களை உண்பிக்கச் சொன்னார். அம்மையார் அமுது படைத்த திறத்தை என் மயிலாப்பூரில் கூறவேண்டுவதில்லை. இவ்வூரார் அமுது படைக்குந் திறத்தைச் சம்பந்தரே புகழ்ந்திருக்கிறார். 'உருத்திர பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்' என்ற சொற்றொடரை அறியாதார் யார்?

அம்மையாரின் அன்பைக் கண்ட சுவாமிகள் ஒரு பாட்டைப் பாடினார். அஃது, "அருந்ததி அன்னம்மை" என்னுந் தொடக்கத்ததாகும்.

இப் பாட்டில் கருத்து, சொல், பொருள் முதலிய எல்லாம் அமைந்திருக்கின்றன. இப்பாட்டைக் குழந்தைப் பருவத்திலுள்ள சிவஞான முனிவர் எவ்வாறு பாடினார்? இதற்கு முன் ஜென்மத்தில் அவர் எவ்வளவு புண்ணியஞ் செய்திருத்தல் வேண்டும்! அவர் ஜீவன் முத்தர். ஒருவன் ஒரு ஜென்மத்தில் படித்தவை எழு ஜென்மங்கள் வரை அவனைப் பின்பற்றுகின்றன வென்பது பொய்யாமோ?

மனிதர்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவையே பிராகிருதர், வைநயிகர், சாமுசித்தர் எனப்படும். படித்தும் அறியாதவர் பிராகிருதர். வைநயிகர் படித்த பின் அறிபவர். படிக்காமலே அறிகிறவர் சாமுசித்தர். நமது சிவஞான முனிவர் மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவர். அவர் பெரிய அநுபூதிமான். நினைத்தவுடனே பாடவல்லவர். அவர் பரிசாரகனுக்குக் கட்டளையிடுதற் பொருட்டுப் பாடிய பாட்டைக் கவனியுங்கள். அது, "சற்றே துவையலரை" என்னுந் தொடக்கத்தது.

ஒரு சமயம் சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூர்க்கு வந்தார்கள். அப் பதி திருநாவுக்கரசு சுவாமிகளைக் கடலினின்றும் கரையேறவிட்ட பெருமையுடையது. ஆங்குச் செல்வந்தன் ஒருவன் இருந்தான். நிரீபு வகையில் ஒரு பாட்டுப் பாடுபவருக்கு நூறு பொன் தருவதாக அவன் விளம்பரஞ் செய்திருந்தான். அவ்வூரில் ஓர் அந்தணன்; மிக்க தரித்திரர்; தம் மகனுக்கு உபநயனம் செய்ய விரும்பினார்.



பணத்துக்கு என் செய்வது? ஒன்றும் தோன்றவில்லை. ஒருநாள் அவர் சுவாமிகளைச் சந்தித்தார்; தமது குறைகளைக் கூறிச் செல்வந்தன் கட்டிவைத்திருக்கிற பொற்கிழியையும், அதன் வரலாற்றையும் கூறினார்; நமது சுவாமிகள் ஒருவித யோசனையும் செய்யாது உடனே ஒரு கவிதை எழுதிக் கொடுத்தார். அது 'கரையேற விட்டமுதம்' எனத் தொடங்கிக் 'கரையேற விட்ட முதல்வா' என்பதோடு முடிகிறது. நினைத்த மாத்திரத்தில் பாட்டுப் பாடுவதே சிறந்த முறையாகும். சிலர் ஒரு கவிக்காகப் பல நாட்கள் வரை முயல்கின்றனர். அவர் பாட்டுப் பாடும் திறன் வாய்க்கப்பெற்றவரல்லர்.

கடவுளே எல்லாச் சாமர்த்தியமும் கைவரப் பெற்றவர். அவர் பூரண அறிவுடையவர். மனிதர் குறைந்த அறிவுடையவர். அறிவு இருவருக்கும் பொதுவே. அதனாலேயே கடவுள் சர்வக்ஞன் என்று அழைக்கப்படுகிறார். மனிதன் கிஞ்சிக்ஞன் என்று அழைக்கப்படுகிறான்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை வேறுவிதமாகவும் உவமைப்படுத்திக் கூறலாம். நம் மொழியில் கசடதபற என்ற ஆறு எழுத்துக்களும் வல்லெழுத்துக்கள் என்று கூறப்படுகின்றன. இவற்றில் கச தப என்ற நான்கு எழுத்துக்களே மொழிக்கு முதலில் வருவன. டறக்கள் மொழிக்கு முதலில் வாரா. கடவுள் கசதப முதலிய எழுத்துக்களைப் போன்றவர். உயிர்கள் டறக்கள்.

அகத்திய முனிவருக்குத் தொல்காப்பியர் முதலிய பன்னிரு மாணவர் இருந்தனர். அதுபோலவே நமது சுவாமிகளுக்கும் கச்சியப்பர் முதலிய பன்னிரு மாணவர் இருந்தனர். அம்மாணவருள் கச்சியப்பரே தலைசிறந்தவர்; தணிகைப் புராணம் முதலிய பல நூல்களை இயற்றியவர்.

நமது சுவாமிகள் மொழிபெயர்ப்பதில் திறமை வாய்ந்தவர்கள். சுவாமிகள் மொழிபெயர்த்த நூல்களில் சில 'அன்னம்பட்டீயம்', 'தருக்க சங்கிரகம்', 'சிவதத்துவ விவேகம்' முதலியனவாம். சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதே சுவாமிகளின் சாமர்த்தியத்தைக் காட்டுகிறது. 'நித்தியவஸ்து' என்பதற்கு மன்னிய மெய்ப்பொருள் என்றதும், 'பக்தி' என்பதற்கு 'மெய்யன்பு'

என்றதும் எவ்வளவு சிறந்த சொற்கள் பாருங்கள். முண்டகோபநிஷத்தில் வரும் ஒரு வாக்கியத்தைச் 'சிவனெனும் மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடில் அவனுடன் உறைக' என்று மொழிபெயர்த்திருக்கிறார்.

விருத்தியுரை எழுதுவதிலும் சுவாமிகள் வல்லவர். இதை வடமொழியில் பாஷியம் என்று கூறுவது. தமிழில் சிவஞான முனிவருக்கு முன், ஒருவரும் விருத்தியுரை எழுதினது இல்லை. அதனாலேயே அவர் திராவிட மாபாடிய கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார்.

சிவஞான போதத்தின் காப்புச் செய்யுளைக் கவனிக்க. அது வருமாறு:

"கல்லா னிழல்மலை, வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர், நல்லார் புனைவரே"

இப் பாட்டை வஞ்சித்துறை என்பார்கள். இப்புத்தகம் நான்கு விஷயங்களைக் கூறுவது. அவை பிரமாணம், இலட்சணம், சாதனம், பிரயோசனம் எனப்படும். இந்நான்கு பொருளையும் குறிப்பதாகக் காப்புச் செய்யுளிலும் நான்கு அடிகள் இருக்கின்றன. செய்யுளின் கடையிலுள்ள ஏகாரம் இடைச்சொல். அதை நீக்க, அடி ஒன்றுக்கு மூன்று சொற்களாகச் செய்யுளில் பன்னிரண்டு சொற்கள் இருக்கின்றன. இப்பன்னிரண்டு சொற்களும் பன்னிரண்டு சூத்திரங்களைக் குறிப்பன.

இவற்றின் முன் ஆறு சூத்திரம் பொது. பின் ஆறு சூத்திரம் சிறப்பு. முன்னவற்றை அருளிய என்றும், பின்னவற்றைப் புனைவர் என்றும் சுவாமிகள் கூறுகிறார்கள். 'உன்னிய' என்ற அப்பர் தேவாரத்திற்கு 'உன்ன' என்று பொருள் கூறுமாபோல 'அருளிய' என்பதற்கு 'அருள' என்று பொருள் கூறினர்.

சுவாமிகள், 'செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்' என்ற வேறொரு நூலையும் இயற்றியிருக்கிறார். அதில் சமய உண்மைகளை அறிந்து கடவுளை வழிபடுதலை விளக்கியிருக்கிறார். சுவாமிகள் நம்மையெல்லாம் யானைகள் என்கிறார். யானைக்கு மூன்று மதங்கள் உண்டு. அவை கன்ன மதம், கபோல மதம், பீஜமதம் எனப்படும். நமக்கும் மூன்று



மலங்கள் இருக்கின்றன. அவை ஆணவம், கன்மம், மாயை. ஞானம் என்ற கட்டுத்தறியை அறுத்துச் செல்வது மதம் பிடித்த யானைக்கு முதல் அடையாளம். நாமும் அவ்வாறே அன்பு என்னும் சங்கிலியை உதறித்தள்ளி, அறிவு அல்லது அருள் என்னும் கூடத்தை விட்டு வந்து, புவனம் என்னும் கொடுங்காட்டில் ஓடுகிறோம்; எப்பாகர்க்கும் அடங்காது ஓடுகிறோம். அங்குச பாசத்தைக் கொண்ட விநாயகப் பெருமானாகிய பெரும்பாகனே நம்மை அடக்கவல்லவன். இக்கருத்தைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழில் 'மும்மலம்' என்ற தொடக்கப் பதிகத்தில் வெகு அழகாகச் சுவாமிகள் கூறியிருக்கிறார்கள்.

இவ்வாறு சுவாமிகள் தமிழுக்கும் சிவபெருமானுக்கும் செய்யவேண்டிய பல தொண்டுகளைச் செய்து விட்டுக் கி. பி. 1785-ம் ஆண்டு (ஏப்ரல் மாதம் 17-ம் நாள்) சித்திரை ஆயில்யம் கூடிய ஞாயிற்றுக்கிழமை பகல் 1-10 மணிக்கு இப்பூத உடலை நீத்துப் புகழ் உடலை எய்தினர்கள்.

# 8. விடை ஊரும் விமலன்*

அயனும் திருமாலும் வந்து பிறப்பதற்கு ஆசைப்படுகின்ற இச்சிறந்த உலகத்தில் பலவகைப்பட்ட பிறவிகளுக்குள் மிக உயர்ந்த ஒன்றாயிருக்கின்ற மனிதப் பிறவியை அடைந்த நாம் பல பொருள்கள் உடையராயிருக்கின்றோம். அவற்றுள் எல்லாம் மிகச் சிறந்தது அறிவு. எது ஒன்று உடைமையால் எல்லாம் உடையராய்க் கருதப்படுகின்றோமோ, எது ஒன்று இன்மையால் மற்ற யாவுமிருந்தும் ஒன்றும் இலராய்க் கருதப்படுகின்றோமோ, அது அறிவாகும்.

" அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர் "

இவ்வறிவு ஒன்றே மனிதனைச் சிறப்பிப்பது. இஃது ஆராய்ச்சி அறிவு, அனுபவ அறிவு என இருவகைப்படும். ஆராய்ச்சி அறிவு இருந்தபின் தான் அனுபவ அறிவு விளங்கும். ஆராய்ச்சி அறிவை நாம் முன்னர்த் தொழிற்படுத்த வேண்டும். அறிவு தொழிற்பட மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து கருவிகள் உதவி செய்கின்றன. இவற்றுள் தூரத்தில் சென்று அறியும் இயல்புடைமையின் கண் மிகச் சிறந்த கருவி. கண்ணுக்குப் புலப்படும் பொருள்களை முதலில் ஆராய்ந்து பின் புலப்படாத பொருளை ஆராய்ந்து அதைப் பெற்று அதனால் உண்டாகும் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று நிச்சயிப்பவரே அறிவு பெற்றாராவர்.

கண்ணைக் கொண்டு ஆராயப் புகின் அதற்குப் புலப்படுவது உலகமும் அதிலுள்ள பலவகைப்பட்ட உடல்களுமாம். ஐம்பூத இயற்கை நிலை உலகம், அவற்றின் மாறிய நிலை உடல். உடல்கள் அவன், அவள், அது எனும் மூவகைப் பகுப்பினவாயிருக்கின்றன. ஒவ்வொரு பகுப்பும் பலவேறு

* 27-4-37ல் மயிலையில் நிகழ்த்திய சொற்பொழிவு. சச்சி முனிசாமி உடையார் அவர்கள் குறிப்பு.



வகைப்பட்டிருக்கின்றது. பலவேறு வகைப்பட்ட அவயவப் பகுப்புடைய இவ்வுலகம் அறிவுடையதாயிருக்கவும் இல்லை. உலகத்தை ஐயந் திரிபற உண்மையாய்க் காண்கின்றோம். ஆகவே கண்ணறிவு கொண்டு உலகத்தை ஆராய நுழைந்தால் அது பலவேறு வகையாய், அவன், அவள், அது எனும் அவயவப் பகுப்புடையதாய்க், கண்ணுக்குப் புலப்படுவதாய், அறியாமை உடையதாய்த் தோன்றுகிறது. ஒரு தன்மைத்தாயிராமல் பல வேறு வகையாய் மூன்று அவயவப் பகுப்புடைமையின் உலகம் இயற்கை யன்று, நித்திய மன்று, என்பதும்; அறிவற்ற பொருளானமையின், தானே தொழிற்படும் சக்தியின்றி ஒருவனால் தொழிற்பட வேண்டுதலின் அது செயப்படுபொருள் என்பதும்; செயப்படு பொருளாய்க் கண்ணால் காணப்படுவதால் அழியும் பொருள் என்பதும் நன்றாய் விளங்குகின்றன.

செயப்படு பொருளாகிய உலகத்திற்குக் கர்த்தா ஒருவன் இருக்க வேண்டும். அவன் நம்மில் ஒருவனன்று. ஏனெனில் நாமின் பார்க்கும் இவ்வுலகத்தில் ஒரு சிறு பாகத்தையேனும் உண்டுபண்ணிக் கொள்ள ஆற்றலில்லை; நம் உடலில் ஒரு சிறு அவயவத்தையும் உண்டுபண்ணிக் கொள்ள நமக்கு ஆற்றலில்லை என்றால், இப்பெரிய அதிவிசித்திரமான உலகத்திற்கு நாம் எங்ஙனம் தலைவராகக் கூடும். ஆகவே உலக கர்த்தா உயிர் வர்க்கங்களில் ஒருவனல்லன். அவனைத் தேடப்புகின் அவன் உலகத்தைக் கடந்திருப்பான். குடத்தைச் செய்த குயவன் குடத்தைக் கடந்திருப்பது போல். அதனால் அவன் கடவுள். அவன் உலகமாகிய ஐந்து பூதங்களில் ஒன்றல்லன், அவை ஒன்று சேர்ந்த உலகமுமல்லன், உலகத்திலுள்ள உயிர் வர்க்கங்களிலும் ஒன்றல்லன். எனினும் அவன் நம்மால் ஆராயத் தக்கவன். உலகத்தைக் கொண்டு ஆராய்ந்தால் கொஞ்சம் தோன்றுவான். இப்படி ஆராய்ந்து அறிந்து அறிந்து அனுபவித்த பெரியார்களின் வாக்கு இதற்குச் சான்றாயிருக்கிறது.

" மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை
மலையல்லை கடலல்லை வாயுவல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை
இரவல்லை பகலல்லை யாவுமல்லை

பெண்ணல்லை யாணல்லை பேடல்லை
பிறிதல்லை யானும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
உணர்வரிய ஒற்றியூருடைய கோவே" —அப்பர்.

"யாவையும் எவருந் தானாய் அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின்மூர்த்தி
ஆவிசேர் உயிரி னுள்ளான் ஆதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக் கூடில் அவனையும் கூடலாமே —நம்மாழ்வார்.

"பெரியாய் நீயே" என்றமையால் அவன் பெருமை யுடையவன் என்பது விளங்கும். பெருமை யுடையதைத் தான் நாம் பேசவேண்டும், சிறுமையுடையதைப் பேசின் அச்சிறுமை நம்மையே வந்தடையும். நாம் அறிவது தோன்றுவதில்லை. இறப்பு பிறப்புகள் நிகழ்கின்றனவே யெனின் இறத்தல் அழிதலல்ல. இறத்தல் என்னும் சொல் முடிதல் தாண்டுதல் எனப் பொருள்படும். இறக்கின்றோம் என்றால் நாம் ஒன்றைத் தாண்டுகின்றோம் என்பதாகும். அதாவது தூல உடலைத் தாண்டுகின்றோம். "தூல உடல் அரவினது தோல் என்ன நீங்கவே" என்றார் சிவஞான முனிவர், அகிலாண்டேஸ்வரி யம்மை பதிகத்தில். உலகமோ அழியுந் தன்மை யுடையது. உலகத்தை ஆராயப் புகுந்து, அது அழியுந் தன்மையுடையது, முடிவில் ஒரு பொருளு மில்லை என்று கண்டால் மலை கல்லியும் எலியும் அகப்பட வில்லை என்பது போல் நம் ஆராய்ச்சி பயனற்றதாகிவிடு மல்லவா! இப்படி அயர்வதற்கு இடந்தராது அப்பருடைய உறுதியான வாக்கு, "உள் நல்லை நல்லார்க்கு" என்று அது உணர்த்துகிறது. நம்மாழ்வாரும் "உணர்வின் மூர்த்தி" என்றோதுகின்றார். கடவுள் நல்லவர்கள் உள்ளத்தில் இன்பந் தருபவனாயிருக்கின்றான். அவனை ஆராய ஆராய இன்ப முண்டாகும். ஆராயாதிருக்கத் துன்பமே உண்டாகும். ஆராய்ச்சியினால் மட்டுமே அவ்வின்பப் பொருளை அனுபவிக்க முடியும்.

இனி வடமொழி நூல்களில் சென்று ஆராயுமிடத்து ஸ்வேதாஸ்வதரம் 5-வது பாகம் 10-வது ஸ்லோகம், "நீ அவன் அவள் அது வல்ல" என்று கடவுளைப் பேசுகிறது. தைத்ரீயம் "எந்த இடத்திலிருந்து உன்னால் காணப்படுகின்ற இந்த பூதங்கள் தோன்றிற்றோ; எதனாலே காக்கப்படு



கிறதோ, எதில் இவை இலயம் அடைகிறதோ, அந்தப் பொருளை நீ அறிய முயல்" என்று கூறுகிறது. வியாச சூத்திரம் (2-வது சூ.) "எங்கே யிருந்து உலகங்கள் தோன்றிற்றோ அது" என்றமையால் உலக காரணன் கடவுள் என்பது விளங்குகிறது. "ஆன்மாவின் அறிவு சுத்தப்படுவது ஈஸ்வரனை அறிவதால்" என்றார் நீலகண்ட சிவாச்சாரியார். நாம் அறிவையும் அறியாமையையும் கூடியவராய் இருக்கின்றோம். அறியாமையால் துக்க முறுகின்றோம். அறிவு சுத்தப்பட கடவுளை ஆராய வேண்டும். 'ஒரு மரம், அதில் ஒரு புருஷன் மோகனாகி ஈஸ்வரனாயில்லாமையால் அடிமையாக இருப்பதால், எப்போதும் துக்கமுடையவனாயிருக்கிறான். தன்னிடத்திலேயே யிருக்கிற ஈஸ்வரனை நினைத்தால் மோகம் நீங்கினவனாவான்" என்ற அபிப்பிராயத்தை முண்டகம் தெரிவிக்கிறது. ஈசாவாசியமும் இதே அபிப்பிராயப்படுகிறது. நமக்குள்ள இயற்கை யறிவும், பல நூல்கள் கற்றதன் பயனாய் வந்த அறிவும், குருமொழியால் உண்டான அறிவும் ஆகிய இவ்வளவிருந்தும், ஒன்றைத் தப்பென்று தெரிந்தும் அதை விடாமலிருப்பது மோகமாகும். வாசனை விளாம்பழத்தைக் காட்டி விடுவதுபோல் மோகம் ஆணவமல உண்மையைக் காட்டி விடுகிறது.

ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் பதின்மூன்று வகையாக வேலை செய்கின்றன. மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் ஆகிய ஏழும் ஆணவமல காரியம். மோகம் எது என்பது முன்னர்க் கூறப்பட்டது. தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் மதமாகும். கிடைக்காத பொருளில் ஆசை கொள்ளுதல் இராகம். கிடைத்த பொருள் பிரிந்ததின் காரணமாகப் படும் துக்கம் கவலை. இறப்பை நோக்கி உற்றார் உறவினரும் பிரிய நேரிடும் என்று நினைந்து வருந்துதல் தாபம். இறந்தாரை நினைத்து உயிரின் அறிவை இழந்து உடலும் இளைத்தல் வாட்டம். உலகத்தில் எல்லாம் வினைவழியாய் நிகழ்கின்றது என்பதை மறந்து, தன்னால் நிகழ்கிறது என்றும், தான் பிறருக்கு நன்மை செய்ததாகவும், தான் பிறருக்குத் தீமை செய்ததாகவும் நினைத்தல் விசித்திரம். இன்ப துன்ப உணர்ச்சி கர்ம மல காரியம். நமக்குக் கிடைத்த உடம்பு அதிலுள்ள மனம், நாம் இருக்கும் இடம்,

அநுபவிக்கும் போகப் பொருள்கள் மாயாமல காரியம். ஆகவே மூன்று மலங்களும் பதின்மூன்று வகையாக வேலை செய்கின்றன. நம்முடைய அறியாமை இப் பதின்மூன்று வகையாயிருக்கின்றது.

இப்பதின்மூன்றும் நம்மால் ஆராயப்படும் பொருளாகிய கடவுளுக்குக் கிடையாது. அப்பொருள் அறியாமை பொருந்திய நம் மனதைச் சுத்தப்படுத்தித் துக்கத்தைப் போக்கி இன்பத்தைத் தருவது. "சிவபெருமானாகிய கடவுளே விமலன், நமக்கு மங்களத்தைச் செய்கின்றவன். நாம் மற்றெல்லாவற்றையும் நீக்கிவிட்டு அவனைத் தியானிக்க வேண்டும்" என்கிற அபிப்பிராயத்தை அதர்வசிகை என்னும் உபநிஷத் தெரிவிக்கிறது. எனவே அவன் பதின்மூன்று வகையாக வேலை செய்யும் மலங்களினின்றும் நீங்கினவன். மலம் அறவே இல்லாமையின் சிவன்.

"நிறைமலம் அறுதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்."

என்றார் சிவஞான முனிவர். நம்முடைய மலங்கள் கழிய நாம் மலமில்லாதவனை - விமலனை - தியானிக்க வேண்டும்.

எவன் தன் ஆன்மாவில் உள்ள கடவுளைப் பார்த்தானோ அவன் தான் தீரன் என்று கடோபநிஷத் பேசுகிறது. அக்கடவுள் தூல சரீரத்திலும் (தூணிலும்) சூக்கும சரீரத்திலும் (துரும்பிலும்) இருப்பான். துக்கத்தை அடைத்து வைத்திருப்பவன் துக்கத்தினின்றும் எப்படி நீங்குகிறதில்லையோ அதுபோல் கடவுள் உள்ளே யிருந்தால் மட்டுமே துன்பம் போவதில்லை. துக்கத்தை வெளியில் கொட்டி ஆற்றிவிட்டவன் எப்படி அதனால் துன்புறுவதில்லையோ அதுபோல் உள்ளிருக்கும் கடவுள் வெளியில் வந்தால்தான் உயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடையும். "ஆவுறு பிணிகெட ஆவின் பால் கறந்து ஆவினுக்கு ஊட்டல்போல்" உள்ளிருக்கும் கடவுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே போகச் செய்தால்தான் நமக்கு இன்பம் கிடைக்கும்.

"எள்ளி லெருநெய்க் கினியா ரிலை
எள்ளி லும்மினி யானொரு வன்றனை



என்று சேவடிப் பரப்பும் போர்த்துய்
சென்றுசே நிற்கும் இன்னம்ப ரீசனே"

என்றார் நாவுக்கரசர். உள்ளிருக்கும் கடவுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே நிறுத்தி வைக்கும் அறிவும் ஆற்றலும் மலத்தால் கட்டுண்டுள்ள உயிர்களாகிய நமக்கு இல்லை. ஆகையால் கருணாமூர்த்தியாகிய கடவுள் உயிர்கள் படும் துன்பத்திற் கிரங்கி அவரே திருமேனி தாங்கி வெளி வருகின்றார். அவர் கொள்ளும் திருமேனி கர்மத்தாலன்று கருணையினாலாகும். "அருளால் மேனி சாத்தி" என்றார் ஒரு பெரியார். "நந்தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு" என்றது சித்தியார். கருணை, தயை, கிருபை, உமை என்பன ஒரே பொருளைக் குறிப்பன. "உமையலா துருவமில்லை" என்னும் அப்பர் வாக்கை நோக்கவும்.

கருணையினால் கடவுள் வடிவங் கொள்ளும்போது முற்றறிவுடையவனாதலின் உயிர்களின் பக்குவத் தன்மைக்குத் தக்கவாறு ஒன்பது வகைத் திருமேனிகள் கொள்ளுகின்றான். நாதம், விந்து, சத்தி, சிவம் எனும் அருவத் திருமேனி நான்கும், இலிங்கமெனும் அருவுருவத் திருமேனி ஒன்றும், பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன் எனும் உருவத் திருமேனி நான்கும் ஆக ஒன்பது வடிவங்கள் கொள்கின்றான். பிரமனாய்ப் படைத்தும், விஷ்ணுவாய்க் காத்தும், உருத்திரனாய் ஒடுக்கியும், மகேசுவரனாய் மறைத்தும், நாதவிந்து சக்தி சிவமாய் அருளியும் ஐந்தொழில் இயற்றுகின்றான். நிஷ்கிரியத்திற்கு அருவுருவத் திருமேனி கொள்கின்றான். இவ்வொன்பது வடிவங்களாகியும் இவற்றைக் கடந்தும் அவன் இருக்கின்றான்.

கடவுள் கொள்ளும் உருவத்திருமேனிகள், போக வடிவம், கோர வடிவம் யோகவடிவம் என மூவகைப்படும். உயிர்கள் உலக இன்பங்களை அநுபவிக்கப் போக வடிவமும், உயிர்களின் வினைகழியக் கோர வடிவமும், உயிர்கள் முத்திபெற யோக வடிவமும் கொள்ளுகிறார்.

"போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோகமுத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னதுபோற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊமைய மூடரெல்லாம் உம்பரின் ஒருவன் என்பர்"

அம்மையோடு கூடியிருக்கும் வடிவம் போக வடிவம் அதிகை முதலிய வீரஸ்தானங்களில் அம்பு வில் முதலிய ஆயுதங்கள் தாங்கி இருக்கும் வடிவம் கோரவடிவம். தட்சிணா மூர்த்தி வடிவம் யோக வடிவம்.

ஈண்டுப் பேசப்படுவது போக வடிவம். "இடப்பாக மாதராளோடியைந் துயிர்க்கின்பமென்று மடைபாலும்" என்றமையால், உயிர்க்குப் போகத்தைப் புரிய இறைவன் அம்மையோடு கூடிப் போக வடிவங் கொண்டான். உலகத்தின் சாரம் தர்மம். "தர்மசாரம் இதம் ஜகத்" என்றார் வால்மீகர். தருமத்தைப் போற்றிடின் அன்பு வளரும், அன்பு முதிர அருள் விளங்கும். அன்பும் அருளும் வந்தவழி தவம் சித்திக்கும். பின் மனத்தெளியப் பெற்று உயிர் கடவுளைச் சேரும். சேரவே, பிறப்பு நீங்கிப் பழமையாய்ச் சார்ந்திருக்கப்பட்ட மும்மலங்களும் கழிந்து இன்பமுண்டாகும். எனவே தருமத்தின் உயர்வை யாரே அறையவல்லார்.

"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மன்பு மாங்கவை
வருவழி தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்.

சேர்ந்துழி பிறவியும் தீருந் தொன்மையாய்ச்
சார்ந்திடு மூவகைத் தளையும் நீங்கிடும்
போந்திட லரியதோர் பேரின்ப மதனை
ஆர்ந்திடு மதன்பரி சறைய வல்லரோ"

இத்தகைய தருமம் மகா சங்கார காலத்தில் தானும் அழிய நேரிடுமென்றேங்கி யோசித்து விடையுருக் கொண்டு இறைவனை யடைந்து "யான்இற வாமையும் தேவரீருக்கு வாகனமாகுந் தன்மையும் மிக்க வலியுடைமையும் பெற்று உயிர்வாழ அடியேனுக் கருளவேண்டும்" என்று வேண்டி நின்றது. அடைந்தோரைக் காக்கின்ற அருட்கடலாகிய இறைவர் தருமதேவதையை ஏற்றுக் கொண்டு எப்போதும் நீங்காது தன்னிடத்து ஊர்தியாய் வைத்துக்கொண்டார். அன்று முதல் இறைவன் அம்மையோடும் முருகப் பெருமானோடும் தரும தேவதையாகிய விடையை ஊர்ந்து அடியார்களுக்குக் காட்சி கொடுத்தருளா நின்றனன்.

# 9. தேரூர்ந்த திரிபுராந்தகன்*

இவ்வுலகத்தைக் காணும்போது நமக்குக் கடவுளைப் பற்றிய எண்ணம் உண்டாகிறது. இவ்வுலகத்தை மாயை என்ற ஓர் இருள் மறைத்துக்கொண்டிருக்கிறது. அவ்விருள் ஒருவாறு நீங்கும் காலம் சம்ஹார காலம் என்று சொல்லலாம். ஆண்டவன் மகாசம்ஹாரத்தை நம் பொருட்டே செய்கிறான். சிருஷ்டி, திதியைக் காட்டிலும் சம்ஹாரமே மேலானது. சம்ஹாரத் தொழில் கொலைத்தொழில் அன்று. அஃது அப்பதத்தின் பொருளைக் கூர்ந்து நோக்கின் விளங்கும். சம்ஹாரம் என்பது வடமொழிப் பதம். அதைச் சம், ஹாரம் என்று இரு சொற்களாகப் பிரிக்கலாம். சம் என்பது செவ்வையாக என்று பொருள்படும். ஹாரம் என்பது இழுத்தலாகும். ஆண்டவன் இவ்வுலகில் அல்லற்படும் உயிர்களைச் சற்று இளைப்பாற்றும் பொருட்டுத் தன்னகத்தே இழுத்து ஒடுக்கிவைத்துக் கொள்கிறான். இதுவே சம்ஹாரமாகும். 'அழிப்பு இளைப்பு ஆற்றல்' என்பர் அருணந்திசிவனார். இவ்வாறு உயிர்களின் இளைப்பை நீக்கும் ஒரு தொழிலை எவரே கொலைத் தொழில் என்பார்? கடவுள் நமது யஜமானன். அன்பு வடிவாக உள்ளவனே யஜமான். சம்ஹாரத் தொழிலைச் செய்வதாலேயே ஆண்டவன் 'ஹரன்' என்று அழைக்கப்பட்டான். இரக்கமே ஆண்டவன் உரு என்பதைக் குறிக்கவேண்டியே திருநாவுக்கரசு சுவாமிகளும் திருமறைக்காட்டுத் தேவாரத்தில் "இரக்கமொன்றிலீர்" என்று கூறினர்.

## கடவுள் அருந்திறம்

நமக்கு அடங்கினவன் கடவுள் ஆகான்; கடவுள் நமக்குள் அடங்காதவன். அப்படிப்பட்ட கடவுளின் தன்மை யாது? நம் நிலைமைக்குத் தக்கவாறு அவன் நம்மைப் பக்குவப்படுத்துதல் வேண்டும். உதாரணமாக ஒரு பள்ளிக்

*ஸ்ரீலஸ்ரீ ஞானியார் ஸ்வாமிகள் திருமுன்னிலையில் 29-4-37-ல் நிகழ்த்தியது. திரு. கே. த. கிருஷ்ணசாமி முதலியார், பி.எ., எல்.டி. அவர்களின் குறிப்பு.

கூடத்தை எடுத்துக்கொள்ளலாம். அப்பள்ளிக்கூடத்தில் பல வகுப்புகள் இருக்கின்றன. வெவ்வேறு வகுப்புக்களில் படிக்கும் மாணவர்தம் படிப்பும், திறனும் வெவ்வேறே. அவரவர் நிலைமைக்குத் தக்கவாறே ஆசான் கல்வி புகட்டுவான். ஆசானைப் போன்றவன் கடவுள். பிள்ளைகளே ஆன்மாக்கள். ஆன்மாக்களின் தன்மைக்கேற்பப் பரிபக்குவப்படுத்துதலே ஆண்டவன் அருள்திறம். எப்படி ஆசான் பிள்ளைகளிடத்துத் தம் திறமனைத்தையும் காட்டமாட்டாரோ, அவ்வாறே ஆண்டவனும் ஆன்மாக்களிடத்துத் தன் திறமனைத்தையும் காட்டமாட்டான்.

நம்முடைய சக்தியெல்லாம் மூன்றில் அடங்குவன. அவையே நாமம், ரூபம், கிரியை எனப்படும். அவன் நம்மை ஆட்கொள்ள ஓர் இடத்தை அடைகிறான். உதாரணமாக மயிலாப்பூரை எடுத்துக்கொள்வோம். அவனது வடிவம் ஆண் பெண் ஒன்றியது. நாமும் நம்முடைய சக்தியும் ஒன்று பட்டாலேயே நாமாகிறோம். நம்மிடத்திருந்து சக்தியை வேறாகப் பிரித்தல் முடியாது. அவன் ஆண் பெண் வடிவோடு பிள்ளைகளுடனும் காட்சியளிக்கிறான். இறுதியில் நோக்குழி, எல்லாம் அவனாகவே இருக்கிறான். எனவே, வேதம் ஆத்மாவே புத்திரனாகிறான் என்று கூறுகிறது. நாம் கடவுளை நினைக்கும்போது நம்மைப் போலவே அவனைப் பாவிக்கிறோம். அவன் பல வாகனங்களில் வருதல் அவனுடைய உயர்வைக் காட்டுவது. அவ்வாறு வாகனங்களின்மீது வரும் கோலத்தையே நாம் உத்ஸவம் என்கிறோம்.

### உத்ஸவம்

இனி உத்ஸவத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வாம். உத்ஸவம் என்னும் பதம் உத்ஸூயதே என்னும் பதத்திலிருந்து பிறந்ததாகும். சுகத்தை உண்டுபண்ணுவதென்பது அதன் பொருளாகும். உத்=மேலான பரமேசுவரனுடைய, ஸவம்=வெளியுலாவுதல் என்றும் பொருள் கொள்ளலாம். ஜனங்களை நல்வழிப்படுத்தல் என்பது இதன் பொருளாகும். உத்ஸவத்தின் தாத்பரியங்கள் நான்கு. அவை வருமாறு :— (1) சிருட்டி செய்தல். (2) தம்மை வெளிக்காட்டல். (3) சுகத்தைக் கொடுத்தல். (4) வந்து பார்த்தல். முன்னர்க்



கூறியவாறு சம்ஹாரத்தில் அனுக்கிரகம் அடங்கும். சம்ஹாரம் என்பதன் பொருளே துக்கம் போய்ச் சுகம் வருதல் என்பதாகும். ரதரோகணம் சம்ஹாரத்தின் பாற்பட்டது. தேர் என்றால் சம்ஹாரம் என்று பொருள்.

இரதோத்ஸவம் சில ஊர்களில் ஏழாவது நாளிலும், சில ஊர்களில் ஒன்பதாவது நாளிலும் நடைபெறுகிறது. இரதோத்ஸவத்தின் உட்கருத்தை உன்னிப் பாருங்கள். பூமியையே ஆண்டவன் இரதமாகக் கொண்டிருக்கிறான். பூமிக்கு இருவித ரூபம் உண்டு. ஒன்று பிராகிருதம்; நேரிற் காண்பது. மற்றொன்று தெய்விகம். பூமியைப் பூமாதேவி என்று கூறுதல் உபசரிப்பு. இது, தேவதையை அதிதேவதை என்று கூறுதற்போல. இத்தெய்விகத் தன்மையைக் கருதியே திருவிளையாடற் புராண உக்கிரகுமாரப் படலத்தில் 'மேருமலை மனைவியுடன் பேசினான்' என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது.

### தேர்

பூமியாகிய தேரிற் கட்டப்பட்ட குதிரைகள் நான்கு. அவற்றின் நிறம் வெண்மை. இந்நான்கு குதிரைகளும் தோஷமில்லாத நான்கு வேதங்களைக் குறிக்கின்றன. வேதம் என்னும் பதம் வித் என்ற தாதுவின் அடியாகப் பிறந்த சொல். வேதங்கள் தர்மத்தைக் கூறுகின்றன என்று தைத்திரீயோபநிஷத் கூறுகிறது.

### சாரதி

இவ்வித இரதத்துக்குச் சாரதியாக அமைந்தவன் பிரமன். ஆண்டவன் வேதங்களைப் பிரமாவுக்குக் கற்றுக் கொடுத்தான். எதன் பொருட்டு? அவன் மூலமாக வேதங்கள் உலகில் பரவுதல் வேண்டும் என்று கருதியே. பிரமனுக்கு நான்கு முகங்கள். ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு திசையைப் பார்க்கின்றன. அதனால் தேருக்கு எவ்வித ஆபத்தும் உண்டாகாது. எனவே, பூமியாகிய இரதத்தை வேதமாகிய குதிரைகளைப் பூட்டி ஒழுங்காக நடத்துபவன் பிரமா.

### சக்கரங்கள்

இப்பூமியாகிய இரதத்துக்குச் சக்கரங்களாக அமைந்தவர் சூரிய சந்திரர். சூரிய சந்திரர் இவ்வுலக வளர்ச்சிக்கு

இன்றியமையாதவர். எனவே, இரதத்துக்கு முக்கியமான சக்கரங்களாக அவர்கள் அமைந்தார்கள். சூரியன் அசத்தத்தைப் போக்குவது. இதை யொட்டியே இக்காலத்துக் கோயில்களில் சூரியன் முதல் சண்டேசர் ஈறாக உள்ளவர்களுக்குப் பூசைகள் நடைபெறுகின்றன. கோயில்களில் முன் காலத்தில் நவக்கிரகங்கள் கிடையா. பைரவர் கோயில் காவலர், அவருக்குப் பக்கத்தில் இருப்பவர் சூரியர். அவர் இல்லாவிட்டால் சிவபூசை இல்லை. ஆன்மாவைச் சத்வ குணத்தில் புக வைப்பது சூரியன்; இன்பத்தை உண்டாக்குவது சந்திரன். சூரியன் முன் சூரியகாந்தக்கல் நெருப்பை உண்டாக்குகிறது. இது சிருஷ்டியைக் குறிப்பது. சூரியோதயத்தைக் கண்டு தாமரை மலர்கிறது. அது ரட்சையின் பாற்படும். நீரிலிருந்து தாமரைக் கொடியைப் பிடுங்கி எறிந்தால் அது தன்னை மலர்வித்த சூரியனாலேயே எரிக்கப்படுகிறது. இது சம்ஹாரம். எனவே, சூரியனிடத்திலேயே சிருஷ்டி, ரட்சை, சம்ஹாரம் என்ற முக்குணங்களும் அடங்கியுள்ளன.

### வில்

சிவபெருமான் கையில் வில்லைத் தாங்கியுள்ளார். கால் பெருவிரல் முதல் நெற்றிவரை உள்ளது வில். தனக்குக் குறைந்த மேருவைக் கடவுள் வில்லாகத் தாங்கியுள்ளார். மேருமலை பொன் வடிவாயுள்ளது. ஆண்டவன் அனல் வடிவினன். அனலின் முன் பொன் உருகுதல் இயற்கை. அதனால் வில் உருகுந்தன்மை யுடையது. மற்றவர்களைப் பாவத்துக்குள்ளாக்குதல் கூடாதென்றெண்ணியே ஆண்டவன் வில்லை ஏந்தியுள்ளான். அவ்வில்லுக்கு அம்பாக உள்ளவர் விஷ்ணு. அதன் நுனி அக்கினி தேவன். எதிரிகளை அக்கினி எரிக்கும். வில்லுக்கு நாணாக அமைந்தது ஆதிசேஷன். அவன் அறிவிற் சிறந்தவன். அறிவு இல்லாவிடின் எக்காரியமும் நடைபெறாது. இந்த இரதத்தின் இறகுகளாக உள்ளவன் வாயு.

பொதுவாகச் சமுத்திரத்தின்மீது போகும்போதும், சண்டைக்குச் செல்லும் போதும், தனந்தேடப் போகும் போதும் மனைவியுடன் செல்லுதல் கூடாது. ஆனால் ஆண்டவன் யுத்தத்துக்குப் போகும்போது மனைவியை உடன்



அழைத்துச் செல்கிறான். பெண்மை இரக்கத்தைக் குறிப்பது. எனவே சக்தி உடன் செல்வது ஆண்டவன் இரக்க நெஞ்சை உடையவன் என்பதைக் காட்டுகிறது. இரதத்தில் இளங் குழந்தையும் உடன் செல்கிறது.

### முப்புரமெரித்தல்

இவ்வாறு இரதத்தில் எதற்காகச் செல்கிறார்? முப்புரத்தை எரிப்பதற்காக. மனிதருக்கு மூன்று சரீரங்கள் உண்டு. அவை ஸ்தூலம், சூக்குமம், காரணம் எனப்படும். அம்மூன்று உடலங்களுக்கும் காரணமா யிருப்பவை மூன்று மலங்கள். அவையே ஆணவம், கன்மம், மாயை எனப்படும். இம்மூன்று மலங்களையும் அழிப்பதற்காகவே ஆண்டவன் மும்மல காரியத்தை மேற்கொண்டார். எனவே, 'முப்புரமாவது மும்மல காரியம்' என்று திருமந்திரம் கூறுகிறது. மும்மலங்களுக்கு மோகம் முதலிய பதின்மூன்று காரியங்கள் உண்டு. மலங்களில் மூன்று விதம் இருத்தல்போல் மனிதரிலும் மூன்று விதமானவரைக் காணலாம்.

கடவுளின்றி இவ்வுலகத்தில் நாம் எதையும் செய்தல் இயலாது. கண் மட்டும் ஒரு பொருளைக் காணமுடியாது. அக்கண்ணோடு உயிரும் சேர்ந்தாலேயே பொருள்களைக் காணுதல் கூடும். அதுபோலவே உயிரோடு ஆண்டவன் சேர்ந்தாலேயே உயிருக்கும் இயக்கும் சக்தி உண்டாகிறது. கடவுளிடத்து நாம் இடையறா அன்புடையவராய் இருத்தல் வேண்டும். இதுவே அபார அன்பு என்று கூறப்படுகிறது. பாரபக்தி என்பது நேரான பக்தியாகும். இந்நோக்கத்தில் பாரபக்தி மார்க்கமும் உண்டு. கெட்ட பக்தியும் உண்டு. பாரபக்தியால் நல்ல நிலையைப் பெற்றவர் மூவர். அவரே சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்போர். அவர்கள் முறையே தர்மம், ஆசாரம், அறிவு என்ற மூன்றையும் குறிப்பவர்கள். கெட்ட பக்தியால் இறந்தவர் மூவர். அவர் தாரகாட்சன், வித்யுன்மாலி, கமலாட்சன் எனப்படுவோர்.

தேரூர்ந்த திரிபுராந்தகன், அக்கினி, பிரமா, வாயு முதலியவர்களைக் கொண்டு வெற்றிபெற்றால் அவர்களுக்குக் கர்வம் உண்டாகும் என்று எண்ணிப், புன் சிரிப்பாலேயே முப்புரங்களையும் எரித்தான்.

# 10. முத்தித் தலைவர்*

காலம் - ஒரு தத்துவம். அது மாயையில் அசுத்த மாயையில் தோன்றுகிறது. தத்துவங்கள் மூவகை. அவை ஆன்ம தத்துவம், வித்யாதத்வம், சிவதத்துவம். அவை முறையே 24, 7, 5. இம்முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மக்களாகிய நாம் அடங்கிக் கிடக்கின்றோம். இவற்றைக் கடந்து நிற்பவன் கடவுள். இத்தத்துவங்கள் அறிவற்றன. நாம் அற்ப அறிவினையுடையோம். ஆதலின் இவற்றிற்குக் கட்டுப்பட்டு வாழ்கிறோம். இறைவன் காலகாலன். நாம் செய்யவேண்டுவது காலத்தைப் பொட்டிக் காலத்தை வெல்வதே. இறைவன் தயவு இலையின் நாம் வெல்லுதல் கூடும்.

வால்மீகி தம் இராமாயணத்தில் பாலகாண்டத்தில் விசுவாமித்திரர் வாயிலாக "எவராயிருப்பினும் கார்த்திகேயனிடத்தில் பக்தி பண்ணுபவர் புதல்வர் முதலிய பல பேறுகளைப் பெறுவர்" என்று சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது.

பார்; நின்றிடுவர் பார்; பக்திதனில் நின்றிடுவர் பார்; எப்படிப்பட்ட பக்தி? மும்மலமும் மோசிக்கும் பக்தி. யார் நின்றிடுவர்? முத்தித்தலைவர். எனவே முத்தித் தலைவர் மும்மலமும் மோசிக்கும் பக்திதனில் நின்றிடுவர் பார். பக்தியால் இறைவன் தயவு இலைய முத்தி சித்திக்கும் என்பதையே இத்தொடர் விளக்குகிறது.

——

*1938-ல் திருமயிலை வெள்ளீசுவரர் ஆலயத்தில் கந்தர் சஷ்டிச் சொற்பொழிவுகள் ஞானியாரடிகள் செய்தார்கள். அதுசமயம் எடுத்த குறிப்புகள்.

# 11. மகோத்ஸவம்*

உத்ஸவம் என்பது உயர்ந்த சிருஷ்டி எனப் பொருள்படும். இறைவன் உயிர்களாகிய நம் பொருட்டுச் சிருஷ்டியை மேற்கொள்ளுகிறான். அந்நிலையையே நாம் உத்ஸவம் என்கிறோம். அவ்வுத்ஸவம் நம் பொருட்டு நிகழ்வதால் முதலில் நாம் யார் என்பதை ஆராய வேண்டும்.

## உடலும் உயிரும்

நான் என்ற பதம் உடலைக் குறிப்பதாகவே சாதாரண மனிதன் எண்ணுகிறான். என் உடம்பு என்னும்போது உடல் வேறாகவும், உயிர் வேறாகவும் காணப்படுகிறது. இன்னும் சிறிது ஆராய்ந்து சென்றால் நான் என்னும் பதம் உடல் உயிர் முதலிய இரண்டையும் குறிக்கும் பதம் அன்று என்பது தெளிவாகும். பின்னர் அஃது எதைக் குறிக்கிறது? நம் உயிருக்கு உயிராயுள்ள இறைவனையே அது குறிக்கிறது.

உலகத்தைப் பார்க்க வொட்டாது நம்மை ஒன்று மறைத்துக் கொண்டிருக்கிறது. உடலில் உயிர் இருந்தாலும் கண் இல்லாவிட்டால் உலகத்தைக் காண முடியாது. அக் கண் போன்றது கலை. கலையை விளக்கம் என்னலாம். உயிரும் உடலும் கலையோடு கூடாவிட்டால் அறிவு விளக்கம் பெறாது. இதற்கு உதாரணமாக மணியோசையைக் கூறலாம். நாக்கையும் மணியையும் ஒன்று சேர்ப்பதால் மட்டும் ஓசை உண்டாகாது. அம் மணிக்கும் நமக்கும் இடையில் ஆகாயம் இருந்தாலொழிய அவ்வோசை நம் காதுக்கு எட்டாது. இவ்வாகாயம் போன்றது கலை. இம் மூன்றையும் ஒன்று சேர்த்து வைப்பவன் எவனோ அவனே கடவுள். அதனாலேயே அவனது போற்றலும் கருணையும் விளங்குகின்றன. உடலும் உயிரும் கூடாத நிலைக்குக் கேவல நிலை என்று பெயர்.

பொன்மேல் மை இருந்தால் பொன்னின் பிரகாசம் உண்டாகாது. பொன்னின் பிரகாசத்தை மை மறைத்து நிற்கும். அதுபோன்று நம்மிடத்துள்ள அறிவோடு அறி

*ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருவண்ணாமலையில் 28-4-37ல் நிகழ்த்திய சொற்பொழிவு. திரு கே. த. கிருஷ்ணசாமி முதலியார் B.A., B.T., அவர்கள் கைக் குறிப்பு.

யாமையும் கலந்து இருப்பதால் அறிவு விளக்கம் பெறுவதில்லை. அரிசி வேறு; தவிடு, உமி முதலியன வேறு. ஒன்று சேர்ந்த இவற்றைப் பிரிக்க முயற்சி வேண்டும். நெல்லைப் பல தடவை குத்தக் குத்த அரிசியாதல்போல் பல தடவை முயன்றுலேயே நம்மிடத்தினின்றும் அறியாமை நீங்கும்.

### கடவுள்

நம்மிடமுள்ள அறியாமையை நீக்க முடியாத ஒரு நிலைமை நமக்குண்டு. அதற்கு ஆவாரகநிலை என்று பெயர். இந்நிலை விடயம் சொரூபம் என இருவகைப்படும். அவ்வறியாமையை நீக்கிக் கொள்ள நாம் முயல்வதில்லை. அதை நீக்கக் கடவுள் தானாகவே நம்மிடம் வருகிறான்; பிறக்கும்போது நமக்குப் பரிசுத்தமாகிய உடலைத் தருகிறான். கடவுள் தந்த அவ்வுடலைக் கடவுளுடையதென்னாது நாம் நம்முடையதென்று கூறுகிறோம். இவ்வுடலை நமக்குத் தந்த கடவுளின் தலைமையையும் நாம் மறந்து விடுகிறோம்.

### மலங்கள்

நம்மிடத்துள்ள ஆணவம், கன்மம், மாயை முதலிய குற்றங்களைப் போக்கிக் கொள்ளப் பெரியோர் சில முறைகளை வகுத்துள்ளார். அவற்றை ஆராய்ந்த பிறகே அம்முறைகளை அனுஷ்டிப்பேனென்பது மடமை. நாம் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது வைத்தியர் மருந்து தருகிறார். மருந்தின் உட்பொருளை ஆராய்ந்த பிறகே நான் அதை உண்பேனென்றல் மடமை யாகாதோ? முயலவேண்டுவது நமது கடமை. பலனை நல்குவது ஆண்டவன் கடமை. அப்பலன் எப்போது வருமென்று கூறுதலும் கடினம். இப்பிறவியிலேயே பெற்றாலும் பெறலாம்; இன்றேல் அடுத்த பிறவியில் பெறலாம். முயற்சி வீணாகாது.

நம்மிடத்து ஆணவம் எது வரையில் உண்டோ அது வரையில் நமக்குப் பிறவி உண்டு. குற்றம் செய்த பிள்ளையைத் தண்டித்துப் பிதா அவனை அணைப்பது போல நமது பாவ புண்ணியத்துக்கேற்ற பலனைத் தந்து மரணத்துக்குப் பின் நம்மைக் கடவுள் தன்னிடத்து ஒடுக்கிக் கொள்கிறான். குழந்தைகள் பொருட்டுத் தாயார் மருந்து சாப்பிடுவதைப் போல ஆன்மாக்களாகிய நமது இடர் தீரும் வண்ணம், நமது பிரம மாதா வாகிய பராசக்தி ஆண்டவனை சேர்ந்



மகா சிவராத்திரி அன்று பூசிக்கிறாள். தனக்கென உழைப்பவன் சிறியவன்; பிறர்க்கென உழைப்பவன் பெரியவன். கடவுள் பெரியவனாதலைக் காண்க.

### பஞ்ச கிருத்தியம்

நம்மிடத்துள்ள ஆணவமல பரிபாகத்திற்குச் சிருஷ்டியையும், மாயா மல பரிபாகத்திற்கு ஸ்திதியையும், கன்ம மல பரிபாகத்திற்குச் சம்ஹாரத்தையும் ஆண்டவன் மேற்கொள்கிறான். இம்மூன்றோடு திரோபவத்தையும், அனுக்கிரகத்தையும் கூட்டப் பஞ்ச கிருத்தியமாகிறது. இப் பஞ்ச கிருத்தியத்தை உயிர்களின் நன்மைக்காகவே ஆண்டவன் செய்கிறான்.

### ஆத்ம வாதிகள்

நமது உயிரைப் பலர் பலவிதமாகக் கூறுவர்.

1. சிலர் ஆத்மா அல்லது உயிர் என்பது ஒன்றில்லை என்பர். அவர் சூன்யாத்மவாதிகள்.

2. சிலர் தேகமே ஆத்மா என்பர். அவர்கள் தேகாத்ம வாதிகள்.

3. நம்மிடத்துள்ள ஐந்து இந்திரியங்களே உயிர் என்பர் சிலர். சில சமயங்களில் இவ்வைந்து இந்திரியங்களும் ஒன்று சேர்வதில்லை. ஆதலால் இந்திரியத்தை உயிர் என்பது தவறு. இவ்வாறு இந்திரியமே உயிர் என்போர் இந்திரிய ஆத்மவாதிகள்.

4. சூக்கும தேக ஆத்மவாதி சரீரத்துக்குள் உள்ள சரீரமே உயிர் என்பன். அது சூக்குமம் காரணம் என இருவகைப்படும். சூக்கும தேகம் சத்தாதி ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் என மூன்றும் ஆகிய எட்டாலாகியது. அது சொப்பனமாகிய கனவு நிகழ்ச்சிகளை அறியும். ஆயினும் அக்கனவு நிகழ்ச்சிகள் பின்னர் மறக்கப்படுதலின் சூக்கும தேகமே ஆன்மா என்பது பொருந்தவில்லை.

5. பிராணாத்மவாதி நம்முள் உள்ள பிராணவாயுவே உயிர் என்பான்.

6. பிரமாத்மவாதி அறிவாகிய பிரமமே உயிர் என்கிறான். ஆனால் உயிர் அறியாமை வயப்பட்டுள்ளது.

7. சமுதாயவாதி உடம்பு முதலிய அனைத்தும் கூடிய சமுதாயம் அல்லது கூட்டமே உயிர் என்கிறான். பாவம்

கூடிய வழியும், அவை தனித்தனி வெவ்வேறு பெயர் பெறுகின்றனவே யன்றி ஆத்மா எனப்படுதல் இல்லை. மேலும் அவை யனைத்தும் மாயையின் காரியங்களேயாம்.

8. அந்தக்கரண ஆத்மவாதி மனம், சித்தம், புத்தி, அகங்காரம் முதலியவையே உயிர் என்கிறான். இவற்றில் ஒன்று செய்யும் காரியத்தை இன்னொன்று செய்வதில்லை. எனவே இவர்தம் கூற்றும் பொய்யாகிறது.

சிவஞான சித்தியாரின் மூன்றாஞ் சூத்திரம் உயிரைப் பற்றிக் கூறுகிறது. அது வருமாறு :—

"உயிரெனப் படுவதிந்த வுடலின்வே றுளதாயுந்தச்
செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடையதாகிப்
பயில்வுறு மின்பதுன்பப் பலன்களும் நுகரும் பார்க்கில்
துயிலொடு மைந்தவத்தைப் படுமுண்மை துரியாதீதம்."

## பஞ்ச கிருத்தியம் நடைபெறுதல்

அரசனுக்கு மந்திரி யில்லாவிட்டால் பிரயோசனம் இல்லை. உள்ளம் மந்திரி; உயிர் அரசன். உள்ளம் இல்லா விட்டால் உயிர் இயங்காது. அரசனைச் சூழ்ந்து பலர் இருப்பர்; அவர்களுக்குள் படிப்படியாக ஏற்றத் தாழ்வு உண்டு. அதுபோல உயிரைச் சுற்றி ஐந்து அவத்தைகள் இருக்கின்றன. அவற்றில் மூன்று காணப்படுவன; இரண்டு காணப்படாதன. விழிப்பு, கனவு, தூக்கம் ஆகிய மூன்றும் காணப்படுவன. துரியம் துரியாதீதம் என்பன காணப் படாதன. நன்றாகத் தூங்கும் நிலை துரிய நிலை: சுகமாகத் தூங்கும் நிலை துரியாதீத நிலை. இவ்வைந்து அவத்தைகளோடு மும்மலங்களும் உயிரைச் சூழ்ந்து நிற்கின்றன. இவற்றால் உயிர்படும் கஷ்டங்கள் எண்ணில. இத்துன்பத்தைக் கண்டு ஆண்டவன் தயையுடையவனாகிறான்: உயிரின் கஷ்டத்தைப் போக்க உயிரை நோக்கி வருகிறான். அப்படி வரும் நிலையிலேயே பஞ்ச கிருத்தியங்கள் நடைபெறு கின்றன. இதையே மணிவாசகனார் திருவெம்பாவையில்,

"போற்றி யருளுக நின்னாதியாம் பாதமலர்
போற்றி யருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்



போற்றியெல்லா வுயிர்க்கு மீறு மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய் !"

என்னும் பாட்டில் கூறுகிறார். இவ்வாறு ஆண்டவன் வரும் கோலத்தையே உத்ஸவம் என்கிறோம். இவ்வுண்மை,

"ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய் "

என்னும் திருப்பாடலாலும் மணிவாசகனார் விளக்குகிறார்.

## உத்ஸவம்

இனி தற்கால உத்ஸவங்களில் இப்பஞ்ச கிருத்தியங்களும் நடைபெறுகின்றனவா வென்பதைக் காண்போம். செய்கைகளில் இருவிதம் உண்டு. ஒன்று ஆத்மார்த்தம். மற்றொன்று பரார்த்தம். தன் ஆத்மாவின் உயர்வுக்காகச் செய்யும் முயற்சி ஆத்மார்த்தத்தின் பாற்படும். பிறர் நன்மைக்காகச் செய்தல் பரார்த்தமாகும். ஆண்டவனுடைய பஞ்சகிருத்தியம் பரார்த்தத்தின் பாற்பட்டதே.

உத்ஸவத்தில் முக்கிய அம்சங்கள் நான்கு. அவை பூசோதனை, பிரதிட்டை, பூசை செய்தல், பிராயச்சித்தம் என்பன. இவற்றில் பூசை மூன்று வகைப்படும். அவை நித்திய பூசை, நைமித்திக பூசை, காமிக பூசை எனப்படும். முதல் இரண்டு பூசைகளும் பொதுவாகச் செய்யப்படுபவை.

உத்ஸவத்துக்குத் தமிழில் சிறப்பு என்று பெயர். திருக்குறளிலும் திருவள்ளுவர்,

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

என்று கூறியிருத்தல் காண்க. சிறப்பு என்பதற்கு விழவு என்று பரிமேலழகர் பொருள் கூறினர். நித்தியத்தின்

தாழ்வு நீக்கச் செய்வதே நைமித்திக பூசை என்று அவர் கூறுகிறார். பஞ்சபர்வம் என்பது மாத உத்ஸவம். பஞ்ச கிருத்தியமாக உத்ஸவம் செய்வதே சிறப்பு.

### அங்கங்கள்

உத்ஸவத்தில் பதினெட்டு செயல்கள் நிகழ்கின்றன. அவை வருமாறு :—(1) ரிஷப பூசை. இது விருஷப யாகம் என்றும் கூறப்படும். (2) கொடியேற்றம். (3) பிரஸ்தானம். (4) மிருத்சங்கிரஹணம், மண்கொண்டு வருதல்; விதை போடுதல்; அவை முளைத்தல் முதலிய சிறப்புக்கள். (5) யாகசாலை. (6) அஸ்திரம். இதற்கு ஆறு அங்கம் என்று பெயர்; ஷடாங்க மந்திரம் என்றும் கூறப்படும். இப் பூசையில் அங்கங்களைத் தொட்டுப் பார்த்தல் விரோத மின்மையைக் காட்டுகிறது. அதுபோது சிறிய மேளம் உபயோகிக்கப்படும். (7) பலிதானம், பிண்டம் போடுதல் (8) யானக் கிரமம். இது வாகனக்கிரமம் என்றும் கூறப் படும். (9) பரிவேடம். (10) ஆராதனை. இதை ஆலத்தி என்றும் கூறுவர். (11) கௌஸ்துபம். இது சந்தோஷத்தைக் குறிப் பது. (12) தீர்த்த சங்கிரஹணம். இது நீர் கொண்டுவரல் எனப்படும். (13) சூர்ணோத்ஸவம். இதற்குப் பொற்சுண்ண விழா என்று பெயர். இவ்விழாவில் வாசனைப் பொடிகள் உபயோகிக்கப்படும். (14) தீர்த்தம். (15) அவரோகணம் (கொடியிறங்கல்). குக்கன்ற பதத்துக்கே வளர்த்தல் என்று பொருள். (16) ஸ்தாபனம் (தனியாகப் பூசித்தல்). (17) விவாகம். (18) அடியார்களைப் பூசித்தல்.

### உத்ஸவத்தில் பஞ்சகிருத்தியம்

பொதுவாக அங்குரம், துவஜாரோகணம் முதலியன சிருஷ்டியின் பாற்படும். வாகனம், பலி முதலியன ஸ்திதி. ரதோத்ஸவம் சங்காரம். மௌன உத்ஸவம் திரோதானம். இது அகாலத்தில் செய்வது. ஊடல் உத்ஸவம் அனுக்கிர கத்தின் பாற்படும். ஊடல் விரோதமன்று.

"ஊடுதல் காமத்திற் கின்பமதற் கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

என்று திருவள்ளுவனார் கூறுகிறார். 'ஊடல் வித்தகி ஊடி' என்பது திருவிளையாடற் புராணம். சக்தி ஊடல் அனுக்கிர



கத்தின் பாற்பட்டது. விசேஷ ஞானத்தையே சொரூப மாக உடைய மாதாவுக்குச் சக்தி என்று பெயர். ஈஸ்வரன் வழி உமை நிற்பள். சக்தியும் சிவமுங் கூடினால் உயிர்களுக்கு இன்பம் உண்டாகும்.

வெள்ளிக்கிழமை தோறும் சுற்றி வருவது பராசக்தி. மூலஸ்தானத்தில் இருப்பது ஆதிசக்தி. சர்வேசுரனே சிருஷ்டி காரணமாகச் சக்தியாகிறான். சிவம் என்பதே உண்மை உருவம். சிவம் என்பது தொழிற் பெயர். அவன் சம்மோடு கூடும்போது அவனுக்குப் பதி என்று பெயர். இதை விளக்குவது சித்தியாரின் இரண்டாஞ் சூத்திரம்.

முன் காலத்தில் எல்லா ஊர்களிலும் விழாக்கள் நடந் தன. இது திருமுருகாற்றுப் படையிலுள்ள "ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்" என்ற அடியால் விளங்கு கிறது. ஊர் ஊர் என்பதற்கு ஒவ்வொரு ஊர் என்று பரிமேலழகர் பொருள் கூறினார். அதனால் ஒவ்வொரு ஊரிலும் விழா உண்டு என்பது ஏற்படுகிறது.

### அறுவகை விழா

அவ்விழா அறுவகையாகக் கொண்டாடப்பட்டது. நாட்களிலும் வித்யாசம் உண்டு. ஒரு நாள் உற்சவமும் உண்டு. இஃது அரசனின் நன்மை கருதிச் செய்வது. மூன்று நாள் விழா சாத்விகமானது; சிவனைச் சந்தோஷிப் பது. ஐந்து நாள் விழா பார்த்திபம் என்பது. இது போகத்தை உண்டாக்குவது. ஏழு நாள் உற்சவம் ஸ்ரீகரம். இதைச் சிவப்பிரியம் என்றும் கூறலாம். ஒன்பது நாள் உத்ஸவம் சௌக்கியம் எனப்படும். அது சாந்தத்தைக் குறிப்பது. பன்னிரண்டு நாள் உத்ஸவம் பைத்ரிகம். இது முக்தியின் பயனைக் குறிப்பது. இந்நாட்களின் வித்தி யாசமே அறுவகை உத்ஸவம் எனப்படும்.

திருவாரூர் போன்ற இடங்களில் இருபத்தொரு நாட் கள் வரை விழா நடைபெறுகிறது. திருப்பெருந்துறைப் புராணத்தில் புரூரவன் ஏழு நாள் விழா செய்ததாகக் கூறப் பட்டிருக்கிறது.

### உத்ஸவத்தின் பயன்

இனி உத்ஸவத்தின் பயனைக் காணல் வேண்டும். உத்ஸவ காலத்தில் எல்லாரும் ஒருவித வித்தியாசமுமின்றிக்

கடவுளைத் தரிசிக்கலாம். ஜாதிப்பேய் அங்குத் தலை காட்டாது. இதைச் சேக்கிழார் பெருமான் நமிநந்தி யடிகள் புராணத்தில்,

> "தேவர் பெருமா னெழுச்சி திருமணலிக் கெழுந்தருள
> யாவரென் றுடன் சேவித் தெல்லாக் குலத்தி னுள்ளோரும்
> மேவ வன்பர் தாமுமுடன் சேவித் தணைந்து விண்ணவர்தம்
> காவ லாளர் ஓலக்க மங்கே கண்டு களிப்புற்றார்"

என்ற செய்யுளில் கூறியிருக்கிறார்.

### தரிசனம் செய்யும் முறை

எவ்வாறு தரிசனம் செய்ய வேண்டுமென்பதையும் கூறுதல் அவசியம். "ஆள் அடையாளத்திற்குத் திருநீறிட்டுச் செல். விபூதியைக் கைகழுவ விடாதே" யென்று தைத்திரியோபநிஷத் கூறுகிறது. வியாச பாரதத்தில் விபூதியைப் பற்றிக் கூறியிருக்கிறது. ஒரு சமயத்தில் பார்வதிக்கும் பரமசிவனுக்கும் ஒரு சம்பாஷணை நடந்தது. அதுபோது பரமசிவனார் "விபூதி என்னாலே அடியார்களுக்குக் கொடுக்கப்பட்டது" என்று கூறுகிறார். பதின்மூன்று உபநிஷத்துக்களில் விபூதியைப் பற்றிக் கூறியிருக்கிறது. பூதி என்பதற்கு ஐஸ்வரியம் என்று பொருள். பிரமசாரிகளும் விபூதியை அணிதல் வேண்டுமென்று போதாயன சூத்திரம் கூறுகிறது. உத்ஸவத்துக்குச் செல்லும்போது சிறப்புப் பொருந்திய விபூதியை அணிந்து செல்லல் வேண்டும்.

இரண்டாவதாக உருத்திராக்கத்தை அணிந்து செல்லல் அவசியம். உருத்திராக்கத்திற்குக் கண்மணி என்று வேறு பொருள் உண்டு. தற்கால அறிஞர்களும் உருத்திராக்கத்தில் வியாதியைத் தீர்க்கும் குணம் இருப்பதாகக் கூறுகிறார்கள். பதின்மூன்று வருஷங்களுக்கு முன் கள்ளிக்கோட்டையில் ஒருவருக்கு உருத்திராக்கம் இழைத்துக் கொடுக்கப்பட்டதாம். அவரைப் பிடித்திருந்த தீராத நோயொன்று தீர்த்துவிட்டதாம். எனவே விபூதி உருத்திராக்கத்தோடு விழா நாட்களில் ஆண்டவனை வணங்கினால் நாம் பெரும்பேறு பெறலாம்.

—

## 12. காமாட்சி திருமணம்*

உலகங்கண்ட அறிவிலுயர்ந்தோர் உலகங்கொண்டே இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து ஒடுக்கும் கடவுள் ஒருவர் உண்டென்று நிச்சயிக்கின்றனர். அக்கடவுள், உண்மை அறிவு இன்பம் ஆம் வடிவுடையார். அவர் எங்கும் இருப்பவர்; எக்காலத்தும் இருப்பவர்; எல்லாஞ் செயவல்லவர்; எல்லாம் அறிபவர். பலவான் சத்திமான் என்று உலகிற் பேசப்படுவதை நோக்கிக் கடவுளும் சத்திமான் எனப்படுவர். கடவுள் ஒருவரே சத்திமான் சத்தி என இருகூறயினர். "பெண்ணுருவே பெருமான்" என்றார் ஞானசம்பந்தர். "பெண்ணாகி ஆணாய்" என்றார் மாணிக்கவாசகர். இன்பங் குறைந்த - நிறைந்த துன்பமுடைய உயிர்களாகிய நாம் ஆண் பெண் ஆம் இரண்டுருவம் எடுத்திருத்தலால் நம்மைக் காக்க, அவரும் ஆண் பெண் ஆம் உருவம் இரண்டு கொண்டனர். போகத்தையும் மோக்ஷத்தையும் உயிர்கட்குத் தருபவர் அவர். கோர வடிவங்கொண்டு உயிர்களின் வினையைப் போக்குவர்; யோக வடிவங்கொண்டு யோக ஞானங்களைத் தருவர். அவர் போக வடிவங்கொண்டு போகத்தை யூட்டுவர். உயிர்களாகிய நாம் போகம் அனுபவித்தற்காக அவர் போகி ஆகின்றனர்.

> "தொண்டனேன் புணருமா புணரே"
>
> "தொண்டனேன் விரும்புமா விரும்பே"
>
> "தொண்டனேன் நினையுமா நினைவே"

என்பவை திருவிசைப்பா.

---

*இது (1942) தைப்பூசத்தன்று பரிபூரணம் எய்திய ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திரிசிராப்பள்ளியில் நடைபெற்ற திருவளர்செல்வி - ச. காமாட்சியம்மையார் திருமணத்தில் வழங்குவதற்கெனத் தமது திருக்கரத்தால் எழுதி அச்சிடுவித்த கட்டுரை. சுவாமிகள் கடைசியாக எழுதிய கட்டுரை இஃதேயாகும்.

" பெரிய விருந்துயிர்க்குப் போகத்தைப்
புரிந்த லோரார் "

என்பது சித்தியார்.

" ஒருமுகம்,
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே "

என்பது திருமுருகாற்றுப்படை. " காமநுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான். உலகில் இல் வாழ்க்கை நடத்தற்கென் றுணர்க " என்பது மேற்கண்ட திருமுருகாற்றுப்படை யடிக்கு நச்சினார்க்கினியர் கூறிய விசேடவுரை.

" ஒருகை, நீனிற விசும்பின் மலிதுளி பொழிய,
ஒருகை, வானர மகளிர்க்கு வதுவை சூட்ட "

என்பது திருமுருகாற்றுப்படை.

மேற்கூறிய அடிகளின் நச்சினார்க்கினியர் விசேடவுரை: " என்றது, வள்ளியொடு நகையமர்ந்த முகம் உலகிற்கு இல் வாழ்க்கை நிகழ்த்துவித்ததாகலின் அவ்வில் வாழ்க்கை நிகழ்த்துதற்கு மழையைப் பெய்வித்தது ஒருகை, ஒருகை இவ்வாழ்க்கை நிகழ்த்தற் பொருட்டு மணமாலையைச் சூட்டிற்று என்றவாறு " ஆம்.

உயிர்களாகிய நாம் திருமணஞ்செய்து சுத்தபோகத்தைத் துய்த்துப் போகத்தின் தன்மை இத்தன்மைத் தென்று உணர்ந்து, மும்மலத்தினின்றும் நீங்கி முழு இன்பத்தையும் பெறுதற்காகவே கடவுளும் ஆணும் பெண்ணுமாகி மணஞ் செய்து கொண்டனன்.

" விபுலமாம் வாழ்க்
செவ்வண்ணப் பெருமானும் மணவினையிற்
திருவுள்ளம் பற்றினால் "



" மண்டல மனைத்தின் நருக்கிரித்து
மாறு இன்பப் பெருவாழ்வு
கண்டார் உறவ அருள்கொழிக்கும்
கவுரி மணத்தின் திறம்புகல்வாம் "

என்பன காஞ்சிப் புராணம். காமாட்சியம்மையார் தழுவக் குழைந்த படலத்திலும், திருமணப்படலத்து முள்ளவை. எனவே, கடவுள் மணஞ்செய்துகொண்டு நம்மை மணஞ் செய்விக்கின்றார் என்பது பெறப்படும்.

### நம் தந்தை ஸ்ரீ ஏகாம்பரநாதனும் செய்துகொண்ட

## காமாட்சி திருமணம்

உலகெலாம் உய்தற்காக மந்தரமலையில் பெருமான் எழுந்தருளிய காலத்தில் விளையாட்டாகப் பின்புறம் வந்து பெருமாட்டி, பெருமான் கண்களைப் புதைத்தாள்; உலகங்கள் இருண்டன; கலையின்பந் தொலைந்தன; நாற்கேள்வி பயனில; அறிவின் தேர்ச்சி மறந்தன; கடவுட் பூசை துறந்தன உலகமெல்லாம். பலர் வேண்ட அம்மை கரங்களை விட்டாள். விழி திறந்தார் ஐயர். அம்மையை நோக்கி " எமது விழியை நீ புதைத்ததால் கடவுட் பூசை முதலிய நல்லவை நிகழவில்லை அதனால் தீமை மிக உற்றது. நீ பிராயச்சித்தம் செய்துகொளல் வேண்டும். எமை அருச்சித்தல், எமை நினைத்தல், எமைத் துதித்தல், எம்பேர் செப்பல், எம்அடியரை வழிபடல் இவைகளே எவ்வித நிலைமையிலும் நீக்கும் பிராயச் சித்தங்கள். ஆதலின் சால மக்கினிய காஞ்சிபுரஞ் சென்று எம்மைப் பூசித்தல் முதலியன செய் " என்று ஏவ, அம்மையும் தாதிகளோடு காஞ்சியையடைந்தனள். உமாபத்திரம் என்னும் தீர்த்தம் அடைந்து முழுகித் திருநீறணிந்து, உருத்திராக்கம் பூண்டு, பஞ்சாக்கரம் சொல்லி இறைவனையடைந்து தரிசித்தாள்; பூசித்தாள்; முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தாள். இங்ஙனம் நிகழும் நாள்களுளொருநாள் எப்போதும் போலக் கம்பையாற்றின் நடுவில் பூசிப்பாள். ஒரு திருவிளையாடல் செய்ய இறைவர் எண்ணினர். உலகிலுள்ள எல்லாத் தீர்த்தங்களும் அக்கம்பையில் வர எண்ணினர். வந்தது வெள்ளம். மலையிற் படுவ் வளங்கள் முதலியவற்றை

வாரிவரும் வெள்ளம் கண்டு அம்மை பயந்தாள். "விடையவன் பூசை மத்தியில் வந்ததே. எம்பிரான்மிசை என்னுமே. இனிச்செய்வதென்" என அன்பாம் வள்ளி; ஒரு கொடியிலுள்ள இரண்டு கொழுந்துகள் ஒரு மலைக் கொத்தை இருபுறமும் தழுவிநிற்பதுபோன்று பூசாவேதியில் தன் வள முழுத்தாலே வளர்ந்த இரகையாளும் ஏகாம்பரநாதம் தன் கணவரைத் தழுவிக் கொண்டாள் காமாட்சி அம்மை. தழுவவே பெருமான் திருவுருக் குழைந்தது. வளைத் தழும்பொடு முலைச் சுவடு அணிந்தார் ஐயர். உலகெலாம் களித்தன. அம்மை பூசித்த இலிங்க வடிவத்தினின்று இறைவன் உருக்கொடு தோன்றி அம்மையைக் கண்டு "மகிழ்ந்தனம்" என்றார். இறுகக் கட்டிய இரண்டு கைகளையும் விட்டுக் குவித்துக் கும்பிட்டுத் தோத்திரித்தாள். இறைவன், "காளீ" (கரிய நிறமுடையவளே) என அழைத்து, "வேண்டியது கேள்" என்றனன். இக் காஞ்சி வசிப்போர் சற்பயனும் பெறவேண்டும் எனக் கேட்டனள். அங்ஙனமே இறைவன் அருளி, "இன்னும் வேண்டியதைக் கேள்" என்றனன்.

அப்பொழுது அம்மையார் "காளீ என்றழைத்தருளினீர் முன்னே மந்தர மலையில். அங்ஙனமே இப்பொழுதும் அழைத்தீர். காளி (கருநிறமுடையவள். காளம் - கருமை) எனும் பெயர் நீங்கக் கவுரி (கவுரம் - பொன், கவுரி - பொன்னிறமுடையவள்) என அடியேன் பெயர் பெற அருளல் வேண்டும்" என்றனள். அங்ஙனமே இறை அருளினன். கருநிறம் நீங்கிப் பொன்னிறம் பெற்றனள். காளி என்பது போய் கவுரி என்றழைக்கப்பட்டாள் காமாட்சி. இறைவர் "முன்பே குறு முனிவன் வேண்டினன். வரம் தந்தனம். இக் காஞ்சியில் பங்குனிமாத உத்திர நட்சத்திரத்தில், கவுரியாகிய காமாட்சியே! நின்னை மணப்பேம்" என்று சொல்லித் திருமணத்தில் திருவுளம் பற்றினர். மாயோனை அழைத்தனர். "காமாட்சிக்கும் எனக்கும் மணவிழாச் செய்க" எனக் கட்டளையிட்டனர். மகிழ்ந்து அங்ஙனமே செய்ய முற்படுவார் மாயவனார். 'கவுரி திருமணம், காமாட்சி திருமணம்' என மணமுரசு அறையச் செய்தனர். அறையக்கேட்டு அகமகிழ்ந்தார் கேட்டார் எல்லாம். ஏகாம்பரநாதர் திருவருள் பெற்றுத்



திருவிழா நடத்தி ஒன்பது நாள் ஆன பின்னர் பத்தாம் நாள் ஆம் பங்குனி உத்தரத்தன்று காமாட்சி கலியாணம் நடத்துவாராயினர் மாயவனார். பெருமான், மணக்கோலம்கொண்டனர். அட்ட மங்கலங்களும் அணுக அன்னவர் கலியாண மண்டபம் வந்தனர். ஆதி இலக்குமியும் தனது கணவனார் கருத்தின்படி காமாட்சியை அலங்கரித்தாள். மேம்பட்டார்க்குத் தேவமங்கையர் சோபனம் பாடினர். அம்மை ஆதிஇலக்குமிதேவியின் கையைப் பிடித்து, எழுந்து, பூமழை பொழிய, வானவர் மங்கல வாழ்த்தொலி மல்க, குடை நிழற்றக், கொடி, கவரி, சந்திரத்தி யாதியவற்றை மகளிர் ஏந்தப் பாவிய ஆடைமேல் மெல்ல மெல்ல நடந்து, மணமண்டபத்திடை வந்து நமியக்கொழுந்தென உம்பர் நாதன் பாங்கரில் அமர்ந்தனள். நாரணன் ஆதிலட்சுமி நீர்வார்ப்ப, அரங்கசாமியாம் திருமால் குமாரசாமியாம் ஏகாம்பரநாதன் மலரடி விளக்கி மதுப்பருக்கம் ஊட்டி மணமகன் கையில் காமாட்சி கையை வைத்து நீர் பெய்தளித்தான். ஆர்த்தன அளவில இயங்கள். பூமழை பொழிந்தது. பிரமன் நான்முறை செந்தீ வளர்ப்ப மணமகன் காமாட்சி மிடற்றில் மங்கல நாணிலை வயங்கச் சாத்தினன். "திருமணத் திறம் கண்டவர் யாவரும் செழுந் தேன் பருகு வண்டென ஆர்த்த வெள்ளத்திற் படிந்தார்." மங்கலம் பாடினர்.

மணமகன் - ஏகாம்பரநாதன். ஏகம்=ஒன்று. ஆம்பரம்=ஒட்டு மாமரம், நாதன்=தலைவன். (வேதமாகிய ஒற்றை மாமரத்தடியிலுள்ள நாதன்.)

காமாட்சி: காம+அட்சி=காமாட்சி. காமம்=விரும்பியவற்றை வெல்லாம் தரும், அட்சி - கண்ணையுடையவள். அட்சம்=கண்.

காமாட்சி: கா+மா+அட்சி. கா - சரஸ்வதி, மா - இலட்சுமி, அட்சி=கண்ணாக உடையவள். சரஸ்வதியையும் இலட்சுமியையும் கண்ணாக உடையவள். எனவே கல்வியையும் செல்வத்தையும் தன் அடியார்க்குக் கண்ணாற்றருள்பவள் என்பது கருத்தாம்.

காமாட்சி: க+அ+ம+அட்சி. க+அ=கா, கா+ம=காம. காம+அட்சி=காமாட்சி. க - பிரமனையும், அ -

விஷ்ணுவினையும், ம - உருத்திரனையும், அட்சரங்களானும் படைப்பவள்.

சுவர்ணாங்கீம் ரத்நபூஷாட்யாம்
கரேக்ஷுஸ்தாம் ஸ்மிதானனாம் |
காஞ்சீ நிவாஸினீம் வந்தே காமாக்ஷீம்
காம தார்த்ததாம் || .

பொன்னிற உருப்புடையவளும், ரத்நாபரணமுடையவளும், இனி தங்கிய கையுடையவளும், புன்சிரிப்புடையவளும், காஞ்சிபுரத்தில் வசிப்பவளும், வேண்டினவர்க்கு வேண்டியவற்றைத் தருபவளும் ஆகிய காமாட்சியை வணங்குகிறேன்.

---

# 13. தாயுமானுர்*

## I

உலகத்தில் மக்களாய்ப் பிறந்த நாம் இப்போதிருக்கின்ற நிலையைக் காட்டிலும் உயர்ந்த நிலையை அடைய இச்சை உடையவரா யிருத்தல் இயல்பு. யாரும் தற்போதைய நிலையிலேயே இருக்கவோ அல்லது அதனினும் தாழ்ந்த நிலைக்குப் போகவோ ஆசைப்பட மாட்டார்கள் என்பது திண்ணம். உயரிய நிலையை அடைய இரண்டு வழிகளுண்டு. புத்தி ஒன்று; இறைவனுடைய அருள் விசேடம் மற்றொன்று. இரண்டுக்கும் பொதுவாக ஞானம் என்ற ஒரு பெயர் இருப்பினும், புத்தியால் வரும் ஞானம் சாதாரண ஞானமும், இறைவன் அருள் விசேடத்தால் வரும் ஞானம் சிறப்பான ஞானமுமாம்.

*இது ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் சென்னை, இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ஆண்டுவிழாவில் (1937) நிகழ்த்திய சொற்பொழிவு. திரு. க.பெ. முனிசாமி உடையார், பி.ஏ., அவர்கள் கைக் குறிப்பு.



மனித உடம்பு தொண்ணூற்றாறு கருவிகளால் அமைக்கப்பட்டுள்ளது. அவைகளில் ஒன்று புத்தி. அஃது அந்தக்கரணங்கள் நான்கில் ஒன்றாகும். மாயை சம்பந்தமான உடல் அறிவில்லாதது. உடம்பிலுள்ள புத்தியும் அறிவில்லாததே. அறிவில்லாத புத்தியால் ஞானம் உண்டாகுமா என்ற ஐயம் தோன்றுவது இயற்கை. அறிவில்லாத கண்ணாடியானது தனக்கு எதிர்ப்பட்ட பொருளைத் திருப்பிக் காட்டுவதுபோல் புத்தியாகிய கண்ணாடி தன் முன் உயிரின் அறிவு எதிர்ப்பட்டபோது அவ்வறிவைத் திருப்பிக் காட்டுவது புத்தியின் தத்துவமாகும். அப்படி புத்தி திருப்பிக் காட்டுகின்ற ஞானம் எட்டு வகைப்படும். அவை பின் வருமாறு :—

1. பூர்வ ஜன்ம வாசனையால் புத்திக்குப் பொருத்தமாக ஆரம்பத்து அறிகிற ஞானம்.

2. வாழ்வினால் உண்டாகும் துன்பங்களை அனுபவித்த காரணமாக உண்டாகும் ஞானம். இது ஆதி தெய்விகம் எனப்படும்.

3. உலகத்தில் மற்ற உயிர்களால் உண்டாகும் துன்பத்தை அனுபவித்த காரணமாக வரும் ஞானம். இது ஆதியாத்மிகம் எனப்படும்.

4. பஞ்ச பூதங்களால் ஏற்படும் துன்பத்தை அனுபவித்த காரணமாக உண்டாகும் ஞானம். இது ஆதிபௌதிகம் எனப்படும்.

5. கற்க வேண்டிய நூல்களைக் கற்ற அறிவால் வரும் ஞானம்.

6. குருவால் வரும் ஞானம்.

7. நல்ல கருமங்கள் செய்வதால் உண்டாகும் ஞானம்.

8. உலகத்தில் சில பெரியார்கள் உணர்ந்து அனுபவித்துத் தம்மை மறந்தோர் உயிர்கள் பேரில் வைத்த கருணையினாலே சொல்லிய வாக்கைக் கேட்டதால் வரும் ஞானம்.

இவைகளில் ஒன்று, ஏழு, எட்டு முக்கியமெனினும், எட்டாவதாகக் கூறப்பட்ட பெரியோர் வாக்கு ஞானமடை

வதற்கு மிகவும் சிறப்பான சாதனமாகும். பெரியோர் சொல்வதை நேரில் கேட்பதோ, அஃதியலாதெனின் நேரில் கேட்டவர்கள் மூலமாக அறிவதோ, அஃது மியலாதெனின் பெரியோர் இயற்றிய நூல்களை உள்ளன்புடன் கற்று அறிவதோ நமக்கு இன்றியமையாத தொன்றாகும். எனவே, தாயுமானவருடைய வாக்கை நாம் நேரில் கேட்பதற்கும், அல்லது நேரில் கேட்டவர்கள் மூலமாகக் கேட்பதற்கும், நாம் புண்ணியம் செய்யவில்லை யாகையால் அவர் இயற்றிய நூல்களை ஆராய்ந்தறிந்து அவர் சொன்ன உறுதிமொழிகளைக் கடைப்பிடித்து அதன்வழி ஒழுகி நாம் ஞானம் அடையவேண்டியது இன்றியமையாததாகலின், நாம் அவரைப்பற்றி விசாரிக்க வேண்டியதற்கு இது முதற் காரணமாகும்.

தாயுமானவரைப்பற்றி நாம் விசாரிக்க வேண்டியது அவசியம் என்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நாலடியார் என்னும் சிறந்த நூல். பெரியாருடன் பேசல், நல்ல நூல் வாசித்தல், அறஞ்செய்தல் ஆகிய இம்மூன்றையும் வற்புறுத்துகின்றது. திருமூலரும்,

“ அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியாருடன் கூடல் பேரின்ப மாமே ”

என்றார். பெரியாருடன் கூடல் நமது நாட்டு ஒழுக்கமாகும். சம்பந்தர் தன்னுடைய ஊருக்கு அருகாமையில் போகின்றார் என்று கேள்வியுற்ற சிறுத்தொண்டர் ஓடிச் சம்பந்தருடைய திருவடிகளில் வீழ்ந்து தன்னுடைய திருப்பதிக்கு அழைத்துச் சென்றார் என்பதைச் சேக்கிழார்,

“ அருகணையும் திருப்பதிக ளானவெலாம்
அங்கணரைப் பணிந்து போற்றிப்
பெருமுனிவர் மகிழ்பெற்ற பிள்ளையார்
எழுந்தருளும் பெருமை கேட்டுத்



திருமருவு செங்காட்டங் குடியின்நின்று
சிறுத்தொண்டர் சேணெதிர் சென்று
உருகுமனக் களிசிறப்ப வெதிர்கொண்டு
தம் பதியுட் கொண்டு புக்கார் ”

என்று கூறுகிறார்.

பொல்லாங்கு புரிந்தொழுகிய பல்லவனும் திருநாவுக்கரசரின் மகிமையையும் சைவத்தின் பெருமையையும் உணர்ந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து அவரை அடைந்த போது சுவாமிகளும் அரசனை ஏற்றுக்கொண்டார். அவன் முன் தமக்கு இயற்றிய கொடுஞ்செயல்களை நினைத்தாரில்லை. இஃது சான்றோருடைய உத்தம குணமாகும்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

என்பன தமிழ்மறை வாக்கியங்களாம். எனவே, பெரியாருடன் கூடுதல் நம்நாட்டு ஒழுக்கமாகும். ஆதலால் நாமும் தாயுமானவரை அவர் இயற்றிய நூல் மூலமாக அடைந்தும் அவர் சரித்திரத்தைக் கேட்டும் பதிஞானத்தைப் பெற்றுத் துன்பத்தை ஒழித்து இன்பத்தை அடைவதற்காக நாம் அவரைப் பற்றி விசாரிக்கவேண்டுமென்பது இரண்டாவது காரணமாகும்.

தாயுமான சுவாமிகள் வேதாரண்யத்தில் கேடிலியப்பப் பிள்ளைக்கு இரண்டாவது மகனாகத் தோன்றிக் கல்வி அறிவு முதலியவைகளில் சிறந்து அந்நாட்டு அரசனிடம் அமைச்சுத் தொழில் பூண்டு விளங்கிவந்தார். அமைச்சராக இருக்கும் காலத்திலேயே தம் அறிவை உலகப் பொருள்களில் செலுத்தாது, அந்த அழியக்கூடியது நிலைத்த இன்பம் தரத்தக்கதன்று என்பவற்றை அறிந்து உயிரைப் பற்றியும் விசாரிக்க ஆரம்பித்துப் பல நூல்களைக் கற்றார்.

கற்குந்தோறும் அவருக்குச் சந்தேகங்கள் அதிகமானதே தவிர உண்மை விளங்கவில்லை.

" அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு "

என்றபடி நூல்களை நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்தோறும் முன்னிருந்த தமது அறியாமையையே கண்டார். அறியாமையைப் போக்கிக்கொள்ள மிகுந்த வேட்கையுடையவராய், பசி வந்த வண்டுபோல் ஓர் ஆசிரியனைத் தேடிச் சென்றார். ஊழ்வினைப் பயனாகத் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு ஒருவர் தாயுமான சுவாமிகளின் வேட்கையைத் தணிப்பதற்காக அவரை எதிர்நோக்கி வந்து திரிசிராப்பள்ளியில் சந்தித்தபோது சுவாமிகள் அனல் முன்பட்ட மெய்போல் உருகினார். சுவாமிகளின் பக்குவ நிலையை அறிந்து மௌனகுரு உபதேசஞ் செய்தருளினார்.

" எட்டாத் தரிய சற்குரு அருளால் இயம்புஞ்
மொழியினைப் பெற்றே
நிட்டை சாதித்தே சகல வேதங்கள் கேட்டிடல்
பிறப்பிறப் பறும் "

என்றபடி மௌனகுரு உபதேசத்தின் பயனாகத் தாயுமானவர் நிஷ்டையிலிருந்தார். எனினும் பழவினை வாசனையால் சிற் சில சமயங்களில் நிட்டை கலைந்து சுவாமிகள் பகிர்முகப் படுவதுண்டு. அப்படி பகிர்முகப்பட்ட காலங்களில் உலகப் பொருள்களில் ஈடுபடாமல் பல பாடல்கள் பாடினார். அவை தாம் நமக்கு இப்போது கிடைத்திருக்கிற பாடல்களாகும். சுவாமிகள் கடைசியில் இராமநாதபுரம் சென்றிருந்தபோது அவ்வூரில் பல காலங்கள் மழையின்மையால் குடிகள் வருந்தியிருப்பதை உணர்ந்து சுவாமிகள் மழைபெய்விப்பாரா என்று அவ்வூர் அரசன் விசாரித்தான். இதை அறிந்த தாயுமானார் ஒரு வெண்பா பாடி மழை பெய்வித்தார். அப்படியாக நிட்டையிலிருந்தும் கடவுளைத் துதித்தும் சுவாமிகள் இலட்சுமிபுரம் என்ற ஊரில் முடிவில் நிர்வாணத்தைப் பெற்றார்.

---

# II

தாயுமான சுவாமிகளின் சரித்திரத்தில் நாம் அறிய வேண்டிய உண்மை என்ன என்பதை விசாரிக்க வேண்டியது அவசியம். கடவுள் உடலையும் உலகத்தையும் கொடுத்தது உயிர் கடைத்தேறுவதற்காகும். உலகத்தில் நாம் எவ்வளவு பெரிய பதவியிலிருந்த போதிலும் அஃது உடலுக்கு நலமே ஒழிய உயிருக்கு நலந்தருவதல்ல. உயிரைப்பற்றி நமக்கு இவ்வுடல் கிடைத்ததாகையால் இவ்வுடல் நல்ல நிலையிலிருக்கும்போதே உயிரைப்பற்றி விசாரிக்க வேண்டியது நமது கடமை. ஆகையால் உலக விவகாரங்களிலிருந்து விலகிக் கொண்டபோது பார்த்துக் கொள்ளுவோம் என்று தள்ளி வைக்காமல் சிறுபோதிலேயே நாம் உயிரைப்பற்றி விசாரிக்கவேண்டும்; ஞான நூல்களைக் கற்கவேண்டும்; அதன் பயனாகத் துன்பத்தைப் போக்கி இன்பத்தை அடைய வேண்டும். இவ்வுண்மைகளையே சுவாமிகளின் சரித்திரத்தில் காண்கிறோம். எனவே பலர் சென்று தேய்ந்த வழியில் செல்வதே நலமென்ற உண்மைபோல் சுவாமிகளைப் போன்ற பல பெரியோர்கள் சென்ற வழியே நாம் போக வேண்டுமென்பதை நாம் அறிந்து அவ்வழியில் சென்று கடைத்தேறுவோமாக.

தாயுமானாரைப்பற்றி விசாரிக்க வேண்டிய காரணங்களையும் அவர் சரித்திரத்தில் நாம் அறியவேண்டிய உண்மைகளையும் ஆராய்ந்தோம். இனி அவர் இயற்றியுள்ள பாடல்களில் அறிய வேண்டியவற்றை நாம் ஆராய்வோம். நாம் பிறந்திருக்கின்ற இவ்வுலகம் கர்மங்கள் செய்வதற்கும், அவற்றின் பலன்களை அனுபவிப்பதற்கும், ஞானத்தைப் பெற்று வீடு பெறுவதற்கும் யோக்கியமானதாதலால் இதற்குக் கர்மபூமி என்ற பெயர் வழங்கப்படுகிறது. சுவர்க்கத்தில் போகம் அனுபவிக்கின்றவர்களும் நரகத்தில் துன்பம் அனுபவிக்கின்றவர்களும் இக்கர்ம பூமியில் வந்து பிறந்தாலொழிய வீடுபேறடைய வழியில்லை. இக்கர்ம பூமியில் உள்ள பிறவிகளில் தலைசிறந்தது மனிதப் பிறவியாகும்.

" எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண் "

இம் மனிதப்பிறவியில் இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று ஈசன் அருள் இல்லாத காலம். மற்றொன்று அவனுடைய அருள் தோன்றிய காலம். இதைத் தாயுமானவர்,

" ஐந்துவகை யாகின்ற பூதபே தத்தினால்
ஆகின்ற யாக்கை நீர்மேல்
அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னவே
அறியாத கால மெல்லாம்
புந்திமகிழ் உறவுண் டுடுத்தின்ப மாகவே
போந்தநெறி யன்றி ஒன்றேன்
பூராய மாகவே நலுன்னி நுணர்த்தவகை
போனவழி தெரிய வில்லை
எந்தநிலை பேசினும் இணங்காத லால்ஒருவர்
எதிர்ப்பொருது பிறப்பை புல்லேன்
என்னினும் நெஞ்சது பதைபதைத் துருகுது
இருவிழியு மிரவு பகலாய்ச்
செந்தழலின் மெழுகான தன்மையென வென்செய்கேன்
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே "

என்ற பாட்டில் விரிவாகக் கூறுகின்றார். இப்பாடல் மனித ஆரம்ப நிலையைத் தெரிவிக்கிறது. ஈசனுடைய அருள் இல்லாத காலத்தில், அதாவது அறியாமையினால் மூடப்பட்டிருந்த காலத்தில் மக்கள் உண்பதும் உடுப்பதுமே இன்ப மென்றிருந்து, ஈசனுடைய அருள் சற்றுத் தோன்றிய காலத்தில் உலக இன்பங்களெல்லாம் நிலையற்றனவென்றெண்ணி நிலைத்த இன்பத்தைத்தேட முயன்று அநேக நிலைகளை ஆய்ந்து ஒரு நிலையிலும் மனத்திடப்படாமையால் இறப்பையும் அதற்குப் பின் இருக்கும் பிறப்பையும் அதனால் வரும் பல துன்பங்களையும் உன்னி நெஞ்சம் தடித்து

J2 R673



இரவு பகல் தூக்கமின்றி உடல்மெலிந்து இருக்கும் நிலையை இப்பாடல் தெரிவிக்கின்றது.

இம்மனித உடலைப் பெற்று நாம் அடைய வேண்டிய பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இவற்றை அடைதலினும் வரும்பயன் ஞானம்.

" புருடர்பெறு நான்றி பெறவுடைய ஞானம் புகழுமறி ஞானம்பயன்
ஞானமேதி முக்கிய மேதி "

என்றார். இப் பிறவிபெடுத்து அறிய வேண்டிய அப் பொருள்களை அறியாவிடில் அவன் பேதையாகின்றான். இதைத் தாயுமானவர்,

" புருடர்வடி வானதே யல்லாது எனவிதம்
புருடார்த்த மேது மில்லேன் "

ஆதலால்,

" ஆணிலே பெண்ணிலே பேடிலே ஒருபேதை
யமைத்தின் அமைவுள்ளதோ "

என்றார்.

உலக நடையைச் சிந்திக்கும்போது உலகம் பொய் நெறியைப் பற்றி ஒழுகுகின்றது. பொய்யுடல் காரணமாக ஐயப் பற்றி உண்பதற்கு அலைந்து உண்டபின் தூங்கி இதுவே செய்தலமென்றெண்ணியிருக்கின்றதென்று சுவாமிகள் வருந்துகின்றார். இதை,

" பொய்ந்நெறி முதலான வென்சொல்லே [illegible]
பொருந்திபோக் கேதென்னிலே [illegible]
பொய்யுடல் நிமித்தம் புசிப்புக் [illegible]
புசித்தபின் கண்துயிலக்
கைதவ மானது செய்தவை நன்[illegible]
கண்கெட்ட பேர்க்கும் [illegible]
கண்டறிய வின்மையைக் கண்டித்[illegible]
காலமே ஏதுமறி யேன் "

என்ற பாடலில் அறிவிக்கின்றார்.

84253

நான் குணமொன்று மில்லாதவனென்றும், தீக்குணங் கள் பல உடையவனென்றும், பயனற்ற கூட்டங்கள் பல வற்றில் சேர்ந்துள்ளவனென்றும்,

" குணமொன்று மொன்றி லேன்யான்
கோபமெத் தனைபல பாவமெத் தனைவன்
குணக்கேடெத் தனைசொல்ல பழம்
கள்ளமை யெத்தனை பக்கமெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளச்
சாதிஞ் சொல்லிடு மதியமை யெத்தனை
எதிர்கேள் நமைத்த வருவித்
செல்லாமை யெத்தனை விரதகோரத்தி வெள்ளிலே
செல்வமெத் தனைமுயற்சி
இல்லதெத் தனைசமய மிக்கரசு வெம்பொன்ற
தேகத்தில் வாஞ்சை முதலாய்
அல்லாமை யெத்தனை பமைத்தனை புகைத்துமை
பாலே விளைக்கு மாதாவே "

என்ற பாட்டில் சொல்லுகின்றார். உலக வாழ்க்கையைப் "பொய்யான உலகத்தை", "பொய்யாகுலக வாழ்வே", "பொய்ந்நிகழு முலகநடை" என்று பல முறை கூறுகின்றார். ஆகவே தாயுமானவர் முதலில் தன்னைப் பார்த்தார்; பின், இறைவனைப் பார்த்தார்; அதன் பின் உலகத்தைப் பார்த்தார். ஈசன் அருள் இல்லாத காலத்தில் தன் நிலையையும், அது தோன்றிய காலத்துத் தன் நிலையையும், புருஷர் வடிவெடுத்தும் புருஷார்த்தமில்லாததினால் தன்னைப் போன்ற பேதை பிறர் இல்லை என்பதையும், உலகமோ பொய்யான நடையுடையது, உண்டு உடுத்து உறங்குவதே இன்ப நிலை என்று இருக்கிறது என்பதையும் அறிந்தார்.

தாயுமானவர் தெய்வத்தைப் பற்றி என்ன கொள்கையுடையவர் என்பதை நோக்குவாம்:

" வானைத் தம்பெற்ற போனைத் தந்த
முறைவைத் தம்பிறவிலும்
உடலைத் தம்செயும் வினைபனைத் தங்குந்
தோனைத் தம்பெற்றபேர்



பேரைத் தம்மெனக்க நாமமும் வைத்தத்
தெய்வமும் வைத்த பேதம் "

" ஒருவனுமே யேகோன் "

" வாயிட்ட தெய்வ மன்றுளு வேனிச்சு
வடிவான ஞான குருவே
மாய்வேலி மறைபோத வன்றுகைக் குருவே "

" சித்தம் அறியாதபடி சித்தத்தில் நின்றிலகும்
நித்திய தேஜோ மயத்தை "

" பாச நடிக்குமே செல்லாத வக்கருள்
பழுத்தெழுந்த தேனதுவே "

" கருதரிய ஆனந்த மழைபொழியும் முகிலைக்
கடவுளைத் துரிய வடிவை "

" ஆகாச பக்கள்தொறும் வேறுவே ருசி விளையாடுவே "

" சதிலுலாம் பிறப்பிறப்புப் பந்தமுற்றி வருவதுந் தன்மை காயம்
ஏதுமின்றி மெய்ப்பொருட்கு மெய்விட்டும் பிறைதனில் நிற்கத்
தேசநிலை " [செய்யும்

" அகரவுயி ரெழுத்தனைத்து மாகிவேறு
மமர்ந்ததென அகிலாண்ட மனைத்து மாகி."

இம்மொழிகளால் கடவுள் ஒருவனே, அவன் சிவன், அவன் மக்கள் அடைந்துள்ள பக்குவ நிலைக்கேற்றபடி பல பேதப்பட்ட உருவங்கள் கொண்டிருக்கின்றான்; அவ்வுருவங்கள் எல்லாவற்றிலும் தானே மேற்கொண்டவையே யொழிய பிறரால் கொடுக்கப்பட்டவையல்ல; அவன் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் அறியாதபடி தங்கியிருக்கின்றான்; அவனை அறிய அவன் அருள்வேண்டும்; உலக போகத்தில் பற்றில்லாதவர்க்குத்தான் அவன் அருள் கிடைக்கும்; அது கிடைத்து விட்டால் அவன் மக்களுடைய துன்பத்தைத் துடைத்து இன்பமாகிய மழையைப் பொழிகின்றான்; அவன், தான் தோழிற்படாமல் தன் முன்னிலையில்

படைத்தளித்து முத்தொழில்கள் நிகழச் செய்கின்ற அரியவடிவினன்; அவன் ஆறு சமயங்களிலும் வேறு வேறாக நின்று அன்பர்களை ஆட்கொள்ளும் விளையாட்டுடையவன்; அவன் சாதி, குலம், பிறப்பு, இறப்பு, பந்தம், முத்தி, அருவுருவத்தன்மை, நாமம் முதலிய ஏதுமில்லாதவன்; அவன் உயிர்போல் தான் யாராலும் இயக்கப்படாமல் எல்லா உயிர்களிலும் மறைந்திருந்து எல்லா உயிர்களையும் இயக்குகின்றவன் என்னும் உண்மைகளைத் தாயுமானார் அறிவிக்கின்றார்.

தாயுமானார் உயிர்களைப் பற்றியும் பாசத்தைப் பற்றியும் பின்வருமாறு பேசியிருக்கின்றார். உயிர்கள் கடவுளால் படைக்கப்படவில்லை. உயிர்கள் இறைவனைப் போல் அநாதியானவை; அவனுக்கு அடிமைப்பட்டவை என்பதை "என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ" என்ற மொழியால் அறிகின்றோம். ஆனால் உயிர்கள் மல சம்பந்தத்தால் சிற்றறிவுடையனவாயிருக்கின்றன. தன்னையும் பிறரையும் காட்டாத ஆணவ மலமாகிய இருட்டறையில் கண்ணில்லாத குழவியைப்போல் கட்டுண்டிருந்தன. நாகத்தின் விடத்தைப் போல் அவ் ஆணவமலம் கொள்ளுவதால் அவை மயங்கிக் கிடந்தன. கடவுள் கருணையினால் உயிர்களுக்கு உடலைக் கொடுத்து உலகத்தில் போகவிட்டு, உயிர்கள் நல்ல வழியில் நடக்க வேதங்களைக் கொடுத்து, மறைமொழிக்குத் தப்பி நடக்கும் உயிர்களைத் தண்டித்துக் கடைசியில் துன்பத்தை நீக்கி நினைப்பு மறப்பில்லாத பேரின்ப வீட்டில் இசைந்து தம்மிற் கொள்ளத் துணைசெய்கின்றார் என்ற உண்மைகளைச் சுவாமிகள் கீழ்வரும் மொழிகளால் விளக்குகின்றார்.

"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்



டேரிட்ட தன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்
டிடருற வுறுக்கியிடர் தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில்கொண்மின் என்று
ஓரிட்ட அனைவர்க்கு மனையான எந்தையே"

"கொலையுள மயக்கிற பவபாசத்திலே"

"தன்னையும் பிறரையும் தெரியவொட் டாமலே
மாறுமுறை உற்றதாமி
பருவதான் காட்டாத ஆணவமும்."

ஆணவத்திற்கு வழிவேகங்கள் உண்டு. அவைகளில் ஒன்று குருவால் உபதேசிக்கப்பட்டும், தக்க நூல்களை வாசித்தும், கேட்டபடியும் கற்றபடியும் நடக்காமல் செய்வது ஒரு வேகம். உயிர்கள் அநாதியானவை யானபோதிலும், சாதி குலம் பிறப்பு இறப்பு இல்லாதவை எனினும் பொன்போன்ற கடவுளுக்கு இனியவாகி; அவனுக்கு அடிமைப்பட்டவையே; பொன்னுக்குக் களிம்புதோய் செம்பு இணையில்லாததுபோல், கடவுள் அச்செம்பாகிய உயிரை ஞானமாகிய அனலில் காய்ச்சிக் களிம்பைப் போக்கடித்துத் தன்னுடைய அருளான குளிகையினால் பரிசித்து வேதிசெய்து தன்னைப்போல் தம்மோடாக்கிக் கொள்ளுகிறான் என்ற உண்மையை,

"கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்
களிம்புதோய் செம்பனைய யான்
காண்டக விருக்கநீ ஞானஅனல் மூட்டியே
கனிவுபெற வுள்ளுருக்கிப்
பருவமது அறிந்துநின் அருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை என்சொல்லுவேன்"

என்ற பாட்டில் விளக்குகின்றார்.

உயிரைப்பற்றி நிற்கின்ற பாசம் நீங்க,சமயம் என்ற ஒரு நெறியைப் பற்றவேண்டும். உலகத்தில் பல சமயங்கள் உள. அவைகளில் தலை சிறந்தது சைவமாகும். ஏனென்றால் சைவம் சிவ சம்பந்தமானது. இஃதே ஆதியில் இருந்த சமயம். மங்கல குண முடைமையும், அஞ்ஞானம் இன்மையும், ஞானம் முற்றும் உடைமையும் ஆகிய இலக்கணங்களையுடையது சிவமாகும்.

"குறைவிலா மங்கல குணத்த னாதலின்
நிறைவளம் அருளினன் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன் என"

என்றார் சிவஞான முனிவர். இந்த இலக்கணங்களையுடையவராகக் கடவுளை வழிபடும் சமயம் எதுவாயிருப்பினும் அஃது சைவமாகும். உலகத்திலுள்ள பல பல சமயங்களும் "ஒன்று சொன்னபடி ஒன்று பேசாது." பல சமயங்களும் மக்களுடைய பக்குவத்திற் கேற்றபடி கடவுளால் வகுக்கப் பட்டன. ஒவ்வொரு சமயத்திலுள்ளவர்களும் தத்தம் சமயக் கொள்கைகளே முடிவான கொள்கைகளென்று வீறுகப் பேசுவார்கள்.

"சைவமுதல் அளவில் சமயமும் வகுத்து"

"சமயமென்று சத்தம் தம் மதத்தையே
தாமதச் செய்கையொடு உரை அறிவர்"

என்றார் தாயுமானார்.

எச்சமயத்தைப் பற்றி ஒழுகினாலும் மனம் ஒடுங்கும்படி கற்கவேண்டும். ஏனெனின் மனம் ஒடுங்கினால் வீட்டு நெறிக்கு ஏதுவாகும்; ஒடுங்காவிட்டால் பிறப்புக் கேதுவாகும். அருணகிரியாரும் "சும்மா இரு சொல்லற" என்றார். தாயுமானாரும்,

"சொலிறக்கக் கற்றாலும் சித்திவெள்ளம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என்றருளியிருக்கிறார். அவர் திருமொழிகைக் கடைப்பிடித்து நாம் உய்வோமாக.

—

# 14. தலைமைப் பேருரை*

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

பெருமக்களே!

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 32-ஆம் ஆண்டு நிறைவிழா இன்பத்தை அனுபவிக்க நாம் எல்லோரும் இங்குக் கூடியிருக்கிறோம். 1918-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடந்த சமாஜ ஆண்டு விழாவில் அடியேனை இந்த இடத்தில் இருத்தினீர்கள். இப்பொழுதும் இந்நிலையில் இருக்கச் செய்தீர்கள். இதற்குக் காரணம் உங்கள் அன்பே. அன்பு காரணம் என்று மாத்திரம் சொல்லிவிடலாமா? அன்பு மட்டுமல்ல; இறைவன் திருவருளும் துணை செய்தது. ஆண்டவன் அருளும், அன்பர்கள் அன்பும் சேர்ந்தவிடத்தே நற்செயல் நடைபெறும். இவ்விரண்டும் கூடியவிடத்து அடியேன் அடங்கித்தானே பாகவேண்டும்! நாம் இங்கே சைவசித்தாந்தம் பேசுகிறோம்; கேட்கிறோம். நாம் என்றால் உடலா? கேட்கும் சக்தி அறிவிற்கிருந்தாலும் அது ஒரு கருவி கொண்டே கேட்கவேண்டும். சரீரமில்லையானால் நாம் கேட்கத் தகுந்தவர்கள் அல்ல. அறிவற்ற உடல் ஒன்றும் செய்யாது. அதனை சரீரமில்லாத காலத்தில் உயிர் ஒன்றும் செய்ய இயலாது. அரசன் மந்திரியையுடையவனானால் குடிகளுக்கு நன்மை செய்ய முடியும். மந்திரி முதலியோர் இல்லையேல் அரசன் என்செய வல்லான்! "அமைச்

---

*வேலூரில் 1937ஆம் டிசம்பர் 29, 30, 31-ம் தேதிகளில் கூடிய சைவசித்தாந்த மாநாட்டில் தலைமை வகித்த திருக்கோவலூர் ஆதீனம் - ஞானியார் மடாலயத் தலைவர் - திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் நிகழ்த்திய முன்னுரைச் சுருக்கம். திரு. G. சுப்பிரமணியம், M.A., Dip. Econ. அவர்கள் குறிப்பு.

லை. வேதாந்தத் தெளிவே சித்தாந்தம் என்பது. வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் ஒன்றுதான்; வேறல்ல. சிவப்பிரகாசத்தில் "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" என்று கூறப்பட்டிருக்கிறது. சிவநேசச் செல்வர்களே! சிவம் என்பதைப்பற்றி முதல், வழி, சார்பு நூல்களான சிவஞானபோதம், சித்தியார், சிவப்பிரகாசம் என்ற நூல்களைக்கொண்டு சொன்னேன். இனிச் சித்தாந்தம் என்பதுபற்றி ஒரு சிறிது கூறுவேன்.

சித்தாந்தம் என்பது சித்த+அந்தம் என்ற இரண்டும் சேர்ந்த சொற்றொடர். 'சித்த' என்பதன் முடிவில் 'அ' இருக்கிறது. இவ்விரண்டும் உயிர்கள். உயிர் உயிருடன் சேர்வதில்லை. மயிலும் சேவலுமாக இரண்டு உயிர் சேர்ந்து சண்முகப் பெருமானிடத்திலேயே இருக்கிறது. வேறு எங்கும் இல்லை. 'சித்' என்றால் 'கிடைத்த' என்று பொருள். பல நூல்களில் ஆராய்ந்து முடிவாகக் கிடைத்த முடிபே சித்தாந்தம். 'அறிதோறறியாமை கண்டற்றால்' என்று திருவள்ளுவர் படிக்கப் படிக்க அறியாமை வளருகிறதென்கிறார். ஆசிரியன் ஆண்டவன் அருளைக்கொண்டு நமக்குக் கொடுக்கும் முடிபு. எல்லா முடிபுகளும் அதில் இருக்க வேண்டும். வேறு முடிபுகளை விரோதிக்கக் கூடாது. எந்த மத ஆசாரத்திற்கும் விரோதம் கூடாது. சித்தாந்தம் என்ற பதத்திற்கு சக்தி, இலக்கணை, தொனி என்ற மூன்று உண்டு. இவை ஆற்றல், ஆகுபெயர், குறிப்பு என்று தமிழால் சொல்லப்படுகிறது. எல்லா முடிபுகளுக்கும் சித்தாந்தம் என்று சொன்னாலும் சைவசித்தாந்தத்திற்கே சிறப்பாகக் கொள்ளப்படுகிறது. சித்தாந்தத்தில் ஆன்ம தத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சிவதத்துவம் 5 ஆக 36 தத்துவங்கள் இருக்கின்றன. தனித்தனியே 36 தத்துவங்களைச் சொன்ன வேறு சமயங்கள் இருப்பதாக அடியேனுக்குத் தெரியவில்லை. எல்லாச் சமயங்களும் சைவ சமயத்தில் அடங்கியிருக்கின்றன. "இராஜாங்கத் தமர்ந்தது வைதிக சைவம்" என்று கூறியிருப்பது காண்க. எல்லாத் தத்துவங்களையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருப்பது சைவ சித்தாந்தம். அது சிறிய குறுகியவழியில் செல்வதல்ல. 'சித்தாந்த வீதிவரும் தேவே பராபரமே' என்றார் தாயுமானாரும். "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து எரிவினாற்



சொன்னாரேனும் எம்பிராற் கேற்ற தாகும்" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கு நோக்கற்பாலது. சிவஞான சுவாமிகளும், "எவ்வெவர் கோட்படுபொருளும் அஞ்செழுத்தி லடக்கி" என்று கூறியிருக்கின்றனர். சாங்கியம் முதலான எல்லா மதங்களுமே இச் சைவ சமயத்தி லடங்கியிருக்கின்றன. ஜைன அர்ச்சனையில் 'சிவாய நம' என்று சொல்லப்படுகிறது. 'சிவகதி' என்பது அவர்கள் மோட்சம்.

[சுவாமிகள் அத்வைதத்தின் உண்மைப் பொருளை விரிவாக எடுத்துரைத்து விளக்கினார்கள்.]

மெய்யன்பர்களே! இதுகாறும் வெளியிற் காணப்படும் பொருள்கள் தாழ்ந்தனவென்றும், அழியுந் தன்மைத்தென்றும், இதற்கெல்லாம் அப்பாற்பட்ட மேற்பொருள் ஒன்று உண்டென்றும், அதை நாம் ஆராயவேண்டும் என்றும், ஆராய்ந்து பெறவேண்டும் என்றும், அழுதே பெற முடியும் என்றும், அன்பு முடிவாக அழ உள்ளே உள்ள வெள்ளப் பெருக்கு வெளிப்படும் பரவசந் தோன்றும் என்றும், அதுவே இடையில் வாராத அருமையான சிவம் என்றும், சாஸ்திர, ஆசாரிய, ஈஸ்வர அருளால் கிடைப்பது சைவ சித்தாந்தம் என்றும், அதில் எல்லாச் சமயங்களுமே அடங்கியிருக்கின்றன என்றும் கண்டோம்.

மெய்யன்பர்களே! சைவ சித்தாந்தம் என்பதுபற்றி அடியேன் பேசினேன்; நீங்கள் கேட்டீர்கள். அடியேனைப் பேசுவித்தவன், உங்களைக் கேட்பித்தவன் நம்முடைய ஆண்டவனல்லவா? அவனுக்கு நாம் நன்றி செலுத்தல் வேண்டாமா? என்ன நன்றி செய்யப் போகிறோம்? அவனைத் தியானிப்போம்; துதிப்போமாக.

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே."

# 15. மற்று ஈண்டு வாரா நெறி*

உலகில் பிறந்த மானிடர் ஒவ்வொருவரும் துன்பமே அநுபவிக்கின்றோம் என்று கூறுகின்றனர். பிறவி வேண்டாமென்றும் கருதுகின்றனர். எனவே, பிறவி வாராதிருத்தற் பொருட்டு நாம் எவ்வழியிற் புகுந்து அதனைத் தடுக்க முயலுதல் வேண்டும். பிறவிக்குக் காரணம் யாதெனச் சற்று ஆராய்வோம். பிறப்பு யாவராலும் வெறுக்கத்தக்க இன்பம் இல்லாதது. மாட்சிமை இல்லாதது. அது மயக்கத்தால் வருவதே. பிறவியின்கண் துன்பமே, சிற்றளவும் இன்பமே இல்லை. பசித் துன்பமும், நோய்த் துன்பமும் மிகுதியும் காணப்படுகின்றன. துன்பத்திலேயே இருக்க எவனும் விரும்பமாட்டான். ஆகவே அதனை ஒழிப்பதற்குச் சாதகம் என்னை? துக்கத்தை மிகுந்து மிகுந்து அதனிடத்து அஞ்சி, அஞ்சவேண்டிய கூறும் இறைவனை உள்ளத்தால் உன்னி அவற்றினை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். 'அஞ்ஞானப் பிரபோ துக்கம்' என ஆகமம் கூறுகின்றது. துக்கம் அறியாமையால் நிகழ்வதாகும். அதனால் பிறவி நேர்கிறது. துக்கம் நீங்க அஞ்ஞானம் ஒழிதல் வேண்டும். அஞ்ஞானம் அறுமாயின் பிறவி ஒழியும். எனவே, பிறப்பென்பது பேதைமையாகிறது. 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' என்றார் திருவள்ளுவர். அறியாமையே பிறப்பாகும். வீட்டுக்கு நிமித்தகாரணமாகிய செம்பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாகும். சிறப்பென்பது எல்லாப் பொருளினும் உயர்ந்தது. உலக வழக்கில் இரத்தினத்தை எல்லாப் பொருளினும் உயர்ந்ததென்று சொல்லுவதுபோல, இங்கு சிறந்த பொருள் செம்பொருளென்று சொல்லப்பட்டது. பொருள்களை மூன்றாகப் பகுக்கலாம். உலகம், உயிர், கடவுள் என மூன்று பிரிவுகளுண்டு. உலகமோ தோற்றக் கேடுகளுக்கு உட்பட்டது. உயிரோ நித்தியமாயினும் அபரத் தன்மை

*இது திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீலஸ்ரீ - ஞானியார் மடாலயத்தில் [illegible] 1—10—1984-ல் நிகழ்த்திய சொற்பொழிவு. திரு. ரா. செல்லமுத்தரம் செட்டியார் அவர்கள் குறிப்பு.



இல்லாக் காரணத்தினும் சிறப்பாக மாட்டாது. கடவுளோ தோற்றக்கேடுகளில்லாது நித்தமாய் அபரமாய்த் தான் எல்லாவற்றிலும் கலந்து நின்று முதற் பொருளாய் விகாரமின்றி என்றும் ஒரு தன்மையாயிருத்தல் பற்றிச் செம்பொருள் எனப் பெரியோர் கூறினர். இச் செம்பொருளைக் காண்பது மெய்யுணர்வாகும். காணின்ற செயல் பிறவியாகிய பேதைமையை நீக்கும். எனவே இறைவனை படைத்தவன் பிறப்பினைப் போக்கிக்கொள்வான். பிறப்பை பறுத்தல் உயிர் தம்மால் முடியா. இறைவனும் தரவேண்டியதே. இப்பிறப்பை விடுதல் சிறப்பெனச் சொல்லப்பட்டது. செம்பொருள் காரணமாக வருவது சிறப்பு. பேதைமை காரணமாக வருவது பிறப்பு. சிறப்பினை வீடு என்றும் கூறுவர்.

நம்மவர் யாவரும் இரண்டு வீட்டின் கண்ணே குடி கொண்டிருக்கின்றோம். ஒன்று சரீரம். மற்றது மண் மரம் முதலியவைகளால் கட்டப் பெற்றதான நாம் குடியிருக்கும் வீடுகள். பகல் முழுவதும் வேலையில் அலைந்து உழன்று வீடு திரும்புவோர் தாம் பட்ட சிரமங்களைத் தணித்துக் கொள்ளுகின்றனர். உலக கஷ்டங்கள் போக்கப்படுவதாக முடிகின்றன. உடம்பாகிய வீடு இவைகளைப் போன்று சப்த தாதுக்களினாலேயே கட்டப்பட்டதாகும். இவ்விரண்டு வீடுகளும் எக்காலத்தும் உயிர்களுக்குச் சொந்தமாவதில்லை. குடியிருக்கும் வீடுகளில் எத்துணைத் துக்கம் விளைகின்றது? சரீரத்தில் குடியிருக்கும் ஆன்மாக்களுக்கும் உலக கஷ்டங்கள் துக்கத்தை அத்துணை விளைவிக்கின்றன. இத் துக்கங்களினின்றும் விடுதலையையே மோக்ஷம் சிறப்பு என்றும் கூறுவர். 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான், மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்பது மணிவாசகம். இறைவனை அறியும் மெய்யுணர்விலும் இறைவன் கொடுக்கப்பெறுவது வீடு. இவ் வீடில்லாமல் துக்கத்தினை ஒழித்தற்கு இயலாது. எனவே பெருமானை அடைந்து வீடுபெற்றுப் பிறவாமல் இருத்தல் வேண்டும். இறைவனை அடைவது எப்படி? இறைவன் சச்சிதானந்த சொரூபம். சத்தாகியும், அறிவாகியும், ஆனந்த மயமாகியும் இருப்பவன். இது அருவமாயிருக்கும் நிலைமை. உருவத்திற்கு வாராத தன்மை. ஊனக்கண்ணினால்

பார்த்தல் அரிது. சிற்றறிவு கொண்ட உயிர்களினும் பேரறிவுடையோரை அறிதற்கும் சாலாது. துக்கத்தில் ஆழ்ந்தவன் ஆனந்தத்தை அநுபவித்தல் முடியாது. யாவராலும் போற்றப்படுவதாகிய அறிவு நூல்களும் தம்மாற் காணமுடியவில்லை யென்று கதறுகின்றன. ஆதலால் இறைவனை அடைவது அசாத்தியம். வீடு பெறுதல் அவ்வளவே. இறைவன் அருள் செய்த ஞான்றே அவனைக் காணுதல் முடியும். அருட்கண்ணுடையவர்க்கே அருள் பெரும் பொருளாயிருக்கும் இறைவன் காட்சிப்படுவான்.

"அருட்கண் ணிலாதார்க் கரும்பொருள் தோன்றா
அருட்கண் ணுளோர்க்கெதிர் தோன்று மரனே
இருட்கண்ணி னோர்க்கம் மிரவியுந் தோன்றா
தெருட்கண்ணி னோர்க்கெங்குஞ் சீரொளி யாமே"

என்பது திருமூலர் திருமந்திரம். விளக்கமுடைய கண்ணுக்குச் சூரியன் காணப்படுகிறான். கண் விளக்கம் இல்லாவிடத்துச் சூரியன் தோன்றான். அருட்கண்ணுடையோர்க்கு இறைவன் எதிர்ப்படுவான். இறைவனைக் காணுவதற்கு இறைவனது அருளைப்பெறுதல்வேண்டும். இறைவனது அருளும் உலகெலாம் ஆளுந் தன்மையது. இறைவனது அருளே பிறப்பை அறுப்பது. அருளாலே செம்பொருளைக் காண்பது இயலும் என்பது காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியின் ஒரு பாட்டின் கருத்தாம். அவனருளைப் பெறும் மார்க்கங்கள் பல. பொதுவாக நாம் உய்வதற்குச் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறிய விதிகளைத் தழுவி விலக்குகளைத் தவிர்ப்பது நன்மையுடைத்தாம். தீயன தவிர்த்து நல்லன செய்வதனால் நல்லிணக்கம் சேரும். நல்லிணக்கம் ஏற்றக்கெனின் அவர்கள் அருளைப்பெற்ற காரணத்தினாலே சிவனருளை விரும்புபவர்களுக்குத் தாங்கள் சென்ற வழியிலே அவர்களைச் செலுத்தி அவர்களும் அவ்வருளைப் பெறுதற்குத் துணையாய் நிற்பர். பொற்கொல்லனும் ஒரு பொன் துண்டைக் கம்பி நீட்டுவதற்கு அதனை அடித்தடித்து கம்பிகள் என்னும் ஓர் அச்சில் இழுக்கின்றான். அக்கம்பி பெரியோர்கள் போலத் துணை நின்று அக்காரியத்தை முற்றுவிக்கும். பெரியோர்கள் துணைகொண்டு செய்யப்படுவன புருஷார்த்தங்களே. அவை அறம், பொருள்,



இன்பம், வீடு. முன்னவர் மூன்றினில் ஒழுகி இறுதியில் வீடடைதல் வேண்டும். அறம் என்பது இல்லாளோடு பொருந்தியிருந்து தருமம் செய்தலும், வீடு, புத்திரர், பந்து, மித்திரர், செல்வம் இவைகளைத் துறந்து இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகுவதும் என இருவகைப்படும். இல்லறம் அன்பும், அருளும் உடையது. துறவறம் வேடங்களை அணிவது மாத்திரம் அன்று. இல்லறத்தில் வழுவாது ஒழுகி அறிவு உடையவராய்ப் பிறவிகளினும் வரும் நிலைகளுக்குப் பயந்து வீடு பேறு ஒன்றினையே கருதி முயற்சிப்பதாய் இருக்கின்ற அறம் துறவறம் எனப்படும். இத்துறவறம் வினைகளெல்லாம் கெட மனமானது தூய்மை படையும்படிக் காக்கப்படும் விரதங்களும் அவ்வாறு தூய்மையான பின் தோன்றுவதாய ஞானமும் என இருவகைப்படும். விரதம் என்பது கார்த்திகை அமாவாசை முதலிய நாட்களில் ஒருபொழுது உணவு கொள்ளல், இருபொழுது உணவு நீக்கியிருத்தல் என்று கொள்ளுதல் குற்றமாம். விரதம் என்றால் அருளுடைமை என்னும் அதிகாரம் ஆதியாகக் கொல்லாமை என்னும் அதிகாரம் இறுதியாகத் திருவள்ளுவரால் கூறப்படுவதைக் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாம். பிற உயிர்கள்மேல் வரும் துன்பம் கண்டு அதனை நீக்க மனங்கொண்டு இரங்கல். இவ்வருளுடையாரே பிற உயிர்களின் தசைகளின்மேல் இச்சை வையார். அவைகளை ஓம்புதல் வேண்டும் எனக் கருத்துடையவர்; தன்னுயிர்க்கு வரும் துன்பங்களை யெல்லாம் பொறுக்கும் தவமுடையாராவர். தவத்திற் பொருந்தவராயின் கூடா வொழுக்கங்களை அறவே ஒழிப்பர். பிறருடைமையை வஞ்சித்துக் கொள்ளக் கருதார். பொய்ம்மையை அறவே ஒழிப்பாராவர். பொய்ம்மை பற்றி நிகழ்வதாய வெகுளியை விட்டவர். தமக்குச் சின மூட்டுங் காரணம் பிறரிடத்திருப்பினும் கோபங்கொள்ளார். அந்தக் கோபத்தை யொழிப்பதற்குப் பிறருக்குத் துன்பம் விளைவிப்பது நிகழ்கின்றமையினால் அதனையுந் தகர்த்தவர். அறங்கள் எல்லாவற்றினும் சிறப்புடைத்தாய கொல்லாமையைக் கைக்கொண்டவர். இவ்விரதங்களை யுடையாரே அந்தக்கரணம் தூய்மை படைத்தவர்களாய் ஞானம் பெறுவதற்குரியவராவர். ஞானமானது அறியாமை நீங்கிய வழி

'பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தால் நேசமொடு உள்ளத்தே நாடி' என்றருளினர் அருணந்தி சிவாசாரியர். உபநிடதங்களும் அவ்வாறே கூறுகின்றன. பதிஞானம் பெறும் வழி என்னை? அதனைப் பெறுதல் உபாசனையால்தான் இயலும். உபாசித்தல் என்பது பலகால் மனம் ஒருமுகப்பட்டு இறைவனைத் தியானிப்பது. மனம் நிற்றற்கு வழியாயிருப்பது. உபாசனை முதிர்ந்தவழி இறைவன் எதிர்ப்படுவான். அரிசி பெறுவதற்கு நெல்லைப் பல முறை குத்துகிறோம். உமியையும் தவிட்டையும் நீக்கிய பின்னரே அரிசி உபயோகத்திற்கு வருகின்றது. அதுபோலவே உயிர்கள் மாட்டுள்ள குற்றங்களை (உபாசனையாகப் பல முறை தியானித்தால்) நீக்கின காலத்து இறைவன் காட்சிக்குப் புலனாகின்றான். உபாசனைக் காலங்களில் ஐந்து யக்ஞங்கள் செய்யப்படுகின்றன.

முதலாவது கர்ம யக்ஞம். கர்ம யக்ஞத்தை முன்னே செய்யவென்பது பல ஆசிரியர்களின் கூற்று. கர்மங்கள் என்பன சமயானுட்டானம், (காலா காலங்களிற் செய்யப்படுவனவாகிய கர்மங்கள்) அவையே நித்திய கர்மங்களாம். பிராணாயாமம் அதற்கு அங்கமாகும். பிராணவாயுவானது ஓர் முறையின்றி உச்வாச நிச்வாசமாகச் சலித்துக்கொண்டிருக்கும். அப்படிச் சலிப்பதினால் ஆசாபாசங்கள் மிகுகின்றன. அவை ஒழிதற்குப் பிராணவாயு பந்தம் செய்தல் முறை. ஆயாமம் என்பது தடுத்தல் எனப்பொருள்படும். ஆகவே பிராணாயாமம் என்றது பிராணவாயுவின் வேகத்தைத் தடுத்தல் என்பதாம். வேகமாய்ச் செல்லும் குதிரையைக் கடிவாளங்கொண்டு தடுத்து அடக்குவதுபோல் பிராணாயாமத்தினாலே மனதினுடைய வேகத்தைப் பிராணவாயுவினுடைய வேகத்தைக் குறைப்பதினால் குறைத்து ஒருமுகப் படுத்தல் வேண்டும். இதற்கு மந்திரங்களும் துணை செய்கின்றன. ஒன்றியிருந்து நினைவதற்குக் கர்மயக்ஞம் சாதனமாகின்றது.

இந்திரியங்களை அடக்குவதற்கு விரதங்களை அனுஷ்டித்தல் வேண்டும். இதனைத் தபோயக்ஞம் என்று கூறுவர். இந்திரியங்கள் மூலமாக வருகின்ற அவாக்களைத் தடுத்தலே இந்த யக்ஞத்தின் காரியம். மந்திரம் ஜெபித்தல் ஜெப யக்ஞம். அதர்வசிகையும் மந்திரம் ஜெபிக்கின்றவனே



தூய்மையுடையவன் என்று கூறுகின்றது. மந்திரங்களில் உயர்ந்தது திருவைந்தெழுத்து. அதனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் நன்னெறிப்படுவர். அம் மந்திரம் வேதம் நான்கினுள்ளும் மெய்ப்பொருள். அது இறைவனுடைய நாமம். அம்மந்திரம் அன்னியர் காதுபடாமல் ஜெபித்தல் உத்தமம். பிறர் காதுபடச் சொல்லல் மத்திமம். அதரங்கள் அசைவில்லாமல் ஜெபித்தலே முறைமை. சிவாசாரியரை அடைந்து தீட்சை பெற்றவரே அதனைச் செபித்தற்கு அருகராவர். தீட்சையில்லாதவர் பஞ்சபுராணத்தையேனும் ஓதுதல் வேண்டும். பஞ்ச புராணமென்பது, சம்பந்தர், அப்பர், சுந்தரர் இவர்கள் பாடிய தேவாரங்களில் ஒன்றும், திருவாசகம் திருக்கோவையாரில் ஒன்றும், திருவிசைப்பா ஒன்றும், திருப்பல்லாண்டு ஒன்றும் பெரிய புராணத்துள் ஒன்றும் ஆக ஐந்து பாடல்களேயாம். பெண்களும் இதனைக் கற்றற்கு உரியராவர். அவர்களும் நித்தமும் ஓதல் வேண்டும். கர்மயக்ஞம் தபயக்ஞம் ஜெப யக்ஞம் ஆக இம்மூன்றும் தியானம் கூடுவதற்குச் சாதகமாகின்றன. கொக்கு நாரைகளைப் போன்ற அசைவற்ற நிலைமையைப் பழகல் வேண்டும். மீன்கொத்திப் பறவை போன்று குறித்த இலக்கினின்றும் தவறாதிருத்தல் வேண்டும். இடுப்பு, கழுத்து, தலை முதலியவைகளை ஒரு நேராக நிறுத்தி இறைவனைக் குறித்துத் தியான உணர்வு பெறுதல் வேண்டும்.

"குறியைக் குறியாது குறித் தறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே"

எனவரும் கந்தரநுபூதித் திருப்பாட்டின் கருத்தை நோக்குக. தியானத்தின் பயன் அகங்காரம் அறச் செய்தல். அகங்காரம் அற்றவனே இறைவனுக்கு ஞானபூஜை செய்யுந் தொழிலில் முற்படுவான். அதுவே ஞான யக்ஞம். ஞான நூல் ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், அதனைச் சிந்தித்தல், இவ்வைந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை. ஞான நூல்கள் பக்குவர்களுக்கு ஏற்ற புத்தகங்கள். ஞான நூல்களினுடைய

பயனும் தன்னை யறிந்து உலகத்தின் தன்மையை யுணர்ந்து இறைவனை அடைவதே. ஞானம் ஒன்றே இறைவனை அடைவிக்கும். இறைவனை அடைதலாவது அவனுடைய வியாபகத்துள் அடங்கி நிற்றல். இறைவன் ஆன்மாக்களை இழுக்குந் தன்மையுடையவன், காந்தம் இரும்பை இழுப்பதுபோன்று. காந்தம் அசையாது நின்று இரும்பை இழுக்கும். இரும்புக்கே அசைவு காணப்படுகிறது. இறைவனும் இரும்பைப் போன்று நிருவிகாரியாய் நின்று உயிர்களைத் தன் வசமாக்குவான். இறைவன் தன்னைச் சார்ந்த ஆன்மாவைத் தன் வண்ணமாக்குதற்கு அவ்வுயிரினிடத்துள்ள மலங்களைப் போக்குவன். நெருப்பானது தன்னிடத்தே காயவைத்த இரும்பை அதனிடத்துள்ள கறையினைப் போக்கித் தன் வண்ணமாயிருக்கும் சிவப்பினை அவ்விரும்புக்கு ஏற்றுவது போல, சிவன் வசமாய் நின்ற உயிரும் சிவத் தன்மையை அடைகின்றது. நீரின் கண்ணே கலந்த உப்பு அந்நீரிடத்து ஒவ்வொரு திவலையினும் காணப்படுவதுபோல், சிவத்தினுடைய குணமெல்லாம் அடைந்த உயிரினிடத்தே காணப்படுகின்றது. உயிர்கள் எண்குணங்களைப் பெறுகின்றன. 'எண் குணத்துளோமே' எனும் அப்பரது மொழியாற் கண்டு கொள்க. இரசகுளிகை செம்பை யுருக்கித் தன்னோடு கூட்டி வேதித்துப் பொன்னாகச் செய்தும் பொன்னியல்பைக் காட்டாது தன்னுள்ளடக்கிக் காட்டுமாறு போல இறைவன் உயிரை அன்பினால் உருகச் செய்து தன்னைச் சாரவும் செய்து, தன்வயமாக்கித் தன் குணங்களைத் தந்து, உயிரினது இயல்பு சிறிதுந் தோன்றாது, அறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துள் அடக்கிக் கொள்வன். இக்கருத்தினை,

"இரும்பைக் காந்தம் வலித்தாற் போலிவைத்தம் முயிரை
பெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
யரும்பித்தித் தனத்தையன வழிப்பதுபோன் மனத்தை
யறுத்தமல னப்பனைத்த வுப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேனித்துத் தானெல்லாம் வேதிப்பா னாக்கிக்
கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனைந்த முத்தியினிற் கலந்தே"

எனச் சிவஞானசித்தியார் விளக்குவதாகும். இங்ஙனம் ஒடுக்கிக் கொண்ட உயிர் மீண்டும் பிறப்பதில்லை. வெல்லம், தேன், கரும்பஞ்சாறு முதலிய சுவைப் பொருளெல்லாம் கலந்த வழி உளதாகிய சுவையானது இது வெல்லத்தின் சுவை, இது தேனினது சுவை, கரும்பஞ்சாற்றின் சுவை எனப் பிரித்து அறிய வாராமையைப் போல இறைவனும் உயிரின்கண் கலந்த வழி இவ்வியல்பிற்று எனப் பிரித்தறிய முடியாத இன்ப சொரூபமாய்த் தலைப்படுகின்றான். அந்த இன்ப சொரூபமே வீடாகும். அதுவே பிறவியை யொழிப்பது. ஈண்டு வாராதிருக்கும் நெறியே யாகும்.

இச்சொற்றொடர் திருக்குறளின்கண் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்துள் ஆறாவது செய்யுளாகும். அது,

“ கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி ”

யென வரும். ஈண்டு என்றது இப்பிறவியாகிய மக்கட் பிறவி. இப்பிறவி பெறுதற்கு அரியது என்பர். அரியதாயின் அது வந்த பின்னரேனும் அதனைப் பயன்படுத்துதல் வேண்டும். பெறுதற்கரிய பிறவியைப் பெற்றவர் பிரானடியை எய்துதல் முறைமை. கற்றலாவது உபதேச மொழியினை அநுபவமுடைய தேசிகர்பாற் கேட்டல். இது கற்று எனும் பதத்தினாலே அறியக் கிடக்கின்றது. தேசிகன் கற்பித்த வழியே நிற்றலினாலே அரிதாயிருக்கும் மெய்ப்பொருளைக் காணத் தலைப்படுவர். மெய்ப்பொருள் காண்பது மிகக் கடினமானதால் பலரிடத்துப் பலகாலுஞ் சென்று பயில்வது நன்று. கண்டவர் முற்சொல்லிய ஐந்து பக்குவமும் முடிந்து இறைவனை உணர்ந்தவர். மற்று எனுஞ்சொல் மீண்டு என்னும் பொருளின்கண் வந்தது. இவ்வுலகத்தின்கண் மீண்டும் பிறக்கும் நெறியை யடையார். இறைவனை உணர்ந்தவர்கள் பிறவியடையார் என்பது கருத்து. இவ்வுலகத்தின்கண் வாராத மெய்ப்பொருளாகிய வீட்டினையே பொருந்துவர். பிறவித் துன்பமின்றி நித்திய சுகத்தின் கண்ணே பிறழாது நிற்பர்.

---

# 16. நடராசர்

"குறியொன்றும் இல்லாத கூத்தன்றன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே"

உலகிற் பிறந்த நாம் துன்பமடைகிறோம். அதனை நீக்கி இன்பமடைவதே எல்லா உயிர்களும் செய்ய வேண்டிய காரியம். எல்லா உயிர்களும் துன்பத்தை வெறுக்கின்றன. இன்பத்தை விரும்புகின்றன. ஆனால் இன்பமடைகின்றதில்லை. அதற்குள்ள முயற்சி மட்டும் இருக்கிறதே தவிர நினைத்தபடி பயன் பெறுகிறதில்லை. அது மட்டுமல்ல. இன்பத்திற்காக முயல்கின்றபோது அதிக துன்பம் வருகிறது. இதற்கெல்லாம் காரணம் யாதென நாம் ஆராய்ந்தறிய வேண்டும்.

மனிதர்களாகிய நாம் அறிவுடையோம். மன்-அறிதல் (to think) என்பது பகுதி. ஆதலால் நாம் அவ்வறிவு கொண்டு ஆராயும்போது மூன்று பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவைதாம் - அறிகின்ற நாம், நம்மால் அறியப்படுகின்ற உலகம், நம்மை அறியும்படி செய்து அறிவிக்கின்ற பொருள் என்பன. வேதங்கள் நான்கு என்பாராயினும் அதர்வண வேதம் மந்திர சொரூபமாக நிற்க ஏனை மூன்றுமே முக்கியமாகக் கணக்கிடப்படும். வேதங்களுக்குத் திரயி என்று பெயர் உண்டல்லவா? இவற்றில் மத்தியில் உள்ளது யசுர்வேதம். அதின் மத்திய கண்டத்தில் மத்தியில் உள்ளது ஸ்ரீருத்திரம் என்னும் பகுதியாகும். அதில் பசூநாம் பதயே நம என்ற மந்திரம் பேசப்படுகிறது. சிவ அஷ்டோத்திரம் என்னும் அர்ச்சனை மந்திரங்களிலே பசுபதயே நம என்ற ஒரு மந்திரம் கேட்கப்படுகிறது. இவைகள் பசுக்களுக்குப் பதியே உன்னை நமஸ்கரிக்கின்றேன் என்று பொருள்படும்.

பசு என்றால் கட்டப்படுவது என்று பொருள். பச் - கட்டுதல் என்பது பகுதிப் பொருள். நம்முடைய வீட்டில் பசுக்கள் இருக்கின்றன. அவைகள் தம்மிஷ்டப்படி வாழ



முடியாமல் நாம் தரும் சிறிது அளவேயாகிய புல், தட்டு முதலிய அரைவயிற்று உணவு உண்கின்றன. கஞ்சி முதலிய அசுத்த நீரைப் பருகுகின்றன. காற்று-வெயில்-மழைக்கு உதவாத கட்டுத்துறையில் தங்குகின்றன. அந்தக் கட்டுத் துறை, வீட்டின் புறக்கடையில் இருக்கும். இவ்வளவு அவைகள் துன்பப்படக் காரணம் அவை கட்டுப்பட்டிருப்பதே யாம். அதுபோலவே உயிர்களாகிய நாமும் பசியாலும் தாகம் வெயில் மழை முதலிய உபாதிகளாலும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறோம். நம் வீடும் பசுவின் கட்டுத் துறை போன்றதுதான். இதற்கு வீடு என்ற பேரும் பிசகானது. நமது வீடுகள் எல்லாம் கட்டப்பட்டவை. அவைகள் முதற் கட்டு இரண்டாங்கட்டு எனக் கட்டே யாவனவன்றி வீடாகா. இவ்வாறு பசுக்கள் போல நாம் கட்டுப்பட்டுத் துன்பம் கொண்டிருப்பதால் நாமும் பசுக்களேயாவோம். நம்மைப் பசுக்கள் (கட்டப்பட்டவை) என்று சாத்திரங்கள் பேசும். பசுக்களாகிய நாம் இருக்கிறோம் என்றும், நாம் கட்டுண்டு துன்பம் அநுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்றும் நாம் தெரிந்துகொண்டோம். இதையும் சிலர் ஒப்புக்கொள்ளாமலிருக்கலாம். ஆனால் 'நாம்' என்றதற்குப் பொருள் உண்டு என்பதை மறுக்கமுடியாது.

இனிக் கட்டுப்பட்ட நாம் உண்டு என்று பசு என்ற பதத்தால் தெரிகிறபோது, அந்தப் பதத்திலிருந்தே நம்மைக் கட்டி நிற்கிற பாசம் என்று மற்றொரு பொருளும் உண்டென்று தெரிகிறதல்லவா?

இவை இரண்டும் பெறுகின்றபோது கட்டினின்றும் நம்மை விடுவித்து இன்பம் தருவதாகிய பதியொருவன் உண்டென்று தெரிகின்றோம். அதுவே நம்மை அறியும்படி செய்கின்றது. நாமே பொருள்களை அறியலாமே எனின் அறியலாகாது. நமது கண்ணால் பொருள்களைப் பார்க்கின்றோம். ஆனால் கண் தானே பார்க்கின்றதில்லை. தன்னையும் பார்க்கின்றதில்லை. அதற்குப் பொருள்களைக் காட்டுகின்ற சூரியன் முதலிய பிரகாச பதார்த்தங்கள் வேண்டும். சூரியனில்லாத விடத்துக் கண் பார்க்காது. கண்களும் சூரியனும் இருந்தபோதிலும் அறிகின்ற ஆத்மபோதம் என்ற உயிரறிவு இல்லாமற் போனால் கண் பார்க்காது.

"காட்டிய கண்ணே தனைக்காணா; கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணா;—காட்டிய
உள்ளம் தனைக்காணா; உள்ளத்தின் கண்ணாய
கள்வன்தான் உள்ளத்திற் காண்"

என்பது சிவஞான போதம்.

இப்படிப்பார்த்து உலகத்தையும் நம்மையும் ஆராய்ந்து நம்மைப் பந்தித்துத் துன்பம் செய்யும் கட்டுகளைத் தெரிந்து அவற்றை நிவர்த்தித்துக் கொள்வதற்கு அறிவு வேண்டும். அறிவுதான் ஞானம் எனப்படும். அது ஒளியுருவம். ஞானமே இன்பம் தருவது. இது எல்லாவற்றிற்கும் பொருந்தும். ஆகவே அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைப் பெறவேண்டுவது நமது கடமை. அதற்கே நாம் முயற்சிக்க வேண்டியது. இது முழு ஞானவடிவாகிய-முழு ஒளிவடிவாகிய பதியின் அருளினால்தான் இயலும்.

இதற்கு நாம் பதியின் அருளைப் பெறவேண்டும். அதற்குப் பதியை நாம் தெரியவேண்டும். ஆனால், பதி அப்பிரமேயன் அதாவது அறிய முடியாதவன் எனப் பெறும். அறியமுடியாதது, சொல்ல முடியாதது, நினைக்கமுடியாதது என்றெல்லாம் வேதங்கள் பேசும். அதை 1 நினைக்க 2 பூசிக்க 3 வந்திக்க வேண்டும். நினைத்தலே தியானிப்பது என்று சொல்லப்பெறும். பூசை செய்வது என்றால் பூ—ஜா=பூ-போவது, ஜா-உண்டாவது என்று அர்த்தம். நம்முடைய துன்பம்-மலம்-எல்லாம் போக்குவது, இன்பம் எல்லாம் உண்டாக்குவது எதுவோ அதுவே பூசையாம். வந்திக்கிறது வாயினால் வாழ்த்துவதாம். இம்மூன்று செய்கைகளையும் நாம் இறைவனிடத்தில் செய்வோமானால் துன்பம் நீங்கி இன்பம் பெறுவோம். இவைகளை நாம் அவனிடத்தில் செய்யும் பொருட்டுத் திருமேனியிலாத அவன் திருமேனி தாங்குகிறான். அந்தத் திருமேனிகள் மூன்று வகைப்படும். அவை அருவம்-அருவுருவம்-உருவம் என்பன. இவைகளை அரூபம்-ரூபாரூபம்-ரூபம் என்றும் சொல்வர்.

"அருவமோ உருவா ரூபம் ஆனதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த்திக் கென்னின்



அருவமும் உருவா ரூபம் ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக் குள்ள வாமே"

என்பது சிவஞான சித்தியார்.

அரூபம் கண்ணாற் காணமுடியாதது, மனத்தால் மட்டும் தியானிக்கத்தக்கது. புருவ நடுவில் சோதி சொரூபமாய்த் தியானிப்பர். ரூபாரூபம் சிவலிங்கமாம். இதுவே நாம் பூசித்துச் சுகம் பெறுவதற்காக இறைவன் கொள்ளும் திருவுருவம். இது கண்ணாற் காணப் பெறுவதால் உருவமுடையதாம். ஆனால் இன்னதென்று சொல்லக் கூடாத தாய்க் கைகால் முதலிய அவயவப் பகுதியில்லாததாய் நீண்டு வட்டமாய் இருத்தலால் அருவமாம். எனவே ரூபமுண்டு-ரூபமில்லை என்ற இரண்டு தன்மையும் இருப்பதால் இதற்கு அருவுருவம் என்று பெயர். இதுவே பூசிக்கத் தக்கது.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்ஆகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"

என்பது பெரிய புராணம்.

இனி வந்திக்கத்தக்க திருமேனி நடராசர் உருவமாம். நாம் கோயிலில் வைத்து வந்திக்கும் ஒவ்வொரு ரூபமும் ஒவ்வோர் அர்த்தமுடையது. அவற்றை ஒன்றும் தெரிந்து கொள்ளாமலே நாம் இருந்து வருவது வருந்தத் தக்கது. கோவிலுக்கு வருவோர்களிற் பெரும்பாலோர் ஒன்றும் தெரியாமல் இது என்ன சாமி? என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள். இது என்ன சாமி என்றால் விநாயகர் என்று ஒருவன் சொல்லக் கேட்டதும், சரியென்று அதற்கு ஒரு அரைக்கும்பிடு போட்டு விட்டு அப்புறம் போகிறார்கள். சாமியும் தெரியாது; அதனைக் கும்பிடும் முறையும் தெரியாது. இந்த நிலையைச் சீர்திருத்திக்கொண்டால்தான் நமது சமய வாழ்க்கை செவ்வனே நடைபெற்று, நமக்குத் துன்பம் நீங்கி இன்பம் நிகழ்வதாகும்.

கடவுள் நமக்காக ஐந்தொழில்கள் செய்கிறார். உலகத்தைப் படைக்கிறார்; அவற்றைக் காப்பாற்றுகிறார்; சம்மரிக்

கிறார்; இளைப்பாற்றுகிறார்; அநுக்கிரகம் செய்கிறார். இதுவே இவரது ஐந்தொழிற் கூத்து-நடனம்-என்று சொல்லப் பெறும். நடராசர் உருவத்தில் நான்கு கைகளும் இரண்டு கால்களும் பார்க்கிறீர்கள். இரு கைகள் வலத்தில் ஒன்றும் இடத்தில் ஒன்றும் தூக்கியிருக்கும். அவற்றிலே வலக் கையில் டமருகம் என்னும் உடுக்கை யிருக்கும். உடுக்கை ஒலியை உண்டாக்கும். அதுவே நாதத்தைக் காட்டுவது. நாதமே உலக சிருஷ்டிக்குக் காரணம். இந்தக் கை சிருஷ்டி கர்த்தா நான் என்பதைக் காட்டும். மற்றொரு வலக்கை பயப்படாதே என்ற குறிப்புடன் அபயமாக அமைந்திருக்கும். அது சிருஷ்டிக்கப் பெற்ற உலகத்தை "அஞ்சல்! உங்களைக் காப்பாற்ற நானிருக்கிறேன்!—காத்தற் கடவுள் நானே!" என்று காட்டும். தூக்கிய இடக்கையில் உள்ள அக்கினி-நெருப்பு சங்கார கர்த்தா நானே என்று காட்டும். நெருப்புத்தான் உலகங்களை அழிக்கிறது. அது சங்காரம். என் கையிலிருக்கிறது என்று குறிக்கிறது.

"தோற்றம் துடியதனில்; தோயும் திதியமைப்பில்;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்;—ஊற்றமாய்
ஊன்றுமலர்ப் பாதத்தே உற்றதிரோ தம்;முத்தி
நான்றமலர்ப் பாதத்தே நாடு"

என்பது 'திருவதிகை மனவாசகங் கடந்தார்' அருளிய திருமொழி.

அவருடைய கால்களில் வலது பாதம் ஊன்றியிருக்கிறது. அது ஒரு அரக்கனுடைய உருவத்தை மிதித்துக் கொண்டிருக்கிறது. அந்த தலை நிமிர்ந்தபடியும், உடல் வேறு விதம் திருகலாகவும், கால்கள் மற்றொரு விதம் திருகலாகவும் ஆக மூன்று திருகலாக இருக்கும். இதற்கு முயலகன் என்று பேர். இந்தப் பாதம் உலகத்தில் போகங்களை உண்டு ஆடி இளைத்த உயிர்களைத் தன் கீழ் அமிழ்த்தி வைத்து இளைப்பாறச் செய்கின்றதாகிய திரோபவத் தொழில் செய்கின்ற கர்த்தா நானேயென்று அறிவிக்கிறது.

வெகு நேரம் விளையாடி இளைத்துப் போயும் மறுபடியும் தன்னை யறியாது தனக்குத் துன்பம் வருமாறு மேலும் மேலும் ஆட்டமே விரும்பி யலைகின்ற பிள்ளையைப் பிதா அடக்கி இழுத்து வந்து தன்னிடம் உட்கார வைத்து அவன்



தப்பி ஓடி மறுபடியும் ஆட்டம் போட்டுக் கெடாதபடி அவன் மேல் ஒரு துடையையும் வைத்து அமிழ்த்திக் கொள்வதுபோல் உள்ளது இந்தத் திரோபவம் என்ற தொழிலாம்.

"மாயை தனைஉதறி, வல்வினையைச் சுட்டு,மலம்
சாய அமுக்கி,அருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான்அழுத்தல்
தான்எந்தை யார்பரதம் தான்"

என 'உண்மை விளக்கம்' கூறுதல் காண்க.

இனிக் கீழ்த் தொங்கவைத்து வலதுபுறமாக வீசி நீட்டி யிருப்பது மற்றொரு இடக்கை. அதன்கீழ் இடக்கால் தூக்கி வளைந்து வலது புறமாக நீட்டியிருக்கும். மேற்கண்ட இடது கை இந்த நீட்டிய இடது காலைக் காட்டிக்கொண்டிருக்கும். இந்தக் காலுக்குக் குஞ்சிதபாதம் என்று பெயர். குஞ்சிதம்=வளைந்தது. மேற்குவிந்த ஒரு அர்த்த வட்டவடிவாக நமது தலை இருக்கிறது. அனேக தலைகளில் வைத்து வைத்து இந்தக் கால் உள் வளைத்ததுபோலவுள்ளது. இந்தக் கால்தான் மீளா இன்பமாகிய முத்தி நிழல் தந்து உயிர்களை அனுக்கிரகிக்கின்ற பாதம். இதற்கு ஒரு மாலை போட்டு உபசாரமாகக் காட்டுவார்கள். ஆகவே அநுக்கிரகத் தொழிலைக் குறிப்பது ஒரு கையும் ஒரு காலும் என இரண்டுமாம்.

"கூற்றை யுதைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றம் துடைத்தோம் துடைத் தோமால்"

என்றார் பெரியார். இத்திருவடியே நாம் அடையத் தக்கது. சிந்தித்து வந்திக்கத் தக்கது. இவ்வாறுள்ள நடராசர் திருவுருவம் இறைவன் உயிர்களுக்குச் செய்யும் பரம உபகாரமாகிய ஐந்தொழில்களையும்விளக்கி நிற்பதாம். இதுமுழுதும் வட்டவடிவமாய் ஓங்காரமாகிய திருவாசியினுள் விளங்கும். ஓங்காரமாகிய பிரணவத்துள்ளே இவ்வருட் கூத்து நிகழும்.

"ஓங்கார மேநல் திருவாசி, உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்!—ஆங்காரம்
அற்றார் அறிவர்! அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்!"

என வரும் சித்தாந்த சாத்திரப் பாடல் கண்டு அறிந்தின் புறற் பாலது.

" உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவாறார் பெறுவாரச் சோவே "

என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளியிருக்கிறார்.

இவ்வாறுள்ள ஸ்ரீ நடராச மூர்த்தியினது பெருமைகளை அறிந்து வழிபட்டுத் துக்கங்களைப் போக்கிச் சுகம் பெற்றுய்வது அறிவுடைய மக்கள் கடமையாம்.

---

குறிப்பு :—இது திருப்பாதிரிப்புலியூர் மடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருப்பேரூர்க் கோயிலில் 24-10-1936 சனிக்கிழமை இரவு செய்த உபந்யாசத்தின் சுருக்கம். "கொங்கு மலர்" இதழினின்று எடுக்கப்பெற்றது.

# 17. பதி பசு பாச விளக்கம்*

முன்னுரை: பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களும் மக்கள் அனைவராலும் ஆராய்ந்துணர்தற்குரியன. உலகிலுள்ள நூல்களெல்லாம் இம் மூன்றனையோ, அல்லது இம் மூன்றனுள் ஒன்றனையோ, அல்லது அவற்றின் ஒவ்வொரு பகுதியினையோ ஆராய எழுந்தனவேயாம். இம் முப்பொருள்களின்கண் அடங்காததாய பொருள் எதுவும் இல்லை. ஆதலின் எல்லா நூற்பொருள்களும் இம் முப்பொருள்களையே நுதலி எழுந்தன எனப்படும்.

" சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றன ; மறையெலாம் மொழிய நின்றன ;
ஆன்றதோர் தொல்பதி, ஆருயிர்த்தொகை,
வான்திகழ் தளை,என வகுப்பர் அன்னவே."

எனவரும் செய்யுளும், " பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல் " என வரும் சிவப்பிரகாசத் திருமொழியும் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

பதி பசு பாசம் என்பன தமிழில் முறையே கடவுள் உயிர் உலகம் எனவும், இறை உயிர் தளை எனவும் வழங்கப்படும். வடமொழியில் பாசம் என்னும் சொல் (பச்-to bind) 'கட்டுவது' என்னும் பொருள் குறித்து உயிர்களைப் பிணித்து நிற்கும் மும்மலங்களையும், பசு என்னும் சொல் 'கட்டுப்பட்டது' என்னும் பொருள் தந்து மும்மலப் பிணிப்புண்ட உயிர்த்தொகைகளையும், பதி என்னும் சொல் (பா - to protect) காப்பாற்றுபவர் எனப் பொருள் பயந்து

---

*இது நம் சமாஜத் தலைவர் இராவ்சாகிப் திரு. கல். முருகேச முதலியார், B A. அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் 1932ல் திரு T. P. இராமசாமிப் பிள்ளை அவர்கள் மாளிகையில் ஆற்றிய சொற்பொழிவினைக் குறிப்புகள் எடுத்து உதவியது. கட்டுரை யாக்கியவர் : புலவர் முருகவேள், எம்.ஓ.எல்.

இறைவனையும் உணர்த்தும். எனவே, பதி பசு பாசம் என்னும் சொற்கள் ஆழ்ந்த பொருள் பொதிந்த உருவகக் குறிப்புடைய சொற்களாக விளங்குகின்றமை உணரலாம்.

இனி, எல்லா உயிர்ப்பொருள் உயிரல்பொருள்களிலும் கலந்து பதிந்திருப்பவன் பதி; மனிதனால் நடத்தப்பெறும் பசுக்களாகிய விலங்குகள்போலச் சிற்றறிவுடையனவாய், ஒரு முழுமுதற் றலைவனால் இயக்கப்பெறும் உயிர்த்தொகைகள் பசுக்கள்; தொடுவழித் தொடுவழி நீங்கி விடுவழி விடுவழிப் பரத்தலான் நீரினை மறைக்கும் பாசிபோல, உயிரின் அறிவினை மறைப்பன பாசங்கள் எனக் கொள்ளுதலும் உண்டு. முற்றறிவும் சிற்றறிவும் அறிவின்மையும் ஆகிய பொருட்டன்மையினை முறையே உடைமை பற்றிப் பதி பசு பாசம் என இவை நிரலே வைத்து ஓதப்படும்.

பதி: பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களுள் பாசம் ஆகிய உலகமும், பசு ஆகிய உயிரும் உண்டு என மக்களிற் பெரும்பாலோர் உடன்படுவராதலின், உண்டு எனப் பெரிதும் நிறுவப்படவேண்டுவது பதிப்பொருளேயாம். பதிப்பொருள் காட்சி யளவையால் (பிரத்தியட்சப் பிரமாணத்தால்) அறியப்படுவ தன்று. அது கருதலளவை (அனுமானப் பிரமாணம்) கொண்டே உணரப்படும். கண்டதைக் கண்டபடியே அறிபவர் சிறியர். "பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்" என மணிவாசகர் கூறுவர். ஆதலின், கண்டதனைக் கொண்டு காணாததனை அறிபவரே பெரியர். ஆசிரியர் கரும்பலகையில் எழுதிய எழுத்தினைத் தான் கண்டுணர்ந்தவாறே 'கோடு' என்பவன் அறிவிற் சிறியவன்; அதனை அகரம் முதலியனவாக உணர்ந்து கூறுபவன் அறிவிற் பெரியவன். ஏனெனில், அவன் கண்டதைக் கண்டவாறு கொள்ளாமல் கண்ட வரிவடிவைக் கொண்டு, காணாத ஒலி வடிவைக் கண்டுணர்ந்து கூறினான் ஆதலால். இங்ஙனமே, கண்ட உலகத்தைக் கொண்டு காணாத கடவுளையுணர்ந்து கொள்ளுபவர்களே பெரியோர்களாவர். "ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும் காலமே உனை ஓத நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என வரும் திருவாசகம், காணப்படும் உலகத்தைச் சான்றாகக் கொண்டே காணப்படாத கடவுளைக் கருதியுணர்தல் வேண்டும் எனக் குறிப்பிடுதல் அறிந்தின்புறற்பாலது.



நாம் குடத்தைக் கண்டால் அதனைச் செய்த குயவன் ஒருவன் உண்டு என உணர்கின்றோம்; அதுபோலவே, உலகத்தைக் காணும் நாம் இதனைப் படைத்த கடவுள் ஒருவன் உண்டு என உணரற்பாலம். குடம் போன்றது உலகம்; குடம் வனைதற்குரிய மண்போன்றது மாயை; குடம் வனைதற்குத் துணைசெய்யும் தண்ட சக்கரங்கள் போல்வன அருளாற்றல்கள்; குடம் வனைந்த குயவன் போல்பவன் இறைவன்.

"காரிய கார ணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்;
பாரில்மண் திரிகை பண்ணு மவன்முதல் துணைநி மித்தம்;
தேரில்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக,
ஆரியன் குலால னாய்நின் றாக்குவன் அகிலம் எல்லாம்"

எழுத்துக்களுக்கு அகரம் முதலாய் நிற்றல்போல, உலகிற்கும் முதலாய் நிற்கும் தலைவன் ஒருவன் வேண்டப்படுவான். அவயவப் பகுப்புடையனவும், சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவனவும், சுட்டியறியப்படுவனவும் ஆகிய பொருள்கள் யாவும் தோன்றி நின்றழியும். அவன் அவள் என்னும் உயர்திணையும், அது என்னும் அஃறிணையுமாகிய அவயவப் பகுப்புடைமையானும்; அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப் படுதலானும்; அவன் அவள் அது எனச் சுட்டியறியப் படுதலானும்; காணப்படும் இவ்வுலகம் தோன்றி நின்றழியும் முத்தொழில் உடையதாகும். செய்வோனை இன்றிச் செய்வினை யின்மையால், உலகம் முத்தொழிற்படுதற்குரிய வினைமுதலாக இறைவன் உண்டு என்பது தெளியப்படும். ஜகத்—அழிவது, பிரபஞ்சம்—மிகப் பரவியிருப்பது, லோகம்—பார்க்கப்படுவது என்னும் சொற்பொருள் நுட்பங்களாலும், உலகம் முத்தொழில் உடையதென உணரலாம். ஒரு சிலர் உலகம் தானே தோன்றி நின்றழியும் என்பர். அதனை மறுத்தற்கே "தோன்றிய" எனக் கூறாது, ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டது எனும் பொருள்படத் "தோற்றிய" எனப் பிறவினை வாய்பாட்டால் ஆசிரியர் மெய்கண்டார் ஓதியருளினர். இவ்வாற்றால் பதிப்பொருளுண்மை தெளியப்படும்.

"சிவன்அரு உருவும் அல்லன் சித்தினோ டசித்தும் அல்லன்
பவமுதற் றொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானும் அல்லன்
தவமுதல் யோக போகம் தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பி னானே"

"உலகெலா மாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்தல் இன்றித் தானே
நிலவுசீர் அமலன் ஆகி நின்றனன் நீங்கா தெங்கும்."

பசு: இனி, பசுவாகிய உயிர்ப்பொருள்பற்றிப் பலவேறு மதத்தினரும் பலவேறு வகையாகக் கூறுவர். அவர்களுள் உயிர் என்பதொரு பொருள் இல்லை என்பர் சூனியான்மவாதிகள். உடம்பையே உயிர் என்பர் தேகான்மவாதிகள். ஐம்பொறிகளே உயிர் என்போர் இந்திரியான்மவாதிகள். அந்தக்கரணங்களையே உயிர் என்பவர்கள் அந்தக்கரணான்மவாதிகள். நுண்ணுடலையே உயிர் என்று கூறுவோர் சூக்கும தேகான்மவாதிகள். பிராணவாயுவே உயிர் என்று உரைப்பவர்கள் பிராணான்மவாதிகள். பிரமப்பொருளே உயிராகும் எனும் கொள்கையுடையவர்கள் பிரமான்மவாதிகள். மேற்கூறிய உடல் பொறி முதலிய அனைத்தும் கூடிய சமுதாயமே உயிர் என்போர் சமுதாயான்மவாதிகள். இங்ஙனம் உயிர்ப்பொருள் பற்றி இன்னும் வெவ்வேறு கொள்கைகளைக் கூறுவோர் மற்றும் பலருளர்.

'இல்லை' என்று சொல்லிக்கொண்டு நிற்கும் அறிவு ஒன்று உண்டு ஆதலால், சூனியான்மவாதிகள் உயிர் என்பதொரு பொருளில்லை என்றல் பொருந்தாது. யான் உடம்பு, யான்கால், யான்கை என வழங்குவதின்றி, எனதுடம்பு எனதுகால் எனதுகை என வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்டலாகலின், உடம்பின் வேறாக உயிர் உள்ளது. ஐம்புலனாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களை அறியுங்கால் ஐம்பொறிகளுள் ஒன்றறிந்ததனைப் பிறிதொன்று அறிய மாட்டாமையின், ஐம்பொறிகளாலும் ஐம்புலனும் அறிவதாகிய உயிர் வேறொன்றுண்டு. ஐம்பொறிகள் அறிந்த நுகர்பொருளைச் சித்தம்



சிந்தித்தும், மனம் சங்கற்ப விகற்பம் செய்தும், அகங்காரம் ஒருப்பட்டெழுந்தும், புத்தி நிச்சயம் செய்தும் அறியுமாயினும்—யான் சிந்தித்தேன், யான் சங்கற்ப விகற்பம் செய்தேன், யான் ஒருப்பட்டெழுந்தேன், யான் நிச்சயம் செய்தேன் என எண்ணி அறிய வல்லனவல்லவாகலின், அந்தக்கரணங்களே உயிர் என்றல் அமையாது. துயின்றுழியும் விழித்துழியும் பிராணவாயு ஒரு பெற்றித்தாகவே இயங்கா நிற்பவும், உறக்கத்தின்கண் இன்பத்துன்ப நுகர்ச்சியும் உடலியக்கமும் நிகழாமையின், பிராணவாயுவின் வேறாக உயிர் என்பதுளது. எக்காலத்தும் திரிபின்றி அறிந்து நிற்றல் சித்தாகிய பிரமத்தின் இயல்பாகலான், உணர்த்திய வழியே உணரும் இயல்பிற்றாகிய உயிரைப் பிரமம் என்றல் கூடாது. உடல் பொறி முதலியன அனைத்துங்கூடிய சமுதாயமே உயிர் எனின், உடல் பொறி முதலியன எல்லாம் மாயையின் காரியங்களேயாய் நிலைபேறுடையன அன்மையின், நிலைபேறுடைய உயிர் எனப்படா. எனவே, மாயா காரியங்களான் ஆக்கப்பட்டியன்ற உடம்பின்கண் அவற்றிற்கு வேறாக உயிர் என்பது உள்ளது எனத் தெளியப்படும்.

"அசித்தரு வியாப கம்போல் வியாபகம் அருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி எனும்அதற் குடைய னாகி
கசித்திடா ஞானச் செய்தி அறுதியே மறைந்து நிற்கும்
பசுத்துவம் உடைய னாகிப் பந்தனை நிற்கும் ஆன்மா"

பசுக்கள் வெண்மையும் சிவப்பும் கறுப்புமாக இருத்தல் காண்கின்றோம். அதுபோல, ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலரும், ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடைய பிரளயாகலரும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமுடைய சகலரும் என உயிர்கள் மூத்திறப்படும். இவ்வுயிர்கள் கேவலம் (புலப்பு) சகலம் (புணர்வு) சுத்தம் (புரிவு) என்னும் மூவகைக் காரணாவத்தைகளையும், சாக்கிரம் (நனவு) சொப்பனம் (கனவு) சுழுத்தி (உறக்கம்) துரியம் (பேருறக்கம்) துரியாதீதம் (உயிர்ப்படக்கம்) என்னும் ஐவகைக் காரியாவத்தைகளையும் எய்தும் என்பதும் பிறவும் விரிவாக அறிதற்குரியன.

குறித்தே ஆசிரியர் மெய்கண்டார் "மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணாதேல் ஆயாதாம் ஒன்றை" என அருளிச் செய்வாராயினர். இங்ஙனம் உயிர்களின் விழைவு அறிவு செயல்களை விளக்கும் இயல்பிற்றாகிய மாயை, ஆணவமலத்தொடர்பால் ஓரோவழி உயிர்களின் விழைவு அறிவு செயல்களை மறைப்பதும் உண்டு. ஆயினும் அப்பெற்றி மாயைக்கு ஆணவமலச் சார்பானாய செயற்கையே யன்றி இயற்கையன்று.

> "சித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் அசித்தாய்ச் சுத்தமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமல னுக்கோர் சத்தியாய்ப் புவன போகம் தனுகர ணமும்உ யிர்க்காய் வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யு மன்றே."

முடிவுரை: இதுகாறும் ஓரளவு இயன்றபெற்றி சுருக்கமாக வகுத்துணர்த்தப்பட்ட பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களைக் குறித்து, சைவ சித்தாந்த மூல முதலாசிரியர் எனப் பெரிதும் போற்றி வழுத்தத்தக்க ஆசிரியர் திருமூலர் அருளிச் செய்த திருமந்திரப் பாடல் ஒன்றை, கண்டு சிந்தை கூர்ந்து முடிப்போமாக!

> "பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
> பதியினைப் போற்பசு பாசம் அநாதி
> பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
> பதியணு கிற்பசு பாசம் நிலாவே"

---

# 18. ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளும் பெரிய புராணமும்*

உலகின்கண் நிறைந்துள்ள எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதப் ஜீவர்களுள் மனிதப்பிறப்பே உயர்வாகக் கருதப்படுகின்றது. ஆயினும் இயல்பாக யாவரும் இச்சிக்

---

*திருப்பாதிரிப்புலியூர்-ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் 9-9-'34-ல் திருவாளர்-தி. பி. இராமசாமி பிள்ளை அவர்களில்லத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம். "தொண்டு மணி" இதழினின்று எடுக்கப்பெற்றது.



கும் இன்பம் அணுவளவும் காணப்படுவதில்லை. "ஊரிலுள்ளமே பாரின் மானுடர் முதலான அறு பிறப்பூடும், சேருமின்ப மொன்றில்லை யென்பது பிரத்தியக்கமா நீயல்லாய்" என்பது சாந்தலிங்க சுவாமிகள் கூற்றாகும். இன்பத்தை நாடுவதே உயிர்களின் இயல்பு. இன்பம் கலவாததை விரும்பின்றேம். பிறப்பு இன்பத்தைப் பயக்காவிடின் அதனை வெறுத்தல் வேண்டும். சமயாசிரியர்கள் தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய தோத்திரங்களிலெல்லாம் பிறவி வேண்டாம் என்று அழுதாற்றினர்.

> இருந்தா வமணர் தம்நீ நெறிப்பட்டுத் திகைத்த முத்தி
> தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரைஎடுத்த
> பொருந்தா வரக்கனுடல் நெரித்தாய் பாதிரிப் புலியூர்
> இருந்தாய் அடியேனை இனிப் பிறவாமல் வந்தேன்று கொள்ளே.

எனவரும், திருநாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூர்த் திருவிருத்தமும்,

> "இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
> பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்
> மறவாமை வேண்டு மின்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
> அறவாநீ ஆடும் போதுன் னடியின்கீழ் இருக்க என்றார்"

எனவரும் காரைக்காலம்மையாரின் விண்ணப்பமும் குறிக்கத்தக்கன. இவர்கள் விரும்புவது பிறவாமையே. பிறப்பு துன்பமுடைமையான் அடியவர்களஞ்சினார்கள். உலக வாழ்க்கை துன்பத்தினுழலச் செய்வித்தது. யாது செய்வது என்று அறியாது திகைத்தனர். துக்கத்தினின்றும் விடுதலையடைய வேண்டுமென்றே நாடினர்கள். "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது, வேண்டாமை வேண்ட வரும்" என்பது திருக்குறள். உலகம் துன்பமாதலறிந்தவன் ஒரு பொருளை வேண்டுவானாயின் அப்பொருள் பிறவாமையே. ஆகவே பிறப்பை யறுத்தல் அன்பர்களுக்கு லட்சியமாயிற்று.

இனி இக் கொடிய பிறப்பை யொழித்தற்குச் சாதகமான வழியாதென ஆராய்வாம். ஒரு கெடுதி சம்பவிக்கப்

போகிறதென்று அறிந்த காலத்து அதனுக்குக் காரணமாயுள்ளவற்றைச் சரிப்படுத்தி அக்கெடுதியைத் தவிர்ப்பது போல் பிறவிக்குக் காரணமாயுள்ளவற்றை நீக்கிக்கொள்ள முயலவேண்டும். பிறவிக்கு மூலமாயிருப்பது பேதைமையே. அம்மயக்கம் இறைவன் என்றுண்டோ அன்றுமுதல் உயிர்களைப் பற்றிக் கொண்டேயிருக்கின்றது. மயக்க உணர்ச்சியே பிறப்பாகும். "மருளானும் மாணாப்பிறப்பு" என்பது திருவள்ளுவர் ஆப்தமொழி. இன்பமில்லாத பிறப்பு விபரீதவுணர்ச்சியாலே பெறப்படும். மருள், மயக்கம், விபரீத உணர்ச்சி, அவிச்சை என்பன ஒரு பொருட் கிளவி. மருள் என்று மொழிந்த உடன், உடனே உணரும் பொருள் பித்து என்பதாகும். உலக நடையில் ஒரு காதலனைப் பைத்தியம் பிடித்தவன் என்று கூறுகிறோம். உண்மையை மற்றொன்றாகக் கருதுபவன் பித்துப்பிடித்தவனாவான். பொருளல்லவற்றைப் பொருள் என்றறிதல் மருள். மறுபிறப்பில்லை, தெய்வமில்லை, நல்வினை தீவினையில்லை இவை ஒவ்வொன்றும் அம்மருளின் அம்சங்களே. உண்மையல்லாதவற்றை உண்மையென்று கோடலும் மருளே. அதுவே அவிச்சை. இது துன்பத்திற்குக் காரணமாயுள்ளமையான் இதனைப் போக்கி இன்பம் எய்தவேண்டும். அவிச்சையைப் போக்குவதுதான் பிறவிக் கடலைக் கடத்தல் என்று கூறுவர் ஆன்றோர். பிறவிக்கடல் அவிச்சை சொரூபமாயுள்ளது. இவற்றினின்றும் நீங்கி இன்பத்தைச் சாருமுயலுதல் அவசியமாகும். அவ்வின்பம் செம்பொருள் வடிவம். எவற்றிற்கும் மேலானதோர் சிறப்புடையது. "பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்று திருவள்ளுவர் அறிவுறுத்தினர். செம்பொருளாவது உயிர்கள் தன்னறிவாலும், பற்றியுள்ள பாசவறிவாலும் அறிய முடியாததாய் நிற்கும் பதியே யாகும். அவ்விறைவன் எல்லாவற்றிலும் சிறந்தாய் இன்ப சொரூபனாகலின் சிறப்பென்னும் செம்பொருளாயினன். காண்பது என்பது உயிர் தன் அவிச்சையினின்றும் நீங்கிச் செம்பொருளாகிய இறைவனோடு ஒற்றுமையுற இடைவிடாது தியானித்தல். ஆண்டவன் அருள் மயமாய் நின்று பேதைமை நீங்க உண்மை யறிவு பெறுவதே பிறவியினின்று விடுதலை என்ற முத்தியாகும்.



பிறவியென்னும் கூட்டில் உயிர் எனும் பறவை அடைக்கப்பட்டிருக்கிறது. இக் கூட்டிலிருந்து வெளிக்கிளம்பப் பறவைக்கு இருபெருஞ் சிறகுகள் இன்றியமையாதன. அதுபோல் உயிரும் விடுதலையடைய இருபெருஞ் சிறகுகளை உடைத்தாயிருத்தல் வேண்டும். எப்பொருளிலும் பற்றுவிடுதல் ஒன்று. தெளிவடைந்த அறிவு உடைத்தாதல் மற்றொன்று. இவ்விரண்டுமே ஆன்மாவுக்குப் பெருஞ் சத்திலை பித்து முத்தியடைதற்குச் சாதகமாகின்றன. இதனைக் கம்பர்,

அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழி
தெரிஞ்சுற வெனவிருந் தெளிவுமாய் வரும்
பெருஞ்சிற குளவெனிற் பிறவி யென்னுமிவ்
இருஞ்சிறை கடத்தலி னினிது போவரே

என அருளியது கவனிக்கத்தக்கது. பற்றுவிட்டு ஞானமடைந்த ஒருவனுக்கு நல்லாரிணக்கம் அத்யாவசியம். அன்பர்களுறவு அவனைப்பற்றியிருந்த மலங்கள் மீண்டுஞ் சாராமலிருக்கச் செய்கின்றது. "சார்புணர்ந்து சார்புகெடவொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தருநோய்" என்பது திருவள்ளுவரது ஆணையன்றோ? எல்லாப் பொருட்கும் சார்பாயுள்ளவன் செம்பொருளாகிய இறைவன். அவன் மாட்டன்புடையார்தாம் பிறருக்குற்ற துணையாவார்கள். அவர்களுறவே உண்மைப்பயனை அளிக்கும். "இணக்கமறிந்திணங்கு" என்று ஔவையாரும் கூறினர். இணக்கமுண்டாவதற்கு முன்னே அவர்களது குணங்களையும் செயல்களையும் ஆராய்தல் வேண்டும். நம் நற்குணங்களையும் நற்செயல்களையும் அழிக்கவல்லாராயின் அவர் தம்மை விட்டு நீங்குதல் நன்மையாகும்.

உயிர் இவ்வுலகின்கண் ஓர் உடலோடு தோன்றுகிறது. அவ்வுடலோ அவ்வுயிர்க்கு இருவினைகளால் வருவது. இருவினைகளின் செயல் நியதாகவே காணப்படுகின்றது. உடல் பாச சம்பந்த மாதலால் மலவழுக்கு மிகுதியுமுடையது. மாயையால் ஆக்கப்பட்டதனை சரீரத்தை மாயேயம் என்பர். இம்மலங்கள் நல்லுணர்ச்சியில் உயிரைச் செலுத்த வில்லை. இறைவனருளால் இவற்றின் குணங்களை புணர்ந்த

ஒருவன் இவற்றினின்றும் நீங்க பந்தனிப்பான். முயலுந் தோறும் இம்மலங்கள் அவனை வெருட்டிப்பற்றும். அவ் வமயங்களில் இவைகளை வென்றவர்களே துறவிவேண்டும். அவர்கள் பரனுணர்வுடையவர்கள். அவர்களைத் தப் போந்த காலத்து வினைதன் செயலற்று நிற்கும்.

" மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—அறப்பித்துப்
பத்தரினத்தாய்ப் பரனுணர் வினாலுணரும்
மெய்த்தவரை மேவா வினை "

எனவரும் சிவஞானபோத வெண்பாவாலறிக. பத்தர்கள் யாவர்? யான் எனது எனும் இருவகைப்பற்றும் அற்றவர்கள், தமக்குத்தலைவனைப் பதிஉண்டு என்றும், உலகஞான மாகிய பசுஞானத்தாலும் ஆன்மவறிவாகிய ஞானத்தாலும் அவனை அறியமுடியாதென்றும் கண்டவர்கள். அவனருளே கண்ணாகக் காணுதலாகிய பதிகரணம் பெற்ற செம்மையாளர்கள். பதி என்பது இரண்டு-நான்கு கால்களுடைய பசுக்களுக்குத் தலைவன் எனப்பொருளாகும். அவனது அருளைப் பெற்று அவனை யறியலாம். அவ்வாறு அறியும் மெய்யன்பர்களைத் துன்பங்கள் சாரா. இறைவனது கரணங்கள் ஏன் பெறுதல் வேண்டுமெனில் அவன் அசிந்திதன் என்றழைக்கப்படுகின்றான். சிந்திக்க முடியாத தன்மை அவனது இயல்பு. " மாற்றம் மனங்கழிய நின்ற மறையோன் " என்பது மணிவாசகம். ஆகவே அவனது சக்தி ஆன்மாவிடத்துப் பதிந்த மாத்திரத்திலன்றி அவனை யறிதல் கூடாது. சிவகரணம் பெற்ற உயிர்கள் அன்புப் பெருக்கினால் உள்ளமுருகும் செயலுடையவராய்க் காணப் படுவர். சிவவேடத்தைச் சிவனுருவாய்ப் பாவிப்பர். இதனை அருணந்தி சிவாசாரியர் தாமருளிய சிவஞான சித்தியாரில்,

" அறிவரியான் றனையறிய யாக்கை யாக்கி
யங்கங்கே யுயிர்க் குயிராயறிவு கொடுத்தருளாற்
செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ்
சிவோகம் பாவிக்கு மத்தாற் சிவனுமாவர்



குறியதனு லிதயத்தே யாரக் கூடுங்
கொள்கையினு லாலயமுங் குறியொடு தாமதியும்
செறியதனுஞ் சிவமேயாய் நின்றிடு நென்றால்
சேர்த்தாந் தெருமுறினி பாசத்தார் விடவே."

என்று விளக்கியுள்ளமை நோக்குக. இறைவனது கரணங் களடைந்த உயிர் சிவோகம்பாவனையினால் சிவமே யாகும். இச்சித்தி படைத்த உயிரின் கண்ணே தயிரின்கண் நெய் போன்று சிவன் நிறைந்து விளங்குகின்றான். மற்ற உயிர் களின்கண்ணே பாலின் நெய்போல மறைந்திருக்கின்றான். அகரம் எல்லா வெழுத்துக்களுக்கு முன்னீடாய் மறைந் துள்ளது. அகரம் ஆகாரத்திலும் இகரத்திலும் மறைந்து நிற்குந் தன்மையைக் காண்கின்றோம். அங்காப்பினால் வருவது அகரம். மற்ற வெழுத்துக்கள் அங்காப்பல்லாது பிறவா. அது போன்று உள்ளீடாய் இறைவன் நின்றா லன்றி யாதொன்றும் நிகழாது. பக்குவப்பட்ட ஆன்மாக் களதுள்ளத்தில் மிக்க விளக்கமாக வீற்றிருக்கின்றார். அவ் விளக்கத்தை அவ்வான்மாக்கள் கொள்ளும் சிவவேடம் அறிவிக்கின்றது.

சிவவேடப் பொலிவு இரண்டு சாதனங்களினாலே பெறப்படுகின்றது. ஒன்று வெண்மை தங்கிய திருநீறு. மற்றது உருத்திராக்கம். விபூதியுடைய பேதங்களும், அதை உண்டாக்கும் திறமும் பெரியபுராணத்துள் முழுநீறு பூசிய முனிவர் புராணத்தின்கண்ணே கண்டு கொள்க. இப் பெருஞ் சின்னம் ஐசுவரியத்தை மாத்திரம் கொடுக்கும் தன்மையுடையது அன்று. இறைவனது விளக்கத்தையும் உண்டு பண்ணும் பொருளாகும். இறைவனது திருவடி களைப் பற்றுக் கோடாய்க் கொண்டு ஒழுகும் தூய்மை யுடையவன் என்று காட்டும். காத்தற்றொழில் மேற் கொண்டதாதலின் இரக்ஷை என்பர் அறிஞர். உலக வழக் கில் பேய் பிசாசுகளை ஓட்டுகின்றவர்கள் விபூதியை யணிந்து மந்திரங்களைச் செபிக்கும் தன்மை கண் கூடு. வைதிகக் கலியாணத்திலும் கங்கணத்தின்மீது விபூதியை வைத்து மங்கலத்தை உண்டாக்குகின்றனர். உபநிஷத்துக்களில் 13 உபநிஷத்துக்கள் விபூதி மோக்ஷ சாதனமென்று கூறும். உருத்திராக்கமும் இறைவனுடைய திருக்கண்களினின்று

உற்பவித்து, அணியும் அன்பர்களது அன்பின் திறத்தைக் காட்டுஞ் சிறப்புடையது. ஆகவே இவ்விரு பெரும் பொருளும் விளக்க முடைமையாற் சிவமே. வேடத்தாற் சிவமேயாயினும் உள்ளத்தாலும் சிவமாதல் வேண்டும். உள்ளம் நினைக்கும் தன்மையது. மற்றக் கரணங்களோடு கலந்து நின்று தொழிற்படும் பான்மையது. உள்ளே நினைந்து அன்பினாலே கசிந்து விழிநீர் பெருக்கி வேதங்கள் நான்கினும் மெய்ப்பொருளாகி விளங்கும் இறைவன் நாமமாகிய திரு ஐந்தெழுத்தை வாயாரச் சொல்லல் வேண்டும்.

இவ்வாறு சிவவேடம் தரித்துக் காதலாற் கசிந்து சிவ மந்திரத்தை ஓதும் அன்பர்களது உள்ளத்தின் கண்ணே அருளாற் கலந்து நிற்றலால் அவர்கள் சிவமேயாவர். சிவோகம்பாவிக்கும் முறைமையால் பாவனை வயத்தாராய்ச் சிவமாதல் திண்ணம். இறைவனை வழிபடுங் காரணமாக அன்பர்கள் தங்கள் உள்ளக்கிழியில் திருவுருவத்தை வைத்துத் தியானித்துக் கூடுஞ் செயலினாலும் சிவமே யாவர். சிவமே யெனநிற்குங் காரணத்தால் தன்மையாலும் சிவமே. ஆக வேடத்தாலும், பாவனையாலும், செயலாலும், தன்மையாலும் சிவமாம் அன்பர்க்கு உலகச் சார்பு இல்லை. அவர்கட்குக் குலமும் கர்மமும், தாமே நழுவிச் செல்கின்றன. அதிவருணாச்சிரமிகளாகையினாலே அவைகள் அவர்களைப் பந்தப்படுத்துவதில்லை. அவர்களது நினைவு எல்லாம் இறைவனது திருவடியே. ஆராத காதல் செலுத்தும் பேரன்புடையவர்கள் எந்த நாட்டவராயினும் அன்புடையவராயின் திருவடிசாரும் தகைமையர். அவர்களது பெருமையும் அளவிடற்கொண்ணாது. அவர்களும் கணக்கிறந்தவர்கள்.

“கருங்கடலைக் கைந்நீத்துக் கொளவெளிது முந்நீர்க் கடற்கரை சேர் மணலை யெண்ணி யளவிடலாம், பெருங் கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென்றெண்ணிப் பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்து விடலாகுந் தருங் கடலின் மீனை யளவிடலாகும், வானத் தாரகையை யள விடலாஞ் சங்கரன்தாள் தாழுமெய்க்கொள் திருத்தொண்டர் புராணத்தை யளவிடல் எம் சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்குமரிதே” என உமாபதி சிவாசாரியர் கூறும் உயர் மொழியினாலே திருத்தொண்டர்களது பெருமைகளை யெல்லாம் அளவிட்டுக் கூறுவது முடியாதென அறிகின்றோம்.



திருத்தொண்டர்கள் அளவிறந்த பெருமையுடையவர்கள். அவர்களது வரலாற்றைக் கூறும் புராணம் பெரிய புராணமாகும். எனவே அது பெருமையுடையது. அப்பெருமை உலகத்தாருக்கு இறைவனால் காட்டப்பட்டதே. பெரிய புராணம் என்பதற்குப் பல பெரியவர்களது சரிதங்களைத் தொகுத்துச் சொல்லும் புராணம் எனப் பொருள் கூறுவாருமுளர். சேக்கிழார் சுவாமிகள் இப்புராணத்துக்குத் திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிட்டருளினர். ‘எடுக்குமாக் கதை’ யென்னும் திருப்பாட்டின் கண்ணே “மாக்கதை” என்னும் பிரயோகத்தால் பெரிய புராணம் எனும் பெயர் வழங்குவதாயிற்று என்பர். புராணம் என்பதனை நம்மவர்கள் பழமையான கட்டுக் கதைகள் என்று கருதுகின்றனர். புராதனம் என்னின் பழையது என்று பொருள்படும். புராதன மென்பதே புராணம் என மருவிற்று என்று சொல்லுவர். புரா என்னும் சொல்லுக்கு ஜீவனம் என்ற பொருள் உண்டு. நம்மை நன்னெறிகளிலே செலுத்தி ஜீவிக்கச் செய்யும் ஆற்றலுடையது புராணம். நூற்கள் 3 பாகுபாடுகளுக்குள் அடங்கும். அரசன் கட்டளையிடுவது போன்று விளங்கும் நூல்கள் சில. அதனைப் பிரபு சம்ஹிதா என்பர். சிநேகப் பான்மையோடு அறிவு புகட்டும் நூல்கள் சில. இவை சுகிர் சம்ஹிதா என்றழைக்கப்படும். மனைவியைப்போன்று உகந்த கருத்துக்கள் விளைக்கும் வல்லமையுடைய நூல்கள் சிலவற்றைக் காந்தா சம்ஹிதா என்பர். வேதம் பிரபு சம்ஹிதா; புராணம் சுகிர் சம்ஹிதா; காவியங்கள் காந்தா சம்ஹிதா. இரண்டாம் பாகுபாட்டின்கண் படுவன புராணங்கள். பெரிய புராணமோ சிவமாகிய திருவைப் பெற்றவர்களின் சத்திய சம்பந்தமான சரிதங்கள்.

இச்சரிதங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் நல்வழி இச்சியாது சென்று கொண்டிருப்பவரைத் திருத்திச் செந்நெறிக்குச் செல்லும்படி செய்விப்பன. சோழநாட்டை முறை செலுத்தி வந்த அநபாயச் சக்கரவர்த்தி என்பான், காவிய இலக்ஷணங்கள் பெற்றுள்ளதான சீவக சிந்தாமணியை நாடோறும் அன்போடு கேட்கும் நியமமுடையவனாக இருந்தான். அவன்பால் முதன் மந்திரியாயிருந்த சேக்கிழார் பெருமான் அரசனை நோக்கி இக்கதை சமணர்

பொய்ந் நூல். இம்மைக்கும் மறுமைக்கும் ஆகாது. "வளம் மருவின்ற சிவகதை இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி." அதனைக் கேட்பாயாக என்று அறிவுறுத்தினர். அரசனும் அதற்கிசைந்து அக் கதைகள் யாவை? சொல்லுக எனக் கூறச் சேக்கிழார் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையுள் அருளிய அடியார்களது வரலாற்றினை முற்றும் எடுத்துப் புகன்று, அதற்கு வகையாக நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியினுக்குப் பொருள் கூறினர். உள்ளன்போடு உருகிக் கேட்டவனான அரசனும் மகிழ்ந்து இச்சரிதங்களை யெல்லாம் விரிவாக எழுதித் தரல்வேண்டும் என்று வேண்டினன். சேக்கிழார் சுவாமிகளும் இது திருவருட் செயலென்று கருதி அவன்பால் விடைகொண்டேகிச் சிதம்பரஞ் சென்று தில்லைக் கூத்தனை வணங்கி அவன் தந்த "உலகெலாம்" என்னும் முதலைக் கொண்டு அரும்பெரும் புராணமாகிய இப்புராணத்தினை முடித்தருளினர். அதனுடைய சிறப்பு,

"பூவை மறந்தனள் வெண்டாமரை மயில்புகன்ற
சங்கப் புலவோர்சொல்
பாவை மறந்தனள் தேசபடித பயிலை
மறந்தனள் பதுமத்தோன்
நாவை மறந்தனள் பொதியமலைத்தலை நண்ணிய
புண்ணிய முனிவனொடும்
கோவை மறந்தனள் சேவையர் காவலனுர்
திருநாவிற் குடிகொண்டாள்"

எனவரும் திருப்பாட்டினாற் கண்டு தெளிக. அன்புப்புராணமாய் இறைவனுடைய அருளைத்தான் பெற்று விளங்குவதோடு படிப்போர்க்கும் திருவருளைக் கூட்டுவிக்கும் செயலுடைமையான் இப்புராணம் சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாவதாகச் சேர்க்கப்பட்டது. முறையென்பது புத்தகம் எனப் பொருள்படும். ஒழுக்க முறைகளைத் தெரிவித்து ஆத்மஞானத்தைக் கூட்டவல்ல நூல்கள் திருமுறையாம். எல்லாப் பொருளும் அடங்கிய காரணத்தால் முதல் ஏழு திருமுறைகளுக்கும் அடங்கன்முறை எனப் பெயர்



வழங்கலாயிற்று. இதன்கண் உள்ள தேவாரங்களை யெல்லாம் நன்கு உணர்ந்து அவற்றில் நிறைந்த அரிய பொருள்களை யெல்லாம் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தின் கண்ணே விளக்குவாராயினர். இனி பெரியபுராணச் செய்யுள்களின் நயம் சிலவற்றை ஆராய்வாம்.

அருள் வயமாய் நின்று பாடிய புராணமாதலின் அரிய கருத்துகள் அடங்கிய பாடல்கள் பல உள்ளன. இவைகளிலொன்று குமரகுருபர சுவாமிகளை ஆட்கொள்ளும் திறம் வாய்ந்தது. அது,

"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும்
கரணங்கள் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமானந்த வெல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா
மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

எனும் அருமைத் திருப்பாட்டாகும். குமரகுருபரர் பாண்டிய நாடு முழுமையும் ஆங்காங்குள்ள திருக்கோயில்களைத் தரிசித்து அதனின்றும் அகன்று சோழ நாட்டை அடைந்தார். திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் முதலிய தலங்களை யெல்லாம் தரிசித்துத் தருமபுர ஆதீனத்தின்கண் வீற்றிருக்கும் மாசிலாமணி தேசிகரது பெருங் கீர்த்தியைக் கேள்வியுற்று அவரைத் தரிசித்தற்பொருட்டு ஆங்குச் சென்றனர். இருவரும் உரையாடிய இறுதியிலே மாசிலாமணித் தேசிகர் மேற்கூறிய திருவிருத்தத்திற்கு அநுபவப் பயனை வினவ, வாக்குத் தடைப்பட்டது. குமரகுருபரர் முன்னர் ஆறுமுகக் கடவுள் சொல்லிய வண்ணம் இவரே தமது குருமூர்த்தியாவர் என்று நினைந்து மனங் கலங்கி இருக்கை விட்டெழுந்து சாஷ்டாங்கமாக அவரை வணங்கித் தம்மை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். அவரது ஆணவ மலத்தின் செருக்கை அறுப்பதற்கு எழுந்ததோர் உபாயமாக இத்திருப்பாடல் விளங்கிறது. அப்பாடலின் கருத்தை அவ்வருட் புலவரே விளக்க விழித்தா

றெனின், நம்மவர் விளக்க முயற்சிப்பது நகைப்பிற் கிறத்தும்.

" தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்."

"கையுந் தலைமிசை புனையஞ் சலியன கண்ணும் பொழிமழை யொழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுட னுருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரையின்மிசை விழுமுன் பெழுதரு மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர் ஆர்வம் பெருகுதல் அளவின்றால்"

இவை போல்வன சிறப்புடையன. பாட்டின் சந்தம் தங்கு தடையின்றிப் பேசுவதுபோல் ஒழுகுகின்றது. சிலேடைகளும் மடக்குகளும் பொருந்தியுள்ள பல பாட்டுக்கள் பெரியபுராணத்தில் உண்டு.

சேக்கிழார் சுவாமிகள் மற்ற புலவர்களைப் போலல்லாது தமது புராணத்தின்கண்ணே பல நாடுகளையும், பல ஆறுகளையும் வருணிக்க வேண்டியிருந்தது. ஒரு நாடு, ஒரு நகரம் இத்தன்மையாகத்தான் வர்ணித்தல் வேண்டும் என்பதனை வழிகாட்டியாக அவர் அறிவித்தார். திருக்குறிப்புத் தொண்ட நாயனர் புராணத்தின் தொண்டை நாட்டின் சிறப்புப் போதிய சான்றாகும். இலக்கணத்திற்கும் இலக்கியமாக இப்புராணம் விளங்குகின்றது. இவ்வருமைப் பாட்டைத் திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் அருளிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில் காப்புச் செய்யுளில் " வினையுறுப்பு தொகை எண்ணடியாதி செய்து " எனப் போற்றினமை கண்டு தெளிக. 'உலகெலாம்' என்னும் திருவிருத்தத்தின் நான்காவது அடியிலே 'மலர் சிலம்படி' என்னும் சொற்றொடர் அவர் கூறிய இலக்கண அழகை உடையதாக உள்ளது. இத்திருவிருத்தத்தில் மற்றொரு அழகையும் காண்கிறோம். இது அறுபத்துமூன்று எழுத்துக்களால் ஆக்கப்பட்டுள்ளது. இப்புராணத்துள் கூறப்படும் தனியடியார்களின் கணக்கு



அறுபத்து மூன்றே. சிதம்பரத்தின் அருமையையும் இது கூறுவதாகும். இறைவனுடைய உருவங்கள் மூன்று. அவை அருவம், அருவுருவம், உருவம். இம் மூன்று உருவங்களையும் நாம் சிதம்பரத்தின்கண்ணே பெற்றிருப்போமென்று இறைவன் அருளினர். 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்பது அருவ நிலைமை. 'நிலவுலாவிய நீர் மலிவேணியன்' என்பது உருவத்தைக் குறிக்கும். உருவம் உடையனும் அவயவப் பாகுபாடின்றி இருத்தல் அருவுருவமாகும். அதுவே 'அலகில் சோதியன்' ஆகுந்தன்மை. இவைகளுக்கு அப்பாற்பட்ட நிலைமையே சிதாகாசத்தில் ஆடுங்கோலம். இனி, ஒரு செய்யுளின் பொருட்பயனைக் கவனிப்போம்.

" வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னுசிற் றம்பலத்தே
ஆதியு முடிவு மில்லா அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்."

என்பது திருநீலகண்ட நாயனர் புராணத்துள் முதற்றிருப் பாட்டு. தில்லை என்பது சிதம்பரம். அதனைக் கோயில் என்று வழங்கினர் ஆன்றோர். மற்ற தலங்களெல்லாம் காரணப் பொருட்டாலோ அல்லது வழக்கத்தாலோ வரும் பெயர்களையுடையன. அவ்வாறின்றி இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம் இதுதான் என்று குறிப்பதுபோல் கோயில் என்று அமைந்தது. வடமொழியில் ஆலயம் என்பர். ஜன்ம சரீர மனோலயமொடுக்கம் ஆலயமாகும். எல்லா நகரங்களும் முதன் முதலிலே காடாக இருந்தன. காடுகள் அழிந்த பின்னரே நாடுகள் வந்தன. மதுரையும் குலசேகர பாண்டியனால் கடம்பவனம் அழிக்கப்பெற்று உண்டாயது. சிதம்பரமும் முன்னர் தில்லைவனமாக இருந்தது. தில்லையென்பது ஒரு செடி. அவ்வனம் ஒழித்தபின் நகரமாயிற்று. அறிஞர்கள் குடியேறினர். அறிஞர்களே வேதியர். அவர்களே தில்லைவாழ் அந்தணர்கள். வேதியர் என்பதனைச் சிவபெருமான் என்றும் கொள்ளலாம். அவரே எல்லா அந்தணரினும் மேம்பட்ட அந்தணர் என்று வேதங்கள் அறைகின்றன. இந்நகரமோ மிகவும் பழமையானது. ஆகவே அது

மூதூர். 'தில்லை மூதூர் ஆடிய திருவடி' எனும் மாணிக்க வாசகம் நோக்குக. வேள் என்பது மண் என்று பொருள் படும். கோவர் பிசைபவர். மண்ணைப் பிசைந்து குடம் முதலியன வனைபவர்கள் குயவர். இப்பெருங் குலத்தின்கண் வந்தவர் திருநீலகண்ட நாயனார். வந்தவர் எனும் பதத்தி னால் அவதரித்தார், விண்ணினின்றும் இறங்கினர் என்பது கருத்து. இம்முதலடியில் ஊரும், அதனது தொன்மையும், வாழ்பவர்களின் பெருமையும், திருநீலகண்ட நாயனார் அவ தரிக்கத் தவத்தையுடைய குலமும் கூறப்பட்டது. இந் நாய னார் எத்தன்மையர் என்பது பின் மூன்று அடிகளில் விளக் கப்படுகின்றது. இவர் தில்லைக் கூத்தப்பிரானது திருவடி யிலே வணங்கும் மேன்மையுடையவர். இறைவர் இங்குத் தனிக்கூத்தாடுபவர். அக்கூத்து இவ்வுலகின்கண் ஆடப்படு கின்ற கூத்தல்லாமையான் தனிக்கூத்து எனப்பட்டது. யாவரும் இரண்டு கால்களினாலே கூத்தாடுவது பழக்கம். இறைவரோ ஒற்றைக்காலினால் ஆடும் தன்மையுடையவர். கனகசபையின்கண்ணே வலக்காலை ஊன்றி இடக்காலை உயர்த்தியிருப்பர். வெள்ளியம்பலமாகிய மதுரையின் கண்ணே இடக்காலை ஊன்றி வலக்காலை உயர்த்தியிருப்பர். கால் மாற்றியிருப்பது ஒரு பாண்டியனுக்கு அருள்செய்யும் பொருட்டே. பொன்னுக்கு வெள்ளி கால் மாற்றிருக்கும் எனும் முதுமொழி இதனை விளக்குவதாகும். ஆரியர் இரண்டுகாலால் நடைபெறுங் கூத்துக்கு லாஸ்யம் என்பர். ஒற்றைக்கால் கூத்துக்கு ஊர்த்துவ தாண்டவம் எனக் கூறுகின்றனர். இக்கூத்தோ ஆன்மாக்களுக்குச் சாந்தியை உண்டுபண்ணுவதால் சாந்திக்கூத்தே. சாந்தி என்பது மனத்தெளிவு. தெளிவு ஞானமே. எனவே இறைவன் செய் யுங் கூத்து அற்புதக்கூத்து. அற்புதம் என்பது ஞானம். கூத்துகளெல்லாம், பாவம், இராகம், தாளம் இவை மூன் றினையும் தழுவி நிற்கும். இதுவே பரதமாம். இது நடிக்கப் படும் இடம் பூமியாகும். இறைவன் செய்யுங்கூத்தோ இம் மண்ணின் மீதன்று. ஆகாசத்தின் நடுவில் இயற்றுகின்ற தென்று ஆன்றோர் மொழிந்தனர். ஆகாச மத்தியிலே சம்பு தியானிக்கப்படுகிறான் என்று வேதங்கள் கூறுகின்றன. தியானிக்கப்படும் பொருளாகையினால் இவர் அருள் செய் யும் மூர்த்தியாவர். இவர் செய்யும் நடனமும் பிறர் கைத்



தையே கருதிச் செய்யப்படுகின்றது. இக்கோலம் வேறு எந்தச் சமயத்திலும் காண்பது அரிது.

அன்பர்க்கு அருள் செய்தற்பொருட்டே இறைவன் உமாதேவியை நோக்கி ஆனந்த நிருத்தம் புரிகின்றார். இந் நிருத்தத்தின் கருத்து என்னே? ஆன்மாக்களைப் பற்றி நிற் கும் மலங்கள் மூன்று. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இம்மூன்றின் கட்டினின்றும் விடுபடுவதே வீடா கும். இவ்விடுதலையை அடையச் செய்வது இறைவன் நிருத் தக்கோலம். மாயையைத் தமருகம் ஏந்திய திருக்கரத்தினாலே நீக்கி, அக்கினி ஏந்திய திருக்கரத்தினால் கன்மமலத்தைச் சுட்டு, முயலகன்மீது ஊன்றிய பாதத்தினால் ஆணவமலத்தை அழுத்துகின்றனர். இவ்வாறு மூன்று மலங்களையும் ஒழித்த வர்க்குக் குஞ்சிதபாதத்தினால் அருளைத் தந்து அமைத்த திருக்கரத்தால் அத்தமில் இன்பமெய்துமாறு சேர்ப்பிக் கின்றார். இதுவே இறைவனது திருக்கூத்து முறைமை. இத் திருக்கூத்து ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைதல், அரு ளல் ஆகிய ஐந்தொழில்களை நிகழ்த்தும்.

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய அமுக்கியருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தையார் பரதந் தான்"

"தோற்றந் துடியதனிற் றோயுந் திதி யமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

எனவரும் திருப்பாட்டுகளால் இறைவனது கூத்தின் அருமை கண்டு தெளிக. இவையாவும் இறைவன் அருட் செயல். இறைவன் அருளே எல்லாஞ் செயவல்லது. உல கத்தை ஆள்விக்கச் செய்வதும் அதுதான். பிறப்பறுப்ப தும் அதுவே. எல்லாப் பொருளுமாவதும் அதுவே.

அருளே யுலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானும்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு

எனும் காரைக்காலம்மையாரின் செய்யுளால் உணர்க.

இவ்வருட்டன்மை வாய்ந்த கூத்து ஆதியும் முடிவும் இல்லாதது. இறைவன் ஆதியும் அந்தமுமில்லாதவனாதலின் அவனது கூத்தும் தோற்றமும் இறுதியும் இல்லாததாயிற்று. தான் ஆனந்தவடிவினனாய் உயிர்களை ஆனந்தவெள்ளத்தில் மூழ்கும்படிச் செய்கின்றமையால் அவனது கூத்து தனிக் கூத்தே. அக்கூத்தைத் தரிசிப்போர் தாங்கள் கொண்ட குறிக்கோள் பெறுவது திண்ணம். காண்கிற செயலும் இறைவன் காட்டநாம் காண்பதேயொழிய நம்மால் இயலுவதன்று. இறைவன் நிருத்த கோலத்துத்தன் திருவடியைக் கரத்தால் காட்டி உங்கட்கு அருள் புரிவேன் எனும் தன்மையை அபயகரத்தால் விளக்குகின்றான். எனவே உயிர்கள் சுதந்தரமற்றவர்களாய் விளங்குகின்றன. எனவே உயிர்கள் சுதந்தரமற்றவர்களாய் இறைவனால் ஆட்டப்பெறும் தகுதிவாய்ந்தவர்கள். அதனாலன்றோ மாணிக்கவாசக சுவாமிகள்,

" வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"

எனத் திருவாசகத்துள் அறிவுறுத்துள்ளார். உயிர்களை ஆட்டும் திறம் இறைவனிடத்தினின்றும் வெளிப்படுகின்றது. இவ்வாட்டங்களெல்லாம் அவரவர்கள் மதத்துக்கேற்ப நிற்கும். சில வருடங்களுக்குமுன் காட்டப்பெற்றதான பொம்மையாட்டங்கள் எடுத்துக்கொண்ட நாடகங்களுக்கேற்ப மறைந்திருக்கும் சூத்திரதாரனால் ஆட்டப் பெற்றன. கதைக்கேற்ப ஆட்டங்கள் நிகழுமே தவிர வேறு வகையாக நிகழ்வது அரிது. உயிர்கள் நாடகமும் கன்மத்தின் வழியேதான். மறைந்திருக்கும் சூத்திரதாரன்போல் இறைவனும் மறைந்து நின்று உயிர்களை ஆட்டுவிப்பான். இறைவனது கூத்தோ வேறொருவர் மறைந்து நின்று அவரை ஆட்டுவிக்கும் செயலால் ஆவதன்று.

பரதாட்டியத்தின்கண்ணே ஆடுகின்ற ஓர் மகளுக்குப் பின்னே ஒரு நட்டுவன் தாளம்கொட்டி அவள் பாவங்களையெல்லாம் இசைக்கு ஒத்தபடி நடிக்கும்படி செய்வன். அச்செயல் செய்யும் ஒரு புருடன் இல்லாமையே இறைவன்



சுதந்திரனாய் நடிப்பவன் எனப்பொருள் விளங்குவதாயிற்று. இறைவன் கூத்து பிறர் நலங்கருதிச் செய்யப்படுவதாயும் என்றும் முடிவில்லாததாயும் அன்பர்தம்மை ஆனந்தத்தில் மூழ்குவிக்கச் செய்வதாயும் பிறரால் தாம் ஆட்டப்பெறாது சுதந்திரமாய்ச் செய்யப்படுவதாயும் உள்ளது.

இவ்விதம் கூத்தாடும் திருவடிகள் வீரக்கழலை ஆபரணமாகத் தரித்துள்ளன. அது இறைவரது வீரச் செயலைச் செய்வதன் பொருட்டுத் தந்த ஓர் பரிசுபோன்றது. எந்த அரிய செயல் ஒருவனுக்கு நேரிட்ட பயத்தைப்போக்கியதோ அதுவே வீரச்செயலாகும். அதனை மகிழ்ந்து நன்றி காட்டும்பொருட்டாக உலகோர் ஓர் பதக்கமோ அல்லது வேறு ஒரு பொருளோ பரிசாக அவ்வீரனுக்குத் தருவது வழக்கம். அவன் அதனைத் தன் கைகளிலோ, மார்பிலோ, கழுத்திலோ அணிந்துகொள்வான். இறைவன் ஏற்றருளிய பரிசு கரங்களிலும், கழுத்திலும், மார்பிலும் சிரசிலும் அணியப் பெறவில்லை. எந்தத்திருவடி எமனுடைய பயத்தை மார்க்கண்டேயனுக்கு அகலும்படி செய்வித்ததோ, அதனுக்கு அணியப்பெற்றது. இறப்பின் துன்பத்திற்கு யாவரும் அஞ்சுவர். அதனை ஒழிக்கும் திருவடியை வாழ்த்தி வணங்குதல் வேண்டும். யாவரும் வாழ்த்தி நல்ல மனத்தோடு இருக்கும் வரத்தைப் பெற்றவர் திருநீலகண்ட நாயனார். திருநீலகண்ட நாயனார் தில்லையிலே வேட்கோவர் குலத்தில் உதித்தவரென்றும், திருச்சிற்றம்பலத்தின்கண்ணே தாண்டவம் புரியும் இறைவன்மாட்டுத் திரிகரணங்களினும் அன்பு செய்கின்றவரென்றும், இச் செய்யுளால் பெறப்பட்டது. இறைவரோ மன்னுயிர்களினாலே அறிதற்கு அருமையானவர். உயிர்களின் துன்பம் போக்குதற்கு இறைவரது அருளானது நேரே பெறப்படுமாயின் உயிர்களுக்கு இறுதியை விளைவிக்கலாம். துன்பம் விளையாது அவைகளுக்கு அதனைப் போக்குதற்கு வழியாக மற்றவர் மீது அவ்வருளைச் செலுத்தி அவர் மூலமாகப் பெறும் அருளே இன்பம் விளைவிக்கும். ஒரு பச்சிளங்குழவிக்கு மிக வேகத்தோடுள்ள ஒரு மருந்தை உண்பித்தோமாகில், அம்மருந்து அக்குழவிக்கு இறப்பினைத் தரலாம். ஆனால் அம்மருந்தை அக்குழவியின் தாய்க்குக் கொடுத்து அவளது கலசங்களிற் சுரந்து நிற்கும் பாலின் வழியாகக் குழந்தைக்கு

உண்பித்தோமானுல் அக்குழந்தையின் நோய் நீங்குவது கண்கூடு. அவ்வாறே இறைவரும் தன் கருணை நோக்கத்தை அம்மையார்மீது செலுத்தி அவ்வருள் மன்னுயிர்களுக்குப் பாவிக்கப்படுகின்றது என்பதனை விளக்க, "மாதொரு பாகநோக்கி" என்ருர்.

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாது
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
மையமீன் றளித்த தெய்வக் கற்பின்
அருட்சூல் கொண்ட வையரித் தடங்கட்
டிருமாண் சாயத் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்த"

என வரும் குமரகுருபரர் ஆன்றமொழிகள் கருதத்தக்கன. பல்லுயிர்களுக்கும் தாயானமையால் அம்மையார் உண்ட மருந்து, உயிர்களைப்பற்றிய நோய்களை அறுப்பதற்குச் சாதகம் ஆகின்றது. எனவே இறைவர் நோக்கம் அம்மையார்மீது பட்டு உயிர்களுக்கு உண்மைப் பயனைத் தருவதாயிற்று. இறைவனது தனிக்கூத்து, உயிர்களது நன்மையைக் கருதியே செய்யப்பட்டது.

சைவசித்தாந்தக் கருத்துகளும், அரிய காவிய நயங்களும் அன்புப்பெருக்கும் அருள் மொழிகளும் நிறைந்த புராணங்களுள் சிறந்தது இப் பெரியபுராணம். பல நூல்கள் உண்மைப் பொருளைப் பிறருக்குக் காட்டுவிக்கும் செயலுடைமையின்மையான் அவை நிராகரிக்கப்படவேண்டும். ஏது அப்பொருளின் இலக்கணங்களை விளக்குவதோ, அதனை அடைவதற்கு விதிகளைக்காட்டி அவ்வாறு ஒழுகிய உயிர்களுக்கு இறைவன் திருவடியை அடையச் செய்வதோ, அதுவே மெய்ஞ்ஞானம் தரும் நூல். அதுதான் யாவராலும் போற்றும் தகைமையது. அத்துணைச் சிறப்பினை வாய்ந்த இப்புராணம் இறைவனுக்கு அன்பு செலுத்தும் நிலைமையைத் தந்து அவனது அருளைப் பெறும்படியாகச் செய்விக்கும் தன்மையுடைத்தாகும்.

# 19. வள்ளி சன்மார்க்கம்*

**முன்னுரை:** இச்சொற்றொடர் "கள்ளக்கு வாற்பை தொள்ளைப் புலாற்பை" எனத்தொடங்கும் திருப்புகழ்ப் பாடலில் வருகின்றது. இச்சொற்றொடரின் பொருள் "வள்ளி அம்மையார் கடைப்பிடித்துக் காட்டிய நன்னெறி" என்பதாகும். அஃதாவது, 'தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே" என அப்பர் பெருமான் கூறுதல்போல, யாரொருவர்தன்னை இழந்து யான் எனது என்பது அற்றுத் தலைவனை நாடுகின்றனரோ, அவர்க்கு இறைவன் தானே நாடிவந்து அருள் புரிவான் என்பதாகும். அரிய இம்மறை நுண்பொருளைத் தான் முருகப்பிரான் சிவபெருமானுக்குச் செவியறிவுறுத்தார் என்று, "ஐயா! அருணகிரி அப்பா! உனைப்போல மெய்யாக ஓர் சொல் விளம்பினார்யார்" எனத் தாயுமானவர் வியந்து பாராட்டும் பெருமை பெற்ற அருணகிரிநாதர், தமது திருப்புகழிற் பலவிடங்களிற் குறிப்பிடுகின்ருர். எனவே, "வள்ளி சன்மார்க்கம்" என அவர் குறிப்பிடும் பொருள் எத்துணைச் சிறப்புடையது என்பது விளங்கும்.

**வள்ளியம்மை மாட்சி:** வள்ளியம்மையார் முருகப்பெருமானின் இச்சாசத்தியாவார். முருகனது ஆறு திருமுகங்களுள் ஒருமுகம் எப்போதும் "குறவர்மடமகள் கொடிபோல் நுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே" என நக்கீரர் கூறுவர். "வேடுவர் சிறுமி ஒருத்திக்கு யான் வழியடிமை எனச்செப்பி, விறல அடியிணையைப்பற்றி, வேதமும் அமரரும் மெய்ச்சக்கர வாளமும் அறிய விலைப்பட்டு, மேருவில் மிகவும் எழுதிட்ட பெருமானே" எனவும், "பாளைக் குழல் வள்ளி பதம் பணியும் வேளைச் சுராபதி" எனவும், "பணியா என வள்ளி பதம் பணியும் தணியா அதிமோக தயாபரனே" எனவும் பிற

*இது நம் சமாஜத் தலைவர் இராவ்சாகிப் திரு. க. முருகேச முதலியார் பி.ஏ. அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் "வள்ளியம்மை திருமணம்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தியபோது எடுத்தெழுதிய குறிப்புக்களைத் தழுவியது. கட்டுரையாக்கியவர்: புலவர் முருகவேள், எம். ஏ. எல்.

வாறும், அருணகிரியார் வள்ளியினிடத்தில் முருகன் கொண்டுள்ள அன்பின் திறனைப் பற்பலவாறு பாடுகின்றார். திருப்புகழிற் பல இடங்களில் முருகன் வள்ளி இருந்த காட்டுக்கு அடிமைக் கும்பிடு போட்டார் - வள்ளியம்மைக்குக் குழை ஓலையில் அடிமைச் சாசனம் எழுதினார் - வள்ளியின் பால் நீயே எனக்குத் தஞ்சம் என்றார் - வள்ளியை அருச்சித்தார் - வள்ளியின் காலை வருடினார் என்றெல்லாம் கூறப் பெற்றிருத்தல் காணலாம். தெய்வ வள்ளி, ஞானக்குறமகள், பதிவ்ரதை, சோதிப்ரகாசச் செயலாள் எனப் பல வகையில் திருப்புகழ் வள்ளியம்மையினைப் புகழ்ந்து போற்றும்.

**வள்ளியம்மை வரலாறு :** திருமாலின் கண்களில் தோன்றிய அமிழ்தவல்லி சுந்தரவல்லி என்னும் பெண்கள் இருவரும் தவங்கிடந்து வழிபட்டுத், தம்மை மணம் செய்துகொள்ள வேண்டும் என முருகனை வரம் கேட்டனர். முருகப்பிரான் அருளியவாறு அமிழ்தவல்லி விண்ணுலகம் சென்று, தெய்வயானை என்னும் பெயருடன் வளர்ந்து வந்தாள். அவ்வாறே சுந்தரவல்லி என்பவள் மண்ணுலகில் தொண்டை நாட்டில் மேற்பாடி என்னும் ஊருக்கு அருகில் உள்ள மலைச்சாரலில், சிவ முனிவர் அருள் நோக்கால் ஒரு மான் வயிற்றில் மகளாகத் தோன்றி, "பத்திபடு வள்ளிப் படுகுழியில் வந்திடலால், வாய்த்த இவள் நாமம் வள்ளி" எனப் பெயர்வய்தி, வேடர்களால் எடுத்து வளர்க்கப் பெற்று, பின்னர் முருகனால் களவு கற்பு என்னும் தமிழ் நெறிகள் இரண்டனுள், களவு நெறிக்கேற்ப மணந்து கொள்ளப் பெற்றாள் என்பது வரலாறு. பரிபாடல் என்னும் சங்கத் தொகை நூல், "நான் மறை விரித்து நல்லிசை விளக்கும், வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது" எனத் தொடங்கி, வள்ளியம்மையின் சிறப்பைக் கூற முற்பட்டு, களவிற் புணர்ச்சியின் சிறப்பைக் கூறி, அக்களவிற் புணர்ச்சி பெற்றமையான் வள்ளியம்மை சிறந்தவாறும், அக்களவியற் புணர்ச்சி நெறியுரைக்கும் தமிழை ஆராய்ந்தமையான் முருகன் சிறந்தவாறும் கூறுதல் காணலாம்! இத்தகைய சிறப்புடைய வள்ளியம்மை வரலாற்றின்கண் அரிய பல மெய்ப்பொருள் நுட்பக் கருத்துக்கள் பெரிதும் மறைந்து செறிந்து கிடக்கின்றன! இக் குறிப்பை,



"உலைப்படும் மெழுக தென்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல வருந்தியே இரங்கா நின்றான்
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலில் தோன்றி
அலைப்படு தன்மைத் தன்றே அறுமுகன் ஆடல் எல்லாம்"

எனக் கச்சியப்பர் புலப்படுத்தியருளல் உளங்கொளற்பாலது. எனவே, வள்ளியம்மை வரலாற்றின்கண் விளங்கும் அரிய பல நுண்பொருள்கள் யாவை என இங்குச் சிறிது ஆராய்வோம்.

**வள்ளி சன்மார்க்க மறையுள் பொருள்கள் :** வள்ளியம்மை முருகனை மணம் புணர்ந்த கதை, ஓர் உயிரானது இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேற்றைப்பெறும் நிலையினை உணர்த்துகின்றது. எனவே, வள்ளியம்மை உயிர், முருகன் இறைவன், மணம் புணர்தல் இரண்டறக் கலத்தல் எனத் தெளியலாம். வள்ளியம்மை "தழைபுனைந்து தனதுணர்வின்றியே உழையவின் வந்து உதித்தனள்" என்பது, உயிரானது திருவருளினாலே மாயா தத்துவங்களாலாகிய உடம்பிற் புகும் எனவும், அவ்வுடம்பிற் புகுந்தபின் உயிர் தன் பழைய உணர்ச்சிகள் நீங்கப் பெறும் எனவும் குறிப்பிக்கின்றது. வள்ளி மான் வயிற்றில் தோன்றினாள் என்புழி, மான் என்பது மூலப் பிரகிருதியைக் குறிக்கும் பரியாயச் சொல்லாதல் காணலாம். அவள் வள்ளிக்குழியில் கிடந்தாள் என்பது, தூலசரீர கர்ப்பம் அல்லது 'கரிட்ட ஆணவக் கருவறை' என்பதன்கண் உயிர்தங்கிக் கிடக்கும் நிலையைக் குறிக்கும். ஏனைய வேடர்களாகிய பரிசனங்கள் சூழப் போந்த வேடர்குலத்தலைவனாகிய நம்பிராசன் வள்ளியினைக் கண்டெடுத்துச் சென்று மனைவியிடம் கொடுத்துத் தன் வீட்டில் வளர்த்தான் என்புழி, பரிசனங்களாகிய வேடர்கள் கன்மேந்திரிய ஞானேந்திரியங்களையும், நம்பி ராசனின் வீடு உலகத்தையும், அவனது மனைவி திரோதான சத்தியையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இங்ஙனம்,

"முல்லைப் புறவ முதல்வன் திருமடந்தை
கொல்லைக் குறிஞ்சிக் கிழவன் மகளாகிச்
சில்லைப்புன் கூரைச் சிறுகுடியில் சேர்ந்தனளால்
தொல்லைத் தனித்தன்மை தோன்றியவா றுற்றதுபோல்"

என்றது, கேவல சகல சுத்தநிலைகளை ஒருவகையிற் குறித்த

தாகக் கொள்ளப்படும். அம்மை சிறு குழவியாய்ச் சின்னுள் தொட்டில் வாழ்க்கையளாய்க் கிடந்தமை, உயிரானது அறிவு விளக்கம் சிறிதுமின்றி உலகாயதம் முதலிய புறப் புறச் சமயங்களில் உழலும் தன்மையை உணர்த்துவதாகும். அம்மை வேடர்களின் சூழலில் வளர்ந்து வந்தமை, "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனை" எனவும், "மன்னவன் தன் மகன் வேடர் இடத்தே தங்கி வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்ப" எனவும் முறையே வரும் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் பகுதிகளை நினைப்பிக்கின்றது. அம்மை பின்னர்ச் சிறிது வளர்ந்து சிற்றில் இழைத்தும் சிறுசோறு அமைத்தும் விளையாடியமை, உயிரானது புறச் சமய நெறிகளில் ஈடுபட்டு உழலுதலை உணர்த்தும். பேதைப்பருவம் பெதும்பைப் பருவங்களை அம்மை எய்துதல், உயிரானது அகப்புறச்சமயத்தும் அகச்சமயத்தும் சார்ந்துவருதலைக் குறிப்பதாகக் கொள்ளப்படும். அம்மையார் பன்னிரண்டாம் அகவை நிரம்புதல், உயிரானது சித்தாந்த சைவச் செந்நெறியைத் தலைப்பட்டு அவ்வாழ்க்கையினைத் தொடங்குதல் உணர்த்தும்.

"காட்டில் எளிதுற்ற கடவுண்மணியைக் கொணர்ந்து
கூட்டில் இருளோட்டக் குருகுய்த்த வாறன்றே
நீட்டுசுடர் வேற்குமரன் தேவியைத் தெள்ளமுதைப்
பூட்டுசிலைக் கையர் புனங்காப்ப வைத்ததுவே"

என்றபடி, அம்மை தினைப்புனம் காக்க முற்பட்டமை, உயிரானது பலவகைப்பட்ட புண்ணியங்களைச் செய்ய முயலுதலைக் குறிக்கும். நாரதர் வள்ளியம்மையைக் கண்டு முருகனுக்குச் சென்று கூறுதலும், வள்ளியை மணம்புரிந்து அருள் செய்க என அவரை வேண்டுதலும், ஆதிசத்தி மலத்தைப் பக்குவப்படுத்தி உயிர்க்கு மலபரிபாக நிலையை வருவித்தலைத் தெரிவிக்கும். முருகன் வள்ளியை மணம்புணர வருதல், ஞானாசிரியன் தனக்கினிய மாணவனை நோக்கித் தலைப்பட வருதலாகும். வள்ளியும் முருகனும் உரையாடுங்கால் வேடர்கள் வருதல், ஞானாசிரியனைக் கண்டதனுல் நன்னெறி தலைப்படப்புகும் உயிரை, ஆறுகோடி மாயா சக்திகள் வேறு வேறு தம் மாயைகள் தொடங்கி அலைக்க முயலுதல் போல்வதாகும். முருகன் வள்ளியின்



பாற்பேசுதல், ஞானாசிரியன் முதற்கண் செய்யும் வாசக தீக்கையைக் குறிப்பதாகும்.

"மொழியொன்று புகலாயெனின் முறுவலும் புரியாயெனின்
விழியொன்று நோக்காயெனின் விரகத் துழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டாயெனின் மனமுஞ்சற் றுருகாயெனின்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகம் தவிர்தி"

என அம்மையின்பால் முருகன் வேண்டுதல் போலவே, ஞானாசிரியனும் தன் இனிய மாணவனுக்குப் "பராமுகம் தவிர்தி" என ஞானவுரை பகர்ந்தருள்கின்றான்! "பராமுகம் தவிர்தி" என்னும் ஞானோபதேசம், மாணவனுக்கு "ஒரு நெறிய மனம் வைத்துணர்" "இரண்டுற மனம் வையேல்" "வைத்த உள்ளம் மாற்ற வேண்டா" "ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை" என்பன போல வரும் திருமொழிகளின் பொருளை அறிவுறுத்துவதாகும்.

இனி, வேடர்கள் வருங்கால் முருகன் வேங்கைமரமாய்த் தினைப்புனத்தில் நின்றான் என்பது, ஐம்பொறிகள் தன்னை நிலைகலக்க முயலும்போது, உயிர் தனது வேதாகம சாத்திர நூலறிவால் மனத்தை ஒருவழிப்படுத்தி நிலையின் நீங்கப்பெறாத உறுதியாக இருக்க முயலுதலைப் புலப்படுத்தும்.

"ஆங்கது காலை தன்னில் அடிமுதல் மறைகள் ஆக
ஓங்கிய கலைகள் எல்லாம் உயர்சினை யதாகப்
பாங்கமர் கலை முற்றும் பல்தழை யாகத் தானோர்
வேங்கையின் உருவ மாகி வேற்படை வீரன் நின்றான்"

என்னும் பாடலாற் கச்சியப்பரும் இக்குறிப்பை விளக்கியருளி இருத்தல் அறிந்தின்புறற்பாலதொன்றாகும்.

இனி, முருகன் அம்மையை நோக்கிப் பலவகை விருப்புரைகள் கிளத்த, அம்மை "இழிகுலமாயே எயினர் பாவையான்" எனத் தம்மைக் கூறிக்கொள்ளுதல், உயிர் தன்னைத் தானே அறிந்துகொள்ளாத அறியாமை நிலையை விளக்குவதாகும். அதுபோது வேடர்கள் மீண்டும் வருதலைக் கண்டு, முருகன் "நாடுபுகழ் சைவ நற்றவ விருத்த வேட"மது கொள்ளுதல், உயிர் புலன்களை அடக்கித் தூயதவ

நன்னெறியே சேர்வதற்கு ஆசான் முயலுதலைக் காட்டும். அந்நிலையில் முருகன் குறவர் செம்மலுக்குத் திருநீறு ஈந்தல், சிவதீக்கையிற் செய்யப்படும் முதற்செயலை உணர்த்தும். பின்னர் அம்மை முருகனாகிய முதியவர்க்குத் தேனொடு கனியும் மாவும் செங்கையாற் கொடுத்தல், ஞானாசிரியனுக்கு மாணவன் தன் உடல்பொருள் உயிர்களை ஒப்புவித்து "ஆத்தும நிவேதனம்" செய்ய முற்படுவதைக் குறிக்கும். அதுகாலை, முருகன் வள்ளியை நோக்கி, "ஆகத்தைவருத்து கின்ற அரும்பசி தவிர்த்தாய்! தெண்ணீர்த் தாகத்தை அவித்தாய்! மேகத்தை அனைய கூந்தல் மெல்லியல், வினையேன் கொண்ட மோகத்தைத் தணித்தியாயின் முடிந்தது என் குறை" என்று கூறுதல், "ஏகபோகமாய் நீயும் நானுமாய்" என்றபடி இறைவன் உயிரோடு இரண்டறக் கலந்து நிற்க விரும்பும் பொருள் நிலையைப் புலப்படுத்துகின்றது. அம்மை அதனைக் கேட்டு,

"நத்துப் புரைமுடியீர்! நல்லுணர்வு சற்றுமிலீர்!
எத்துக்கு மூத்தீர்? இழிகுலத்தேன் தன்னை வெஃகிப்
பித்துக்கொண் டாற்போற் பிதற்றினீர்! இவ்வேடர்
கொத்துக்கெல் லாம்ஓர் கொடும்பழியைச் செய்நீரே!"

எனச் சினந்து கூறல், "போதம் மேலாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்" உயிரை மலவாதனை தாக்குமாற்றை உணர்த்துகின்றது. முருகன் விநாயகக் கடவுளைத் துதித்து யானையாக வரச் செய்தல், தற்போத முனைப்புக் கெட ஞானாசிரியன் உயிருக்குப் பிரணவ மந்திரோபதேசம் செய்தலாகும். பிரணவ மந்திர உபதேசம் செய்ய, உயிர்க்குத் தற்போதம் அடங்கும். அப்பொழுது உயிர் எல்லாம் திருவருளின் செயலே தன்செயல் அன்று எனத் தெளிந்து கொள்ளும். தெளிந்தால், உயிர் கடவுளை முன்னிட்டுத் தான் அவரில் அடங்கும். இக்கருத்தையே,

"அன்ன தொருகாலை அரமா முகக்கடவுள்
முன்னொருசார் வந்து முதுகளிற்றின் வேடொத்துப்
பின்னொருசார் வந்து பிடியின் மருப்பூன்ற
இன்னலே நின்றாள் எழில்விரத் துவளேபோல்"



என்னும் பாடலால் கச்சியப்பர் குறிப்பிட்டு ஒருவகையில் விளக்குதல் காணலாம். பின்னர் அம்மைக்கு முருகன் காட்சி தருதல், உயிர் எய்தப் பெறும் "சிவதரிசன" நிலையை விளக்கும். ஆண்டு அம்மைக்குத் தோழியாகக் கூறப்படுபவள், இறைவன் திருவருளேயாம். முருகன் தோழியை இசைவித்தமை, விசேட தீக்கையெனலாம். வள்ளியம்மை மீண்டும் தினைப்புனம் காக்கப் போதல், எஞ்சிநின்ற வினையின் பயனை உயிர் துய்த்தொழித்தலைக் குறிக்கும். வேடர்கள் வள்ளியை மீட்க முயல்வது, பொறி புலன்களின் இறுதி மயக்க முயற்சியை உணர்த்தும். சேவல்கூவுதல், "அஞ்சல் நம்புமதி" என இறைவன் உயிர்க்கு அருளிச் செய்ததைப் புலப்படுத்தும். வேடர்கள் மயங்கி விழுதல், உயிரின் மலபந்தங்கள் அற்றொழிதலைக் குறிப்பிக்கும். அங்கு நாரதர் வருதல், அதி தீவிர சத்திநிபாதம் பதிதலாகும். முருகன் அருளால் அம்மை வேடர்களை மீட்டும் எழுப்புவித்தல், உயிர் தன் கரணங்கள் சிவகரணங்களாக மாறப்பெறுதலைக் காட்டும். முருகன் வள்ளியை முறைப்படி மணம்புணர்தல், மிக மேலான நிர்வாணதீக்கை நிலையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். முருகன் வள்ளியுடன் திருத்தணிகை சார்தல், உயிர் மலங்கள் ஒழிந்த நிலையில் இறையருளின்பிற் கலந்தொன்றித் திளைக்கும் சித்தாந்த முத்தி நிலையைக் குறிப்பதாகும்.

முடிவுரை: எனவே, "வள்ளி சன்மார்க்கம்" என்னும் அழகிய இனிய அருந்தொடர் குறிப்பிடும் வள்ளி திருமணப் படலவரலாறனது, உயிர்கள் படிமுறையாகச் சிவநெறியை அடைந்து, நால்வகை நெறிகளாகிய சரியை கிரியை யோகம் ஞானம் என்பவற்றைக் கடைப்பிடித்து, வீடுபெற்றுய்யும் உண்மையினை உணர்த்துவதாக, இங்ஙனம் அறிஞர்கள் அதன் உட்கிடையாய மெய்ப்பொருளை விளக்குவர். இனி, சூரபதுமனுடைய மதம் "மிண்டிய மாயாவாதம்" என்றும், தக்கன்மதம் பாஞ்சராத்திரம் என்றும், தாருகாவன முனிவர்களின் மதம் பூர்வமீமாம்சை என்றும், இந்திரன் மதம் உலகாயதம் என்றும், இம்மதங்களெல்லாம் அவற்றிற்குரியவர்கள் அழிக்கவும் அடக்கவும் பட்டதனால் மறந்தொழிக்கப் பெற்றுவிடவே, "வள்ளியம்மை திருமணப்படலம்" சித்தாந்தச் செந்நெறியைச்

சுபக்க முறையால் நிறுவி நிலைநாட்டியதாகும் என்றும் பிறிதொருவகையில் அறிஞர்கள் கூறுவது உண்டு. "வள்ளி சன்மார்க்கம்" குறிக்கும் இத்தகைய சிறந்த சித்தாந்தச் செந்நெறியைக் கடைப்பிடித்து, நம்மனோர் அனைவரும் அன்பு நெறி நின்று நன்றொழுகி இன்பநிலை தலைப்படுதற்கு, எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணை செய்வதாக!

---

## 20. சைவ வொழுக்கம்*

காப்பு

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடுவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில்வாழ் வே.

தந்தைதாய் ஆவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பம்நமக் காவானும்—எந்தமுயிர்
தானாகு வானும் சரணாகு வானுமருட்
கோனாகு வானும் குரு.

உலகில் மக்களாகப் பிறந்தார் எல்லோரும் விடியற் காலை எழுதல் வேண்டும். அங்ஙனம் எழும் சைவ மக்கள், எழும்போதே சிவபெருமானை எண்ணிச் சிவ சிவ என்று சொல்லிக்கொண்டே எழுதல் வேண்டும். படுக்கை யறையில் முன்னரே வைத்துள்ள நீர்கொண்டு ஆம் அளவு சுத்தி செய்து, முத்தி விரும்பினோர் வடக்கு முகமாகவும், போகம் விரும்பினோர் கிழக்கு முகமாகவும், இரண்டும் வேண்டினோர் வடக்கு முகமாகவும் இருந்து, தூல ஐந்தெழுத்தையேனும் சூக்கும ஐந்தெழுத்தையேனும் இரண்டையுமேனும் தாம் உகந்த இறைவனது திருநாமத்தையேனும் சொல்லித், திருநீற்றினை இட்டுக்கொளல் வேண்டும். பின் சிவபெருமானை நினைந்து,

"படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்சென்
னாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப்பும்
உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம்பலத் தரனே."

எனத் துதித்துப் பின் அம்மையாரை நினைந்து,

"பார்தொழுத சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சீர்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
ஆர்க்கைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சார்தனித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி."

எனத் துதித்துப் பின் விநாயகரை எண்ணி,

"திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை."

எனத் துதித்துப் பின் முருகப்பிரானை நினைந்து,

"முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்."

---

*இச் சைவ வொழுக்கம், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால் எழுதப்பட்டது.

எனத் துதித்துப், பின் நந்தியெம்பெருமானை நினைத்து,

"அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லாம் முதற்குரு நாதன் ஆகிப்
பங்கயத் தனவன் மாலும் வேத்திரப் படை பொறுத்த
செங்கையெம் பெருமான் நந்தி சேவடிக் கமலம் போற்றி."

எனத் துதித்துப் பின் சைவ சமயாசாரியர்களை நினைத்து,

"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி."

எனத் துதித்துப் பின் சந்தானாசாரியர்களை நினைத்து,

"மெய்கண்டார் போற்றி மிகுசீர் அருணந்திப்
பொய்கெடு அருணந்தி யார்போற்றி—தெய்வமறை
ஞானசம் பந்தர் நவிலும் உமாபதியார்
ஆனபெரி யார்போற்றி யே."

எனத் துதித்துப் பின் தமக்குபதேசித்த குருவை நினைத்து,

"போர்த்தேனை ஆண்ட பொருவில் பெருருவே
மார்த்தர் இருளகற்றும் மாசோதீ—நீர்த்தமிழின்
நின்னை வழுத்திடுவேன் நின்தாள் உளங்கொள்வேன்
என்னையும் உய்விப்ப தென்று."

எனத் துதித்துக் காரைக்காலம்மையாரையும், திலகவதியாரையும், மங்கையர்க்கரசியாரையும், ஞானத்தாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்த பெரியார்களையும் நினைக்க. பின் அன்றைய விசேடத்தையும் அன்றுசெய்ய இருக்குஞ் செயல்களையும் செய்யும் முறையினையும் அதற்கு வரும் இடையூறுகளையும் அவற்றை நிவர்த்திக்கும் உபாயங்களையும் அச்செயலால் உண்டாம் பயனையும் நினைத்துக் கொள்க. பின்,

"வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க



நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்."

என வாழ்த்தித் திருநீறிட்டு வெளிவருக. இவ்வணம் தனித்து வீட்டிலுள்ளாரோடு இருந்துந் தோத்திரஞ் செய்க.

வெளிவந்தபின் இருவகை உபாதிகளையும் போக்கிச் சுத்தமாக்கி, பல் விளக்கி வாய்க்கொப்புளித்து முகங்கழுவி, முற்கூறிய மந்திரங்களைச் சொல்லித் திருநீறிட்டு, வீட்டிலுள்ள விநாயக மூர்த்தி முதலிய மூர்த்திகளைத் தரிசித்துத், தோத்திரித்து, நமஸ்கரித்து, வேண்டித் திருநீறிடுக. வீட்டிலுள்ள பெரியோரை வழிபடுக. பூக்குடலைகொண்டு தம் தோட்டத்திலோ பிற இடங்களிலோ உள்ள மலர்களை வில்வம் அறுகு முதலிய பத்திரங்களை எடுத்துத் தண்ணீர் தெளித்துப் பன்னீர் இலைபோல் மூடி வைக்க. பிறகு தொழில் முறையைக் கவனிக்க.

பின் ஆற்றிலோ தடாகத்திலோ பிற இடங்களிலோ முழுகவேண்டும். முழுகத் தொடங்குமுன் இறைவனை நினைத்து, அதிகோர அதிபாதகம் செய்த பாவங்களை எல்லாம் போக்கி ஆட்கொள்ள வேண்டும் எனச் சங்கற்பஞ் செய்து, ஐந்தெழுத்து முதலியவற்றைச் சொல்லிக்கொண்டு முழுக வேண்டும். இறைவனைத் துதித்து ஈரத்தைத் துவட்டிக்கொண்டு விபூதியைப் பஞ்சாக்ஷரஞ் சொல்லி இட்டுக்கொண்டு உலர்ந்த வஸ்திரம் உடுத்திக்கொள்ள வேண்டும்.

உதகத்தை ஒரு பாத்திரத்தில் வடித்தெடுத்து, சிவபெருமானைத் துதித்துக் கொண்டே விநாயக மூர்த்தி முதலிய மூர்த்திகளுள்ள பூசை அறையை அடைந்து, பஞ்சாக்ஷரஞ் சொல்லி நீர் தெளித்துத்தெளித்த இடத்தில் ஜலபாத்திரத்தை வைக்க. ஆசனத்தில் வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருக்க. குருவை, அம்பிகையோடு கூடிய சிவனை, இஷ்ட தேவதையை நினைக்க. திருநீற்றினை ஜலத்தோடு கூட்டாது உத்தூளனமாகப் பஞ்சாக்ஷரஞ் சொல்லித் தலை, நெற்றி, மார்பு, இரண்டு தோள் ஆகிய இவ்விடங்களில் பூசுக. பின் ஜலத்தோடு கூட்டிக் குழைத்துப் பஞ்சாக்ஷரஞ் சொல்லியேனும் பஞ்சப்பிரம மந்திரஞ் சொல்லியேனும் தலை, நெற்றி, மார்பு, கொப்பூழ் இரண்டு முழந்தாள், இரண்டு தோள், இரண்டு முழங்கை, இரண்டு

மணிக்கட்டு, இரண்டு விலாப்புறம், முதுகு, கழுத்து ஆகிய பதினாறு இடங்களிலும் இடுக. இடுங்கால் நெற்றி மார்பு இரண்டுதோள் ஆகிய நான்கிடங்களிலும் ஆறங்குல நீளமும் மற்றையிடங்களில் ஒவ்வோர் அங்குல நீளமும் இடல்வேண்டும். பின் பஞ்சாக்ஷரம் சொல்லிப் பூசித்து உருத்திராக்கம் அணிக. உடம்பில் ஓர் உருத்திராக்கம் எப்போதும் இருக்கலாம். 32 மணிமாலை பூஜா காலத்தில் கழுத்திலிருத்தல் நலம்.

பிறகு தம் குருமூர்த்திகள் அறிவித்தபடி அனுஷ்டானஞ் செய்தல் வேண்டும். பிறகு பஞ்சாக்ஷர ஜபஞ் செய்க. செய்யுங்கால் ஆசாரியர் அறிவித்தபடி சிவபெருமானை அம்பிகையோடு ஓரிடத்தில் இருத்தி, மற்றைய எண்ணங்களை அறவே மறந்து, மனத்தை அப்பெருமானைப் பாராட்டியொடு எண்ணுவதிலும், வாக்கை அம்மந்திரத்தைச் சொல்வதிலும், காயத்திற் சிறந்த கண்ணை உள்முகமாகப் பார்ப்பதிலும் நிறுத்தி ஜபஞ் செய்க. பிறகு திருநீறெடுத்து, குருவை, அம்பிகையோடு கூடிய அரனை வேண்டி இடுக. வீட்டிலுள்ள விநாயக மூர்த்தி முதலிய மூர்த்திகளைப் பூசிக்க; தரிசிக்க; தோத்திரிக்க; அலங்கரிக்க; வேண்டியவைகளைப் பிரார்த்தித்துக்கொள்க. திருநீறிடுக; மனைமக்களுக்குந் தருக. தோத்திரிக்குங்கால் பன்னிரு திருமுறைகளைக் கொண்டு தோத்திரஞ்செய்க. இன்றியமையாது அடியிற் காணும் பாசுரங்களைக் கொண்டு தோத்திரஞ் செய்க.

### தேவாரம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும் இவ்வையகத்தே
தொழுவார்க் கிரங்கி இருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

### திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம் பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே.



### திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே.

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

### பெரியபுராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

### வாழ்த்து

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலகம் எல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

பின் பாராயணஞ் செய்தல் வேண்டும். பன்னிரு திருமுறைகள், விநாயகர் அகவல், கபிலர் இரட்டை மணி

மாலை, கந்தரந்தாதி, திருப்புகழ் முதலியவற்றுள் ஒன்றைப் பாராயணஞ்செய்து திருநீறிடல் வேண்டும்.

பின் சிவபெருமானைப் பிராட்டியோடு நினைத்து அர்ப்பித்து, சிவப்பிரசாதமாக உண்ணல்வேண்டும். சுத்தஞ் செய்துகொண்டு திருநீறிடல் வேண்டும்.

பின் தொழில் முறையைக் கவனிக்க.

மாலையில் கைகால் அலம்பி முன்சொன்ன முறையில் திருநீற்றினை உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவும் இட்டு, அனுட்டானம் பஞ்சாக்ஷர ஜபம் செய்து திருநீறிட்டு, வீட்டிலுள்ள மூர்த்தியைத் தரிசித்துத், தோத்திரித்து, நமஸ்கரித்து வேண்டித் திருநீறிடல் வேண்டும். பின் ஆலய தரிசனம் செய்க. தினமும் ஆலயஞ்சென்று தரிசிக்க முடியாதேல் சிலகாலங் குறித்துக்கொண்டு அக்காலங்களில் தவறாது சென்று தரிசித்தல் வேண்டும். பிறகு முன்போலவே உண்ணல் வேண்டும். சிறிது உலாவல் வேண்டும். பிறகு படுத்துக்கொள்க; படுத்துக் கொள்ளுங்கால் அம்பிகையோடு கூடிய சிவபெருமானை நினைத்து நீறிட்டுத் தோத்திரஞ்செய்து பஞ்சாக்ஷரஞ் சொல்லிக்கொண்டே படுத்தல் வேண்டும். விடியற்காலை முன் சொல்லியதுபோல எழுதல் வேண்டும்.

இதுகாறுஞ் சொல்லியவையே சைவ சமயத்தைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் ஒழுக வேண்டிய ஒழுக்கம் ஆகும்.

## சில குறிப்புக்கள்

1. திருமுறைகள் பன்னிரண்டு. அவையாவன :—

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய தேவாரம், முதல்மூன்று திருமுறைகள்; திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம், நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைகள்; சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம் ஏழாந்திருமுறை; மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந்திருமுறை; திருமாளிகைத் தேவர் முதலியோரருளிய திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறை; திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாந் திருமுறை; திருவாலவாயுடையார் காரைக்காலம்மையார் முதலியோரருளியவை பதி



னோராந் திருமுறை; சேக்கிழார் அருளிய பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறை. இப்பன்னிரு திருமுறைகளையே சைவ சமயத்தைச் சார்ந்த ஆண்மக்களும் பெண்மக்களும் இன்றியமையாது படித்தல் வேண்டும்.

2. சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கு. அவையாவன:—

மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம், அருணந்தி சிவம் அருளிய சிவஞானசித்தியார், இருபா இருபஃது; திருவியலூர் உய்யவந்த தேவர் அருளிய திருவுந்தியார், திருக்கடவூர் உய்யவந்த தேவர் அருளிய திருக்களிற்றுப்படியார், திருவதிகை மனவாசகங் கடந்தார் அருளிய உண்மைவிளக்கம்.

சீகாழித் தத்துவநாதர் அருளிய உண்மைநெறிவிளக்கம், உமாபதி சிவம் அருளிய சிவப்பிரகாசம், போற்றிப் பஃறொடை, சங்கற்ப நிராகரணம், கொடிக்கவி, திருவருட்பயன், வினாவெண்பா, நெஞ்சுவிடுதூது.

இச்சாத்திரங்கள் பதினான்கையும் சைவராகிய ஆண்மக்களும் பெண்மக்களும் இன்றியமையாது ஆராய்தல் வேண்டும்.

3. சமயாசாரியர்கள் நால்வர். அவர்களாவார் :—

திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள்.

சந்தானாசாரியர்கள் நால்வர். அவர்களாவார் :—

மெய்கண்டார், அருணந்தியார், மறைஞானசம்பந்தர், உமாபதியார்.

இவ்வாசாரியர்கள் எண்மரையும் தம் பரம்பரைக் குருவினையும் சைவ ஆண்மக்களும் பெண்மக்களும் ஆசாரியர்களெனக் கருதி இன்றியமையாது போற்றல் வேண்டும்.

4. சைவர்கள் யாவரும் தம் வீட்டில் விநாயகர் முதலிய மூர்த்திகளிருக்கும் பூஜை அறை ஒன்றை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

5. சைவ ஆண்களும் பெண்களும் சற்குருவையடைந்து தீக்ஷைசெய்துகொண்டு பஞ்சாக்ஷர உபதேசம் முதலியன பெற்று இன்புறல் வேண்டும்.

### இன்றியமையா நினைவுக் குறிப்புகள்

1. பொய் சொல்லாமை. 2. கொல்லாமை.
3. கள்ளுக் குடியாமை. 4. புலால் உண்ணாமை.
5. அக்கிரம காமம் அடையாமை.

---

1. தெய்வமுண்டென்னும் எண்ணம்.
2. அத்தெய்வம் ஒன்றே என்பது.
3. அத் தெய்வத்திற்கு உருவம், பெயர், தொழில் முதலியன இல்லை.
4. நம்மை உய்விக்கும் பொருட்டுப் பல வடிவம், பெயர், தொழில் முதலியவற்றை அத்தெய்வம் மேற்கொண்டது.
5. திருநீற்றில் பற்று. 6. உருத்திராக்கத்தில் பற்று.
7. ஐந்தெழுத்தில் பற்று. 8. குருபத்தி.
9. சிவபத்தி. 10. சிவனடியார் பத்தி.
11. திருமுறையாராய்ச்சி. 12. சைவசாத்திர விசாரம்.
13. உடல்நலம்பற்றி உழைக்கும் காலம் நீங்கலாக்காலங்களில் மனம் வாக்குக் காயங்களைச் சிவபெருமானிடத்தில் செலுத்துதல்.

---

1. பிறசமயங்களைத் தூஷியாமை.
2. தம் சமயத்தில் அழுத்தம்.

---

1. பிற உயிர்களிடத்தில் இரக்கம்.

---

1. மீட்டும் பிறவாமலிருக்க முயற்சித்தல்.

---

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

---

# 21. முருகன் பெருமை*

"முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே"

நாம் வாழும் இம் மண்ணுலகம் ஒருவகையிற் பிறவுலகங்களைவிடச் சிறப்புடையதாகும். ஏனைய உலகங்களினும் இம்மண்ணுலகமே உயிர்களைச் சிவன் உய்யக் கொள்கின்ற சிறப்புடையதாய்த் திகழ்கின்றது. "புவனியிற் போய்ப் பிறவாமையின் நாள் நாம் போக்குகின்றோம் அவமே! இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்றவாறு என்று நோக்கித் திருமாலாம் அவன் விருப்பெய்தவும், மலரவன் ஆசைப்படவும், அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்" என்பது திருவாசகம். "வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனை அர்ச்சிப்பர்" என்பது சிவஞானசித்தியார். இம் மண்ணுலகின்கண் நிகழும் பிறவிவேறுபாடுகளை 'நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறவி எண்பத்துநான்கு லட்சம் யோனி பேதங்கள்' என ஆன்றோர்கள் கூறுவர். நால்வகைத் தோற்றங்களாவன:

அண்டசம்—முட்டையில் தோன்றுவன; பறவை பாம்பு மீன் நண்டு முதலியன.

சுவேதசம்—வியர்வையில் தோன்றுவன; கிருமி கீடம் விட்டில் பேன் முதலியன.

உற்பிச்சம்—வித்தில் தோன்றுவன; மரம் பூண்டு செடி கொடி போல்வன.

சராயுசம்—குடரில் தோன்றுவன; விலங்குகள் மனுடர் தேவர் முதலியோர்.

---

*இது நம் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை, பி.ஏ.,எல்.டி. அவர்கள் (1927) பிரபவ ஆவணி சோமலிங்கபுரத்தில் ஸ்ரீலஸ்ரீ ஞானியாரடிகளின் நிகழ்த்திய சொற்பொழிவைக் குறிப்பெடுத்து உதவியது. கட்டுரையாக்கியவர்: புலவர் முருகவேள், எம். ஓ. எல்.

எழுவகைப் பிறப்புக்களாவன: நிற்பன நீர்வாழ்வன ஊர்வன பறப்பன நடப்பன மக்கள் தேவர் என்பனவாம். "உரைசேரும் எண்பத்துநான்குநூறாயிரமாம்யோனிபேதம் நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான் கோயில்" எனத் திருஞானசம்பந்தரும், "ஈரிரண்டு தோற்றத்து எழுபிறப்புள் யோனி எண்பான் ஆயவந்த நான்குநூறாயிரத்துள்" எனக் குமரகுருபரரும் அருளிச் செய்துள்ளனர்:

| | | | |
|---|---|---|---|
| நிற்பன | —19 லட்சம் | நடப்பன | —10 லட்சம் |
| நீர்வாழ்வன | —10 ,, | மக்கள் | — 9 ,, |
| ஊர்வன | —15 ,, | தேவர் | —11 ,, |
| பறப்பன | —10 ,, | | 84 |

சிவப்பிரகாசம் என்னும் சைவசித்தாந்தநூல்(47) கூறும் இவ்வெண்ணிக்கையிற் சிலர் சிறிது வேறுபடக் கூறுவதும் உண்டு. "எழுபிறப்பும் தீயவை தீண்டா" என்னும் திருக்குறளின் உரையில் "ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம், நீர்பறவை நாற்காலோர் பப்பத்து, சீரிய பந்தமாம் தேவர் பதினான்கு, அயன்படைத்த அந்தமில்சீர்த் தாவரம் நாலைந்து" எனப் பரிமேலழகர் காட்டிய செய்யுளும் கண்டு அறிதற்குரியது.

இவ்வெண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனி பேதங்களையெல்லாம் கடந்து மனிதப் பிறவியிற் பிறத்தல் என்பது பெரிதும் அரிதாகும். 'அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' எனவும், 'எண்ணரிய பிறவிதனில் மானுடப்பிறவி தான் யாதினும் அரிதரிதுகாண்' எனவும் மனிதப்பிறவியின் அருமையினை ஆன்றோர் பலரும் குறிப்பிட்டுள்ளனர். அங்ஙனம் மனிதராகப் பிறக்குங்காலும், வேற்றிடங்களிலும் வேற்றுமக்கட் கூட்டத்தினரிடையிலும் பிறவாமல், நம் அருமைத் தமிழ்நாட்டில், நமது சிறந்த சைவ சமயத்திற் பிறக்கப் பெற்றது நாம் செய்த அருந்தவப் பயனேயாகும்.

"நரர்பயில் தேயம் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தான் ஆகும்!



தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கள் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே!"

இத்தகைய அருமைமிக்க மக்கட் பிறப்பு கடவுளை உணர்ந்து வழிபட்டு உயர்தற்குரியது. மனிதன் என்னும் சொல்லுக்கு 'நினைக்கின்றவன்' என்பது பொருள்: அதாவது, கடவுள் உண்டு என்று நினைக்கிறவன் என்பது கருத்து. நம்முடைய உறுப்புக்களுள் மிகவும் சிறந்தது கண். 'கண்ணிற்சிறந்த உறுப்பில்லை கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறர்இல்லை' என்பது நான்மணிக்கடிகை. கண் நமக்குச் சிறந்த உறுப்பாதல் பற்றியே கடவுள் அதனை நமது முகத்தில் தக்க இடத்தில் மிக்க பாதுகாப்புடன் அமைத்து வைத்திருக்கின்றார். கண்ணைக்கொண்டு உலகைக் கண்டு அம்மட்டில் நின்றாற் பயன் இல்லை. கண்ணால் உலகைக் காண்பதுடன், அதன்வழி உலகைப் படைத்த இறைவனுண்மையையும் தெளிந்தால்தான் கண்ணுக்கும் மக்கட்கும் சிறப்பு. உலகத்தைப் பார்த்து உலகத்தை மட்டுமே அறிந்தால் விலங்கிற்கும் நமக்கும் வேறுபாடு யாதுமில்லை. கடவுள் கண்ணுக்குப் புலப்படாதவர். அவரை நாம் நம் ஊனக் கண்ணால் காணுதல் இயலாது. அவரை இத்தகையவர் என்று அறிவாகிய ஞானக்கண் கொண்டே நாம் அறிதல் கூடும்.

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி"

என மெய்கண்ட தேவர் அருளிச் செய்வர். இங்கே நாடி என்பது வினையெச்சம் அன்று. 'ஆராய்ந்தறிக' என்று பொருள்படும் இகர ஈற்று முன்னிலை ஏவல். இறைவனுண்மையினை ஆராய்ந்தறிதல் நம்மனோர்க்கு இன்றியமையாத செயலும் கடமையுமாகும்.

ஒருசிலர் கண்ணுக்குப் புலனாகாமையால் கடவுள் இல்லை எனத் துணிந்து விடுகின்றனர். பாலில் வெண்ணெய் இருப்பது கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் பாலைக் காய்ச்சிப் பிரைசேர்த்துத் தயிராக்கிக் கடைந்தால், வெண்ணெய் வெளிப்படுகின்றது. அதுபோல, நாமும் மனத்தாற் சிந்தித்

தும், வாயாற் புகழ்தும், மெய்யால் வணங்கியும் வந்தால் கடவுள் வெளிப்பட்டருள்வார்.

பாலைக் காய்ச்சுதல்—மனத்தால் நினைத்தல்
பிரைசேர்த்தல்—வாயாற் புகழ்தல்
தயிரைக் கடைதல்—மெய்யால் வணங்கல்
வெண்ணெய் வெளிப்படல்—கடவுளுண்மை விளக்கல்.

இங்ஙனம் பல்லாற்றானும் ஆராய்ந்தறிந்து உண்டென உணரத்தக்க கடவுள் ஓர்பேர் குணம் குறி இல்லாதவர். எனினும், அவர் நமக்குள்ளே உயிர்க்குயிராக விளங்கி யருள்கின்றார்.

"ஊரி லான்குணம் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரி லான்ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரி லான்உயிர்க் கடவுளாய் என்றுமே நின்றான்"

எனக் கச்சியப்ப சிவாசாரியர் பாடுவதுபோல உயிர்க்குயிராக விளங்கி நிற்றல் கடவுளியல்பாகும். ஆசிரியர் மெய்கண்ட தேவர் தமது சிவஞானபோதத்துள்,

"காட்டிய கண்ணே தனைக்காணா ; கண்ணுக்குக்
காட்டிய உள்ளத்தைக் கண்காணா ;—காட்டிய
உள்ளம் தனைக்காணா ; உள்ளத்தின் கண்ணாய
கள்வன்தான் உள்ளத்திற் காண்"

எனக் கடவுள் உயிர்க்குயிராய் மறைந்துநின்று உயிர்களுக்குப் பொருள்களைக் கண்டும் காட்டியும் உதவிவருதலை விளக்குகின்றார். "கண்ணுகிக் கரணங்கள் காணுமல் நிற்பன்" என அருணந்திசிவம் கூறுதல்போல, உயிர்களோடு உடனாய் நின்றும் பாசஞான பசுஞானங்களால் அறியப்படாமை பற்றிக் கள்வன் என்றனம் குறிப்புணர்ப்பாலது. "உள்ளங்கவர் கள்வன்" என்று திருஞானசம்பந்தரும் அருளிச் செய்தனர். கடவுளைத் "தஸ்கராணும் பதயே நம" என வேதம் போற்றுகின்றது. 'திருடர்களுக்கெல்லாம் தலைவனே வணக்கம்' என்பது அதன் பொருள். கடவுள்



உயிர்கள் அறியாவண்ணம் அவற்றுடன் உயிர்க்குயிராய் ஒற்றித்து நிற்றலையே இப்பொருண்மொழிகள் நமக்கு உணர்த்துகின்றன.

உயிர்களின்பால் உயிர்க்குயிராய் விளங்குபவன் யவனே அவனே சிவன். வசி—இடத்தல், தங்குதல் ; எல்லாப் பொருள்களிலும் உயிர்களிலும் தங்கி இருப்பவன் சிவன். தசை என்பது சதை என்று எழுத்துநிலை மாற்றம் (Metathesis) பெற்றதுபோல, வசி என்பது சிவ என்றாயிற்று எனவும் கொள்வர். சிவ என்னும் பகுதியின் அடியாகத் தோன்றிய சிவன் என்னும் சொல்லும் 'எங்கும் தங்கி இருப்பவன்' எனப் பொருள்தரும். "அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" என்பது திருவருட் பயன். சிவபெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் வேறுபாடு சிறிதும் இல்லை. இருவரும் ஒருவரே யாவர். இவ்வுண்மையினை,

"ஆதலின் நமது சத்தி அறுமுகன் ! அவனும் யாமும்
பேதகம் அன்றால் ! நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான் !
ஏதமில் குழவி போல்வான் ! யாவையும் உணர்ந்தான் ! சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான் !"

எனச் சிவபெருமானே அம்பிகைக்குக் கூறுவதாக வரும் கந்தபுராணச் செய்யுளால் அறியலாம். சிவபிரான்போலவே முருகனும் உயிர்கள்தோறும் உறைந்து நிற்றலைக் குகன் என்னும் திருப்பெயரால் தெரியலாம். குஹா என்னும் வடசொல் குகை எனப்படும். குகையாவது தகராகாசம். தகரமாகிய இதய புண்டரீகத்தில் சிதாகாசமாகிய வித்தை இருத்தலின், அது தகரவித்தை என்றும் சொல்லப்படும். யசுர்வேதத்துப் பிருஹதாரண்யக உபநிடதத்தில் தகர வித்தை இனிது விளக்கப்பட்டிருக்கின்றது. எல்லா உயிர்களினுடைய மனமலரின்கண்ணும் உறைந்தருளும் அந்தரியாமியாகிய பரமான்மா எவனோ அவன் குகன் என்க. வேதவேதாந்தங்களிற் புகழப்படும் 'குஹ' சப்தம் வேறு எந்த மூர்த்திக்கும் இல்லாமல் முருகன் ஒருவனுக்கே உரியதாய்ச் சிவனெனும் மகாமந்திரம் போன்ற மகாமந்திரமாகும். இங்ஙனம் முருகனுடைய அருமை பெருமைகளை

இத்தகைய அவனுடைய பெயர்கள் கொண்டே நாம் தெளிவுற அறியலாம். ஊரும் பேரும் குணமும் குறியும் இல்லாத பெருமான் நம்பொருட்டன்றோ, அவைகளையெல்லாம் கொண்டருளி யிருக்கின்றான்?

முருகனுக்குரிய பல பெயர்களில் சுப்ரமண்யம் என்பதும் ஒன்று. ஸு - ஆனந்தம், ப்ரஹ்ம - பரவஸ்து, ண்ய; (ண்யம்) - அதனினின்றும் உதித்துப் பிரகாசிப்பது. "ஆனந்தம் ப்ரஹ்மம்" என்று உபதேசித்த கருத்துப்படி, ஆனந்தத்தையே சொரூப லக்ஷணமாகவுள்ள பரவஸ்துவின்பால் உதித்துப் பரஞ்சோதியாய்ப் பிரகாசிப்பது என்பது பொருள். இன்பமும் ஒளியுமே வடிவாக வுடைய முருகன் இயல்பினை விளக்கும் இத்திருப்பெயரினை வேதங்களும் போற்றிப் பாராட்டியிருத்தலை,

"எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும்
பிரமனுக்கும் ஈசன் என்னத்
தக்கமுதற் பரப்பிரமம் சுரமென்றும்
எனவேதம் சாற்றும்! அல்லால்
முக்கணரும் வேள்வியிற்சுப் பிரமணியன்
தன்னையும் முக்காற் கூறும்!
இக்கருத்தை அறியாரை எவ்வாறு
விடுவிப்ப தியம்பு கின்றோ?"

என வரும் காஞ்சிப் புராணச் செய்யுளால் உணரலாம். இவ்வாறே முருகனுடைய சரவணபவன் கந்தன் குமாரன் விசாகன் முதலிய திருப்பெயர்களுக்கும் சிறந்த பொருள்கள் பல அமைந்துள்ளன.

சரவணபவன் என்பது சரம் என்னும் நாணற்புற்கள் செறிந்து காடுபோற் சூழ்ந்த பொய்கையிற் றோன்றியவன் எனப் பொருள்படும். சரம் - நாணல்; வனம் - செறிவு, நீர். வநம் என்பதில் நகரம், ரகரத்தின் முன்வந்த நகரம் ஒரு மொழிக்கண்ணதாயின் ணகரமாய்த்திரியும் என்னும் வடமொழி இலக்கணத்தின்படி, ணகரம் ஆயிற்று; நார + அயனன் என்பது நாராயணன் எனவும், ராம + அயனம் என்பது ராமாயணம் எனவும் ஆகியவாறுபோல. இனி,



ச —மங்கலம்
ர —ஒளி, கொடை
வ —சாத்துவிகம்
ண —போர்
பவன் —உதித்தவன்

எனப் பொருள்கொண்டு, மங்கலம் ஒளி கொடை சாத்துவிகம் வீரம் என்னும் சிறந்த இயல்புகளோடு தோன்றியருளியவன் எனவும் ஆன்றோர் கூறுவர். கந்தன் என்பது ஸ்கந்தம் (தோள்) என்னும் சொல்லிற் றோன்றித் தோள் வலியுடையவன் எனப் பொருள்தரும். கச்சியப்ப சிவாசாரியர் தமது கந்த புராணத்தின்கண்,

"சேவலம் வடிவம் ஆறும் திரட்டிநீ ஒன்றாய்ச் செய்தாய்
ஆதலால் கந்த னென்னும் நாமம் பெற்றான்"

"எந்தை சத்தியின் உயிரெலாம் ஒன்றுறும் எல்லை
முந்து போலவன் குவியே கூடிய முறைபோல்
அந்தம் இல்லதோர் அறுவரு வடிவமொன் றாகிக்
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்"

என விளக்கியிருத்தலும் உணரற்பாலது. சிவபெருமானது பலவகை மூர்த்தங்களுள் சோமாஸ்கந்த மூர்த்தம் என்பதும் ஒன்று. 'ஸோமாஸ்கந்த:' என்பது ஸ, உமா, ஸ்கந்த: என்னும் மூன்று வடசொற் கொண்ட சந்தியாகும். ஸ்கந்த மூர்த்தியை நடுவண் இருத்தி உமாதேவியோடு சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் நிலையே சோமாஸ்கந்த மூர்த்தம் எனப்படும்.

"மலை வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால மேவுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி இலகுவ தொக்கும்"

எனக் கச்சியப்ப சிவாசாரியர் இம்மூர்த்தம் குறித்துப் பாடியுள்ள சுவைமிகு கவிதையும் கண்டு அறிந்தின்புறத் தக்கது. சத்து (உண்மை) சித்து (அறிவு) ஆனந்தம் (இன்பம்) என்னும் மூன்றன் வடிவாகவும் இறைவன் விளங்கு

தனை இம்மூர்த்தம் விளக்குகின்றது. கணவனும் மனைவியுமாய்க் குழந்தைகளுடன் இன்பமாக வாழ விரும்புவோர் இம்மூர்த்தத்தினை வழிபட்டு நலம் எய்தலாம்.

குமாரன் என்பது பதினாறு பிராயம் உடையவன் என்றும், 'பிரஹ்மசாரி' என்றும் பொருள்படும். "பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும், தவத்தரு ஞானத்தோர்க்கு இத்தன்மைதான் தெரியுமன்றே" எனச் சிவஞானசித்தியார் கூறுதல் ஈண்டு எண்ணியுணர்தற்குரியது. நம் நாட்டிற் சிலர் பிள்ளையாரைப் பிரமசாரியாகக் கருதுவது போல, வடநாட்டில் முருகனைக் கார்த்திகேயன் என்னும் பெயரால் பிரமசாரியாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். கு - குற்சிதம், அருவருப்பு, மாரன்-நாசம் செய்பவன். அருவருப்புக்குரிய மலபந்தங்களையும் அஞ்ஞானத்தையும் நாசம் செய்து ஆன்மாக்களுக்கு அருள்செய்பவன் குமாரன் எனவும் பொருள்கொள்ளலாம். "உறுநர்த் தாங்கிய மதன் உடைநோன்றாள்" என்பது திருமுருகாற்றுப்படை.

விசாகன் என்பதும் முருகனுக்கு ஒரு திருப்பெயர். வடநூல்களில் 'விசாக நக்ஷத்ர ஜந்மன்' எனச் சொல்லப்படுதலால் வைசாகம் எனும் வைகாசி மாதத்து விசாக நக்ஷத்திரத்திற் றோன்றியவன் எனக் கூறுவர். விசாக நட்சத்திரம் ஆறு மீன்கள் கொண்டதொன்று. அவ்வாறு மீன்களும், முன் மூன்றும் பின் மூன்றுமாக விளங்கும். முன் மூன்றுள் நடுவில் உள்ளது ஒளிமயமானது; மற்ற இரண்டும் வெண்மையவாய்ப் பின் மூன்றும் கருமையவாம். நம்மாழ்வாரும் கௌதம புத்தரும் விசாகத்திற் பிறந்தவர்கள். விசாகம் ஞான நட்சத்திரம் ஆகும். மந்திரோபதேசம் செய்தற்கும் உரியது அது. அவ் விசாகத்திற் தோன்றி அருளிய முருகன், ஆறு முகங்கள் உடையவனாய்த் தனது முன் மூன்று முகத்துள் நடுவிலுள்ள ஒளிமயமாகிய முகத்தினால் சிவபெருமானுக்குத் தமிழாம் ஞானோபதேசம் புரிந்தார் என்பது கருதி மகிழ்தற்குரியது. வி-பட்சி, சாகன்-சஞ்சரிக்கின்றவன். மயிலாகிய பறவையை ஊர்தியாகக் கொண்டு உலவுபவன் எனவும் வேறொரு பொருளுண்டு.



இனி, செம்மேனி அம்மானுக்கே உரிய 'சிவன்' எனும் நாமம் போல முருகன் என்னும் திருப்பெயரும் பொருள் பல பொதிந்த சிறப்புடையதாகும். இதுபற்றியே "அரும் பெறல் மரபிற் பெரும்பெயர் முருக" என ஆசிரியர் நக்கீரனார் இத்திருப்பெயரினைப் பெரிதும் சிறப்பித்துப் புகழ்ந்தனர். முருகன் என்பது பெறுதற்கரிய பெயர்; சிறப்பினையுடைய பெயர்; பெரும்பெயர். "சொற்பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் என்றா ஐந்துடன் போற்றி அவைதுணையாக..." என்புழிப்போல, பெரும்பெயர் என்பது பெரிய பொருள் எனவும்படும். சிவஞான முனிவர் "பெரும் பெயர் எனினும் மகாவாக்கியம் எனினும் ஒக்கும்" என்பர்.

"விரிகடல் வியன் றானையொடு
முருகுறழப் பகைத்தலைச்சென்று"

என்னும் மதுரைக்காஞ்சியுள் "முருகு-தெய்வத்தன்மை" என விளக்கினர் நச்சினார்க்கினியர். தெய்வத் தன்மையாகிய நலங்கள் பலவும் ஒருங்கமைந்து திகழ்பவன் முருகன். முருகு என்பது இளமை அழகு மணம் தேன் எனவும் பொருள் பயக்கும்.

"அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி"

என்புழி, நக்கீரர் அப் பல பொருள்களையும் தொகுத்துக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். "முருகயர்ந்து வந்த முதுவாய் வேலன்" என்புழி முருகு திருவிழாவை உணர்த்தலின், முருகன் திருவிழாவுக்குரிய தேவன் எனலுமாம்.

முருகனின் இளமையும் அழகும் கடவுட்டன்மையும் எத்துணைச் சிறப்பின என்பதனைப் பகைவனாகிய சூரபன்மனே பாராட்டி புகழ்வதாகப் போதரும் கந்தபுராணப் பாடல்கள் கட்டுரைக்கும்.

"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணர்ந்திலேன் யான்!
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ ?"

" ஆயிர கோடி காமர் அழகெலாம் திரண்டொன் றாக
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந் தன்னில்
தூயநல் எழிலுக் காற்றா தென்னின், இனைய தோன்றல்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார் ?"

" திருமிய வெகுளி முற்றும் தீர்ந்தன செருவின் வைகும்
அருமிய துரோணம் புள்ளி ஆயின விழியில் தாசி
பெருமிய நிலன்பால் அன்பு பிறந்தன தமியேற் குள்ளம்
உருமிய தெள்பு தானும் உய்மெழு காரும் அன்றே !"

முருகனது பெருமையினை அவன் கொண்டுள்ள ஆறு திருமுகங்களே காட்டவல்லன எனலாம். சிவபெருமானின் தற்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் ஈசானம் என்னும் முகங்கள் ஐந்துடன், சிற்சத்தியாகிய சிவசத்தியின் அதோமுகம் என்னும் கீழ்நோக்கிய முகம் ஒன்றுமாக ஆறு திருமுகங்கள்கொண்டு, முருகன் சிவசொரூபமும் சத்திசொரூபமுமாக விளங்குகின்றான். அதோமுகத்தினை " அறிஞராயோர் சிந்திக்கும் தனது தொன்மைத் திருமுகம் " எனக் கச்சியப்பர் புகழ்வர். கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு மேல் கீழ் என்னும் ஆறு திசைகளிலும் பாவி நிற்பவன் முருகன் என்றும் கூறுவர்.

" ஆறு சமயக் கடவுள் வேறுவேறு
அன்றியான் ஒருவனே அங்கம் இருந்து
அன்பர்க்கு முத்திதரு வித்தென்று
யாவர்க்கும் அறிவித்த வதன மணியே "

" ஆறு சமயமும் தம்மில்ஒவ் வாதிங் கலைவதென்னே ?
தேறும் அறிவினர் எல்லாம் அறிந்தும் தெளிந்திலரே !
பேறு தரும்தெய்வம் யாவைக்கும் யான்பெருந் தெய்வமென்றே
வீறு முகங்கொண்டு போரூர் முருகன் விளக்கியதே !"

எனத் திருப்போரூர்ச் சந்நிதிமுறையிற் சிதம்பர சுவாமிகள் அருளிச்செய்தலால், காணபத்யம் கௌமாரம் சைவம் சாக்தம் வைணவம் சௌரம் என்னும் அறுவகைச் சமயங்களின் கடவுளாகவும் விளங்கிவருபவன் எனலாம். எனவே,



முருகனை வழிபட்டால் விநாயகர் சிவபிரான் அம்பிகை திருமால் சூரியன் ஆகிய பல கடவுளரையும் வழிபட்டுத் தம் பேறுகளையெல்லாம் ஒருங்கே பெற்றுய்யலாம் என்பது தெளிவாம். முருகன் சமஷ்டித் தெய்வம்.

சருவஞ்ஞதை - முற்றறிவு
திருப்தி - வரம்பில் இன்பம் உடைமை
அநாதிபோதம் - இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்
அலுப்தசத்தி - முடிவில் ஆற்றல் உடைமை
அனந்தசத்தி - பேரருள் உடைமை
சுவதந்திரத்துவம் - தன்வயமுடைமை

என்னும் அறுவகை இறைமைக் குணங்களும் நிறையப் பெற்றவன் முருகன் எனவும், அவனது ஆறு திருமுகங்கள் உணர்த்தும் என்பர் கச்சியப்ப சிவாசாரியர்.

" வரம்பு பாதும் இன்றி எல்லையில் அமலத் தூய
மூவிரு குணமும் செய்ய முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவ ணத்தின் பொய்கையில் வரும் ஐயன்
ஆவிகள் அருளு மாற்றால் அறுமுகம் கொண்டான் அன்றே."

இனி, ஆசிரியர் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையின்கண் முருகனது ஆறு திருமுகங்களும் நிகழ்த்தும் செயல்களைப் பின்வருமாறு கூறுகின்றார் :

1. ஒருமுகம் உலகிற்கு ஒளியை நல்குகின்றது.
2. ஒருமுகம் அன்பர்க்கு வேண்டும் வரங்களை வழங்குகின்றது.
3. ஒருமுகம் அந்தணர் வேள்வியைப் பாதுகாக்கின்றது.
4. ஒருமுகம் முனிவர்க்கு நற்பொருளை விளக்குகின்றது.
5 ஒருமுகம் அசுரரை அழித்துக் களவேள்வி புரிகின்றது.
6. ஒருமுகம் உலகில் இல்வாழ்க்கை நிகழ்தற்பொருட்டு வள்ளியம்மையாருடன் நகை யமர்கின்றது.

முருகன் தமிழ்ப் பெருங்கடவுள். மிகப் பழங்காலந் தொட்டே தமிழகத்தில் முருகன் வழிபாடு நிகழ்ந்து கொண்டு வருகின்றது. முருகனைக் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே தொல்

காப்பியர் குறிப்பிட்டிருக்கின்றார். மனித இனம் முதன் முதல் தோன்றியதும், மனித நாகரிகம் வளரத்தொடங்கியதும் குறிஞ்சி நிலமே. குறிஞ்சியாகிய மலையினை எதிர் நாற்றிசையோடு மேலும் கீழும் நோக்கின் இறையுணர்வு எழுதல் இயல்பு. முதன்முதலில் மக்கள் குறிஞ்சி நிலத்திலேயே தெய்வ வழிபாடு கொண்டனராதல்கூடும். இவ்வாற்றால் முருகனின் பழமை பெருமைகளை உணரலாம். தமிழை வளர்த்தவர்களுள் " திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் குன்றம் எறிந்த முருகவேளும் " முதன்மை மிக்கவராவர். "கொன்றைச் சடையார்க்கு ஒன்றை (யும்)த் தெரியக் கொஞ்சித் தமிழாற் பகர்வோன் " முருகன். முருகனது திருவுருவமே தமிழ்மயமாய்த் திகழ்வதாகும்.

" கண்ணிகர் மெய்யும் ; சென்னிக்
கனமுறழ் இனத்தின் கூறும் ;
மின்னிய புயங்க வேபோல்
திகழ்தரும் உயிரும் ; வேறோர்
தென்னிடற் கரிய தாரும்
எஃகமும் ; இயலிற் காட்டும்
புண்ணிய முனிக்கோர் செவ்வேள்
பொற்பதத் தடிமை தானே "

எனவரும் புலவர் புராணமுடையார் கூற்று, இதனை மெய்ப்பிக்கும். முருகன் குழந்தைவேலனைப் பாலசுப்பிரமணியனை இளைஞர்களும், வள்ளிதெய்வயானை சமேதனை இல்லறத்தினரும், பழனியாண்டவனைத் துறவறத்தினரும், சுவாமிநாதனை ஞானபண்டிதனைக் கலைஞர்களும், தேவசேனாபதியாய் வீரர்களும் ஆகிய பலரும் வழிபடத்தக்க கடவுளாய் விளங்கித் தண்ணருள் புரிகின்றான். " முருகொத் தீயே முன்னியது முடித்தலின் " எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்று, ஓர் அரசனைப் புகழ்கின்றது. அதுகொண்டு, முருகன் தனது அன்பர்கள் முன்னிய எல்லாச் செயல்களையும் இனிதே முடித்துத் தரும் இயல்பினன் என்பது விளங்கும்.

" கருவயிறு உறுகெனக் கடம்படு வோரும்
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரும்
ஐயமர் அடுகென அருச்சிப் போரும் "



ஆகப் பலர்முருகனைத் திருப்பரங்குன்றத்தில் வழிபடுவதாகப் பரிபாடல் என்னும் சங்கநூல் பாடுகின்றது. " சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் " என்பது உலகப் பழமொழி. அதன் உண்மைப் பொருள், சஷ்டி நாட்களில் விரதம் இருந்து முருகனை அன்புடன் வழிபட்டால் மகப்பேறு எய்தி மகிழலாம் என்பதே. முருகன் மிகவும் இரக்கம் உடையவன். தன்னை அடைந்த அன்பர் பிழைகளையெல்லாம் பொறுத்தருள்பவன். அவனைப் போலப் பொறுமையுடையார் பிறர் இலர்.

" போரிப் பிரான்என் பிழைபொறுத் தாலன்ன பூதலத்தே
யாரிப் படிபொறுப் பார் ?சொல்க ! இங் கறிந்தவரே !"

எனச் சிதம்பரசுவாமிகள் வியந்து மகிழ்வர். முருகனைப் போன்ற பொருட்டெய்வம் வேறொன்றில்லை. அவன் திருமுன்னர்ச் சென்று பணிந்து அவன்பால் அடைக்கலம் புகுந்தால் எல்லாத் தீங்குகளும் நீங்கி மேலான நிலையை எய்தி இன்புறுவர்.

" தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆய்வதும் வேண்டுங் கொல்லோ ? அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்!"

' முருகா ' என்பதே ம்ருத்யுஞ்சய மந்திரம். அம் மந்திரத்தை இடைவிடாது ஓதுவதனால் மரணத் துன்பத்தை வெல்வதேயன்றி, எல்லா வெற்றியும் இனிதெய்தலாம்.

" முருகா எனவோர் தரம் ஓதடியார் முடிமேல்
அருளாத செல்வம் அடையார் ! வியாதி அடைந்துழலார் !
இருகால முற்றுன்பம் எய்தார் ! பகதி புத்தியோர் !
பெருகாவல் ஊர் புரோசல நாதர் புன்னகையே !"

---

# கந்தபுராண நுட்பம்*

“ மந்தா நிலமணி வேலைப் பிரான்செவ்வை மன்னவனே
கொந்தார் குழல்மணி மேகலை நூல் நுட்பம் சொல்லுதென்னை?
சிந்தா மணியும் திருக்கோ வையும்எழு திக்கொளினும்
கந்தா உரையை எழுதல்லவ் வாறு கவின்றருளே ?

உலகின்கண் உள்ள எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்பி எக்காலும் நிற்கின்றன. “இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் தான் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்” எனத் தொல்காப்பியனாரும் இக்கருத்தைக் குறிப்பிட்டுள்ளனர். இங்ஙனம் இன்பம் விழைதலில் உயிர்கள் எல்லாம் ஒற்றுமையுடையவாகக் காணப்படினும், இன்ப நுகர்ச்சிக்குரிய பொருள்களைத் தேர்ந்து கொள்ளுதலினும், அவற்றை நுகரும் முறைகளிலும் உயிர்களிடையே பலதிற வேற்றுமைகள் காணப்படுகின்றன. மக்களுள்ளும் இத்தகைய வேறுபாடுகள் நிகழக் காண்கின்றோம். ஒருசிலர் ஸ்தூல உடம்பால் வரும் இன்பமே பெரிதென்பர். வேறு சிலர் மறுமையில் எய்தும் பூத சார சரீர இன்ப நாட்டத்தில் கருத்தைச் செலுத்தி இம்மையில் அதற்கு வேண்டியனவற்றைச் செய்வர். மற்றும் சிலர், சரீரம் இல்லாது அனுபவிக்கும் சுகமே மேலான இன்பத்திற்குரிய மோட்சம் என்று ஆராய்ந்து துணிந்து அதனைப் பெறுதற்காகவே முயற்சி செய்வர். இவ்வாறு இன்பம் பற்றிய கருத்து, மனிதர்க்கும் மனிதர்க்கும் வேறுபடுவதன்றி, ஒரு மனிதனுக்கே அவனது பருவநிலை அறிவுநிலைகளால் வெவ்வேறாக மாறுபடுவதும் உண்டு.

“ கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்

*இது நம் சைவப்பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. அவர்கள், 9—7—37 அன்று இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் நிகழ்த்திய சொற்பொழிவைக் குறிப்பெடுத்து உதவியது. கட்டுரை யாக்கியவர் : புலவர் முருகவேள், எம். ஓ. எல்.



தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே”

நாம் இன்பம் எய்தாமைக்கும் துன்பமுற்று வருந்துதலுக்கும் காரணம் நமது அறியாமையே யாகும். என்று நமக்கு அறியாமை நீங்கி அறிவு உண்டாகின்றதோ அன்றே நமக்குள்ள துன்பங்கள் நீங்கி இன்பம் பெறுவோம். அறிவு விளக்கத்தின் வாயிலாகத் தான் நாம் இன்பப்பேறு எய்துதல் இயலும். ‘ஆப்தர்’ என்போர் உள்ளது கூறுவோர். அதாவது, நமக்கு நன்மை விளைதல் வேண்டும் என விரும்பி உள்ளதை உள்ளபடி கூறுவோர். “அவனன்றி ஓர் அணுவும் அசையாதெனும் பெரிய ஆப்தர் மொழி ஒன்று கண்டால்...” எனவரும் தாயுமானவர் பாடலில், ஆப்தர் என்னும் சொல் இப்பொருளில் வருதல் காணலாம். சாமானிய மனிதர்களை நோக்கச் சிவபெருமான் நமக்கு ‘அதிபரமாப்தர்’ ஆவார். அவரைவிட நமது நன்மையை விரும்புபவர்கள் வேறு பிறர் யாரும் இலர். ஏனெனில், நமக்கு நன்மையென்று நினைத்து நாமே நம் அறியின்மையால் நமக்குத் தீமை விளைவித்துக்கொள்ளுகின்றோம். “அறிவிலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை செறுவார்க்கும் செய்தல் அரிது.” “அறிவிலான் செய்யும் பெருமிறை தானே தனக்கு.” எனவே, நம்முடைய நன்மையை விரும்புதலில் நம்மைவிடப் பெரிதும் கருத்தும் கவலையும் உடையவர் சிவபெருமானேயாம்.

“ பன்னி லாவும் மறைக்கிளவி யாவிலும்
எண்ணி லுங்கினி யான்ஒரு வன்னுளன்
என்று சேவிப் பாய்ப்புறம் போர்தபுக்கு
என்று சேர்க்கும் இன்னம்பர் ஈசனே ”

அதிபரமாப்தராகிய சிவபெருமான் உயிர்களாகிய நாம் இன்புற்று வாழப்பெறுதற் பொருட்டு “ஞானகலை யவ வித்தையும்” என்றபடி, பொருள் சொன்ற பதினெட்டு வித்தைகளை அருளிச் செய்தார். அவையாவன : இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் வேதம் நான்கும், சிட்சை வியாகரணம் நிருத்தம் சோதிடம் கற்பம் சந்தோவிசிதி என்னும் அங்கம் ஆறும், புராணம் நியாயம் மீமாம்சை மிருதி என்னும் உபாங்கம் நான்கும், ஆயுர்வேதம் வில்வேதம் காந்

...ருவ வேதம் அருத்தவேதம் என்னும் உபவேதம் நான்கும் ஆம். இவற்றைச் சிவபெருமான் சிறிதும் முயற்சி செய்யாமலும், சற்றும் சிரமம் கொள்ளாமலும் மிக இயல்பாக அருளிச் செய்தார் என்பது தோன்ற, இவற்றைப் 'பிரமத்தினது சுவாசம்' எனப் பிருகதாரணியக உபநிடதம் கூறுகின்றது. மூச்சு இயற்கையாய் எளிதாய் இனிதாய் வெளி வருவது போல, இவைகளும் இறைவனிடமிருந்து வெளி வந்தன என்பது கருத்து.

இவற்றுள் 'வேதம்' என்பது 'வித்' என்னும் பகுதியடியாகத் தோன்றி 'அறிதற்குக் கருவி' எனப் பொருள்படும். உண்மைப் பொருள்களைக் கேட்டற்குக் கருவியாதல் பற்றிச் சுருதி எனவும், நியதமாக உணர்தற்குக் கருவியாதல் பற்றி நிகமம் எனவும், தொன்றுதொட்டு வழிமுறையாகப் பயிலப்படுதலின் ஆம்நாயம் எனவும், சுயம்புவாகிய பதியினின்று தோன்றியமையால் சுயம்பு எனவும் வேதத்திற்குப் பல பெயர்கள் வழங்கும். இவ்வேதங்கள் நான்கும் ஞானகாண்டம் கருமகாண்டம் என இருவகைப்படும். வேதங்களைக் கூறவே ஆகமங்களும் அடங்கும். வேதம் பொது நூல். ஆகமம் சிறப்பு நூல். 'ஆகமம்' என்னும் சொல்லில் ஆ-உபசர்க்கம்; கம் என்னும் தாது போதல் அல்லது போய்ச் சேர்தல் எனப்பொருள்படும்; எனவே 'அணுகுதல்' என்பது திரண்ட பொருள். "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" எனவரும் திருவாசகத்தில் இப்பொருள் அமைந்திருத்தல் காணலாம். ஆ-பாசம், க-பசு, ம-பதி எனப்பொருள் கொண்டு பதிபசு பாசங்களாகிய திரிபதார்த்தங்களை விளக்குவன என்றும்; ஆ-சிவஞானம், க-மோட்சம், ம-மலநாசம் எனக்கொண்டு உயிர்களுக்கு மலத்தைக் கெடுத்து, சிவஞானத்தைத் தோற்றி, மோட்சத்தைக் கொடுப்பது என்றும் பொருள் கூறுவர். "ஆகமம் ஞானம்" என்பது பிங்கலந்தைச் சூத்திரம்.

இனி வேதத்திற்குரிய அங்கங்கள் ஆறனுள் (1) வேதங்களை எடுத்தல் (உதாத்தம்) படுத்தல் (அநுதாத்தம்) நலிதல் (சுவரிதம்) என்னும் இசை வேறுபாட்டான் உச்சரிக்குமாறு உணர்த்துவது சிட்சை. (2) வேதங்களிற் கூறும் கருமங்களை அநுட்டிக்கும் முறைமை யுணர்த்துவது கற்ப சூத்திரம். (3) வேதங்களின் எழுத்துச் சொற்பொருள் இயல்பு உணர்த்துவது வியாகரணம். (4) வேதங்களின் சொற்பொருள் உணர்விப்பது நிருத்தம். (5) வேதமந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும் அவற்றிற்கு எழுத்து இனைத்தென்றலும் உணர்த்துவது சந்தோவிசிதி. (6) வேதத்திற் கூறிய கருமங்கள் செய்தற்குரிய நாள் கோள் முதலிய கால விசேடங்களை யுணர்த்துவது சோதிடம். வேதத்துக்குச் சந்தோவிசிதி பாதமும், கற்ப சூத்திரம் கையும், சோதிடம் கண்ணும், நிருத்தம் காதும், சிட்சை நாசியும், வியாகரணம் முகமும் போல்வன ஆகலின் இவை வேதாங்கம் எனப்பட்டன.



இனி, இறைவன் உலகத்தைப் படைக்குமாறு முதலாயின கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தி உணர்த்துவது புராணம். இதிகாசமும் இதன்கண் அடங்கும். வேதப்பொருளைத் துணிதற்குப் பயன்படும் பிரமாணம் முதலியவற்றை யுணர்த்துவது நியாயம். வேதப் பொருளின் தாற்பரியத்தை நிச்சயித்தற்கு அநுகூலமான நியாயங்களை ஆராய்ச்சிசெய்து உணர்த்துவது மீமாம்சை. அவ்வவ் வருணங்களுக்கும் நிலைக்கும் உரிய தருமங்களை உணர்த்துவது மிருதி. யாக்கையை நோயின்றி நிலைபெறச் செய்வது ஆயுள் வேதம். பகைவரான் நலிவின்றி உலகம் காத்தற்கு வேண்டப்படும் படைக்கலம் பயிறலை உணர்த்துவது வில்வேதம். எல்லாக் கடவுளர்க்கும் உவகையை விளைவிக்கும் இசை முதலியவற்றை உணர்விப்பது காந்தருவ வேதம். இம்மைக்கும் மறுமைக்கும் பயனாகிய பொருள்களை ஈட்டும் உபாயம் உணர்விப்பது அருத்தநூல்.

இப்பதினெட்டு வித்தைகளும், ஊனுடைத்த உடம்பின் பிறவிக்கு உறுதியை விளைவித்து உதவுவனவாகும். இவைகளுள் யாவர்க்கும் எளியவாய் இனியவாய்ப் பயன்படுந் தன்மையன புராணங்களேயாம். "புராண வித்யா உபநிஷத்" என்னும் திருமொழியும் இது குறித்தே எழுந்தது. இதன்கண் உபநிடதங்களினும் புராணங்களுக்கு முதன்மை தரப்பட்டிருத்தல் காண்க. புராணங்கள் இறைவனின் அளவிலா ஆற்றலையும் வரம்பிலா அருளையும் பிறவற்றையும் விதந்தெடுத்து விளக்கக் கூறி, அவனை யடையும் நெறிகளை யுணர்த்துகின்றன. "சுருதி ஸ்மிருதி வேதாங்காத் துல்யானி."

சிவமாவது யாது? அஞ்ஞானம் சிறிதுமின்றி ஞான பூரண மாய் இருப்பது எதுவோ அதுவே சிவம்.

"மன்னுசிவன் சன்னிதியின் மற்றுலகம் சேட்டித்த
தென்னும் மறையின் இயல்பறிந்தாய்—சொன்னசிவன்
கண்ணு உளம்வினையாற் கண்டறிந்து நிற்குமாலின்
என்னுஞ் சிவனசத்தை இன்று"

என்னும் சிவஞான போத வெண்பாவில், 'சிவன்' என்னும் சொல் முறையே பேரின்ப காரணன், முற்றுணர்வினன், தூயதன்மையன் என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது.

"குறைவிலா மங்கல குணத்தன் ஆதலின்
நிறைமலம் அறுதலின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்
இறையவன் பெருமையை யாவர் கூறுவார்?"

எனச் சிவஞான முனிவர் தமது காஞ்சிப் புராணத்தின்கண் அருளிச் செய்வர். பேராசிரியர் தமது திருக்கோவையார் உரையின்கண் (358) "எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன் மையைச் செய்தலாற் சிவன்" என விளக்கியிருப்பதும் கண்டு உணரத் தக்கது. சிவபெருமான் உலகுயிர்களின் நலன் கருதிப் பதினென் புராணங்களை அருளிச் செய்து நந்திதேவர்க்கு உபதேசித்தருளினார். பின்னர் அவற்றை வழிமுறையே சனற்குமாரரும் வியாசரும் சூதமுனிவரும் உபதேசிக்கப் பெற்றனர்.

"எதிரில் சைவமே பவிடியம் மார்க்கண்டம் இலிங்கம்
மதிகொள் காந்தநல் வராகமே வாமனம் மற்சம்
புதிய கூர்மமே பிரமாண்டம் இவைசிவ புராணம்.
பதும மேலவன் புராணமாம் பிரமமே பதுமம்."

"கருது காருடம் நாரதம் விண்டு பாகவதம்
அரிகதைப்பெயர். ஆக்கினேயம் அழற்கதையாம்.
இரவி தன்கதை பிரம கைவர்த்தமாம். இவைதாம்
தெரியும் ஒன்பதிற் றிருவகைப் புராணமாந் திறனே."

வேதங்களே அமையாவோ? புராணங்களை எற்றுக்கு இறைவன் அருளல் வேண்டும்? வேதம் எஜமான் கட்டளை இடுவது போல்வது. "சத்யம் வத தர்மம் சர" (உண் மையே பேசுக! அறநெறியிலேயே நடக்க!) என வேதம் கட்டளையிடும். மனிதர்கள் செய்யத் தக்கனவற்றை விதித் தும் செய்யத் தகாதனவற்றை விலக்கியும் 'விதி நிஷேதரூபம்' ஆகக் கட்டளையிடும் முறையில் வேதங்கள் அமைந்துள்ளன. ஆதலின் அவற்றை அலங்கார நூலார் "ப்ரபு சம்ஹிதா" என்பர். புராணங்களோ நண்பர்கள் தம்முள் அன்பிற் கலந்து அளவளாவி மகிழ்ந்து உரையாடுவது போல்வன. ஆதலின் அவற்றைச் "ஸுஹ்ருத் சம்ஹிதா" எனக் கூறுவர். "பண்ணிய யாழுக்கும் நட்டார் கழறுஞ் சொல்" என்ற படி, புராணங்கள் யாழ்போன்று எவர் மனத்தையும் உருக்கி இன்பம் விளைவிப்பனவாம். மேலும், குனிஷ்வா நியாயம் ("கடுத்தின் குதாமக் கட்டி பூசிக் கடுத்தீற்றுமாறு") போல, வேதம் கூறும் விதிநிஷேதங்களைச் சுவையூட்டி இனிதாக்கி யாவரும் கடைப்பிடிக்கச் செய்வன புராணங் களேயாம். புரா+நவம் என்பது புராணம் என்றாயிற்று. புரா-முன்னே, பழமையாக; நவம்-நடந்தது. ரகரத்தின் முன்வந்த நகரம் ஒருமொழிக் கண்ணதாயின் ணகரமாய்த் திரியுமென்னும் வடமொழி இலக்கண விதி பற்றி நகரம் ணகரமாகத் திரிந்தது. ஜீவன்+அமுதம் என்பது 'ஜீமூதம்' என்றுபவாறு போல, புராநவம் என்பதில் நகரம் லோபம் பெற்றுப் புராணம் என வந்தது. 'சிவபுராணம்' என்னும் திருவாசகப் பகுதிக்குத் தலைப்புக் குறிப்புரை வரைந்த பண்டைப் பெரியார் 'சிவனது அநாதி முறைமையான பழமை' என வரைந்திருத்தலும் கண்டு உளங்கொளற் பாலது. வேதப் பொருளை உள்ளபடி அறிவது மிகவும் கடி னம். மழைத்துளி சிப்பியின் வயிற்றில் விழுந்தால் முத்தா கின்றது, நெருப்பில் விழுந்தால் வறிப் போகின்றது, பிற இடங்களில் விழுந்தால் அவ்வவ் விடங்களுக் கேற்ப அமை கின்றது. அதுபோல, வன்சொற்களினாற் புணர்க்கப்பட்ட வேதங்கள் கன்மானுசாரமாகப் பலர்க்கும் பலபொருள் கொள்ளக் கிடக்கும். "இதிகாச புராணப்யாம் வேதம் உபப்ரும்ஹயேத்" "பிபேத்யல்பஸ்ருதாத் மாமயம் ப்ரகரிஷ்யதி" என வியாச பாரதம் கூறுவதுபோலவே, வேதத் தைப் புராணங்கள் கொண்டு பொருளுணர வேண்டியிருக் கின்றது. ஆதலின், வேதங்களைப் போலவே புராணங்களும் இன்றியமையாதனவாதல் பெறப்படும். நாம் புராணங்

களைப் படிக்கவும் கேட்டின்புறவும் வேண்டும். "கற்றிலனாயினும் கேட்க அஃதொருவற்கு ஒற்கத்தின் ஊற்றாம் துணை." "எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்."

புராணங்கள் பதினெட்டு எனப் பண்டைநாளில் சான்றோர்களால் வரையறுக்கப்பட்டுள்ளன. எனினும் இந்நாளில் அவற்றின் தொகை பெருகி வருகின்றது. மனிதர்களின் பேராலும் புராணங்கள் இயற்றப் பெறுகின்றன. அண்மைக்காலத்தில் இயற்றப்பட்டுள்ள தலபுராணங்கள் பல இழிந்தனவாகவே காணப்படுகின்றன. பண்டைப் பதினெண்புராணங்கள் இத்தகைய தலபுராணங்கள் போல்வன அல்ல.

"பிறையணி சடைமுடிப் பிரான்றன் காதைகள்
இறையுமோர் மறுவில யாவும் மேன்மையே
மறைபல சான்றுள வாய்மை யேஅவை
அறிஞர்கள் நாடியே அவற்றைக் காண்கவே"

கந்தபுராணம் பேரறிவாளர்களும் படிக்கவேண்டிய நூல். கச்சியப்ப சிவாசாரியர் வெறும் படிப்பைக்கொண்டன்றித் திருவருள்கொண்டு கந்தபுராணம் பாடினார். எவர்களுக்கும் இயல்பாகவே இனிமை பயக்கும் பால் தேன் சர்க்கரை முதலியவற்றின் வாயிலாக மருத்துவன் மருத்து நூல் முறைப்படி மருந்துசெய்து கொடுத்து நோய்நீக்குமாறுபோல, எவர்களுக்கும் இயல்பாகவே இன்பம்பயக்கும் நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை நடுவுநிலைமை என்னும் ஒன்பான்வகைக் காப்பியச் சுவைகளும் இனிதமைந்து திகழ்வது கந்தபுராணம். கந்தபுராணத்தில் இல்லாத கதையும் பொருளும் வேறெந்தப் புராணத்திலும் இல்லை.

"புதுமயில் ஊர்பான் புராணத் துற்றிடாக்
கதையிலை அன்னது கணிதம் இன்றரோ"

கந்தபுராணம் கவிதைச்சுவை மிக்கது; சாத்திரக் கருத்துக்களும் தத்துவ நுட்பங்களும் செறிந்தது; பயில்தொறும் நூல்நயம் பயப்பது; இறையுணர்வை வளர்ப்பது; பக்தி



யையும் ஒழுக்கத்தையும் பரப்புவது. இஃது ஏனைச் சிவ நூல்கள் போலாது இம்மைக்கும் மறுமைக்கும் நலம்பயக்கும் சிவ நூலாகும். செந்நெறி ஒழுகுவோர்க்கே செப்பத்தக்க திருவுடைய நூல் கந்தபுராணம்.

"மன்னவன் மதலை யாசான் மாமகன் தனது மைந்தன்
பன்னுசொற் கொள்வோன் ஈவோன் வழிபடு பண்பின்மிக்கோன்
என்னும் இவருக் கீவ தேனை நூல்; உங்கள் போலச்
செந்நெறி ஒழுகு வோர்க்கே செப்புவன் புராணம் முற்றும்"

என இக்கந்தபுராணத்தின் சிறப்பினைச் சூத முனிவர் நைமிசாரணிய முனிவர்க்கு உரைத்தமை யுணரற்பாலது.

புராணங்களைப் பயிலுங்காலும் கேட்குங்காலும் அவற்றின் நுட்பங்களை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். வெறுங்கதை நோக்காது அவற்றின் கருத்தையே நோக்குதல் வேண்டும். கருத்தை விளக்குதற்கே கதை போந்தது. கதை உடலும், கருத்து உயிரும் ஆகும். சிலர் கதையை மட்டும் பிடித்துக்கொண்டு கருத்தை விட்டுவிடுவர். அவர் செய்கை 'நெய்யரி' போல்வதேயாகும். நுட்பமான (Abstract ideas) அரும்பெருந்தத்துவக் கருத்துக்களையாவரும் இனிதுணர்தற்பொருட்டுப் பெரியோர்கள் பருவடிவில் (Concrete form) அழகுற அமைத்து விளக்கி யுதவியனவே புராணக்கதைகள். எனவே, கலைத்திறம் மிக்க அவற்றின் கருத்துநுட்பங்களை ஆராய்ந்துணர்தலே நம்மனோர்க்கு இன்றியமையாக் கடமையாம். இங்ஙனம் புராண கதைகளிற் போதரும் உயரிய உண்மைகளையும் நுட்பங்களையும் பண்டைப் பெரியோர்களே நமக்கு நன்கினிது விளக்கிக்காட்டி யுள்ளமையினை,

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே"

என ஆசிரியர் திருமூலர் சிவபிரான் முப்புரம் எரித்த வரலாற்றின் நுட்பம் இனையதென விளக்கி யிருத்தலும்,

" மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பாடு அருள்செய்தார் "

" தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்த படிவிரித்தார் "

எனச் சேக்கிழார் பெருமான் இராவணன் கயிலை எடுத்த கதையும், அயனும் அரியும் அடிமுடி தேடிய கதையும் குறிக்கும் நுட்பங்கள் இவை என விதந்தெடுத்துப் பாடியிருத்தலும் காண்க. இங்ஙனம் நமது சிவநெறிச் சான்றோர்கள் காட்டிய சிறந்த முறையினைக் கடைப்பிடித்தே, நாம் கந்தபுராணம் போன்ற பண்டைப் பெருநூல்களை ஆராய்ந்துணர்தல்வேண்டும். ஈண்டு இயன்ற பெற்றி ஒரு சிறிது சுருங்கக் காண்போம்.

1. தட்ச காண்டம் : வேதத்திலுள்ள நுட்பமே கந்த புராண நுட்பம். வரலாற்று முறைக்கேற்பத் தட்ச காண்டமே முதலில் நோக்கத்தக்கது. தட்ச காண்டத்திலுள்ள நுட்பமெல்லாம் வேதத்திலும் காணப்படும்.

" பரசிவன் உணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையும் என்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடைதும் என்றல்,
உருவமில் விசும்பின் தோலை உரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை இயம்பிற் றென்னில் பின்னுமோர் சான்றும் உண்டோ?"

எனத் தட்சனுக்குப் பிரமதேவர் உபதேசித்தது வேதக் கருத்தேயாம். அது சுவேதாஸ்வதர உபநிடதத்திற் காணப்படும். ஆஸ்திகனுக்கு ஐந்து கொள்கை முக்கியம். கடவுள் புண்ணியம் பாபம் புண்ணியானுபவ இடம் பாபானுபவ இடம் என்னும் ஐந்தின் உண்மையில் ஆஸ்திகனுக்கு நம்பிக்கை இருத்தல் அவசியம். வேதத்திற் சொல்லப்படுவது ஒரு கடவுள்தான். ஏகாந்த வாதம்தான் வேதத்திற் காணப்படுகின்றது. " ஏகம் ஏவ அத்விதீயம் ப்ரஹ்மம்." பிரமப்



பொருள் ஒன்றேதான் இரண்டாவது இல்லை என வேதங் கூறுகின்றது. இதனையே " ஒன்றென்றது ஒன்றேகாண் ஒன்றேபதி..." என மெய்கண்டாரும் தெளிவிக்கின்றார். பக்தியானது ஸ்வபாவிக (இயற்கை) பக்தி, க்ருத்ரும (செயற்கை) பக்தி என்று இரண்டு வகைப்படும். தட்சனது பக்தி செயற்கைப் பக்தி. ' தட்சன் ' என்றால் சாமர்த்தியம் உடையவன் என்பது பொருள். அவன் இறுமாப்புக் கொண்டான். சிவதூடணம் செய்தான். அதனால் அவனுக்கு ஆட்டுத்தலை வந்தது. ஆடு சிவதூடணம் செய்யாத வாயை யுடையதல்லவா ? தட்சயாகத்தில் குற்றம் செய்தவன், குற்றம் செய்யத் தூண்டினவர், குற்றம் செய்தற்கு உடனிருந்தோர் ஆகிய மூவர்க்கும் தண்டனை கிடைத்தது. இது நமக்கு என்றும் நினைவில் இருத்தற்குரிய சிறந்த பாடம் ஆகும்.

2. அசுரகாண்டம்: தேவர்கள் பலர் பற்பல நோக்கம் கொண்டு தக்கன் வேள்விக்குச் சென்றனர். ததீசியாகிய சிவனடியாரை அவமதித்தனர். அவர்கூறிய அறிவுரைகளைப் புறக்கணித்தனர். சிவநிந்தையும் சிவனடியார் நிந்தையும் புரிந்தனர். சிவாபராதம் பிராயச்சித்தத்தால் தீராது, அநுபவித்தே தீர்க்கவேண்டும். பாவத்தைச் சந்தோஷமாகச் செய்துவிடுவதும், பின்னர்த் துன்பம் வந்தால் அழுவதும் கூடாது. வினைப்பயனைத் தேவர்களே யாயினும் எய்தாமற் கழித்தல் இயலாது. வினைப்பயனினின்றும் விலகித் தப்பித்துக்கொள்ள நினையாமல் ஞானிகள் அனுபவித்துத் தீர்த்து விடவே விரும்புவர். " யார் ஆற்றுவார் ? நாள் ஆற்றும்!" என்னும் பழமொழிபோல, வினையனுபவத்தில் நமக்கு மறதியுண்டாகுமாறு இறைவன் தன் பேரருளாற் செய்திருக்கின்றான். துஷ்டர்களை அடித்துத் திருத்தவும் இஷ்டர்களை அணைத்துத் திருத்தவும் வேண்டும். இறைவன் இவ்வாறு செய்தலை மறக்கருணை அறக்கருணை எனச் சாத்திரங்களிற் பேசப்படுகின்றது. இறைவன் அன்புக்கே அகப்படுவான். "பக்தி வலையிற் படுவோன் காண்க!" என்பர் மணிவாசகர். இறைவனுக்கு அசுரரும் தேவரும் ஒன்றே. எல்லா உயிர்களும் அவன் பிள்ளைகளே யாதலின் அவனுக்கு நல்லார் பொல்லார் என்ற பாகுபாடு இல்லை.

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்"

என்பது திருவருட்பயன். சூரபதுமன் பெருந்தவம் புரிந்தான். நெருப்பில் விழுந்து உயிர்விடத் துணிந்தான். அவனுக்குச் சரீரலட்சியம் இல்லையாகிச் சிவலட்சியம் வந்தபோது சிவபெருமான் தோன்றியருளினார். சூரனுக்குத் தகப்பன் தேவன், தாய் அசுரப்பெண். தகப்பன் வாசனையால் தவம் பண்ணினான். தாய் வாசனை வரம் கேட்ட முறையில் வெளிப்படுகின்றது. தந்தை தாயரின் குணங்களே மைந்தர்பாற் பிரதிபலிக்கும். இதையுணர்ந்து பெற்றோர்கள் நடந்து கொள்ளல் வேண்டும். அசுரராகிய கொம்பால், தேவராகிய துணியை, சிவாபராதம் ஆகிய அழுக்கு நீங்கும் வண்ணம் அடித்தற்பொருட்டுச் சிவபிரான் சூரன் கேட்டபடியே வரங்கொடுத்தருளினார். தோஷமுடைய ராயினும் தன்னை அடைந்தவரை இரட்சிக்கும் கருணைசமுத்திரம் பெருமான். சந்திரன் "தோஷ (இரவு) சஞ்சாரி" எனப்படுவான். அவனையும் ஏற்றருளிக் காப்பாற்றினான் சிவபிரான்.

3. உற்பத்தி காண்டம்: தேவர்க்கு வந்த துன்பத்தை நீக்கத் தொடங்கும் செய்திகளைக்கூறும் காண்டம். தண்டனையளித்த சிவமே தண்டனையை நிவர்த்திக்க வருகின்றது. அடித்தாலும் அணைத்தாலும் ஆண்டவனே கதி. சிவபிரானே முருகனாய் வந்தான். தற்சுதந்திரத்தோடு, தேவர் வேண்டிக்கொள்ள, முருகன் கருணைகாரணமாகத் தோன்றினார். தந்தையார் கண்ணில் இருந்து வந்தார். அக்கண் காமனைவென்ற கண். இரேதசானது ஊர்த்துவ வீரியம் அதோவீரியம் என இருதிறப்படும். பசுக்களாகிய நாம் அதோ வீரியம் உடையவர்கள். சிவபிரான் ஊர்த்துவ வீரியம் உடையவர். சுருதிகளிலே சிவபிரானுடைய வீரியத்தினால் மகாமேரு பொன்மலையாயிற்று என்று சொல்லப்பட்டுள்ளது. காமனை வென்ற கண்ணினின்று சூரனை வெல்லுவதற்கு முருகன் சோதிமயமாகத் தோன்றினார். சூரன் இருள், முருகன் சோதி. இருளை அழிக்க ஒளியால்தான் இயலும். முருகன் சிவபெருமானின் நெற்றிக்கண்ணாகிய நெருப்பினின்று ஆறுபொறிகளாக வெளிப்பட்டார். அவற்றை வாயு வாங்கினான். அக்கினியிடம் கொடுத்தான்.



அக்கினி சரவணப்பொய்கையில் விட்டான். அங்கே ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகளாகி விளையாடின. இங்ஙனம் முருகனின் தோற்றம் ஐந்து பூதங்களினும் நிகழ்ந்தது. முன்னரே சிவபிரான்பால் ஒடுங்கியிருந்த முருகன் என்னும் சிவசக்தி வெளிவருவதற்கு, அசுரர்களின் வினையும் தேவர்களின் வேண்டுகோளும் ஒரு தலைக்கீடு (வியாஜம்) ஆயிற்று.

"அருவமும் உருவு மாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டும்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய"

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளி னானே"

4. மகேந்திர காண்டம்: முருகன் கருணையுடையவன். சூரபதுமன் வரலாற்றை முருகன் இந்திரன்பால் விசாரித்தது அறியாமையாலன்று. அழும் பிள்ளையைத் தந்தை முதலில் 'என்ன?' என்று விசாரித்து, அழுகையைச் சமனப்படுத்திப் பின்னர் வாழைப்பழம் தரல் போல்வது அது. இந்திரன் தான் சொல்லாமற் பிருகஸ்பதியைக் கொண்டு சூரனின் வரலாற்றைச் சொல்லச் செய்கின்றான். குருவைக் கொண்டு சொல்லுவித்தமை "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்பது பற்றியாம். வீரவாகுவை முருகன் தூது அனுப்பியது அவனது சௌலப்பியத் தன்மையையும் பெருங்கருணையையும் காட்டும். "நாம் வளர்த்ததோர் நச்சுமா மரமாயினும் கோலார்" என மணிவாசகர் கூறுவதுபோல, சிவகிருபையால் சூரன் பெற்ற பேராற்றல்களைச் சிவசக்தியாகிய தாமே அழிக்க விரும்பாத பேரருளால் முருகன் வீரவாகுவைத் தூதனுப்பினான்.

"பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர்
மாட மதுரை புகுந்தனன் அதுகொண்டு"

என வரும் சிலப்பதிகாரப் பதிக வரிகளுக்கு, உரையாசிரியர் "சிறப்பிற் பாண்டியன் என்றும், பெருஞ்சீர் மாட மதுரை என்றும் அடிகள் புகழ்ந்தார்; இவையும் பழவினையால் அழிந்தனவே என்னும் இரக்கம்தோன்ற" என விசேடநயவுரை எழுதி யிருப்பதுபோல, ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்கள் அரசோச்சிய சூரனின் திருவும் செல்வமும் உருவறியா வண்ணம் அழிந்தொழியப் போகின்றனவே என்னும் கழிபேரிரக்கமும் கண்ணோட்டமும் பற்றியே முருகன் தூதனுப்பினன் என்க. பண்டை நாளில் மறத்துறையினும் அறமே நிகழும். வீரவாகு தேவர் சூரனின் அவையில் தமக்கு உயர்ந்த ஆசனம் வேண்டும் எனக் கருதினர்.

"கொற்ற வேல்உடைப் புங்கவன் தூதெனக் கூறி
இற்றை இப்பகல் அவுணர்கோன் கீழ்யான் எளிவாய்
நிற்றல் எம்பிரான் பெருமையின் இழிபென நினைத்தார்"

நினைந்த எல்லையில் 'தினகரத் தொகை ஆயிர கோடி சேர்ந்தெனக் கனகமாமணித் தவிசொன்று' கடிதிற் போந்தது. இவையெலாம் தலைவன் அடியவன்பால் செய்யுந் தண்ணளியையும், தலைவனின் தகுதிக்கேற்ப அடியவனுயினன் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் விளக்குவனவாகும்.

"கோலம் நீடிய திதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரர் அரசினைக் கனவினும் வெஃகேன்
மால்அ யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்"

என்பது முருகன்பால் வீரவாகுதேவர் வேண்டும் வரம். இறைவன்பால் இறவாத இன்ப அன்பைப் பெற்றால் பின்னர் அதுகொண்டே யாவற்றையும்பெறலாம். இவ்வுண்மையுணராது, வேருக்கு நீர் பாய்ச்சாமல் வெறும் இலைக்கு நீர் தெளிப்பவர்கள் போல, நாம் அன்பை விட்டுவிட்டுப் பிறவற்றையே இறைவன்பாற் கேட்கின்றோம்.

5. யுத்த காண்டம்: சூரனை முருகன் வேல்கொண்டு சம்ஹரித்தார். வேலின் பெருமையை விளக்குவது இக்காண்டம். வெல்லுவது வேல். எது வெல்லும்? அறிவு-ஞானம் வெல்லும். வேல் முருகனுக்கு ஒரு சக்தி. "சத்தி தன் உருவேதென்னில் தடையிலா ஞானம் ஆகும்." வேல் முருகனுக்கு ஞானசத்தியாக விளங்குவது. வேல் ஞானம், சூரன் அஞ்ஞானம். அஞ்ஞானத்தை ஞானம் வென்றது. வேலின் பெருமையைத் தொல்காப்பியரும் "பெரும்பகை தாங்கும் வேல்" எனக் குறிப்பிட்டுச் சிறப்பித்தார்.



"விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் உறத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்த்துமுன் இயற்றி யன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு செலவின் எதி
மடம்பிடித் திட்ட வெந்தூர் மாமுதல் தடிந்த தன்றே"

வேல் அஞ்ஞானத்தை அறவே அழிப்பது. ஆதலின் ஞானம் வேண்டுவோர் வேலைத் தொழுதல் வேண்டும். பண்டைநாளில் 'வேற்கோட்டம்' இருந்ததாகச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. செவ்வந்திப் புராண ஆசிரியர் "வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை" என்று நயம்படக் கூறுகின்றார். நாமும் வேலை வணங்குவதை வேலையாகக்கொண்டு உய்ய முயலுதல் கடமை. முருகன் சூரனை அழித்துக் கொன்றுவிடாமல் கோழிக் கொடியும் மயில்வாகனமுமாக ஆட்கொண்டருளினர். கடவுட்டன்மை காத்தலில் உள்ளதே யன்றிக் கொன்றொழிப்பதில் இல்லை. பகைவரையும் வாழவைக்கும் பண்பினன் முருகன்.

6. தேவ காண்டம்: தெய்வயானை யம்மை திருமணம் இதன்கட் கூறப்படும். வள்ளியம்மை திருமணமும் இக்காண்டத்திலேயே வடமொழியிற் கூறப்பட்டுள்ளது. தமிழில் தட்சகாண்டத்திற் கூறப்பெறும். முருகப்பிரானுக்குத் தெய்வயானை கிரியா சக்தியும், வள்ளியம்மை இச்சாசக்தியும் ஆவர். கற்பு களவு என்னும் இருவகைத் தமிழ்த் திருமண முறைகளையும் இவர்தம் திருமணங்கள் விளக்குகின்றன எனப் பரிபாடல் என்னும் சங்கநூல் புகல்கின்றது. முருகனின் வலப்புறத்தில் வள்ளியம்மையும், இடப்புறத்தில் தெய்வயானையம்மையும் விளங்குகின்றனர். நம்மில் பலர் இவ்வுண்மையைத் தானும் அறிவதில்லை. (வள்ளியம்மை

திருமணப் படலம் பல தத்துவ நுட்பங்களைக் கொண்டது. அவற்றை 'வள்ளி சன்மார்க்கம்' என்னும் கட்டுரையிற் காண்க.)

இனி, சூரபதுமன் சிங்கமுகன் தாரகாசுரன்என்னும் மூவரும் முறையே ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்கள் என்றும், அவர்களாற் சிறையிடப்பெற்ற தேவர்கள் பசுவர்க்கங்கள் என்றும், அசுரர் மூவரையும் அழித்து முருகன் தேவர்களை ஆட்கொண்டமை ஆணவம் முதலிய மும்மலங்களை வீட்டி உயிரை ஞானாசிரியனாகிய கடவுள் ஆட்கொண்டருளுதலாம் என்றும் கொள்ளுதற்குரிய நுட்பப்பொருள்கள் பல கந்தபுராணத்தில் உள்ளன. "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" எனத் தொல்காப்பியர் அருளியபடி, அவற்றையெல்லாம் ஆராய்ந்துணர்ந்துகொள்ள இயன்றவரை முயன்று உய்வோமாக!

"இந்திரர் ஆகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்!
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணம் தன்னைக் காதலித் தோது வோரே"

---

# 23. மீனாட்சி திருமணம்*

"நல்லைமன் தம்ம பாலே! மெல்லியற்
றுணைமலர்ப் பிணையல் அன்னஇவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே!"

—குறுந்தொகை 229

மெய்யன்பர்களே!

முன்பு மதுரையில் நிகழ்ந்த இக்கல்யாணம் பற்றி நாம் பேசுவதும் கேட்பதும், இன்று காலையில் இங்கு நிகழ்ந்த திருமணம் சிறப்புறுதற் பொருட்டாகும். கல்யாணம் என்பது மங்களம். "வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை" என்றபடி, மக்கள் எல்லோருக்கும் நன்மையடையவே கருத்தும் விருப்பமும் உள்ளன. எனவே, நாம் அடையும் மங்களம் அல்லது நன்மைகளுள் தலைசிறந்தது கல்யாணம். மணமக்களுக்குள்ளே மறைந்துநின்ற தொடர்பு பலரும் அறிய வெளிப்படுத்தப் பெறுவதே கல்யாணம். "உள்ளது போகாது இல்லது வாராது" எனச் சைவசித்தாந்தம் கூறும் சற்காரிய வாத முறைப்படி, மணமக்களுக்கிடையே நிலவும் தொடர்பு புதிதாகத் துடுமென ஒருநாளில் தோன்றிவிடுவதன்று. முற்பிறவிகளிலேயே மணமக்களுக்குத் தொடர்பு ஒற்றுமை யிருந்தது. மறைந்திருந்த அத்தொடர்பு இன்று வெளிப்பட்டது. அந்நிகழ்ச்சியையே கல்யாணம் என்று வழங்குகின்றோம். 'கிழவன்' 'கிழத்தி' எனப் பண்டை நாளில் வழங்கிய சொற்கள், மணமக்களின் தொடர்பு எழுமை எழுபிறப்பும் இடையறாது நிலவி வரும் கிழமைப்பாடு உடையதாதலை யுணர்த்தும். "கிழமைப்பட வாழ்" என்பது ஔவையாரின் அமுதமொழி. "இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக் கண்ணிறை நீர்கொண் டனள்" என்பது திருக்குறள். மணம் என்பது அரும்பின்கண் முன்னரே மறைந்து அடங்கியிருந்து, அரும்பு மலராக விரியும்போது வெளிப்படுவது.

*இது நம் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி. அவர்கள், 15—9—35 அன்று எழும்பூர் "நால்வர் அருள்" மாளிகையில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் நிகழ்த்திய சொற்பொழிவினைக் குறிப்பெடுத்து உதவியது. கட்டுரையாக்கியவர்: புலவர் முருகவேள், எம். ஓ. எல்.

" பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது "

என்பது திருமூலர் திருமந்திரம். ஆசிரியர் மெய்கண்ட தேவர் தமது சிவஞான போதத்தின்கண்,

" அருவுருவுந் தான்அறிதல் ஆய்இழைஆய் ஆன்மா
அருவுருவம் அன்றாகும் உண்மை—அருவுருவாய்த்
தோன்றியுடன் நில்லாது தோன்றாதும் நில்லாது
தோன்றல் மலர்மணம்போல் நோக்கு "

என அருளிச் செய்திருத்தலும் கண்டு அறிந்து இன்புறற்பாலது. " பிறப்பான் அடுப்பினும் பின்னும் துன்னத்தகும் பெற்றியர் " என்றவாறு போல, பல பிறப்பிலும் தொடர்ந்து ஒத்த அன்புடையாராய் இருந்து வந்தமை பற்றியே மணமக்கள் இப்பிறப்பிலும் ஒன்றுபடுகின்றார்கள். " நல்வினை துய்த்தக்கால் முடிவெய்தும், இவர்கள் அன்பு துய்த்தாலும் முடிவெய்தாது எஞ்ஞான்றும் ஒருபெற்றியே நிற்கும்." மலரின்கண் மணம் மறைந்து நின்று வெளிப்படுதல் போல்வதோர் இயல்புடைமை நோக்கியே, கல்யாணத்தினைத் தமிழர்கள் மணம் என்றும் திருமணம் என்றும் சிறந்தெரிந்து வழங்குவாராயினர்.

உலகத்தார்க்குப் பயன்படும்படி அறநெறிகள் கடைப்பிடித்து ஒழுகுதலே திருமணத்தின் தலையாய நோக்கம். " மறப்பருங் கேண்மையொடு அறப்பரி சாரமும், விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும் " பெறுதலே திருமணத்தின் குறிக்கோள். "அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும், துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் " முதலிய இல்லறக் கடமைகளை இனிது நிறைவேற்றுதலே திருமணம் செய்து கோடலின் பயன் என "மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி" குறிப்பிட்டிருத்தல் காண்க. இல்லறத்தின் கடமைகளை இனிது நிறைவேற்ற மணமக்கள் இயற்கையுணர்வேயன்றிக் கல்வியறிவுடையவர்களாயும் இருத்தல் வேண்டும். பண்டைநாளிற் பெண்களும் கல்வியறிவிற் சிறந்து திகழ்ந்தனர். இதனை,



" பெருந்தடங்கண் பிறைநுதலார்க்கெலாம்
பொருந்து கல்வியும் செல்வமும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க் கீதலும், வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே ?"

எனவரும் கம்பர் பாடலால் அறியலாம். " நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம் மண்மாண் புனைபாவை யற்று." கல்வி யழகே யழகு. ஆதலின், இத்திருமணத்திற் போலவே, மணமகனும் மணமகளும் படித்திருத்தல் வேண்டும். கம்பர் " பொருந்து கல்வி " என்றதன் நுட்பம் கருதி யுணரத்தக்கது. இக்காலிற் பொருந்தாக் கல்வியே இருபாலார்க்கும் பெரிதும் அளிக்கப்பட்டு வருகின்றது ! திருமணத்திற்கு முன்னர்த்தான் கல்விப் பயிற்சி என்பதில்லை. பண்டைநாளில் திருமணத்திற்குப் பின்னரும் மணமக்கள் கல்வி கற்பார்கள். திருமணம் செய்து கொண்ட பின்னரும் ஆண்மகன் கல்வி கற்பான். " ஓதற் பிரிவு யாண்டு மூன்று இறவாது " என்பது தொல்காப்பியம். பெண்மகள் கணவனிடம் நடந்து கொள்ளும் முறைகளையும், உலகியலில் நடந்து கொள்ளுதற்குரிய முறைகளையும் தன் தாய் தந்தையரால் கற்பிக்கப்படுவாள். அறநெறி யொழுக்கம் கடவுள் வழிபாடு முதலியனவற்றைக் கணவன் வாயிலாக உணர்வாள். " கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும், அவனை இன்னவாறு வழிபடுக எனவும் இருமுது குரவர் கற்பித்தலானும் ; அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும், ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று " என்பர் நச்சினார்க்கினியர். இங்ஙனம் தாய் தந்தையராலும் கணவனாலும் கற்பிக்கப்பட்ட நெறி தவறாது நடத்தையிற் காட்டுவதே திருமணம் செய்துகொள்ளும் பெண்களின் கடன். " கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை " என்றதும் இக் கருத்துப் பற்றியேயாம்.

கற்புடை மகளிரைக் கடவுளரும் வெல்லுதல் அரிது. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் அனைவரும் ஏத்துவர். உலகிற் கணவன்மார்கள் தொடங்கும் செயல்கள் எல்லாம் நன்கினிது வெற்றி பெறுதற்கும், வாழ்க்கை வளம் எய்திச் சிறப்புறுதற்கும், அவர்தம் காதல் மனைவியரின் கற்பொழுக்

கமே பெரிதும் துணைசெய்கின்றது என்பர் சான்றோர். கலித்தொகை என்னும் சங்கநூல்,

“ காந்தள் கடிகமழும் கண்வாங்கு இருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலால் தம்ஐயர்
தாம்பிழையார் தாம்தொடுத்த கோல் ”

என்னும் வரிகளால், குறிஞ்சி நிலத்தில் வாழும் வேட்டுவர்களின் வில்லம்புகள் வேட்டையிற் குறி தவறாது குறித்த பொருளிற் சென்றுபடுதல், அவர்தம் மனைவிமார்களின் கற்பொழுக்கத்தினாலேயே யாகும் என நுவலுகின்றது. திரிபுராசுரர்களால் துன்புற்ற தேவர்கள் அவர்களை வென்று அழித்துவிட எண்ணி முயன்று பார்த்தனர். முடியாமை கண்டனர். திரிபுராசுரர்களின் மனைவியர் மூவரும் கற்பொழுக்கத்திற் சிறந்து திகழ்பவர்களாதலால், அவர்களை வெல்லுவது அரிது எனப் பிருகஸ்பதி கூற, அவர்கள் செய்வகை அறியாது திகைத்து, முடிவிற் சிவபிரான்பால் அடைக்கலம் புகுந்தனர் என்பது வரலாறு. “இல்லதென் இல்லவள் மாண்பானால் ? உள்ளதென் இல்லவள் மாணாக்கடை ?”

“ உமையாள்தன் பாகந்தோய்ந்து ஆண்டான் பலிக்குழந்தான், பாண்டியன்நின் ஆகந்தோய்ந்து ஆண்டான் அரசு ” எனவரும் தனிப்பாடலும், “ இஃதோ ஓர்ஆன் வல்சிச் சீர்இல் வாழ்க்கை பெருநலக் குறுமகள் வந்தென, இனிவிழவு ஆயிற்று என்னும் இவ்வூரே ” எனவரும் குறுந்தொகை (295)ப் பாடலும் ஈண்டு அறிந்து இன்புறுதற் குரியன.

“ பிரம்மசரியம் ” என்பது நால்வகை ஆச்சிரம நிலைகளில் ஒன்று எனப் பலரும் எண்ணுவர். அதற்கு வேறொரு பொருளும் உண்டு. பிரமம்–வேதம், சரியம்–நடத்தல் ; ‘ வேதத்தின்படி நடப்பது ’ என்பது கருத்து. வேதத்திற் படித்தபடி நடக்கமுடியாமல் உலகியலில் ஈடுபடக்கூடியவன் பௌதிகப் பிரமசாரி. வேதத்திற் படித்ததனைப் படித்தபடியே கடைப்பிடிக்கும் மனவுறுதியும் கலங்காமையும் உடையவன் நைட்டிகப் பிரம்மசாரி. ‘ நிஷ்டா ’ என்றால் ‘ மிகவும் நிற்றல் ’ என்பது பொருள். இங்ஙனம் ஆண்மக்களிற் சிலர் நைட்டிகப் பிரமசரியம் மேற்கொள்ளலாம்



எனினும், பெண்களுக்குக் கல்யாணம் மிகவும் இன்றியமையாதது. இக்கருத்தைத் திருவள்ளுவர் “ அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று” எனக் கூறிய நுட்பம் கொண்டு உணரலாம். பெண்கள் உடலாலும் உள்ளத்தாலும் மெல்லியல்பு மிக்கவர்கள். கொடிபோன்றவர்கள். கொடிக்குக் கொழுகொம்பு இன்றியமையாதது. கொழுகொம்பைச் சேர்ந்த கொடி ஊறுபாடு இன்றிச் சிறந்து படரும். அங்ஙனமே, பெண்கொடிகளும் கணவனாகிய கொழுகொம்பைப் பெற்றாற் சிறந்து வாழலாம். கொழுநன் - கொழுகொம்பைப் போன்றவன் ; கணவன் – கண்போன்றவன். ‘ கொழுநன் அன்னார் ’ என்பதே, ‘ கொழுந்தனார் ’ என மருவி இந்நாளில் வழங்குகின்றது. இன்னோரன்ன சொற்களின் பொருள்நுட்பங்கள் கருதி மகிழ்தற்குரியன.

முற்காலப் பெண்களின் விளையாட்டுக்கள், அவர்தம் அறிவுநலனை விளக்குவனவாகும். மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் பண்டைப் பெண்மக்களின் விளையாடல்களைக் கொண்டே பல திருப்பதிகங்கள் பாடியிருத்தலைக் காணலாம். முல்லை முதலிய பூஞ்செடிகளை வளர்த்தலும், முல்லைக்கொடி மலர்ந்தால் பெண்பூப்பு அடைந்தாற்போல மகிழ்தலும் பிறவும் பண்டைமகளிர் இயல்பு. முல்லைமலர் கற்புக்கு அறிகுறி. முல்லை மலரைத் தலையிற் சூடல் கற்பைத் தலையாயது என்று தலையில் அணிதலைக் குறிப்பதாகும். கற்புக்கு எடுத்துக் காட்டானவள் அருந்ததி. அவளை “ முல்லையந் தொடை அருந்ததி ” என நூல்கள் புகழும். அருந்ததி என்பது வடமீன் எனவும் படும். நாளடைவில் நிலைமாறி யொழியும் பிற விண்மீன்கள் போலாது, என்றும் ஓரே யிடத்தில் நிலைபெற்று ஒளிவிட்டு வயங்குவது வடமீன் என்னும் துருவ நட்சத்திரம். ஆதலின் அதனைக் கற்புக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர் கவிஞர்கள். “ தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் ” என்பது சிலப்பதிகாரம். ஈண்டுத் திறம் என்றது கற்பை. கற்பாவது கலங்காமை. “கற்பு என்னும் திண்மை யுண்டாகப் பெறின்” என்புழிக் கலங்காநிலைமை எனவே பொருள் வகுத்தார் பரிமேலழகர். பெண்களுக்குக் கற்பு இன்றியமையாதது போலவே, கல்யாணமும் இன்றியமையாதது. அதுபற்றியே ஆண்களின் பெய

ரோடு சேர்த்துக் கூருமல், 'பார்வதி கல்யாணம்' தெய்வயானை கல்யாணம்' 'சீதை கல்யாணம்' 'வள்ளி கல்யாணம்' எனப் பெண்களின் பெயரோடு சேர்த்தே கல்யாணத்தை உலகம் வழங்குகின்றது.

திருமணத்தாற் பெண்கள் சிறப்பைப் பெறுகின்றனர். முன்பு இல்லாத சிறப்பும் தலைமையும் அவர்களைத் தேடிவருகின்றன. வீட்டின் ஆட்சிக்குரியவள் பெண்ணே யாகின்ருள். அதனுல்தான் அவள் 'இல்லாள்' எனப் பெயர் பெற்ருள். 'வீட்டுத் தலைவி' எனப் பொருள் தரும் பெண்பாற் சொல்லுக்கு நேரான ஆண்பாற் சொல் தமிழில் இல்லை. 'இல்லான்' என்ருல் பொருளில்லாதவனையே குறிக்கும். "இல்லானை இல்லாளும் வேண்டாள்" என்றதும் இவ்வுண்மையை வலியுறுத்தும். எனவே,

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணு வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு"

என்றபடி, வீட்டில் இருந்து பெண்கள் அரசு புரிதல் வேண்டும். கணவனும் மனைவியும் கருத்தொத்து வாழ்தல் வேண்டும். "காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்." கண் இரண்டும் ஒன்றையே காண்பதுபோல இருவரும் ஒத்த மனப்பான்மையராய், ஒருவரை ஒருவர் இன்றியமையாது வாழ்தற்கு உரியர். "காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந்தாங்கு இருவர் ஆகத்துள் ஓருயிர் கண்டனம்" எனும்படியும், "இருதலைப் புள்ளின் ஓருயிர்" எனும்படியும் இருவரும் விளங்கற்பாலர்.

"சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம்என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி"

என ஆண்பெண் விலங்குகளும் தம்முள் அன்புசெய்து வாழ்வதனை 'ஐந்திணை ஐம்பது' எனும் நூல் சுவைபடக் கூறுகின்றது. விலங்குகளே அங்ஙனம் வாழ்ந்தால், மனிதர்



களாகிய நாம் இன்னும் எவ்வளவு சிறப்புற வாழ்தற்குக் கடமைப்பட்டுள்ளோம்? கணவனும் மனைவியும் ஒன்றுபட்டு வாழ்தற்குரிய நிலையினையே திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ள "அர்த்த நாரீசுரர்" விளக்கியருள்கின்ருர். இம் மூர்த்தத்தின் சிறப்பினை யுணர்ந்தே சீவகசிந்தாமணியின் ஆசிரியராகிய திருத்தக்கதேவரும்,

"பொனங்கொடி யமிர்த ளுளும் பொன்நெடுங் குன்ற னுனும்
அனங்கனுக் கிலக்க மாகி அம்புகொண் டழுத்த வின்வார்
இனத்தமக் கெங்கும் இல்லார் இயைந்தனர் என்ப மூக்கட்
சினந்திகழ் விடையி னுனும் செல்வியும் சேர்ந்த தொத்தே"

எனச் சச்சந்தனும் விசையையும் சேர்ந்தமைக்கு "மாதியலும் பாதியன்" திருவுருவினை உவமை கூறியருளினர். இறைவனது பல்வகை மூர்த்தங்களுள் இத்தகு சிறப்பின் மிக்க அர்த்தநாரீசுர வடிவமே மிகவும் பழமையானது. இதனை மணிவாசகர்,

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"

எனத் திருவாசகத்திற் குறிப்பிட்டுள்ளார். அம்பிகை இறைவனின் திருமேனியிற் செம்பாதியாகத் திகழ்கின்ருள். குமரகுருபரசுவாமிகள், "குடம் முதலிய பொருள்கள் குயவன் முதலியோரை நிமித்தகாரணமாகக் கொண்டாற்போல, சிவம் சத்திகளாகிய தங்களை நிமித்தகாரணமாகக் கொண்ட உலகமாகிய தொகுதிக்குத் தாம் நிமித்த காரணம் என்பதனை அறிவித்தற்கு, உயர்திணை அஃறிணைப் பொருள்கள் எல்லாவற்றிலும் ஆண்பெண் என்னும் அடையாளம் இருப்பினும் அதனுல் அமைதி பெருமல், சிவத்திற்கு உரிய பாதியும் தனக்கே உரியதென்பதைத் தெரிவித்தற் பொருட்டு 'ஸர்வம் சக்திமயம் ஜகத்' என்னும் வேத வாக்கியத்தைச் சான்ருக வைத்து, இறைவன் திருமேனியிலும் செம்பாதி கொண்டருளிய தையல் நாயகி" என்னும் கருத்து அமைய,

"கும்பாதி காரியம் எனத்தமை நிமித்தமாக்
கொண்டஅகி லாண்டங்களின்
குழுவுக்கு மற்றுத்தம் இருவர் குறியும்தலைக்
கூடினும், தான்தனக்குஅச்
சொம்பாதி அன்மைக்கு அனைத்தும்தன் மயம்எனும்
சுருதிகரி யாவைத்தும்,
தம்பிரான் திருமேனியிற்
செம்பாதியும் கொண்ட தையல்நாயகி..."

என அம்பிகையைப் புகழ்கின்றார். அதுபோலக் கணவனுக்குச் செம்பாதியாகத் திகழ்பவள் மனைவி. (ஆங்கிலேயர் மனைவியை Better - half என வழங்குதலும் ஈண்டு எண்ணி இன்புறுதற் குரியது). "கண்களவு கொள்ளும் சிறு நோக்கம் காமத்திற் செம்பாகம் அன்று பெரிது" என்பது திருக்குறள். அதன்கண் "செம்பாகம்" என்பதற்கு 'ஒத்த பாதி யளவு' எனப் பரிமேலழகர் உரை வகுத்திருப்பது உணாற்பாலது. "மனையறத்தின் வேராகி விளங்கும்" பெண்களைச் செம்பாதி என்பது பெரிதும் பொருந்துவதேயாம்.

"ஊருக்கு ஒருவனே தோழன் ஆரும் அற்றவளே மனைவி" என்பது உலகியற் பழமொழி. அஃது ஒருவகையிற் பொருளுடையதேயாயினும், "ஊறுக்கு உறுபவனே தோழன் ஆறும் உற்றவளே மனைவி" என்பதே பொருட் சிறப்புடையதாகும். ஊறு-துன்பம். துன்புற்ற நேரத்தில் தானே வந்து வலிந்து உதவி செய்பவன் தோழன். அதுபோல,

"அன்னை தயையும், அடியாள் பணியும், மலர்ப்
பொன்னின் அழகும், புவிப்பொறையும்,—வன்னமுலை
வேசி துயிலும், விறல்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

"கட்கினியாள், காதலன் காதல் வகைபுனைவாள்,
உட்குடையாள், ஊராண் இயல்பினள்,—உட்கி
இடனறிந் தூடி, இனிதின் உணரும்
மடமொழி மாதாள் பெண்."



என்று கூறப்பெற்ற அறுவகைக் குணங்களையும் இயல்பாகப் பெற்றவளே மனைவியாவள். இப்பாடல்களிற் 'பெண்' மனைவியைக் குறிக்கும் என்பது "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்புழிக் காணலாம்.

இவ்வாறு கணவனும் மனைவியும் செம்பாதியாக இயைந்து வாழ்தல் வேண்டும் என்பதற்கே இறைவன் வேதங்களை அருளிச் செய்துள்ளான். வெறும் வேத சாத்திரங்களை அருளினால் மட்டும் போதுமா? அவைகளால் விபரீத உணர்வும் நேரிடலாம் அல்லவா? ஆதலின், வெள்ளத்தினைக் கடக்க ஓடத்தினை யுதவிய ஓடக்காரன் தானும் நம்மோடு உடன்வருதல் போல, வேதங்களில் மக்களுக்குத் திருமணத்தினை விதித்தருளிய இறைவன் தானும் மணஞ் செய்துகொண்டு மக்கட்கு வழிகாட்டித் தெளிவிக்கின்றான்:

"தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ!"

"மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடி?
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெலாம் கலங்கிடும்காண் சாழலோ!"

"போகியாய் இருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோகமுத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடர் எல்லாம் உம்பரின் ஒருவன் என்பர்"

தேவ கணங்கள் பதினெண் வகைப்படும். "பிறை நுதல் வண்ணமாகின்று, அப்பிறை பதினெண் கணனும் ஏத்தவும் படுமே" என்பது புறநானூறு. அவர்களுள் வித்தியாதரர் என்பவர்கள் ஒருவகையினர். 'வித்தியாதரர்' என்றால் வித்தையைத் தாங்குபவர்கள் என்பது பொருள். பதினெட்டு வித்தைகளுள் காந்தர்வம் அல்லது சங்கீதம் ஒன்றாகும். வித்தியாதரர்கள் இசைக்கலையில் தேர்ச்சி

மிக்கவர்கள். ஆதலின் அவர்களுக்குக் கந்தர்வர், விஞ்சையர் என்றும் பெயர்கள் உண்டு. விச்சுவாவசு என்பவன் ஒரு கந்தர்வன். அவனுக்கு விச்சாவதி என்று மகள் ஒருத்தி இருந்தாள். சுவாகதம் (கிளி) போன்ற மொழியினளாக அவள் விளங்கினாள்.

"விச்சு வாவசு எனும்ஒரு விச்சையன் பயந்த
நச்சு வாள்விழி மடந்தைவிச் சாவதி நாமம்
அச்சு வாகத மொழியினாள் அம்பிகைக்கு அன்பு
வைச்சு வாழ்வுறும் மனத்தினாள் தாதையை வணங்கா"

பெண்களின் பேச்சுக்குக் குயிலையும் கிளியையும் உவமை கூறுவர். குயிலின் இசை பஞ்சமசுரத்தில் அமைந்திருக்கும். அது மிக மெல்லியதாகவோ மிக உரத்ததாகவோ இல்லாமல் இடைநிலைப் பட்டு இனிமையானதாக விளங்கும். அதுபோலப் பெண்களும் மிக மெல்லிய முறையிலும் மிக உரத்த ஒலியிலும் அன்றி இடைநிலைப்பட இனிமையாகப் பேசுதல் வேண்டும். கிளிகள் சில சொற்களையே பேசும். அவ்வாறே பெண்களும் மெல்லிய இனிய மேவருதகுநவாகச் சில சொற்களே பேசுதல் நலம். "சின்மொழியார்" என்பது பெண்களுக்குப் பெயர். பயனில சொற்கள் பலபேசாமல் நயனுடைய சில மொழிகளைப் பேசுதலே பெண்களுக்குக் கவர்ச்சியினை மிகுவிக்கும். அது குறித்தே "கிளிமொழியார்" எனப் பெண்களைக் கவிஞர்கள் வழங்குவர். கற்பிற்சிறந்த கண்ணகி வரலாற்றினைக் காப்பியமாகப் பாடிய இளங்கோவடிகள், அவளைச் சின்மொழி பேசும் சிறந்த பண்பினளாகவே நமக்கு அறிமுகப் படுத்துகின்றார். "சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக் குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த இலம்பாடு நாணுத்தரும் எனக்கு" என்று கூறிய கோவலனுக்கு, நலங்கேழ் முறுவல் நகைமுகங்காட்டிக் கண்ணகி "சிலம்புள கொண்ம்" என இரண்டு சொற்களே கூறினாள். அங்ஙனமே

"கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்
மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு



தாமின் புறுவர் உலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாம்ஒருநாள்
ஆடுதும் என்ற"

தேவந்திக்குக் கண்ணகி கூறிய விடை: "பீடுஅன்று" என்னும் இரண்டு சொற்களேயாம். எனினும் கண்ணகி பேசுதற்குரிய இடத்துத் திறம்படப் பேசவல்லவள் என்பது பாண்டியன்பாற் சென்று "தேரா மன்னா செப்புவதுடையேன்" எனத் தொடங்கி வழக்குரைத்த பகுதியால் விளங்கும். இந்நுட்பம் மகளிர் மனங்கொள்ளுதற்கு உரியது. 'சுவாகதம்' என்னும் சொல் நல்வரவு எனப்பொருள் தரும். கணவன் வருங்கால் நல்வரவு கூறி வரவேற்றல் குறித்துப் பண்டை நாளில் அந்தப்புரங்களில் மகளிர் கிளிக்குச் சுவாகதம் என்னும் சொல்லைக் கற்பித்துப் பழக்கியிருப்பர். சுவாகதம் கூறுதலால் கிளிக்குச் சுவாகதம் என்றே ஒரு பெயர் வழங்குவதாயிற்று.

விச்சாவதிக்கு ஐந்தாம் அகவை தொடங்கியது. அதற்குள்ளாகவே அவள் அம்பிகையின்பால் பேரன்பு கொண்டாள். பிள்ளைகள் தாய்தந்தையரைக் காலையில் எழுந்ததும் வணங்குதல் பழையநாளில் வழக்கம். அதன்படி தன் தந்தையை வணங்கிய விச்சாவதி "ஐய ! அம்பிகை தன்னை யான் அன்பினால் வழிபட்டு உய்யவேண்டும்" என்றாள். அதுகேட்ட விச்சுவாவசு மிகவும் மகிழ்ந்தான். தந்தை குருவாக இருந்து மந்திரோபதேசம் செய்யலாம். ஆதலால் (பதினைந்து எழுத்துடன் கூடிய) தேவியின் மந்திரத்தினை உபதேசம் செய்தான். "தேவியை வழிபடுதற்குச் சிறந்த தலம் யாது ?" என விச்சாவதி வினவினாள். சக்திபீடங்கள் அறுபத்து நான்கு உண்டு; அவற்றில் தலைசிறந்தது மதுரை; அங்கே தேவர்கள் இரவும் பகலும் சென்று வழிபட்டுத் தங்கள் வினையைப் போக்கிக்கொள்கின்றனர்; நமர்கள் பலரும் அந்நகரில் தேவியை வழிபட்டு நல்வரம்பல அடைந்துள்ளனர். துவாதசாந்தத் தலமாகிய மதுரையின்கண்,

"எம்மை யாரையும் யாவையும் ஈன்றஅங் கயற்கண்
அம்மை யாவரே ஆயினும் அன்பின்ஆ தரிப்போர்
இம்மை யாகிய போகம்வீடு எண்ணியாங்கு எய்தச்
செம்மை யாகிய இன்னருள் செய்துவீற் றிருக்கும்"

எனத் தந்தையாகிய விச்சுவாவசு விளங்கக் கூறினன். அது கேட்ட விச்சாவதி மதுரையை அடைந்தாள். பன்னிரண்டு மாதங்கள் கடுமையான விரதங்களைக் கடைப்பிடித்தாள்.

"ஒளியால் உலகின் றுயிர் அனைத்தும்
மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கும் அங்கயற்கண்
அன்னே ! கன்னி யன்னமே !
அளியால் இமவான் திருமகளாய்
ஆவி யன்னம் மயில்பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து
விளையாட் டயருஞ் செயலென்னே !"

எனப் பலவாறு யாழ் இசைத்துப் பாடித் தேவியை வழிபட்டாள். அவளது உண்மையன்பிற்கு உவகையுற்ற அம்பிகை மூன்று வயதுடைய குழவியின் வடிவங்கொண்டு வரங்கொடுத்தற்கு வெளிப்பட்டு நின்றாள். விச்சாவதி அம்பிகையை அன்புவகை பொங்கப் பணிந்தனள். ஆயினும் வரமெதுவும் கேட்கவில்லை. அம்பிகை "அன்னை ! யாது வேண்டினை" என்றாள். அதற்கு "நிறைந்த பேரன்பு நின்னடிப் போதின் நீங்கலா நிலைமை தந்தருள்" என விச்சாவதி தொழுது நின்றாள். "இன்னும் வேண்டுவது யாது ?" எனத் தேவி வினவ, "இம் மகவுருவாகிச் சிறந்து வந்து என்பால் அருள் சுரந்திருக்கத் திருவுளம் செய்" என விச்சாவதி வேண்டிக்கொண்டனள். அம்பிகை "மலயத்துவசன் என்றொரு பாண்டியன் தோன்றுவான். நீ அவனது காதற்கற்பின் மிக்க மனைவியாவாய். அப்போது உன் தவ மகவாக யான் வருவேன்" என அருளிச் செய்து மறைந்தாள்.

அதன்படியே மதுரையில் மலயத்துவசன் என்று ஒரு பாண்டியன் தோன்றினன். மலயம் - பொதியமலை. துவசம் - கொடி. அகத்திய முனிவரின் முன்னிலையில், "யான் அறநெறியாட்சியே புரியக் கடவேன்" என உறுதி எடுத்துக்கொண்டு, அதனிற் பிறழாமைக்கு அறிகுறியாக அம்முனிவரின் மலய மலையைத் தனது கொடியில் வரைந்து கொண்டான் அவன். ஆதலால் அவனுக்கு மலயத்துவசன்



எனப் பெயரமைந்தது. அரசர்களெல்லாம் மனுநீதியின்படி நடப்பார்கள் ; இவனோ மனுநீதியைத் தன் வழியில் நடக்கும்படிச் செய்தவன். மறந்தும் பிழைநெறிபடா மனத் தூய்மையால் புனிதனாக விளங்கியவன் ; வெற்றிகள் பல பெற்றவன். குடிமக்கட்கு இனியனாய்க் கருணைக்கு உறையுளாய்க் காட்சிக் கெளியனாய்த் திகழ்பவன்; தென்மொழி, வடமொழி இரண்டும் கற்றுத் தேர்ந்தவன்.

"மனுவறம் உவந்துதன் வழிச்செல நடத்தும்
புனிதன்மல யத்துவசன் வென்றிபுனை பூணன்
கனியமுதம் அன்னகரு ணைக்குறையுள் காட்சிக்கு
இனியன்வட சொற்கடல் தமிழ்க்கடல் இகந்தோன்"

இத்தகைய மலயத்துவசன் சூரிய குலத்தைச் சேர்ந்த சூரசேனன் மகள் காஞ்சன மாலையை மனைவியாக மணந்துகொண்டான். இருவரும் எண்ணில் பல நாள் மகவிலா வறுமை எய்தி அளவிலா அறங்கள் பல ஆற்றி வந்தனர். பின்னர் இந்திரன் கூறியபடி மலயத்துவசன் 'புத்திர காமேட்டி' என்னும் மக வேள்வியைச் செய்தான். அவ் வேள்வி நிறைவின்கண், அறந்தழுவும் நெறிநின்றோர்க்கு இகம்போகம் வீடு அளிக்கும் அம்பிகை, இவ்வுலகமன்றி எவ்வுலகும் மகிழ்வெய்தவும், சைவம் முதலாயின தவத்துறை தழைப்பவும், ஓமகுண்டத்தினின்று அப்பொழுதலர்ந்த தாமரை மலர்க்கொடி முளைத்தெழுவதுபோல, மூன்று வயதுடைய பெண் குழந்தையாக வெளிப்பட்டுக் காஞ்சன மாலையின் மடிமீது வந்து இருந்தாள். மலயத்துவசன்

"மகவின்றிப் பலபகல்யான் வருந்திஅருந்
தவம்புரிந்தேன் மைந்தற்பேறு
தகஇந்த மகஞ்செய்தேன் அதுவும்ஒரு
பெண்மகவைத் தந்த தந்தோ !
முகஇந்து நிலவொழுக வருபெண்ணும்
முலைமூன்றாய் முகிழ்த்து மாற்றார்
நகவந்த தென்னேயோ ! என்றுவகை
இலன்ஆகி நலியல் உற்றான்"

அப்போது, "வேந்தனே ! நின் மகளுக்கு மைந்தர்கட்குச் செய்வதுபோலவே சடங்கனைத்தும் செய்க. தடாதகை

என்று பெயரிட்டு முடிசூட்டுக. கணவன் வரும்பொழுது இவளது மூன்றாம் நகில் மறையும்; கவலைப்படற்க" என ஓர் அசரீரி விசும்பில் தோன்றியது. பாண்டியன் அது கேட்டு மகிழ்வுற்றான். தான தருமங்கள் பலப்பல புரிந்தான். சடங்குகளனைத்தும் முறைப்படி ஆற்றினான். கலையனைத்தும் மேகலையாக மருங்கசைத்த அம்பிகையாகிய குழந்தை தக்க பருவமடைந்ததும், மண்ணாடு மகட்களித்து முடிசூட்டி மலயத்துவசன் வானாடு தான் அடைந்தான்.

" சரதமறை யாய்மறையின் பொருளாய்அப்
பெருண்முடிவு தானாய்த் தேனின்
இரதமெனப் பூவின்மணம் எனப்பரமன்
இடம்பிரியா எம்பிராட்டி "

ஆகிய தடாதகை தந்தைக்குச் செய்யவேண்டிய ஈற்றுக் கடன்களும் பிறவும் ஆற்றிமுடித்து, உலகமெலாம் ஒரு குடைக்கீழ் ஆளத்தொடங்கினாள்.

பொழுது புலர ஐந்து நாழிகைப்போது இருக்கும் பிராமீ முகூர்த்தத்திலேயே துயிலெழுந்து நீராடி, அரச மரபுக்குரியபடி தானதருமங்கள் செய்து, இறைவழிபாடு முதலியன முடித்துக் கோயிலுக்குச் சென்று "கடம்படி முளைத்த முக்கட் கரும்பினை மறைவண்டு ஆர்க்கும் விடம் பொதி கண்டத் தேனை விதிமுறை வணங்கி மீள்வாள்." பின்னர் அத்தாணி மண்டபம் எய்தி, அனிந்திதை கமலினி என்பார் மண்ணுலக மகளிராய்ப் பிறந்து வந்து அடைப்பை பொற்களாஞ்சி ஏந்தவும், கலைமகளும் திருமகளும் அங்ஙனமே போந்து கவரி வீசவும், கண்ணப்பர் சாத்தும் மலர்களைப்போலச் சோழனும் சேரனும் தமது முடிகளிற் சூடிய ஆத்தி பனைமாலைகளைத் தனது அடிமிசைச் சாத்திப் பணியவும் அரியணையின்மீது வீற்றிருப்பாள். செந்தமிழ் வடநூல் எல்லை தேர்ந்தவர்களும், எண்ணெண் கேள்வி அளந்தவர்களும், சமயம் ஆறும் வல்லவர்களும், துறவிகளும், சுமதி முதலிய அமைச்சர்களும் சூழ இருந்து, அந்தணர் விருத்திகள், திருக்கோயில்களின் நித்திய நைமித்திக பூசைகள், அறப்புறங்களின் நடக்கைகள் முதலியன குறித்து விசாரித்துச் செய்தற்குரியன பலவும் திருந்தச் செய்விப்பாள்.



'ஆதியுத் தேசத் தானும் இலக்கண அமைதி யானும்
சோதனை வகைமை யானும் சொன்னநூல் அனுவா தித்து
நீதியின் அவற்றாற் கண்டித் தவ்வழி நிறுத்தித் தம்மால்
வாதிகள் வாதம் செய்யும் கோட்டிமேல் மகிழ்ச்சி கூர்வாள்"

உத்தேசமாவது தான் விளக்கப்புகும் பொருளினைப் பெயர்மட்டும் கூறிச் சுட்டுதல். இலக்கணமாவது அவ்யாப்தி அதிவ்யாப்தி அசம்பவம் என்னும் மூன்று குற்றங்களும் நிகழாமல் ஒரு பொருளுக்குரிய சிறப்புத் தன்மையை விளக்குதல். சோதனையாவது தான் விளக்க மேற்கொண்ட பொருளில் இலக்கணத் தன்மை உண்டோ இன்றோ என ஆராய்தல். அனுவாதம் பிறர் கூறும் கூற்றையோ தானே முன்னர்க் கூறியதனையோ மீள எடுத்துரைத்தல். இதனை வழிமொழிதல் எனவும் கூறுவர். இதற்கு முற்பட்டதனைப் புரோவாதம் என்பர். 'புனருத்தி' கூறியது கூறுதலாகிய குற்றமாகும். ஆனால் அனுவாதம் குற்றம் எனப்படாது. கண்டித்தல் என்பது இலக்கண இலக்கிய மேற்கோள்களால் பிறர்கொள்கைகளைக் குற்றம் உடையவென மறுத்தொழித்தல். நிறுத்தல் எனப்படுவது பிரதிஞ்ஞை ஏது திருட்டாந்தம் உபநயம் நிகமனம் என்பனவற்றால் தனது கொள்கையைப் பிறர் மறுக்க இயலாவண்ணம் நிலைநாட்டுதல்.

வறுமையிற் கல்விபோலப் புலப்படா மருங்குல் நல்லார், இந்திரப் புலவன் பூட்டி அலைத்திடு பாவைபோல நின்று செய்யும் ஆடலின் கண்ணும், நலத்தகு பாடற்கண்ணும் நல்லருள் நாட்டஞ் செய்வாள். தொல்லோரியற்றிய அறங்களைப் பாதுகாத்தும், புதியன பலவற்றை ஏற்படுத்தியும், கல்வி செல்வம் என்பனவற்றைத் தன் இரண்டு கண்களாகக் கொண்டு தழைக்கும்படி செய்தும், தடாதகைப்பிராட்டி உலகுயிர்களைப் பாதுகாத்து அரசுபுரிந்து போந்தாள்.

"வரைசெய் பூண்முலைத் தடாதகை மடவாற் பிராட்டி
விரைசெய் தார்முடி வேய்ந்துதண் குடைமறு வேந்தன்
கரைசெய் நூல்வழி கோல்செலக் கன்னியாம் பருவத்து
அரைசு செய்தலாற் கன்னிநாடு ஆயதந் நாடு"

இவ்வாறு அரசுபுரிந்துவரும் நாளில், 'நிறையப் பூத்த கொம்பனைக்கு அணிதரு செவ்விவாய்த்தும் இன்னும் கடிமணப்

பேறு வாய்த்திலதே' எனச் சொல்லித் தன் தாயாகிய காஞ்சனமாலை வருந்துதலைத் தடாதகை கேட்டாள். "அன்னை! நீ நினைந்தவண்ணம் ஆம்பொழுது ஆகும். இதற்காக நீ இனி மேல் வருந்தற்க. யான் போய்த் திசைகளும் பிற உலகங்களும், வெற்றிகொண்டு மீள்கின்றேன்." எனக் கூறி விரைந்து புறப்பட்டாள். கயபதி முதலிய வடபுலக் காவல் வேந்தர் பலரையும் புயவலி அடங்க வென்று திறைகொண்டாள். விண்ணுலகம் சென்று இந்திரனை வென்று அயிராவதம், காமதேனு, கற்பகத்தரு முதலியவற்றைக் கைப்பற்றினாள். இவ்வாறே திக்குப்பாலகர் அனைவரையும் வென்றாள். பின்னர்ச் சிவபிரான் உறையும் திருக்கயிலை மலையை நோக்கி,

"வானூர் கயிலை மலையான்மகள் தன்னை நீத்துப்
போனான் வந்தாள்என் றருவிக்கட் புனல்உக்கு,அந்நீர்
ஆனா ஒலியால் அனைவாளென் றழைஇத்தன் தேசு
தானும் நகையால் தழீஇஎதிர் எற்பச் சென்றான்"

கயிலை மலையை வளைத்து முற்றுகையிட்டாள். காவலர்கள் நந்திதேவரிடம் சென்று தெரிவித்தனர். அவர் பூதகணங்களைப் போருக்கனுப்பினார். பூதகணங்கள் தடாதகையின் படைகளுக்கு ஆற்றாது இடருற்று அடைதலைக் கண்ட நந்திதேவர், சிவபிரான்பாற் சென்று செய்தி தெரிவித்தார். சிவபிரான் புன்முறுவல் பூத்துப் போர்க்களம் சென்றார். தேவியார் திருவுருவமும் சேவகச் செய்கையும் எதிர்கண்டார்.

"ஒற்றைவார் கழற் சரணமும் பாம்பசைத்து
உடுத்தவெம் புலித்தோலும்
கொற்ற வாண்மழுக் கரமும்வெண் நீறணி
கோலமுந் நூல்மார்பும்
கற்றை வேணியும் தன்னையே நோக்கிய
கருணைசெய் திருநோக்கும்
பெற்ற தன்வலப் பாதியைத் தடாதகைப்
பிராட்டியும் எதிர்கண்டாள்"

"யான் நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால் தான்நோக்கி மெல்ல நகும்" என்ற திருக்குறள் அனுபவத்தை இருவரும் பெற்றனர் போலும்! சிவபிரானைக்



கண்ட எல்லையில் தடாதகையின் மூன்றாம் நகில் மறைந்தது. அம்பிகை தன் கருத்தில் நாண்மடம் அச்சம்மேலிட்டு, மலர்ந்த பூங்கொம்பர்போல் ஒசிந்து ஒல்கி, பண்டைய அன்பு வந்து குடிகொள்ள நிலம்கிளைத்துத் தலைகுனிந்து மின்னற்கொடி போல நின்றாள். முன்னர் அசரீரி கூறியதனைக் கேட்டறிந்திருந்த சுமதி என்னும் முதலமைச்சன், "அன்னாய்! இக்கொன்றையஞ் சடைக் குழகனே நின் மணக் குழகன்" எனத் தடாதகைக்குக் கூறினான். அதுகேட்டு அம்பிகை அன்புபெருக நின்றாள். பெருமானுடன் அம்மை பேச விரும்பினளாயினும், பெண்மைக்குரிய இயல்பின்படி அம்மை தான் பேசவில்லை. சிவபிரான் பேசத் தொடங்கினார்: "என்று தொட்டு நீ திசையின் மேல் வெற்றி குறித்து எழுந்து போந்தனையோ அன்றுதொட்டு யாமும் நம் மதுரை விட்டு உனைவிடாது அடுத்து வந்தனம். உன்னை வேத விதிப்படி மணந்துகொள்ளச் சோமவாரத்தன்று வருவோம். நின் நகர்க்கு நீ எகுக" என்று அருளிச் செய்தார். அம்பிகை மதுரைக்கு மீள, மதுரைமா நகரில் திருமண ஏற்பாடுகள் சிறப்புற நிகழலாயின.

சிவபிரான் இங்கே 'நம் மதுரை' என்று கூறியது நோக்கத்தக்கது. இருவரும் ஒருவரை ஒருவர் எதிரெதிராகக் கண்டு மாறிப் புக்கு இதயம் எய்திய உரிமையை உணர்த்தவே அங்ஙனம் குறிப்பிட்டார். ஆயினும் அவ்வுரிமை இன்னும் செயலளவில் நிறைவேறச் சிறிது காலம் உளதாகலின் "நின் நகர்க்கு எகு" எனப் பின்னர்க் கூறினார். சிவபிரான் அம்பிகையை மணக்க மதுரைக்கு வருவதாகக் கூறியது அம்பிகைக்குப் பழிவாராதிருத்தற்காகும். பழி நாணுதல் பெண்கட்கு இருத்தற்குரிய பண்பு. போருக்கு வந்த இருவருக்கும் இடையில் வெற்றி தோல்வி பற்றிய பேச்சே எழவில்லை. சத்தி வாளும், சிவம் வாள் எறிபவனும் போல்பவர். மேலும் "ஊடலில் தோற்றவர் வென்றார் அது மன்னும் கூடலிற் காணப்படும்." "சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்" என்னும் திருக்குறள் நுட்பங்கள் ஈண்டு எண்ணி இன்புறுதற்குரியன.

சிவபிரான் போர்க்களத்தினின்று திருக்கயிலை சேர்ந்தார். கல்யாணம் என்றதும் கவலைவருதல் இயல்பு.

சிவபிரானுக்கும் அத்தகைய கவலை ஏற்பட்டது போலும்!
ஏன்? அவர் 'தாயுமிலி தந்தையுமிலி' அல்லவா? அவர் என்
செய்வார்? பாவம்! குறிப்பிற் குறிப்புணர்ந்த நந்திதேவர்
உற்றதுணையாய் உதவினார்.

சங்குகன்னன் முதலிய கணாதிபர்களை எல்லா இடங்
களுக்கும் அனுப்பி அயன் மால் உருத்திரன் ஆகிய அனை
வருக்கும் இறைவனது திருமணச் செய்தியினை அறிவிக்கச்
செய்தார். தேன்கூடு போன்ற சிவபிரான்பால் வண்டுகள்
போல முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணா
யிரம் முனிவர்களும் வந்து கூடி மொய்த்தனர். அவர்களை
யெல்லாம் நந்திதேவர் தராதரம் அறிந்து சிவபிரான்பால்
உய்த்தார். திருமண நிகழ்ச்சி என்றால் தயவு தாட்சண்யம்
உபசாரம் எல்லாம் வேண்டும். ஆதலின் சிவபிரான் சிலர்க்
குத் திருவாயின் வார்த்தை நல்கினார்; சிலர்க்கு அருள்நகை
முகிழ்த்தார்; சிலர்க்குக் கண்பார்த்தும் முடிதுளக்கியும்
தண்ணளி புரிந்தார். தோழனாகிய குபேரன் இறைவனைத்
திருமணக்கோலம் கொள்வித்தான். இந்திரன் களாஞ்சி
ஏந்தினான்; ஈசானன் அடைப்பை தாங்கினான்; மருத்துக்கோ
ஆலவட்டம் பணிமாறினான்; அக்கினி நறும்புகை பரப்பி
னான்; வருணன் கோடிகம் எடுத்தான்; நிருதி கண்ணாடி
சுமந்தான்; சூரியசந்திரர் விளக்குகள் ஆயினர்; குண்டோ
தரன் குடைபிடித்தான்; குபேரன் பொன்மழை பொழிந்
தான். இங்ஙனம் பரிவாரங்கள் புடைசூழ இறைவன் மண
மகனாக மதுரைக்கு எழுந்தருளினார்.

“நட்டவர்க் கிடுக்கண் எய்த நன்றிகொன் றவர்போற் கையில்
வட்டவாய்த் தொடியும் சங்கும் மருங்குசூழ் கலையும் நீங்க,
இட்டபொற் சிலம்பிட் டாங்கே நன்றியின் இகவார் போற்கால்
ஒட்டியே கிடப்ப நின்றார் உகுத்தபூங் கொம்பர் அன்னார்!”

மாப்பிள்ளை வரவேற்பு சிறப்புற நிகழ்ந்தது. இறைவன்
அரண்மனையைக் குறுகினான். காஞ்சனமாலை மங்கல மகளி
ருடன் வந்து வரவேற்று, கங்கைநீர் கொண்டு இறைவனின்
திருவடிகளை விளக்கி வரபூசை செய்து, அந்நீரைத் தலைப்
பெய்து பருகி மகிழ்ந்தாள். வரபூசையாவது மணமகனைச்
சிவபெருமான் எனப் பாவித்து வழிபடுதல். சிவபெருமானே
மணமகனாக வந்துப் போந்திருக்கின்றான். இறைவனையே



மருமகனாகப் பெறும் பேறுபெற்ற காஞ்சனமாலை வரபூசை
செய்து முடித்தபின், “அருமையால் அடியேன் பெற்ற
அணங்கினை வதுவை செய்து இத் திருநகர்த் திருவும்
கன்னித் தேயமும் கைக்கொண்டு ஆண்டருள்க” என்று
இறைவனை வேண்டிக் கொண்டனள். திருமணத்திற்குரிய
நல்ஓரை எய்துந் துணையும் இறைவன் கற்பகப் பூங்கொம்
பர் அன்னார் காமரு நடனம் நோக்கிக் கருணை செய்திருந்
தான். பின்னர்ச் சிவபிரானும் தடாதகைப் பிராட்டியும்
திருமண மண்டபம் சேர்ந்து ஒரு செம்பொன் அரதன
பீடத்து அமர்ந்தனர். அப்போது சிவபிரான் வெறும்
சுந்தரராக இல்லாமற் கல்யாணசுந்தரர் ஆகவும் சோமசுந்தரர்
(ஸ+உமா+சுந்தரர்=உமையுடன் கூடிய அழகர்) ஆக
வும் விளங்கினார்.

“பண்ணும்இன் னிசையும் நீரும் தண்மையும் பாலும் பாலின்
கண்ணும்இன் சுவையும் பூவும் நாற்றமும் மணியும் அங்கேழ்
வண்ணமும் வேறு வேறு வடிவுகொண் டிருந்தால் ஒத்தது,
அண்ணலும் உலகம் ஈன்ற அம்மையும் இருந்த தம்மா!”

அம் மண்டபத்திற் கூடியிருந்த 'யாவரும் இறையடி
நீழல் எய்தி யிருந்தார்போல இன்புற்றனர். திருமால் சிவ
பிரானின் திருக்கைமீது அம்மையின் திருக்கையைக்
'கமலப்போது பூத்ததோர் காந்தள்' போல் வைத்து, வேத
மந்திரங்களைத் தம் வாயினால் ஓதிக்கொண்டே கரகநீர்
சொரிந்தார். விண்ணவர் பூமாரிபெய்து தொழுதனர்.
அரம்பை மாதரார் ஆடினர். விஞ்சையர் அமுதகீதம் பாடி
னர். முனிவர்கள் பாவினர். யாவரும் இன்பக் கடலில்
இனிது திளைத்தனர்.

“சுற்றும்நான் மறைநள் ஆர்ப்பத் தூரியம் சங்கம் ஏங்கக்
கற்றநான் முகத்தோன் வேள்விச்சடங்குநூல் கரைத்தவாற்றால்
முற்றமங் கலநாண் சாத்தி முழுதுல கீன்றாள் செங்கை
பற்றினன்! பற்றி லார்க்கே வீடருள் பரம யோகி!”

“இணர்எரித் தேவும் தானே எரிவளர்ப் பவனும் தானே
உணவுகொள் பவனும் தானே ஆகிய ஒருவன் வையம்
புணர்வுறு போகம் துய்க்கப் புருடனும் பெண்ணும் ஆகி
மணவினை முடித்தான்! அன்னான் புணர்ப்பையார் மதிக்கவல்லார்?”

இங்ஙனம் பிரமதேவன் திருமணம் செய்விக்கும் புரோகிதனாக விளங்கி வேத மந்திரங்களை ஓத, சிவபிரான் தடாதகைப்பிராட்டிக்கு மங்கலநாண் சாத்தி, அவளது செங்கை பற்றினார். “ பாணிக்கிரகணம் ” என்னும் சொல் ‘ கைபிடித்தல் ’ எனவும், “ விவாகம் ” என்னும் சொல் ‘ விசேடமாகத் தாங்குதல் ’ எனவும் பொருள் தரும். அப் போது சொல்லப்பெறும் வேத மந்திரம்,

“ வந்தெ னைக்கரம் பற்றிய் வைகல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேன்என்று செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய் ”

எனச் சீதை இராமபிரானுக்கு அனுமன்பாற் கூறி விடுக்கும் செய்தியை நினைப்பிக்கும். இப்பாடல் பெண்மனத்தின் இயல்பினை நன்கினிது விளக்குவதோடு, ஒவ்வொரு சொல்லும் சுவைகெழுமித் திகழ்வதாகும். இவ்வாறு தேவியின் செங்கை பற்றிய சிவபிரான் வேத முனிவர்க்குத் தக்க தானங்கள் வழங்கினர். தீவலம் செய்தார். நம் கணவனின் பெருமைக்குத் தகாதே என எண்ணி அம்மை தம் கால்களைப் பின்வாங்கிக் கொள்ளவும், எவரையும் வணங்காத தம் தலையை வணக்கி, அம்மையின் திருப்பாதங்கள் நோகாவண்ணம் மெல்லென அம்மியின்மேல் ஏற்றிவைத்தார். “ அஸ்மேவ த்வம் ஸ்திரா பவ ” (கல்லைப்போல் நீயும் திண்மையாக இரு) என்பது வேதமந்திரம். ‘ கற்பு என்னும் திண்மை ’ எனத் திருவள்ளுவர் கூறியிருத்தலும் ஈண்டுணரற் பாலது. ‘ பொன்+பு ’ என்பது பொற்பு, பொன்னினது தன்மை எனக் குறித்தல் போல, கல்+பு என்பது கற்பு, கல்லைப்போற் கலங்காத திண்ணிய மனநிறையைக் குறித்தது என்பர். பின்னர், இறைவன் ‘ அருந்ததி எங்கே ?’ என வினவி, அவள் வணங்கிக் கொண்டு எதிர்வந்தபொழுது அருள்நோக்கம் புரிந்தார். இவ்வாறெல்லாம் மீனாட்சியம்மை திருமணம் இனிது சிறப்புற நிகழ்ந்தது.

“ விதிவழி வழாது வேள்வி வினையெலாம் நிரம்ப இன்னன்
அதிர்கடல் உலகம் தேற ஆற்றினன் மறைகள் ஆர்ப்பக்
கதிர்மணி நகையார் வாழ்த்தக் காமனைக் காய்ந்த நம்பி.”

———

# 24. கிருத்திகைச் சொற்பொழிவு*

மெய்யன்பர்களே !

இக் கிருத்திகையின் சார்பாக நாம் முதற்கண் அறிய வேண்டிய விஷயங்கள் பலவுள. அவற்றுள் முதன்மையானது நாம் ஏன் பிறந்தோம் என்பது. பொதுவாக விஷயங்கள் காரணவகையான் இரு வகைப்படும். அவையாவன :—1. ஒரு காரணமுடைய விஷயங்கள். 2. பல காரணமுடைய விஷயங்கள். நாம்ஏன் பிறந்தோம்என்னும் விஷயம் பல காரணமுடைய காரியத்தின்பாற்படும். நாம் பிறக்கப் பல காரணங்களிருப்பினும் எடுத்துக்கொண்ட விஷயமாகிய கிருத்திகைக்குச் சரீரத்தோடு கூடிய சம்பந்த காரணம்மட்டும் போதும். அதனை நன்கு விசாரணை செய்வோம். கீதையில் ஓரிடத்தில் பிறவிக்குப் பல காரணங்கள் உள எனினும் குணங்களின் சம்பந்தமும் ஒரு காரணமாக உண்டு என்று காணப்படுகிறது. சம்பந்தமும் எனும் உம்மையால் பல காரணங்களுள்ளனவென்பது வெளிப்படை. ஈண்டுக் குணங்கள் என்றது முக்குணங்களை. முக்குணங்களுமில்லாவிடில் நமக்குச் சரீரமில்லை. மேற்கூறிய வாசகத்தின் பொருளை ஆராய்வோம். குணங்கள் என்றால் முக்குணத்தைத்தான் சிறப்பாகக் குறிக்கும். அவை முறையே சத்துவம், ரஜஸ், தமம் என்பனவாகும். சம்பந்தம் என்றால் கூட்டம் அல்லது பற்று எனப் பொருள்படும். ஆகையால் மேற்கூறிய மூன்று குணங்களின் கூட்டமே நமது பிறவிக்கு ஒரு காரணம் எனப் பெறப்படுகின்றதல்லவா ? ஆம். அம் முக்குணங்களின் பழைய நிலை யாது என்பதை ஆராய்வோம்.

---

*இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் கிருத்திகை பற்றி ஆற்றிய சொற்பொழிவு. அவரது 13-ம் குருபூஜை விழாவன்று (6-2-55) திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் வெளியிடப்பெற்றது. தற்கால ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் அநுமதி பெற்றுச் சேர்க்கப்பெற்றது. குறிப்பெடுத்து உதவியவர் : திரு. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள், உடற்பயிற்சி ஆசிரியர், அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி, மஞ்சக்குப்பம்.

இம் முக்குணங்களும் தத்துவங்களில் ஒன்று. அவை பிரகிருதியினின்றும் உண்டாகிப் புத்தி முதலியவற்றை உண்டு பண்ணுகின்றன. அழியாத ஆத்மாவை அதற்கு விரோதத்தன்மை உடைய தேகத்தில் இறுகக் கட்டுகின்றன. இனி அத்தகைய முக் குணங்களின் இயல்பினையும் அவற்றின் செய்கைகளையும் விசாரிப்போம்.

1. சத்துவம் :—(a) இதன் இயல்பு :—இது பரிசுத்தமான குணம் உடையது. பிரகாசத்தை உடையது. மாசற்றது. நிர்மலமானது. தொந்தரவு இல்லாதது. அது இன்பத்தில் பற்றுண்டாக்குகிறது.

(b) சத்துவ குணம் என்ன செய்கிறது—கட்டுகிறது.

(c) எதனுல் கட்டுகிறது—சுகம், ஞானம் என்னும் சம்பந்தத்தால் கட்டுகிறது.

2. ரஜோகுணம் :—(a) இதன் இயல்பு :—ரஜோ குணம் ஆசை வடிவமானது. ஆசையே பற்றுக்கு அல்லது அவாவிற்குப் பிறப்பிடமாகும். கிட்டாத பொருளின்மேல் செல்லும் விருப்பம் ஆசை. கிடைத்த பொருளின்மேல் உள்ள விருப்பம் அவா அல்லது பற்று எனப்படும். ஆனல் ஆசையைவிடப் பற்று தரத்தில் மேம்பட்டது. அவாவினை விளக்க வேறு ஒன்றும் நமக்கு வேண்டியதில்லை. அதற்கு நாம் பொருளைப் பிரியநேரும் சந்தர்ப்பத்தில் இருக்கும் மனோ நிலைமையே சான்ருகும்.

(b) ரஜோகுணத்தின் சம்பந்தம் கர்மம். கர்மத்தினுலே தான் ரஜோகுணம் சரீரத்தை ஆத்மாவோடு கட்டுகிறது.

(c) ரஜோகுணத்தின் தொழில் :—ஆன்மாக்களுக்கு ஒரு பொருளின்மேல் பற்றுஉண்டாகச் செய்கிறது.

3. தமோகுணம் :—இது அஞ்ஞானத்தினின்றும் தோன்றியது.

(a) இயல்பு அல்லது சுபாவம் :—சகல ஆன்மாக்களையும் மயக்கும் தன்மையுடையது.

(b) இது எதனுல் சரீரத்தை ஆத்மாவோடு பிணைக்கிறது?—பிரமாதம், ஆலசியம், நித்திரை என்பவைகளால் பிணைக்கின்றது. பிரமாதம் என்ருல் செய்யவேண்டிய காரியம் நேர்ந்தபோதும் செய்யாமை. ஆலசியம் என்ருல் சோம



பல். நித்திரை என்ருல் தூக்கம். மேற்கூறிய மூன்று குணங்களாலும், அஜாக்ரதை எனும் குணத்தாலும் தமோகுணம் சரீரத்தை உயிரோடு கட்டுகிறது.

" கெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் !"

என்ருர் நாயனரும்.

(c) முக்குணத் தொழில் :—அறிவை மறைத்து அஜாக்கிர
தையைப் பற்றச் செய்கிறது. இவைகளின் சுபாவம் :—
ஒரு குணம் மேம்பட்டபோது மற்ற இரு குணங்களும்
அடங்கிடக்கும்.உதாரணமாக அறிவு ஓங்கும்தருணமே
அல்லது அறிவு பிரகாசப்படும் தருணமே சத்வகுணமேம்
பாட்டை உணர்த்தும். ஒரு தொழிலைச் செய்ய முயற்சி
செய்யும் போதும் ஒரு பொருளின்மேல் ஆசைப்படும்
போதும் ரஜோகுணம்மேம்பட்டிருத்தலை நாம்அறியலாம்.
அதனுடையசெயல் உலோபமும் ஓய்வில்லாமையுமாகும்.
வேலையில் தவறும் தருணமே தமோகுணவடிவைத் தெரி
விக்கும். தமோகுணம் மேலும் சோம்பலை உண்டாக்கும்.

இக் குணங்களால் உண்டாகும் பயன்கள் :—சத்வ
குணத்தின் பயன் பரிசுத்தம். ரஜோகுணத்தின் பயன்
துக்கம். தமோகுணத்தின் பயன் அறியாமை. எனவே
இதுவரை நாம் என் பிறந்தோம் என்னும் அங்கத்தின்சார்
பாக நாம் முக்குணங்களையும் அவற்றின்சுபாவம், தொழில்,
குறிகள், பயன் முதலியவற்றையும்பற்றிப் பேசினேம்.
இனி நாம் என் விரதம் அனுஷ்டிக்கவேண்டும் என்பதைப்
பற்றி ஆராய்வோம். நாம் பரிசுத்தம் அடைவதற்காகத்
தான் விரதம் இருக்கவேண்டும். அப்படிப் பரிசுத்தமாக
இருந்தால் நமக்கு அறிவு உண்டாகிறது. உலோபகுணம்
அறவே நீங்குகிறது. (உலோபமாவது பிறர் பொருளைக் கிர
கிக்க விரும்புதலும் தன் பொருளைப் பிறருக்குத் தாதிருத்த
லும் ஆகும்.) அறியாமையும் நீங்குகிறது. ஆகவே நாம்
நன்ருகச் செவ்வையாக விரதம் அனுஷ்டிக்கவேண்டும்
என்பது இதனுல் தெரிகிறது. அங்ஙனம் விரதம் அனுஷ்டிப்
பது என் என்பதுபற்றிக் கீதையில் கூறப்பட்டிருப்பதைப்
பார்ப்போம். " நாம் பரிசுத்தமாகச் சத்வகுணத்தோடு விர
தம் அனுஷ்டித்து அதன் மூலமாக முக்குணத்தையும் கடத்

தல் வேண்டும். அப்படிக்கடந்தால் இறப்பு, பிறப்பு, மூப்பு இவைகளாலான துன்பங்களினின்றும் விடுபடுகின்றோம் என்பதாம். அப்போது இரண்டுசாதனங்கள் பெறுகிறோம். 1. ஒன்று துன்பத்திலிருந்து நீங்குவது. 2. இரண்டாவது அமிர்தம் என்னும் முத்தியைப்பெற முயற்சி செய்வது. இந்த இரண்டு சாதனங்களையும் அடையவே பரிசுத்தமாக இருந்து விரதங்களை அனுஷ்டிக்க வேண்டும் என்பதாம்.

ஒருவன் மேற்கூறியவைகளை அறிந்தால்மட்டும் அறிவாளி அல்ல. அனுஷ்டித்தால்தான் அறிவாளியாகிறான். ஆகையால் ஒவ்வொருவனும் மயக்கத்தினின்றும் தெளிதல் வேண்டும். அறியாமையினின்றும் நீங்கல் வேண்டும். விஷயங்களைப் பகுத்தறிதல் வேண்டும். அவைகளை அத்துடன் விட்டுவிடாமல் வாய்ச்சொல் அளவில் நிறுத்திவிடாமல் அதன்படி நிற்றலாகிய பழகுதலைச் செய்யவேண்டும்.

“ கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக ”

என்றார் நாயனார்.

தத்துவத்தில் கூறும் பதி பசு பாசத்தை அறிந்தால் மட்டும் அறிவுவிளக்கம் ஆகுமா ? அனுஷ்டித்தால் தானே அறிந்ததன் பூரணபிரயோஜனத்தை அடையலாம். விஷயங் களை அறிவதனாலேயே ஒருவன் பிறப்பினின்றும் நீங்க முடி யுமா ? அறிந்தபடி ஒழுக்கத்தின்பாற்படுத்தினாலன்றோ பூரண பயன் சித்திக்கும். ஆகவே நாம் விரதநாட்களில் சத்துவகுணத்தோடு இருக்கவேண்டும். நாம் ரஜோ, தமோ குணங்களை விட்டால்தான் விரதம் செய்யும் யோக்கியதை உடையவர்களாக ஆவோம். அதற்காகச் சத்துவ குணத் தோடு இருப்போம்.

இக்காலத்தில் விரததினம் என்றால் பெண்களும்கூட சுத்தமாக இருக்கவேண்டும் என்று கருதிப் பல நாட்க ளுக்கு முன்னமேயே, தற்கால நவீன நாகரீக ஆடவர்களைப் போலல்லாது, என்றைக்கு விரததினம் என்று தெரிந்து, வீட்டை மெழுகிக் கோலமிட்டு, சுத்தமான பதார்த்தங்களை அன்றாவது சமைக்கவேண்டும் என்று எண்ணிச் சுத்தமான பதார்த்தமாய், விருந்து உண்டியாய், இல்லாததையும்தேடிச் செய்கிறார்கள். சிலர் கிருத்திகையில் சாப்பிடாமல் இருப்ப



தென்றும், ஒரே வேளையாகச் சாப்பிட்டுவிடுவதென்றும், பலமுறை பலகாரங்களையே சாப்பிட்டுக்கொண்டு இருந்து விடுவது என்றும் கருதி அங்ஙனமே செய்கிறார்கள்.

இப்படியாக இருந்துவிட்டு, விரதம் அனுஷ்டித்தோம் என்று எண்ணுகிறார்கள். இதுவா விரதம் ? அன்று. ஞானி கள் என்றும் கைவிடாது அனுஷ்டிக்கும்—இல்லறத்தோர் விசேஷ தினங்களில் அனுஷ்டிக்கும் விரதத்தின் லக்ஷணமா இவர்கள் விரதப் பழக்கம் ? யாவரும் இவ் விசேஷ தினங் களிலே அனுஷ்டிக்கவேண்டும் விரதம் வேறு.

நம்மில் உள்ள பொருளாய் (நம்மிடத்து உள்ள பொரு ளாய்) நமக்கு அடங்கின பொருளாய் இருப்பது எது ? அடங்கின பொருள் என்றால் நம்மிடத்து அடங்கியிருக்க வேண்டிய பொருள். அப்படி இருக்கவேண்டிய பொருள் எது? அதுதான் மனம். மனம் உடைமையால் நாம் மக்கள், மனிதன் ஆகிறோம். மற்றவைகளில் சிலவற்றுக்கு மனம் கிடையாது. மிருகங்களை மனத்தினாலாகும் பயனை அடைய வில்லை.

மனிதரின் இயற்கை மனத்தின் இஷ்டம்போல் நடப் பது. அது எதைப்போல் இருக்கிறதென்றால் பள்ளங்கண்ட விடத்தெல்லாம் ஓடித் தங்கும் நீரைப்போல இருக்கின்றது. பாபத்திற்கும், தீவினைக்கும், பிறவிக்கும் நம்மிடத்து உள்ள காரணங்கள் என்ன ? நாம் அவற்றை எப்படி நீக்கலாம் என்பதைப்பற்றிக் கிஞ்சித்தேனும் விசாரிக்க முயற்சி எடுப்பதில்லை.

இனி, நாம் இன்ன மனமுடையவர்கள் விரதம் அனுஷ் டிக்கவேண்டும் என்பதைப்பற்றிச் சற்று ஆராய்வோம். நம்மைத் தேவனாக்குவது எது ? நரகனாக்குவது எது ? யோசிக்குங்கால்,

“ கெடுக்க வல்லதும், கெட்டவர் தங்களை
எடுக்க வல்லதும் இம்மனம் என்றதை
அடக்க வல்லவன் ஐய! பவக்கடல்
கடக்க வல்லவன் ஆவன் கடிதரோ ”

—பிரபுலிங்க லீலை-சாத. க. 15

என்னும் ஆன்றோர் அறிவுரையால் தீவினையில்—பாவ

நெறியில் ஆழ்ந்த ஒருவனையும் மனமானது சொல், எண்
ணம், பொருள், சிநேகம், காலம், இடம் முதலியவற்ருல் அவ்
வினைகளினின்றும் நீக்கி நல்வாழ்வை ஊட்டும் என்று புலப்
படுகிறது. அம்மனத்தை அடக்கினுல் சரியை, கிரியை,
யோகம், ஞானம் இவைகளில் வல்லவர்களாகலாம். நாம்
மனத்தை அடக்கும் முறையில் தினந்தோறும் சிறு பொழு
தாயினும் ஈடுபடவேண்டும். தருமம் செய்தல், இன்பம் நுகர்
தல், பொருள் ஈட்டல், கல்வியில் வெற்றிபெறல், பகைவரைக்
கொல்லவீரமுண்டாதல், உயர்ந்த சந்நியாசம் இவை யாவற்
றையும் முட்டின்றிச் சித்திக்கவைப்பது எது? மனந்தானே!
இத்தகைய மனம் அடங்கினுல் துக்கம் இல்லை. சுகம் உண்டு.
ஒருவனுக்கு மனம் அடங்கவேண்டுமானுல் அவனுக்கு
அறிவு இருக்கவேண்டும். ஏனெனில் அறிவுஉள்ளவன்தான்
விஷயங்களின் மெய்ப்பொருளையறிந்து சில வேளைகளில்
அஞ்சுவான். அப்படி அஞ்சினவனே அடங்குவான்.
அறிவிலி விஷயங்களை ஓரான். எப்போதும் பாய்ந்து அஞ்
சாது பேசுவான். ஆகையால் நாம் நம் நடையைச் சீர்
திருத்தி மனத்தை அடக்க முயலவேண்டும். நாம் எதில் பழகு
கிறேமோ அதிலே நமக்கு அலக்ஷிய புத்தி ஏற்பட்டுவிடும்.
உதாரணமாக நாற்கால் பசுவை நாம் கவனிக்கிறதேயில்லை.
ஐந்துகால்மாடுகள் என்றுல் ஆறுபைசா கொடுத்தாயினும்
பார்க்கிறேம். அம்மாதிரியிராமல் மிக்க லக்ஷியத்துடன்
தினம் சிறிதுநேரமாவது மனத்தையடக்க வேண்டும். நாம்
தூங்குவதால் அடையும் பயன் யாது? சிரமநிவர்த்தியும் சுக
மும் உண்டாகிறது, தூங்குவதற்கு முன் இருந்தசிரமம் தூங்கி
எழுந்ததும் தீர்கிறது. அதுதானே தவிர நாம் உணர்ச்சி
யோடு மேற்கூறிய இருபயனையும் அடையவில்லை. உடம்பி
லுள்ள துக்கமாகிய சிரமத்தை நீக்கும் ஓரளவான தூக்கம்.
இன்னேரளவான தூக்கம் விழித்துக்கொண்டே தூங்கு
வது. சிரமம் நீங்கத் தூங்கும் ஸ்திதி சுழுத்தியாகும். அப்படி
நன்றுய்த் தூங்குவதுடன் அற்ப சுகம் அடையும் ஸ்திதி
துரியம். விழித்த பின்னரும் நன்று தூங்கினேன் என்ற
பிரக்ஞை ஸ்திதி துரியாதீதம். இக்கடைசி ஸ்திதிதான் அதிக
சுகத்தைத்தருவது. மிக நல்லது. இதுவரை கூறிய மூன்று
ஸ்திதிகளிலும் தூக்கத்தில் மனேவியாபாரம் இல்லை. அதற்கு



மேல் இரண்டு ஸ்திதிகள் இருக்கின்றன. அவை சாக்கிரம்,
சொப்பனம், இந்த இரண்டு அவஸ்தைகளிலும் மனம்
தொழிற்படுகிறது. மேற்கண்ட மூன்று அவஸ்தைகளாக
எப்போது மனேவியாபாரம் இல்லையோ அப்போதுதான்
தூக்கம் என்று முடிவு செய்தோம். பின்னர் இரண்டு
அவஸ்தைகளிலும் மனம் தொழிற்படுகிறது என்கிறேம்.
தன்மாத்திரைஎன்பது பஞ்சேந்திரியங்களின் மூலகாரணம்.
ஐம்புலன்களும் தன் மாத்திரையில் ஒடுங்கும். தன் மாத்
திரை பஞ்சபூத பரிணும சேர்க்கையால் மெய், வாய், கண்,
மூக்கு, செவி என்றுகிறது. இதனுடைய சூக்ஷ்ம காரியமே
சப்த ஸ்பரிச ரூப ரச கந்தம். நாம் மேலே இரண்டாவதாக
எடுத்துக்கொண்ட மனேவியாபாரமுடைய சாக்கிர,
சொப்பன அவஸ்தையில் தன்மாத்திரைகள் ஐந்தும் மனம்
புத்தி அகங்காரமாகிய மூன்றும் சேர்ந்து எட்டாகிய நிலை
யில்தான் நாம் சொப்பன அவஸ்தை அடைகிறேம். இதில்
சித்தம் ஒன்றுமட்டும் தொழிற்படுவதில்லை. அதை எப்படி
அறியலாம் எனின் நாம் கனவில் பணத்தைக் காண்கிறேம்.
ஆனுல் சித்தம் அங்குத் தொழிற்படுமாயின் இது பணம்
அன்று என்றே காட்டிவிடும். அது இல்லாமையினுல்தான்
நாம் பணத்தைச் செலவு செய்வதாகவும், சந்தோஷமா
யிருப்பதாகவும் எண்ணுகிறேம். இப்படி நாம் தூக்கத்தில்
சொப்பனம் காணுவது நமது கர்மானுபவமே. அதாவது
நாம் கொஞ்சம் கஷ்டம் அடையவேண்டிய கர்மத்தை
உடையவர்களாயிருப்பதினுலே தான் சொப்பனம் காண்
கிறேம். சொப்பனத்தில் மனம் உள்ளேயே இருக்கிறது.
அதாவது மனம் சித்தம் ஒன்று நீங்கலாகத் தன்மாத்திரை
யின் சூக்ஷ்ம காரியத்தோடு தொழிற்படுகிறது. ஆனுல்
சாக்கிராவஸ்தையில் எல்லாம் தொழிற்படுகிறது. மனம்
வியாபாரமற்றுத் தொழிலற்று இருக்கும் நிலையே சுழுத்தி.
இதனுல்தான் "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதுமாக முடியும்" என்றுர் பெரியார். இன்னெரு
பெரியார்,

"துயிலே இன்பெனச் சொல்லுதல் இந்தியத்து
இயலு நெஞ்ச மிலாமை பினுலன்றே

பயிலு நஞ்சம் பார்த்து திரிதரும்
செயலில் இல்லை சிறிதும் சகம்அரோ "

—பிரபுலிங்க லீலை-சாத. க. 9

என்றார். பயிலும் நெஞ்சம் என்றால் நம்முடன் பிறப்பு முதல் இறப்புவரை நீங்காது சிநேகமாயிருக்கிற நெஞ்சம் என்று பொருள். மனைவியும் மக்களும் நமக்கு இயற்கைச் சிநேகிதர். வெளியிலுள்ளவர்கள் எல்லாரும் செயற்கைச் சிநேகிதர்களேயாவர். ஆனால் இவை இரண்டிற்கும் அப்பாற்பட்ட மனமே—இவ்விரண்டையும்விட நெருங்கி நம்முடன் இருப்பது. அது பாந்துதிரியும் செயல் உடையது. செயல் நடப்பதற்கு மனம் முதற்காரணம். அது பலவகைகளில் தொழிற்படுகிறது. ஆனால் அது ஒன்றேதான். சர்க்கரை ஒன்றுதான், அதனைக் கொண்டு இனிப்பான பல ரூபமான பலகாரங்கள் செய்கிறோம். எல்லா நூல்களும் ஒரே உண்மையைத்தான் கூறுகின்றன. ஆகையால் நாம் நம் மனத்தை யடக்குவதற்காகச் சில காரியங்கள் செய்ய வேண்டும். நாம் தேடரிய புகழைத் தேடவேண்டுமாயின் மனத்தைத் தான் அடக்கவேண்டும். அதனாலேதான் நாம் மிக்க புகழை அடையலாம். அப்படி முயற்சித்துத் தவறினும் முயற்சி செய்த வரைக்கும் பெரியவனாவோம். பெரியோர் நியமமும் அதுவே. இனி,

" ஆயின் மிக்கோர் அரிய செயலெலாம்
நேயமிக்க மனத்தை நிறுத்தல் காண்
வாயு நிற்க மனமும் உடன் நிற்கும்
தோயம் நிற்குறின் நிற்கும் துரும்பே "

—பிரபுலிங்க லீலை-சாத. க. 16

என்ற செய்யுளை ஆராய்வோம். வாயு, அக்கினி—இந்த இரண்டு பூதங்களையும் கொண்டுதான் உயிர் உடலில் இருக்கிறது. ஜீவன் உடலில் இருப்பதை மற்றைய குறிகள் அடங்கினபோதும் இந்த அக்கினி, வாயு என்ற இரண்டைக் கொண்டே அறியலாம். வாயு பத்துவிதம். அவற்றில் முதல் வாயுவின் பெயர் பிராணன். அது உயிர் இருப்பதற்கு அடையாளம். உடலில் உள்ள கடைசி வாயு தனஞ்செயன். அக்கினியும் ஒன்பது வாயுக்களும் உடலைவிட்டு



நீங்கின மூன்று நாளைக்குப் பிறகுதான் இது உடலை விட்டு நீங்கும்.

இனி பிராண வாயுவைப்பற்றி நாம் விசாரிப்போம். இதுதான் முதல் வாயு. அது நாம் சும்மா இருக்கும்போது 12-அங்குல தூரம் வெளியே போகிறது. 8-அங்குல தூரம் உள்ளே செல்கிறது. மறுபடியும் இருப்பது நாலங்குலம். இது நம் தேகத்திற்குண்டாகும் நஷ்டம். நாம் செய்யும் காரியத்திறகுத் தகுந்த படி இவ்வாயு வெளியே செல்கையில் நீளும். நாம் கேட்டிருக்கிறோம்! புராதன காலங்களில் ஒருவர்மேல் மரம் முளைத்தது. அது எதனால் என்றால் அவர் யோகத்தால் தவம் செய்ய அவர்மேல் மரம் முளைத்து மிருகங்கள் அவர்மேல் உராய்ந்து தினவுதீர்த்துக்கொண்டன. (கண்டூயம்) இதற்கெல்லாம் காரணம் பிராணயாமம் செய்தலே. ஆயாமம் என்றால் தடுத்தல். பிராணயாமம் என்றால் பிராண வாயுவை வெளியே போகாமல் தடுத்தல். பிராணயாமப் பழக்கம் லௌகீகத்திற்கும் பிரயோஜனப்படுவதுதான். உதாரணமாக இராமமூர்த்தி உலக முழுவதும் யாத்திரை சென்று மிக்க புகழ் அடையக் காரணமென்னவென்று விசாரித்தால் பிராணயாமத்தின் பயனாக ஏற்பட்ட உடல் வலிமையே. அதனால் செய்த அரிய வேலைகளே. மகமதிய வேதமாகிய குரானில்கூட உலக இன்பத்திற்காகப் பிராணயாமம் அவசியமென்று கண்டிருக்கிறது. சிவப்பிரகாச சுவாமிகளும் தாம் 10-ஆம் வயதில் செய்த முதல் நூல் முதல்பாட்டிலேயே மனத்தைக் குதிரை என்று கூறினார்கள். "சதுரனெழில்......மனமாங் குதிரை." வேறோரிடத்தில் "மனமெனும் வயமா" என்கிறார். அதனைப் பிராணயாமம் எனும் கடிவாளத்தால் நடத்தலாம். அப்படி நடத்தினால் ரூபம் முதலிய பள்ளங்களில் போகாது. பிராணவாயுவாகிய கடிவாளத்தை இழுத்துவிட்டால் மனம் அடங்கிவிடும்.

" ஓடும் மாவை நிறுத்துறில் உள்ளுறக்
கோடும் வாய்க்கவி னத்தினைக் கொள்ளுவார்
நீடு மாமனம் நிற்க நிறுத்துறில்
ஓடும் வாயுவை உள்ளுற ஈர்ப்பால் " —பிரபுலிங்கலீலை

பிம்பப் பிரதிபிம்பமாய் இரு தனிவாக்கியங்களாக எடுத்துக்

நாட்டு உவமை அணி என்று சொல்லப்படும் இலக்கணத்திற்கு இலக்கியமாகிய இச் செய்யுள் நம் மனத்தை ஒரு குதிரைக்கு ஒப்பிடுகிறது.

மனம்—குதிரை
பிராணவாயு—கடிவாளம்
பஞ்சேந்திரியங்கள்—5-வீதிகள்
ரூபங்கள்—பள்ளங்கள்

திருப்பாதிரிப்புலியூர்த் தேவாரத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் என்னகூறுகிறார் ? மனமே இங்குவா ! ஏன் ? உன் காரியமாகிய நினைப்பதற்கேதான். வேறு வேலையில்லை. என்னிஷ்டத்திற்கு ஒரு நாளைக்குவா. நாம் போவோம். கடவுளுடைய கழலைப் பற்றுவோம். நம்மை ஆதரிப்பான். ஆபத்துக்காலத்திலும் உன்னைச் சௌக்கியமாய் அழைத்துச் செல்கிறேன். இளஞ்சந்திரன் காலில் விழுந்தான். அவனை எடுத்துத் தலையில் அணியாக அணிந்தானே ! ஆகையால் நாமும் அவனிடம் போவோம். நமக்கு ஏற்பட்டவன் அவன்தான். உமையாளோடு சுகமாக வீட்டில் இருக்கிறான். ஆதரிப்பான். நாம் போனால் நம்மைத் தள்ளவே மாட்டான் என்ற பொருள் செறிய,

"பற்றாய் நினைந்திடப்போது நெஞ்சே இந்தப்பாரைமுற்றும்
சுற்றாய் அலைகடல் மூடினுங்கண்டேன் புகல்நமக்கு
உற்றான் உமையவட் கன்பன் திருப்பாதிரிப்புலியூர்
முற்றாமுளை மதிக்கண்ணியினான் தனமொய் கழலே"

என்ற தேவாரத்தைப் பாடியிருக்கிறார். மனத்தை அடக்கும் செயலால்தான் நாம் மனிதன் ஆகின்றோம். இல்லாவிடின் மிருகமெனக் கருதப்பட்டுத் தீவினைகட்காளாகி நரகில் வீழ்ந்து துன்புறுவோம். ஆகையால் நாம் கெட்டதைப் பல நாட்பழகினும்விட்டுவிடவேண்டும். இதுவரை மனம் சொன்னதையும் கருதியதையும் நாம்கேட்டு நடந்திருக்கிறோம். மனம் நம்மை எவ்வளவோ இடத்தில் வெகுகாலமாக இழுத்துச் சென்றது. ஆகையால் இப்போது ஒரு நாளாவது நம் இஷ்டப்படி அம்மனத்தை வரவழைக்கவேண்டும். அதாவது மனத்தை வியாபாரமின்றி வைத்திருப்பதேயாகும். இதனால்



வரும் அற்ப துன்பங்களைச் சகித்து ஆத்மலாபத்தை அடைய வேண்டும். எந்த மதமும் கொள்ளும் கொள்கையும் இதுவே. திருநாவுக்கரசு சுவாமிகள் கரையேறினதும் பாடினார்:

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசை கெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக் கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே"

பணத்தைச் சம்பாதித்து அனுபவித்துப் பேசுபவன் பேச்சு வேறு. பணத்தைச் சம்பாதித்து அனுபவியாதவன் பேச்சு வேறு. இரண்டு பேருடைய பேச்சும் ஒத்திருக்குமா ? ஒத்திருக்காது. மேற்கூறிய செய்யுள் உண்மையான அனுபவம் உடைய திருநாவுக்கரசரின் உண்மை அனுபவத்தைத் தெரிவிக்கிறது. மனத்தின் தர்மம் ஓடும். நிற்கும். ஆகையால் இப்போது ஓடும் மனம் கெட்டது என்றும், நிற்கும் மனம் நல்லது என்றும் முடிவுக்கு வந்தோம். நல்ல மனத்திற்கு விரதம் வேண்டுவதேயில்லை. ஏனெனில் அது எப்போதும் பரிசுத்தமாகச் சத்வகுணத்திலேயே இருந்து மனத்தை அடக்கும் விஷயங்களில் முயற்சி செய்யும். பின்னை யாருக்குத்தான் விரதம் அவசியம் என்றால் கெட்ட மனம் உடையவர்கட்குத்தான் அவசியம் வேண்டும். ஞானம் பொதுவாக அனைவர்க்கும் அவசியம் வேண்டும். அந்த ஞானம் விரதத்தால்தான் வரும். அதனால்தான் கெட்ட மனமுடையவன் விரதத்தை அனுஷ்டித்து ஞானம் பெற வேண்டும். கெட்ட மனத்தின் சுபாவம்,

"மன்னு காம வெகுளி மயக்க மென்று
இன்ன கூடி யெறிவளி முற்சுடர்
என்ன வாடு மியன்மனத் தீமனந்
தன்னை யாருந் தடுக்கத் தகாதரோ"

—பிரபுலிங்கலீலை-சாத. க. 20

1. நல்லமத்னதின் இலக்ஷணங்கள்:—ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் மனம் நன்மனம். திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்புகலூரில் நவ இரத்தினங்களைக் கண்டும் அவற்

றைத் தனக்கெனப் பத்திரப் படுத்தாமல் எறிந்துவிட்டார். அதுதான் நன்மனம்.

"ஓடும் பொன்னும் உறவும் பகையுமோர்
கேடும் செல்வமும் கீர்த்தியும் நிந்தையும்
வீடுங் கானமும் வேறற நோக்குதல்
கூடுந் தன்மை கொளும்மனம் நன்மனம்"

—பிரபுலிங்கலீலை-சாத. க. 19

2. உறவும் பகையும் :—திருநாவுக்கரசு சுவாமிகள் பல்லவ அரசனால் மிக்க கஷ்டப்பட்டவரல்லவா? ஆயினும் அவனுக்கு ஞானோபதேசம் கொடுத்தாரல்லவா? ஆகையால் அப்படிப்பட்டவருடைய மனம்தான் நல்லது. அவருடைய மனம் உறவும் பகையையும் ஒன்றாகக் கருதியது. இதனை,

"பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா"

எனச் சோமேசர் முதுமொழி வெண்பாவும் கூறுகிறது.

3. கேடும் செல்வமும் :—இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாக நோக்கவேண்டும். பட்டினத்தாரே இதற்குத் தக்க சான்று ஆவார்.

4. கீர்த்தியும் நிந்தையும் :—புகழையும் இகழையும் ஒன்றாகவே கருதவேண்டும். பட்டினத்தாரின் சரித்திரம் இதனை நன்கு எடுத்துக்காட்டும். அவர் செய்த நூலின் உண்மையும் அதுவே. "வைததனை இன்சொல்லாக் கொள்வானும்" என்று திரிகடுகம் என்ற நூலும் கூறுகிறது.

5. வீடும் கானமும் வேறற நோக்குதல் :—இது நன்மனத்தின் இலக்கணமாகும். இதுவரை கிருத்திகை என்பதை விஷயமாகக் கொண்டு அதன் முதல் பாகத்தின் சார்பாகப் பேசினோம். நன்மனம் உடையார்க்கு விரதம் வேண்டுவதில்லை. கெட்ட மனம் உடையார்க்கே விரதம்வேண்டும் என்பதை இறுதியாகப் பேசி முடித்தோம்.

இனி, நாம் கெட்ட மனத்தை விரதம்கொண்டு நல்மனமாக்கி எப்படி நன்மையை அடைந்து மோக்ஷத்தையும் பெறலாம் என்பதைப்பற்றி ஆராய்வோம்.



உலகில் பிறந்த நாம் இறப்பதற்கு முன்னமே மறுபடியும் பிறவாமலிருப்பதற்கு உரிய செயல்களைச் செய்தால் தான் அறிவுடையோர் ஆவோம். நாம் மறுபடியும் பிறப்பதற்குரிய செயல்களைச் செய்தால் அறிவுடையோர் ஆவோமா? நாம் இம் மனிதப் பிறவியை இனிப் பிறவாத வழியில் பயன்படுத்தவேண்டும். இல்லாவிட்டால் மனித ஜென்மத்தைப் பயன்படுத்தியவராகமாட்டோம். அப்பர் தேவாரம் என்ன கூறுகிறது.

"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில் தீவண்ணர்
திற மொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில் உண்பதன்முன்
மலர் பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில் அளி
யற்றார் பிறந்தவா றேதோவென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே"

—திருத்தாண்டகம்

நாம் கடவுளது திருநாமங்களை ஓதுதல் வேண்டும். கோயில் சென்று வணங்கவேண்டும். பூசை செய்யவேண்டும். விபூதி தரிக்கவேண்டும். அப்படிச் செய்தாலிறக்கமாட்டோம். இறந்தாலும் இனிப் பிறவாத நன்மையை அடைவோம். சிறிதேனும் இப்பிறப்பில் முயற்சி எடுத்தால்தான், சிறிதேனும் இப் பிறப்பைப் பயன்படுத்திக் கொண்டவராகின்றோம். இல்லாவிடில் இந்த ஜன்மம் வியர்த்தமாகமுடியும். செல்வந்தன் ஒருவனுடைய மகன் சொத்துக்களை எல்லாம் வியர்த்தமாக்கினால் ஜனங்களெல்லாம் "ஐயோ! இவ்வளவு செல்வத்தையும் பெருமையாக வைத்துக்கொண்டு சௌக்கியமாயிருக்கலாமே! இப்படி வியர்த்தம் செய்தால் செல்வமும் அழியும். இவனும் பின் கஷ்டப்படுவானே" என்று சொல்வார்கள் அல்லவா? சரீரத்தின் அருமை எப்படிப் பட்டது? "நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமை யுடைத்து இவ்வுலகு" என்றார் வள்ளுவர். ஆகையால் மனத்தையும் சரீரத்தையும் பெற்ற நாம் மறுபடியும் பிறவாமலிருக்கச் சிறிது முயற்சி செய்யவேண்டியது அறி

வுள்ள மனிதப் பிறவிக்கு இயற்கை. பொருளிருந்தும் துன்பப்படுகிறவர்களைப் பார்க்கிறோம். உணவிருந்தும் பசியுடன் அவஸ்தைப்படுகிறவர்களைப் பார்க்கிறோம். இதற்கெல்லாம் காரணம் தாங்களே. ஞானம் ஒன்றுதான் பிறவாமலிருக்கச் செய்யும். அதை அடையும் வழிகள் பல.

நாம் என்ன செய்யவேண்டும்? விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அப்படிச் செய்தால் பரிசுத்தமாவோம். மனம் பரிசுத்தமடைந்தால் அஞ்ஞானம் அறும். ஞானம் வரும். அந்த உயர்ந்த ஞானம், படிப்பு, அதிகாரம், தீரம், வீரம், செல்வம், உறவு, உன்னதநிலை இவைகளால் வாராது. உபநிஷத் என்ன சொல்கிறது "ஞானா தேவஹி கைவல்யம்" ஞானத்தினால்தான் மோக்ஷம். "உரைசெயில் பரமஞானம் ஒன்றுமே முத்திக்கு ஏது?" என்றார் பெரியோர்.

இப்போது மனம் மாசு ஏறியிருக்கிறதா என்று கேட்டால் மனம், சரீரம், வாய் மூன்றுமே அழுக்கடைந்திருக்கின்றன. சரீர அழுக்குத் தற்கால மேனாட்டுச் சரக்குகளைப் போட்டுத் தேய்த்தால் போய்விடும். மனத்தழுக்குக்கு என் செய்வது? கண்ணுக்குப் புலப்பட்டால் ஏதேனும்தேடலாம். இம் மூன்றிலும் வாய் சரீர அழுக்கு அவ்வளவு முக்கியமல்ல.

## மன அழுக்கு I

மன அழுக்கு ஒன்றுதான் முக்கியமானது. அழுக்கு இல்லையாயின் விரதம் வேண்டாம். ஞானம் தானே வரும். மோக்ஷம் சித்திக்கும். மன அழுக்கு ஐவகை.

1. அழுக்காறு:—இதுபற்றி நாயனாரும் நமக்கு விளக்கமுறக் கூறியிருக்கின்றனர். இன்னொருவர் நன்மை, கல்வி, பொருள், அதிகாரம், ஆண்மை இவற்றை அடையக்கண்ட காலத்தும், கேட்ட காலத்தும் மனத்தில் ஒருகாரணமுமின்றி எழும் அழுத்தமான அழுக்குக்கே அழுக்காறு என்று பெயர். பொறாமை யெனினும் அதுவே. "அரிது அரிது அழுக்காறு வெல்வதே" என்பது பிரபுலிங்கலீலை.

2. பற்று அல்லது அவா:—எதைக்கண்டாலும் நல்லதாயிருந்தால், அழகான பொருளாக இருந்தால், அதை அபகரிக்க எண்ணம் உண்டாகிறது. கடைத்தெருவில்



பார்ப்பவர்களைத் தங்களிடம் இழுப்பதற்கென் களைக் கண்ணைக்கவரும் வகையில் வைத்திருக் அவைகளைக் கண்டதும் மனம் அவற்றை நாடுதல் உ அதுதான் பற்று அல்லது அவா என்பது.

3. வெகுளி:—நமக்குக் கிடைக்கும் பொருளை நாம் அடையவொட்டாதபடி தடுப்பவர்மேலோ, தடுக்கும் பொருள்களின்மேலோ நமக்கிருக்கும் மனப்பான்மையே கோபம்.

4. விடாப்பகை:—கோபம் சில நாளானால் மாறும். அப்படி மாறாமலிருப்பது நாலாவது அழுக்கு. அதுவே விடாப்பகை.

5. வஞ்சகம்:—வெளிக்கு நல்லவனாயிருந்தாலும் மனத்தில் கெட்ட எண்ணத்தை வைத்திருத்தலும், சமயம் வந்த காலத்தில் அவனைக் கெடுத்துவிடுதலுமாகும். பட்டினத்தாரும் "நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை" என்றார். இனி வாய் அழுக்கு, உடல் அழுக்கு என்ன என்பதையும் நாம் ஒருவகையாக ஆராய்வோம்.

## வாய் அழுக்கு II

வாய் அழுக்கு ஐந்துவகைப்படும். 1. புறங்கூறல். 2. பொய்சொல்லல். 3. பயனற்ற சொற்களைச் சொல்லுதல். 4. பிறர் குற்றத்தையே பேசுதல். 5. கோள் கூறல்.

## உடல் அழுக்கு III

உடல் அழுக்காவது பாபத்தொழிலில் ஈடுபடுவதாகும். செய்யவேண்டுவனவற்றைச் செய்யாமை. செய்யத்தகாததைச் செய்தல். பலப்பயிற்சி யுடையோனிடத்தில் பலஹீனன் எதிர்த்தால் அவன் தன்பலத்தால் அவனைத் துன்பப்படுத்துவான். செல்வன் ஒருவனிடம் வறியன் எதிர்த்தால் அவன் தன் செல்வத்தைத் துணைக்கொண்டு அவ்வேழையை உபத்திரவம்செய்வான். இவையெல்லாம் சரீரஅழுக்கு. இம் மூவகை அழுக்கையும் போக்கவேண்டும். அதற்குத்தான் விரதம் வேண்டும். விரதம் என்பது என்ன? வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற் பொருட்டு இன்ன அறஞ் செய்வலெனவும் இன்னபாவம் ஒழிப்பலெனவும்

தம் ஆற்றலுக்கு எற்பவரைந்து கொள்ளல் வேண்டும். பொறாமை முதலிய அழுக்கு நீங்கவேண்டும். அதன் பயனாக அந்தக்கரணங்கள் பரிசுத்தநிலையை அடையும். அப்போதுதான் ஞானம் உதிக்கும். அழுக்கு மனத்தை உடையவர்கள், விரதம் இருக்க அதனால் ஞானம் உண்டாகும். ஞானத்தால் பிறப்பு அறும். நாம் முக்தி பெறுவோம். நோன்பு—தமிழ். விரதம்—வடமொழி. நோன்று தின்னாமையென்று பொருள்படும்.

விரதம் என்பதன் அபிப்பிராயம் :—இன்ன தர்மம் செய்வேன்,இன்னபாபம் செய்யமாட்டேன் என்று உறுதி செய்துகொள்வதே விரதம்.

அதன் அங்கங்கள் :—வீடுசுத்தி, ஸ்நானம், ஒருவேளை போஜனம் முதலியவை என்பனவாம்: சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னமேயே இந்தவிரதம் நம் நாட்டிலிருந்தது என்பது குறளால் தெரிகிறது.

தற்கால அனுபவத்திலும் பிற உயிருக்கு இம்சை செய்து தின்பதில்லை. விரத நாட்களில் சிலர் சில பாத்திரங்களையும் உபயோகிப்பதில்லை. இன்று செய்வது பாபம் என்று இம்சை சம்பந்தமானவற்றை எல்லாம் நீக்குகிறோம். சுவாமியைத் தரிசிக்கிறோம். இன்னும் சில சிலவற்றை விரத தினத்தன்று அனுஷ்டிக்கிறோம்.

இனி விரதத்தின் லக்ஷணங்களைப்பற்றிக் கூறுவோம். ஒவ்வொன்றிற்கும் லக்ஷணங்களுண்டு அது இருவகைப்படும். பொது லக்ஷணம், சிறப்பு லக்ஷணம். பசுவை எடுத்துக்கொண்டால் அதற்கு லக்ஷணம் வேறு. மானுக்கு லக்ஷணம் வேறு. புலிக்கு லக்ஷணம் வேறு. மானுக்கும் புலிக்கும் உள்ள இலக்கணங்கள் தெரிந்தால் ஒன்றை மற்றொன்றாக எண்ணமாட்டோம். மானின் இலக்கணங்களை அறியாத ஒருவன் புலியைக் கண்டு மானென எண்ணி அருகிற் சென்றால் தீமையே விளையும். ஆகையினாலே ஒன்றின் லக்ஷணங்களை அறிந்தால் நன்மை உண்டாகும். அறியாவிடின் தீமையே உண்டாகும். பசுவும் மாடுதான். எருமையும் மாடுதான். இரண்டுக்கும் பொதுவாக ஒரே வித்தியாசந்தான். பசுவின் கழுத்திலிருந்து அலைதாடி தொங்கும்.



இலக்கணம் பொது சிறப்பென இருவகைப்படும். பசு மாடுகளுக்கெல்லாம் கழுத்தின்கண்ணே அலைதாடி தொங்கும். அது பசுக்களுக்கெல்லாம் பொது இலக்கணம். இது எல்லாப் பசுக்களுக்கும் பொது. பெருமாள் மாட்டுக்காரன் ஒரு பசு கொண்டுவருகிறான். அதற்கு ஒரு விபூதிப் பை முதுகுப் பக்கமிருக்கக் காண்கிறோம். அது அதற்கு மட்டும் சிறப்பு இலக்கணம். அதுபோல் விரதத்திலும் பொது இலக்கணம் சிறப்பு இலக்கணம் என இருக்கின்றன. இப்போது நாம் விரதத்தின் பொது இலக்கணத்தையும் கிருத்திகையின் சிறப்பு இலக்கணத்தையும் ஆராய்வோம். எந்த விரதத்திற்கும் பொதுவான இலக்கணம் என்பது உண்டு. பின் கூறப்பெறும் இந்த ஒன்பதும் எக்காலத்தும், எவ்விடத்தும், யாவர்க்கும், எவ்விரதத்திற்கும் பொதுவானது. இது விரத தினத்திலாவது அனுசரிக்க வேண்டியது.

1. உயிர் இரக்கம் :—பிற சீவன் துன்பப்படுவதைக் கண்டால் மனம் சகியாது இளகுதல்—இரங்குதல் சிறந்தது. இன்னொரு சீவன் துன்புறும்போது அத்துன்பம் நமக்கே வருவதுபோல் கஷ்டப்படுதல். நாம் நமது மனைவி மக்களுக்கு ஏதாவது துன்பம் நேரின் இது எனக்கு வரக் கூடாதா என்கிறோம். பிறருக்கு வந்தால் அப்படியா நல்லவனாயிற்றே என்கிறோம். அப்படி நடந்துகொள்ளாமல் அன்றைய தினமாவது மனத்தைப் பாந்தநிலைக்குக் கொணர்ந்து, பிற உயிர்கள்படும் இன்னலைக்கண்டு இரங்கவேண்டும்.

2. புலால் மறுத்தல் :—பிற உயிர்களின் ஊனை உண்டு தன் உடம்பை வளர்க்க நினைத்தல், பிற உயிர்களை உண்பதற்கென்றே கொலை செய்தல், அன்றியும் தெய்வத்திற்குப் பலியிடுதல், பலியிட்டு உண்ணுதல் ஆகாது. பிற உயிர்களைக் கொல்லாமலும், புலால் உண்ணுதலை வெறுத்தலும் செய்தவனைத் தெய்வமாகக் கருதி அனைத்துயிரும் கைகூப்பி வணங்கும் என்றார் வள்ளுவர் பெருமான்.

3. பிறர்துன்பம் பொறுத்தல் :—மற்றொருவன் தனக்குத் துன்பம் செய்தால் கடவுளின் பலத்தால்தான் அவன் நம்மைத் துன்புறுத்துகிறான் ; ஆகையால் கடவுள்தான் அவன் மூலமாக நம்மை நம் குற்றத்திற்காகத் தண்டிக்கிறார் என்று உணரவேண்டும். குற்றம் செய்த ஒருவன் தனக்கு விதிக்கும் தண்டனையை அறிவான். உண்மையைச்

சொல்வான். பிறகு திருந்திவிடுவான். அதுபோலவே நாம் பழகுவது. நாம் ஒன்றிற்கும் தீங்கிழைக்கக் கூடாது. நமக்குத் தீங்குவரின் நாம் யாது நினைக்க வேண்டும்? குற்றம் செய்தோம். கடவுள் நம்மைத் தண்டிக்கிறார் என்று மனத்தைச் சாந்தப்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்காகக் கோபம் கொள்ளக்கூடாது. கோபங் கொண்டால் இன்னொரு குற்றம் செய்தவனாகின்றோம். ஒரு அமீனா ஒரு ஜப்தியோ ஒரு வாரண்டோ கொண்டுவருகின்றான். நாம் அவன்மீது கோபித்துக் கஷ்டப்படுத்தினால் அதற்கும் ஓர் தனித் தண்டனை விதிக்கிறார்களல்லவா? அது போலவே தேவ சட்டமும். அதை நாம் மீறி நடந்தால் இன்னொரு தண்டனைக்கும் ஆளாவோம். பிறர் குற்றத்தை நாம் பொறுக்கவேண்டும் என்று பேசுவர் அநேகர். சொல்வது எவர்க்கும் எளிது. ஆனால் அதன்படி நடப்பது எல்லார்க்கும் கஷ்டம். ஆனால் செய்யவேண்டியது அதுதான். பிறர் செய்யக்கூடாதா? பெரிய செயலைச் செய்வதுதான் பெருமை. ஆனதால் நாம் பிறர் குற்றங்களைச் சகிக்கவேண்டும். திருப்பி அவருக்கு இம்சை தரக்கூடாது. ஒரு பெரியார் ஒருகன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டு என்றார். அப்படி அவர் இல்லாவிடின் அவர் போற்றப்படுவாரா? என்றுமில்லாவிடினும் விரத தினத்திலாவது பிறர் செய்யும் துன்பத்தைச் சகிக்கவேண்டும். தத்தம் நிலைக்குத் தகுந்தபடி எது எதைக் கூடா ஒழுக்கமாகக் கொண்டிருக்கிறோமோ அதைத் தவிர்க்கவேண்டும்.

4. திருடாமை :—திருடாமை என்றால் இரவில் வீட்டில் புகுந்து திருடுவதைத் தவிர் என்பதன்று. 'கள்ளாமை காக்க' என்றார் நாயனாரும். அதாவது நாம் பிறர் சொத்தைக் கிரகிப்பதற்கு மனத்தினாலும் எண்ணாமையே. தற்காலத்தில் திருடன் எப்போது தண்டிக்கப்படுகிறான். எடுக்கும்போது மில்லை. பிடிக்கும்போதுமில்லை. நியாயத்தலத்தில் தன்னைத் தப்பித்துக்கொள்ள முடியாதபோதுதான். பரிமேலழகர் கள்ளாமை என்பதற்கு, அபகரிக்க எண்ணாமை என்று உரை செய்திருக்கிறார்.

5. உண்மை பேசுதல் :—நித்தியம் பொய்யா பேசுகிறோம். இப்போது ஆங்கில மொழியில் வெள்ளைத் தப்பிதம் என்றும் (White lie) கறுப்புத் தப்பிதமென்றும் (Black



lie) இருக்கின்றனவே. அவை என்ன பொருளுடையன? கறுப்புத் தப்பிதம் என்பது பிறருக்கு இம்சை தருவது. என்ன பலனிருந்தபோதிலும் பொய் பொய்யே. [illegible] பொய்? நிச்சயிக்கக் கஷ்டமாயிருப்பதெல்லாம் பொய்யே என்று கூறிவிடலாம்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்ற நாயனார் வாக்குக்கு எத்தனையோ அர்த்தம் சொல்லுகிறார்கள். சரியான அர்த்தம் கேட்டவர்கட்கு விளங்கவில்லை. குற்றமிலா நன்மை என்கிறார்கள். அப்படியென்றால் என்ன? தாழ்ந்த பொய்கூடப் பொய்தானே? பொய் இன்னதென்று நிச்சயிக்கவே முடியாது. ஆகையால் மனத்திலிருந்து வாயில் வந்த பொய்யை நீக்கவேண்டும். உதாரணமாக ஒருவன் ஒருவரிடம் சென்று கைமாற்றுக் கேட்கிறான். பலதடவைகளிலும் கொடுத்த ஒருவன் ஒருநாள் இல்லை என்றால் பொய் என்று எண்ணுகிறான். இதுகூட சொல்லக் கூடாது விரதத்தன்று. அன்று விளையாட்டாகவும் பொய் பேசக்கூடாது.

6. அரைவயிறு சாப்பிடுதல் :—விரத தினத்தன்று நிரம்ப ஆகாரங்களை உண்ணல் ஆகாது. உண்டால் சோம்பல், தீயஎண்ணங்கள் முதலியன மேலோங்கித் தமோகுணவயப் படுவோம். ஆண்டவனை நினைக்க முடியாது. ஆகையால் அரைவயிறு சாப்பிடுதல் நல்லது.

7. கோபங் கொள்ளாமை :—சிவப்பிரகாச சுவாமிகள் நன்னெறியில் "உள்ளங்கவர்ந் தெழுந்து ஓங்கு சினம்" என்று கூறுகிறார். பகுத்தறியும் உள்ளத்திலிருந்து கிளம்புவதே கோபத்திற்குப் பழக்கம். அப்படி வருகிற கோபத்தை முதலில் அடக்கியாள முயற்சி செய்ய வேண்டும். வாழைக்காய் முதலிய பதார்த்தங்களைப் பக்குவமாக வேக வைத்திராவிட்டால் கோபம் வருகிறது. ஏனென்றால் கோபமின்றி என்ன காரியமாகும் என்கிறார்கள். ஓர் எஜமானன் தப்பு செய்துவிடுகின்றான். வேலைக்காரன் பொறுத்துக்கொள்கிறான். அதுபோல நாம் என் தாழ்ந்தவரிடத்து இருக்கக்கூடாது என்று எண்ணி அன்றைய தினமாவது கோபத்தை விலக்கவேண்டும்.

8. அந்நியருக்குக் கெடுதி செய்யாமை:—அவனுக்குச் சோறு போடக்கூடாது, இவனுக்குச் சோறு போடக் கூடாது என்று எண்ணவே கூடாது. அன்று நம்மையடையும் சந்நியாசி, பரதேசி மற்றுமுள்ள யாசகர்களை நாம் எந்தத் தேவதையை, எந்தத் தெய்வத்தை நினைத்து விரதம் இருக்கின்றோமோ அந்தத் தேவதையே அந்தத் தெய்வமே என்று நினைத்துத்தருமம் செய்யவேண்டும். ஏனெனில் நாம் மனிதனை உத்தேசித்துப் பூசையும் தான தருமமும் செய்தால் நாம் எம்மனிதனை உத்தேசித்து இவற்றைச் செய்கிறோமோ அவனுடைய புண்ணிய பாவமே நமக்குச் சித்திக்கும். ஆனால் எம்மனிதனையும் நாம் நினைக்கும் தெய்வமாகவே பூசை செய்யின் அவ்வுபாசனாமூர்த்தியின் அருளைப் பெறலாம்.

9. கொல்லாமை :—இது வேறு. ஜைனர்கள் ஒழுக்கங்களில் சிறந்த ஒன்று உயிர்களைக் கொல்லாமலிருப்பது. எறும்புகளையும் கொல்லக்கூடாது. ஜைனர்கள் எப்பொழுதும் மயிலிறகைக்கொண்டு வழியைச் சுத்தம் செய்கிறார்கள். ஏன் ? அது எறும்பு முதலிய சிறுஉயிர்களையும் கொல்லாது. திருநாவுக்கரசு சுவாமிகளை சுண்ணாம்புக்காளவாயில் எரி நெருப்பில் போட்டார்களே. சாந்தத்துடன்தானே இருந்தார். சமயப் போரில் தன்னைச் சமுத்திரத்தில் அழுத்தின போதும் போனால் போகட்டும் எனும் வேதாந்தத்துடனே தானிருந்தார். உண்மைச் சாந்தத்திற்கு இதுவே போதுமான சான்று. சாந்தத்துடனே இருந்துகொண்டு எதையும் கொல்லாமலிருப்பது நல்லது.

இதுவரை நாம் பேசிவந்தது பொதுவிலக்கணமாகும். இனிச் சிறப்பிலக்கணத்தைப்பற்றிப் பேசுவோம். முதலில் ஏன் அனுஷ்டிக்கவேண்டும் என்பதை எடுத்துக்கொள்வோம். நாம் எப்போதும் பழகவேண்டிய பொருள் ஒளியுடைய பொருளாக இருக்கவேண்டும். அது உபகரிக்கும் பொருளாக இருக்க வேண்டும். ஒளியையே வடிவமாக உடையது ஞானம், இருளையே வடிவமாக உடையது அஞ்ஞானம். நாம் சம்பாதிக்க வேண்டிய பொருள் ஞானமாகும். ஒளியுடைப் பொருள்கள் பல சேர்ந்தது கிருத்திகையென்கிற ஆறு நக்ஷத்திரங்களாகும்!



... ஞானிகளாகவும் இருக்கலாம். ஆனால் பிறர்க்கு ஞானம் வரவேண்டுமென்று எண்ணிவிட்டால் அந்த ஞானத்தால் பயனின்று. கிருத்திகையோ அளவிறந்த பயனை அளிக்கும். குழந்தை பிறந்தவுடனே என்ன நட்சத்திரம் என்றுதான் விசாரிக்கிறார்கள். ஏனெனில் நாழிகையாவது கடிகாரமாவது தவறலாம். ஆனால் நட்சத்திரம் மட்டும் கீழ்முந்திரிகூட 1/1200 தவறுவதில்லை. (முந்திரி 1/320) எனவே நட்சத்திரம் அவசியம் எனப் புலப்படுகிறது அல்லவா? அரசியலாரும் வானிலை ஆராய்ச்சிக்கெனத் தனித்துறை அலுவலகம் ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஜென்ம லக்கினத்தின் நாழிகையில் கழிந்தது இவ்வளவு என்று கண்டுகொள்கிறார்கள். இது இயற்கை. இனி கார்த்திகையின் செயற்கைப்பயனை அறிய முற்படுவோம். சுப்பிரமணியர் உலகத்தில் அவதாரம் செய்து கலியுக அக்கிரமங்களை ஒழித்தார். "கலௌவரத விக்ரதாயகம:" என்பது சுப்பிரமணியருக்குள்ள திருநாமங்களுள் ஒன்று. அதன் பொருள் "கலியுக தோஷத்தை நிவர்த்திப்பவனே" என்பதாகும். கோடையில் காற்றுள்ள இடந்தேடிப் படுப்பது எப்படி சுகந்தருமோ, அதுபோல இப்புவியில் சுப்பிரமணியர் உபாசனை கலியின் உபத்திரவத்தை நீக்கி நன்மையைத்தரும்; பிறவாமையைத் தரும். அனுபூதியும் "முருகன் பிறவான் இறவான்" என்று கூறுகிறது. உருவம் என்பதேயில்லாத கடவுள் நமக்காக உருவங்கொண்டு அவதரித்தார். மேல் நிலையிலிருந்து கீழ் நிலைமைக்கு நம்பொருட்டு வந்தார். தேவர்கள் பொருட்டு வந்தார். அங்ஙனம் வருவதற்கு அவதாரம் என்று பெயர். அவருக்கு நம்போல் வடிவமில்லை. நம்மையாட்கொள்ள ஓர் வடிவம் கொண்டார். பெயரிலான் நமக்காக ஓர் பெயருங் கொண்டார். ஊரிலாத சுப்பிரமணியமூர்த்தி மயிலம் சுப்பிரமணியர், சுவாமிமலை சுப்பிரமணியர் என்ற ஊருங்கொண்டார்.

"பிறப்பதும் இறப்பதும் பெயரும் செய்கையும்
மறப்பதும் நினைப்பதும் வடிவம் யாவையும்
துறப்பதும் இன்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யானடி சென்னி சேர்த்துவாம்"

என்று கந்தபுராணம் உற்பத்திக் காண்டத்தில் இருக்கிறது.

உயர்ந்த நிலையில் இருந்த பேர் ஊர் இல்லாத கடவுள் அக்கிரமங்களைத் தடுப்பதற்காக நம் பொருட்டு நம் பிரார்த்தனைக் கிணங்கி அவதரித்தார். நமக்கடங்கின ஆடுமாடுகளைக் கொல்லவோ நாம் ஒருவரைப் பிரார்த்திப்போம்? இல்லை, புலிபோன்றவற்றைக் கொல்லத்தான் பிரார்த்திப்போம். அதுபோல தேவர்கள் அசுரர்களுடைய உபத்திரவத்தைத் தாங்கமுடியாது கஷ்டப்பட்டார்கள்.

ஒருவருக்கு வியாதி வந்தால் முதலில் கைவைத்தியம். பிறகு சிறிய டாக்டர் வருவார். முடிவில் பெரிய டாக்டரை அழைப்பதுபோலத் தேவர்கள் கடைசியாகக் கடவுளைப் பிரார்த்தித்தனர். சிவபிரானை அப்படியே வரும்படியாகப் பிரார்த்திக்கவில்லை. ஏனெனில் அவர் அசுரர்களை உபத்திரவப்படுத்துவார். ஆனால் கடைசியில் நல்லவரமும் கொடுத்து விடுவார். அவர் அஹிம்ஸா வடிவம் உடையவர். சூரபத்மன் முன்னொருகால் பூசை செய்து ஆசிர்வாதம் பெற்றான். தன்மனைவியை உபத்திரவப்படுத்தின இராவணனுக்கும் ஆயுள் கொடுத்தாரே என்று எண்ணி, 'தாங்களே ஒரு குழந்தையாக வரவேண்டும்; யுத்தகளம் சென்று போராடுதல் வேண்டும்' என்றனர். கடவுளும் தேவர்கள் அபிப்பிராயத்திற்கிணங்கிக் கைக்குழந்தையாக வந்தார். இவ்வாறு வேண்டின தேவர்கள் அறியாமையை உடையவர்கள். ஆயினும் அவர்இஷ்டப்படியே கடவுள் அவதரித்தார். உமாதேவி கர்ப்பத்திலிருந்தாவது கஷ்டப்பட்டாவது பிறக்கவில்லை. சோதி மயமாய்த்தோன்றி அக்கினி தேவன் கையால் தாங்கிக்கொண்டு வரப்பட்டு, அவனும் தாங்கமுடியாது கங்கையில்விட, அவளும் தாங்கமுடியாது சரவணதடாகத்தில்விட, அங்கேஉள்ள தாமரையில் ஆறுமாமுகத்தோடு வீற்றிருந்தார்.

1. " அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிருமுகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய "

2. " மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி



அறுமுக உருவாய்த்தோன்றி யருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந்தருளினனே "
—க. திருவவதாரம் 92, 96

தேவர்கள் அறியாமையினால் குழந்தை பால் குடிக்க வேண்டும் என்று எண்ணினார்கள். ஆனால் குழந்தைக்கோ பசியில்லை. நாம் வினைக்காகப் பிறக்கின்றோம். நமக்கு இருவகைத் துன்பங்கள் உண்டு. அவை, " விடலறு பசிநோயும் காமநோயும் " ஆகும். பசிநோய் பிறந்தது முதல் சாகிறவரையிலும் உண்டு. காமநோய் சிறிதுகாலம் பொறுத்து ஆரம்பித்துச் சிலகாலம் இருந்து பின்னர்ப் போய்விடும். பசியின்மை கடவுள்தன்மைதான். நாம் நம்முடைய பிறவிக் கருமத்தைப் பசி காமமாக அனுபவிக்கின்றோம். பசியில்லாத குழந்தை பால் குடிக்காது. தேவர்கள் அன்பு, இரக்கம் உள்ளவர்கள். ஆனாலும் வந்திருக்கும் பொருள் இன்னதென்று தெரிந்துகொள்ளவில்லையே! பால் கொடுக்கும்படியாக யாரிடம் சொன்னார்கள்?

கார்த்திகைப் பெண்களிடம் சொன்னார்கள். திருமால் இந்திரன் முதலான தேவர்களும் தேவப் பெண்களும் தேவப்பெண்களாகிய கிருத்திகைப் பெண்களைப் பார்த்து இக் குழந்தைக்கு வந்து பால் கொடுங்கள் என்று அழைத்தார்கள். கிருத்திகையாவது ஆறு சிறு நட்சத்திரங்கள். தக்கவர்கள் அழைக்கும்போது யாவரும் வருவது இயற்கை. அவர்கள் வந்தார்கள். குழந்தை வெகு அழகாயிருப்பதைக் கண்டார்கள். ஒவ்வொருவரும் தாங்களே பால்கொடுக்க எண்ணினார்கள். பால்கொடுக்கும் கௌரவத்தினை ஒவ்வொருவரும் தாமே அடைய வேண்டும் என்று மிகுந்த ஆவல் கொண்டார்கள். பால் கொடுத்த புண்ணியம் தமக்கே வரவேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் ஆவல். இவர்களுடைய எண்ணத்தை இந்திரனும் மற்ற பெண்களும் அறியவில்லை. சுப்பிரமணியர் தெரிந்தார். பொறாமையென்னும் துர்க்குணம் பெண்களிடத்தேயுள்ளது. உலகில் எல்லாப் பெண்களுக்குமே இது ஒரு குறை. இத்துர்க்குணமற்ற பெண்களிருப்பது அரிது. அத்தெய்வப் பெண்களிடமும் அத்துர்க்குணம் இருந்தது. அப்பொறாமை இருவகை. ஒன்று மிகுந்த செல்வனிடம் ஒரு வறியவனுக்கு

இருக்கும் பொறாமை. மற்றொன்று தனக்கு இருக்கும் அளவே இன்னொருவனுக்கும் இருப்பதனால் ஏற்படும் பொறாமை. கடவுளாகிய குழந்தை இவர்கள் எண்ணத்தை அறிந்தார், என்ன எண்ணினார்? இவர்கள் தமக்குள் பொறாமையினைக்கொண்டவர்களாயினும், நம்மைத்தரிசனம் பண்ணினார்கள். கெட்டவர்களாயினும் தன்னை அடைந்தவர்கள் சுகம் பெறவேண்டும் என்று எண்ணினார். இதனால் தன்னைத் தரிசித்தவர்களது அழுக்காறு முதலிய மன அழுக்கை நிவர்த்திப்பான் முருகன் என்பது அழுத்தமாகத் தெரிகிறது அல்லவா! இன்னொரு விஷயமும் தெரிகிறது. விளையும் பயிர் முளையிலே என்றபடி, பிறந்தவுடன் குழந்தையா யிருக்கும்போதே அனுக்கிரகிக்கிறார் என்பதும் விளக்கமாகிறது. இவர் தேவர்கள் குறையை நிவர்த்திப்பார் என்றும் தெரிகிறது. சூரியனானவன் தடாகம், மலை, கடல், ஊர், சேரி, காடு என்ற வேறுபாடு இன்றித் தன் கிரணங்களை அள்ளி வீசுகிறான். அதுபோல் சுப்பிரமணியர் தம் கிருபைக்கு ஒவ்வாத தோஷமுடையவர்களாயிருந்தாலும் கடவுள் அப்பெண்களில் ஒவ்வொருவருடைய இஷ்டத்தையும் நிறைவேற்ற எண்ணினார். அவருக்கும் நமக்கும் வித்தியாசம் அதிகம். அவர் எதையும் செய்வார். சிரமமின்றிச் செய்வார். கருவியின்றிச் செய்வார். அது தான் சங்கல்ப சிருஷ்டி, அதாவது நினைத்தமாத்திரத்தில் ஒன்றைச் செய்வது. அவர் சகலசக்தியான். அவருக்கு வினையில்லை. நாம் வினைகளின் வசப்பட்டவர்கள். குயவன் கருவியின்றி, துணையின்றிப் பாத்திரங்கள் செய்ய முடியாது. கருவிகொண்டு செய்வது காணசிருஷ்டி. கடவுளுக்குக் கார்த்திகைப் பெண்களின் இஷ்டத்தை நிறைவேற்றுவது ஒரு சிரமமான காரியமா? இல்லை. உடனே அவர் ஆறு சிறார் வடிவங் கொண்டார். அவர்கள் ஒவ்வொருவரும் குழந்தையை எடுத்துப் பால்கொடுத்துச் சந்தோஷப்பட்டார்கள்.

“ மறுவறும் ஆர லாகும் மாதர் மூவிருவர் தாமும்
நிறைதரு சரவணத்தில் நிமலனை அடைந்து போற்ற
உறுநர்கள் தமக்கு வேண்டிற் றுதவுவோ னாத லாலே
அறுமுக ஒருவன் வேறாய் அறுசிறார்உருவங் கொண்டான் ”

—க. அவதாரம் 116



குழந்தை வடிவமான கடவுள் ஏன் பால்சாப்பிட்டார்? பக்தர்கள் விருப்பத்தின்படி நடக்கவும், பால்கொடுக்கவந்த கிருத்திகைப் பெண்களுடைய ஆசைதீரவும் பாலைக்குடித்து முறுவல்செய்து, மாறிலா அருளால் அருந்தினன்போல் இருந்தான் முருகன். உலக இயற்கையும் என்ன? குழந்தை பிறந்ததும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் பிறந்த குழந்தையைப்பற்றி என்ன விசாரிக்கிறார்கள்? அழுகிறதா? பால் குடிக்கிறதா? இப்படி விசாரிப்பதனால் என்ன தெரிகிறது? பிள்ளை அழுதால் நாம் அழவேண்டியதில்லை. பிள்ளை அழாவிட்டால் நாம் அழவேண்டும். பிள்ளை பால்குடியாவிட்டால் இறந்துவிடும் என்று எண்ணுகிறார்கள். குழந்தை பால் அருந்தாதிருக்குமானால் நமக்குக் கவலை உண்டாகிறது. குழந்தை அழாவிட்டாலும் பால் குடிக்காவிட்டாலும் அக்கம்பக்கத்திலிருப்பவர்களே இவ்வளவு அதுபற்றிப் பேசினால் கடவுளின் அன்பர்களும், பக்தர்களும் தங்களுடைய ஒரு பெரிய காரியத்திற்கு என்று பிறந்த குழந்தையைப்பற்றி என்ன எண்ணுவார்கள்? என்ன கவலை கொள்ளுவார்கள்! ஆகையினாலேதான் அவர்கள் விருப்பத்திற்கிணங்க அவர் அழுதார். பாலுண்டார். விளையாடினார். இதைத் தேவர்கள் பார்த்தார்கள். மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள். இதனாலேயும் முருகன் சந்நிதியில் நாம் சென்று வணங்கினால் தீவினை தொலையும் இஷ்ட சித்தியும் உண்டாகுமென்று தெரிகிறது, நிற்க, குழந்தை கிருத்திகைப் பெண்களிடத்தே வளர்ந்து வருகிறது. இது யாருடைய குழந்தை? பரமசிவனுடைய குழந்தை. அவர் தன் சத்தியாகிய உமாதேவியுடன் புறப்பட்டு வருகிறார்.

ஏன் உமாதேவியையும் அழைத்து வருகிறார்? தாம் மட்டும் வந்தால் உமாதேவி என்ன நினைப்பாள்! பெண்கள் தானே பிள்ளைகளின் அன்புக்கு உரித்தானவர்கள். ஆனால் உமாதேவி குழந்தையைப் பெற்றனளா என்று கேட்கலாம். அன்றியும் அவள் பால் கொடுக்கலாமே என்றும் எண்ணலாம். உமாதேவி குழந்தையைப் பெறாது பெறுவாள். அவள் கர்ப்பம் அடையாமல் பெற்றவைகளே சகல உயிர்களும். அவளுடைய பால் உடலை வளர்ப்பதல்ல. அவளுடைய ஸ்தனமும் வாய்வைத்து உண்ண முடியாதது. ஆகையால் அவளுக்கு உண்ணாமுலை என்ற ஒரு சிறப்புப்

பெயர் உண்டு. அவளுடைய பாலுக்கு ஞானப்பால் என்று பெயர். அது உயிர்களுக்கு ஞானத்தை விருத்தி செய்யும். உமாதேவி திருஞான சம்பந்தருக்கு என்ன கொடுத்தாள்? பால் கொடுத்தாள். அவர் உடனே என்ன ஆனார். பெரிய ஞானவானானார். பாலை எப்படிக்கொடுத்தாள். கிண்ணத்தில் கறந்து வாயில் ஊற்றினாள். அவளுடைய பால் ஞானப்பாலாயிருந்ததனாலும், இருப்பதனாலுந்தான் கோவில்களில் திருமுலைப்பால் உற்சவம் நடக்கிறது. எல்லா இடங்களையும்விட விசேடமாகச் சீர்காழியில் நடக்கிறது. அந்த உற்சவதினத்தில் ஏராளமான ஜனங்கள் பாலை உண்டு கண்டு களிக்கிறார்கள். இப்போது குழந்தையை அழைத்துக்கொண்டு போகப் பெற்றோர்கள் வருகிறார்கள். குழந்தையைப் பார்த்தார்கள். குழந்தை வெகு அழகாக இருந்தது. வந்தவர்கள் இருவரும் தாங்கள் எடுக்கலாம் என்று எண்ணினார்கள். அம்பிகை எடுக்கலாமென்று நினைத்தாள். அவளுக்கு நான்கு கைகள். ஆனால் குழந்தையோ ஆறு. என்ன செய்வாள். தன் தாய் சற்று மயங்கினதை அறிந்தார் சுப்பிரமணியர். தாய் மனத்தை வருத்துவதா பிள்ளைக்குத் தர்மம்? உடனே ஒரே உருவமாக ஆனார். இது எதனைத் தெரிவிக்கின்றது? குமரன் தாய்த்துயரம் பொறான் என்பதைத் தெரிவிக்கின்றது. சிரமமின்றி அம்பிகை தன் நான்கு கைகளாலும் எடுத்துக்கட்டி அணைத்துக் கொண்டாள். மிக்க சந்தோஷமடைந்தாள். பரமசிவன் குழந்தையை வாங்க எண்ணினார். தாயாரும் தானே வைத்திருக்க எண்ணினாள். ஆனால் பதியின் இஷ்டப்படி நடப்பதுதானே மனைவியின் மாண்பு. ஆகவே இருவரும் கொடுத்துக் கொடுத்து வாங்கிக்கொண்டார்கள். இப்படி சிறிது காலம் சென்றது. பிறகு குழந்தையைத் தங்கள் மத்தியில் வைத்துக் கொண்டார்கள். இந்த நிலையில்தான் தேவாலயங்களில் நடக்கும் உற்சவ காலங்களில் ரிஷப வாகனத்தில் சுப்பிரமணியர் வருவார். அதாவது சிவபெருமான் முருகள் உமாதேவி என்ற அமைப்பில் சோமாஸ் கந்தராக வருவதாகும்.

இஃது இப்படியிருக்க, கிருத்திகைப் பெண்கள் இவர்களைக் கண்டதும் அடிபணிந்து நின்றனர். பரமன் அவர்களிடம் மிக்க சந்தோஷமடைந்தார். உங்களுக்கு வேண்டிய



வரத்தைக் கேளுங்கள் என்றார். நமக்கு என்ன தெரியும்? நாளைக்கு இன்னது வேண்டுமென்று நமக்குத் தெரியுமா? அதனை இஃறு சொல்லமுடியுமா? எக்காலத்தும் யாவருக்கும் வேண்டுவன இவைதான் என்று யாருக்குத் தெரியும்? அவருக்குத்தானே தெரியும் என்று அப் பெண்கள் ஒன்றும் பேசாமல், தாங்கள் சிவனை உமாதேவியாருடன் தரிசித்த பாக்கியத்தையே சிறந்த பாக்கியமாகக் கருதி மௌனமாயிருந்தனர். கடவுள் கூறுகிறார். இக் குழந்தைக்கு உங்கள் மைந்தன் என்று பெயர் ஆகுக என்றார். அதனால் பல நாமங்களுள் சுப்பிரமணியருக்குக் கார்த்திகேயன் என்பதும் ஒன்று, இன்னும் என்ன கூறினார்? நீங்கள் அறுவரும் வந்து பால் கொடுத்தமைக்கு நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். எவரேனும் இந்நாளில் விரதமிருப்பார்களாயின் அவருக்குத் தத்தம் குறை முடிப்போம். பரகதி நல்குவோம் என்று நல்வரங்கள் பல நல்கினார். நாம் இதுவரை கார்த்திகை நட்சத்திரத்தின் செயற்கைப் பலனைப் பற்றிப் பேசினோம்.

**இதுவரை நாம் பேசியதின் சாரம் :**

நாம் ஏன் பிறந்தோம்? அதற்குக் காரணம் குணங்கள். குணங்கள் சத்வம், ரஜோ, தமோ என மூன்று வகைப்படும். விரதத்திற்குப் பரிசுத்தம் முதற்காரணம். நாம் சத்துவ குணத்தோடு இருந்தால்தான் பரிசுத்தம் அடைவோம். பரிசுத்தம் அடைய மனம் மிக்க அவசியமாகும். நம்மை மனிதராக்க வல்லது அது. நாம் கல்வி, வீரம், செல்வம் முதலிய எவற்றையும் அடைய மனம்தான் முக்கிய துணை. திருநாவுக்கரசு சுவாமிகள் மனத்தை என்ன செய்யச்சொன்னார்? மனத்திற்கு அடக்குநிலை அடங்கும் நிலை என்ற இரு குணம் உண்டு. மனம் ஆகாசம் போன்றது. அதன் வடிவம் அணு. அதன் குணம் விரிதலும் சுருங்குதலுமாகும். சிறியோர்க்கு விரியும். பெரியோர்க்குச் சுருங்கும். மனத்தை அடக்குவதுதான் செயற்கரிய செயல். நாயனாரும்—

"செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்று கூறியுள்ளார். அஷ்டாங்க யோகத்தில் முக்கிய அம்சமாக மனத்தையடக்குதல் சொல்லப்பட்டு இருக்கிறது. மனத்தை அடக்குதல் இருவகைப்படும். ஒன்று ஞானத்தால். வேறொன்று யோகாப்பியாசத்தால். அறிவினால் மனத்தை அடக்குதல் மிகப் பெரியோர்க்குத்தான் சித்திக்கும். (அப்படிப்பட்டவர்கள் சிருஷ்டி கருத்தாக்கள்). நம் யாவர்க்கும் சாத்தியமானது இரண்டாவது வகையான யோக மார்க்கமே. அதாவது வாயுவை அடக்குதல். அப் பழக்கத்தினால்தான் நாம் மனத்தை அடக்கிப் பரிசுத்தர்களாகலாம். அப்பழக்கத்திற்குத்தான் பிராணாயாமம் என்று பெயர். பிராணாயாமம் செய்தால் மன அழுக்காகிய அழுக்காறு, ஆசை, வஞ்சனை முதலியன அறும். தென்றல்முன் விளக்குப் போல் அணைந்தும் அணையாமலும் உள்ள மனத்தினை உடையவர் மத்திமர். வாடைக் காற்றின்முன் தீபம் அணைவது போன்ற தன்மையுடையவர் அதமர். சுவரில் சித்திர தீபம் போல அசையாமலிருக்கின்ற தன்மையை உடையவர் உத்தமர். இதனை,

> "என்றும்எம் உள்ளமெல்லாம் எழுதிய விளக்குப்போல
> நின்றிடும் இன்றென்கொல்லோ நிலைதடு மாறுகின்ற
> தென்றல்முன் இருந்தசெய்ய சிறுசுடர் போல ஐய
> சன்றிதை யுணருமாறு நவின்றருள் செய்தி யென்றார்"
>
> —பிரபுலிங்க லீலை மாயை உ. க. 35

என வரும் செய்யுளால் அறியலாம். நமக்கு வாடை போன்ற மூன்று காற்றுகள் இருக்கின்றன. அவை பேசும் போது வாயிலிருந்து வருங் காற்று அன்று. அவை காமக் காற்று, வெகுளிக் காற்று, மயக்கக் காற்று. இவை தீய மனத்தின் அடையாளங்கள். நல்லமனம் வாழ்வையும் தாழ்வையும் சமானமாக நோக்கும். ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகவே கருதும். மனம் இயற்கையிலேயே கெட்டது. மனம் இயற்கையிலேயே நல்லதாயிருப்பதில்லை. அதனால் தான் நாம் முயற்சி எடுத்து அம்மனத்தை நல்லமனமாக்க விரதம் இருக்கவேண்டும். அப்படி நாம் விரதம் இருந்தால் தான் அந்தக்கரண சுத்தி ஏற்படும். அந்தக்கரணம் பரிசுத்தமானால்தான் ஞானம் உண்டாகும். அவ் விரதமானது



பொது சிறப்பு ஆகிய இருவகை இலக்கணங்களை உடையது. பொது இலக்கணங்கள் ஒன்பது உள்ளன. கார்த்திகையின் சிறப்பு இலக்கணமாகத் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்குச் சுப்பிரமணியர் அவதரித்தார். அவதரித்ததும் தேவர்கள் அன்பினாலும் அறியாமையினாலும் பால் கொடுக்கக் கார்த்திகைப் பெண்களை அழைத்து வந்தனர். பிறகு பரமசிவன் உமாதேவியாரோடு வந்து குழந்தை சுப்பிரமணியத்தை அழைத்துக்கொண்டு போய்விட்டார். போகும்போது தம் குழந்தையைப் பரிவுடன் பால் கொடுத்து வளர்த்த ஆறு பெண்களுக்கும் நல்வரம் கொடுத்தார். என்ன வரம்? இந்த உலக இன்பத்தை மட்டும் விரும்புகிறவன் கேவலம் அதமன். இம்மையும் மறுமையும் இச்சிக்கிறவன் மத்திமன். அம்மை இம்மை மறுமை மூன்றையும் விரும்புகின்றவனே உத்தமன். எவனொருவன் கிருத்திகை விரதமிருக்கின்றானோ அவனை உத்தமனாக்குவோம். அவனுக்குத் திரும்பிவாராத முத்திப் பேறு தருவோம் என்றனர். எனவே இனி, கார்த்திகை நட்சத்திரத்தின் சிறப்பு இயல்பு பற்றிப் பேசுவோம்.

கார்த்திகை விரதம் இருந்தால் பலன் தரத்தகுந்தவர் யார்? என்று பார்ப்போம். திதி, வாரம், நட்சத்திரம் ஆகிய மூன்றில் திதி, சந்திரனுக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தைக் காட்டுகிறது. வாரம், முதல் முகூர்த்தம் யாருடைய கிரகமோ அதைக் காட்டுகிறது. நட்சத்திரம் சூரியன் எந்தக் கிரகத்தில் சஞ்சரிக்கின்றானோ அதைக்காட்டுகிறது. வாரத்தில் சுப்பிரமணியருக்குச் சிறந்தது வெள்ளிக்கிழமை. சுப்பிரமணிய மூர்த்தி உபாசகர்கள் வெள்ளிக்கிழமையில்தான் விரதமிருப்பார்கள். திதிகளிலே சுப்பிரமணியருக்குச் சிறந்தது சஷ்டி. இரு பக்ஷங்களில் வரும் சஷ்டிகளில் சிறந்தது வளர்பிறையில் வரும் சஷ்டியேயாகும். திருக்குற்றாலக் குறவஞ்சியில் சுப்பிரமணியரைச் சட்டியில் கொக்கறுத்தவனென்று வெகு அழகாகச் சொல்லியிருக்கிறது. கிருத்திகைப் பெண்களால் பால் கொடுக்கப்பட்டதால் அவருக்கு உள்ள பல நாமங்களுள் ஒன்று கார்த்திகேயன். கார்த்திகை நட்சத்திரம் சுப்பிரமணியர் சம்பந்தம் முற்றும் உடையது. ஆகையால் சுப்பிரமணியரை வழிபடுவோர் விரதம் இருக்கவேண்டின் அதற்

ருக் கார்த்திகை நட்சத்திரமே சாலச்சிறந்தது. அதில் விரதம் இருந்தால் எல்லா நலன்களையும் கலியுக வரதனாகிய சுப்பிரமணிய மூர்த்தி கொடுத்தருள்வார்.

## யார் அனுஷ்டிப்பவர் ?

எக்காலத்தும் எத்தேயத்தாரும் எந்தச்சாதியாரும் எந்தச் சமயத்தாரும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம். ஒருவருக்கொன்றும் இன்னொருவருக்கொன்றுமில்லை. ஏன்? அவர் ஆறுமுகத்தோடு எல்லாத் திக்குகளிலும் உள்ள சைவம், வைணவம், சாத்தேயம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என்னும் அறுவகைச் சமயங்கட்கும் ஆறுதெய்வமாக விளங்கும் சமஷ்டித் தெய்வமாக இருக்கிறார். அவரே விநாயகர், சத்தி, தட்சணாமூர்த்தி, உருத்திரன் முதலிய மூர்த்திகளாக ஆகிறார்.

" ஆறு சமயருந் தம்மில் ஒவ்வா திக்கலைவ தென்னே
தேறுமறிவின ரெல்லா மறிந்துந் தெளிந்திலரே
பேறுதருந் தெய்வம் யாவைக்கும் யான்பெருந் தேவனென்றே
வீறு முகங்கொண்டு போரூர் முருகன் விளங்கியதே "

—திருப்போரூர்ச் சந்நிதி முறை

எனவே அவர் எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த ஒரு பெருந் தெய்வமாவர். அத்தகைய சுப்பிரமணியரைக் குறித்து அக் கார்த்திகை நாளில் விரதமிருக்கும் முறைகளை அறிவோம்.

எல்லா விரதங்கட்கும் ஆரம்பநிலையும், பூர்த்தி நிலையும் முக்கியமான அம்சங்கள். எவ்விரதத்திற்கும் பூர்த்தி நிலையைத்தான் உத்யாபனம் செய்தல் என்பார்கள். எவ்விரதத்திற்கும் பூர்த்தி நிலை இல்லாவிட்டால் விரதம் பயனற்றதாகும். அதற்கடுத்தபடி கவனிக்கவேண்டியது காலம். காலம் வரையறுக்காமல் ஒரு காரியமும் செய்யமுடியாது. இக்கிருத்திகை விரதத்திற்குக் காலம் 12 வருஷம். இதை 12 வருஷம் அனுஷ்டிக்க வேண்டும். நாம் அவ்வளவு காலம் இருப்போமா என்று எண்ணவே கூடாது. சரீரம் அநித்தியமாயிற்றே! இன்றுளேன் நாளையில்லேன் என்று அப்பரும் கூறியுள்ளாரே என்று நினைக்கக்கூடாது. நாம் நித்தியமாக இருப்போம் என்று எண்ணித்தான் விரதம் அனுஷ்டிக்க



வேண்டும். ஒரு கிருத்திகை விரதமிருந்து அதை மறு கிருத்திகை விரதத்தால் பூர்த்தி செய்யவேண்டும். இம்மாதிரியே விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். ஆனால் இவ்விரதத்தை முடிப்பது எப்படி என்று கேள்வி எழலாம். இது முடிக்கக்கூடாத விஷயமல்ல. காரியமல்ல. லௌகீகத்தில் நாம் எந்தக் காரியங்களில் பின்வாங்க வேண்டுமோ அவைகளில் பின் வாங்குவதே கிடையாது. பொருளீட்டும் விஷயங்களில் பயப்படுவதில்லை. சரீரமென்றால் ஜீரணமாகத் தகுந்தது. தேகம் என்றால் கொளுத்தப்படுவது. இவ்வுடல் அழியத்தகுந்தது என்று அறிந்தும் மணம் முதலிய எதையும் பயந்து விட்டு விடாது செய்து கொள்கிறோம். ஆனால் உபசாரமாகப் பொய்யான உடலுக்கும் மெய்யென்று பெயர் கூறுகிறோமேயன்றிப் பொய்யெனக் கூறுவதில்லை. அன்றியும் நாம் இவ்வுடல் அழியத்தக்கது தானே என்று தகாத காரியங்களைச் செய்யாமலிருப்பதுமில்லை ஆகையால் நாம் மிக்க மகிமையுடைய கிருத்திகை விரதத்தை அனுஷ்டித்து முடித்தல் வேண்டும். அது சாத்தியமாகும். அவ்விரதத்தைப் பற்றி எவ்வளவுதூரம். சொல்லியிருக்கிறார்களோ அவ்வளவையும் தெரிந்து. நம் நிலைமைக்குத் தக்கபடி அனுசரிக்க வேண்டும்.

## ஆரம்ப நிலை ?

பரணியில் ஆரம்பிக்கவேண்டும். பூர்த்திநிலையை ரோகிணியில் முடிக்க வேண்டும். கிருத்திகை தினத்துச் செய்ய வேண்டியவற்றை எல்லாம் பரணியன்றே செய்யவேண்டும். அன்று இரவு சாப்பாடு இல்லாமலே இருக்கவேண்டும். அதுதான் பரணியன்றே விரதம் ஆரம்பிப்பதற்கு அறிகுறி. அப்போதுதான் விதிப்படி முழு பிரயோசனத்தையும் அடைவோம். மறுதினம் கிருத்திகையில் நாம் வழக்கம்போல் நித்திய கர்மானுஷ்டானங்களினின்றும் தவறக்கூடாது. ஏனெனில் அவ்வனுஷ்டானங்கள் தான் ஆத்ம சம்ரக்ஷணைக்கு ஆனவை. நாம் இராமேசுவரம் போகின்றோம். என்றால், அதுதான் முக்கியமான பிரயோஜனம். போகிற வழியில் மதுரையில் தங்க நேரிடுகிறது. அப்போது நாம் மீனாக்ஷியம்மனைத் தரிசிக்கிறோம். அது அவாந்தர பிரயோஜனம். அதுபோல் நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்தல்

ஆத்ம லாபத்தை உண்டாக்கும். இப்போது நாம் பேசுவது கார்த்திகையன்று செய்யவேண்டிய நைமித்திகங்களைப் பற்றியாகும். எனவே நைமித்திக பலனைக் குறித்துக் கர்மானுஷ்டானங்களைக் கைவிடக்கூடாது. இரண்டினையும் செய்யவேண்டும்.

## பூவெடுத்தல்

முருகன் பூசைக்கான புஷ்பங்களைத் தேடுதலில், நாமே சென்று பறித்து வருதல் அதிகப் பிரயோசனம் தரும். புஷ்பத்திற்கு வடமொழியில் சுமனஸ் என்று ஒரு பெயர் உண்டு. நாம் மனசை (பூவை) நல்லதாக்கி அவனடியில் சமர்ப்பிக்கவேண்டும். நம்மால் விரும்பப்படுகிறவர்கள் என்றால், அவர்கட்குப் பூ வேண்டுங் காலத்து நாம் என்ன செய்கிறோம்? நாமே சென்று அல்லவா வாங்கிவருகிறோம்! அப்படியிருக்க நமக்கு எல்லாம் தாவல்ல ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்கும் பூ எப்படியிருக்கவேண்டும்? அதனை நாமே சென்று பறித்துவந்து அருச்சித்தல் மிகமிக நல்லதல்லவா! பூக்களும் அவருக்குப் பிரியமானதாக இருக்கவேண்டும். நமது தோட்டத்தில் நாமே பயிர்செய்த செடிகளின் பூவே மிக்க பயன்தரும். நாம் பூ எடுக்கப் போகும்பொழுதும் எடுக்கும்பொழுதும் திரும்பி வரும்பொழுதும் முருகனுடைய தோத்திரம், நாமம், மந்திரம், கந்தரனுபூதி, முதலியவற்றைக் கூறிக்கொண்டே இருக்கவேண்டும். பிறகு பூசைக்குவேண்டிய அபிஷேக நிவேதன அலங்காரத் திரவியங்களை நாமே சேகரிக்கவேண்டும். நமது வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்திருந்தால் அவரை நாம் நன்றாக உபசரிக்கவேண்டி நாமே கடைக்குச் சென்று அவருக்கு விருப்பமான பலவகைப் பண்டங்களை வாங்கி வந்து நல்விருந்து செய்து உபசரிக்கின்றோம். விருந்தினர்க்கே நாம் இப்படிச்செய்யும்போது, என் சுப்பிரமணியருக்கு வேண்டியதை நாமே சேகரித்தல் கூடாது. நல்லதாகச் சுத்தமானதாக எல்லாப் பொருள்களும் இருக்கவேண்டும். நமக்குத் தலையை அலங்கரிக்க—ஸ்நானம் செய்ய வாசனைத் தைலங்களையும் வாசனைப்பொடிகளையும் உபயோகிக்கிறோம். சமையலுக்கு நல்ல எண்ணெய், நல்லநெய் உபயோகிக்கிறோம். ஆனால் சுப்பிரமணியருக்குமட்டும் தேங்காயெண்



ணெயையும், மணிலா எண்ணெயையும் உபயோகிக்கலாமா? சற்று யோசித்துப் பாருங்கள்.

## ஸ்நானம்

கார்த்திகையன்று ஸ்நானத்திற்கு ஏற்ற காலம் காலை 6-நாழிகை முதல் 12-நாழிகை வரையிலாகும். ஒரு நாளின் இந்த இரண்டாவது பாகமாக உள்ள காலமே சுப்பிரமணியருக்கு மிக உவப்பான காலமாகும். வைத்தீஸ்வரன் கோவிலில் ஒரு பகலை விநாயகர், சுப்பிரமணியர், பிதுர், சத்தி, சிவம் இவற்றிற்கு ஏற்ற ஐந்து சம பிரிவுகளாக்கியிருக்கிறார்கள். இதில் நமது சுப்பிரமணியருக்கு உகந்தது இரண்டாவது பிரிவாகிய 6 முதல் 12 நாழிகை வரையிலுள்ள காலமாகும். இக்காலத்தில்தான் கிருத்திகையன்று வைத்தீஸ்வரன்கோவிலில் உள்ள திருக்குளத்தில் திரளான ஜனங்கள் ஸ்நானம் செய்கிறார்கள். இந்தக் காலத்தில் ஸ்நானம் பண்ணுவதுதான் கிருத்திகையில் விசேஷம் என்பதற்கு மற்றொரு காரணம் என்னையெனின், எப்போதும் கிருத்திகையின் முதல் பாதம் மேஷ ராசியில் இருக்கும். ஆதலின் அது சிறந்ததாகும். ஒவ்வொரு நட்சத்திரத்தையும் நான்கு பாதங்களாக வகுத்திருக்கிறார்கள். அப்படியென்றால் ஒரு பாதத்திற்கு நாழிகை 15. நமது சுப்பிரமணியருக்கு மேஷமே நல்ல வாகனமாக அமைந்திருப்பதால் அந்த மேஷ ராசி மிகுந்த சுப்பிரமணியர் சம்பந்தமுடையது. அதுபற்றி நாம் அக்காலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். இக்காலத்தில் உத்தியோகஸ்தர் பலருக்கும் இந்தக் காலம் ஸ்நானம் செய்ய ஏற்றதாக இருப்பது மிக்க சந்தோஷமாக இருக்கிறது. எப்படியெனில் 11-மணிக்கு உத்தியோக சாலைக்குப் போகிறவர்கள் காலையில் 8-மணி முதல் 10-மணிக்குள் ஸ்நானம் செய்துவிட்டு, பூசைகளை முடித்து உண்டுவிட்டு அலுவலகத்திற்குச் செல்லுகிறார்கள்.

ஸ்நானம் எவ்விடத்திலேனும் செய்யலாம். ஆறு, குளம், கிணறு, கடல் முதலிய இடங்களில் ஸ்நானம் செய்யலாம். அப்படி ஸ்நானம் செய்யும் ஒருவன் ஒன்று தன்னைப் போகனாக்கவேண்டும், அதாவது இவ்வுலகத்தில் இன்பானுபவங்களை நுகரவேண்டும் என்று வேண்டுவோன்; அல்லது தன்னை வீரனாக்க வேண்டுமென்று எண்ணுவான். அதாவது

தனக்குப் பிறரை அடக்கும் தன்மை வேண்டும் என்பது. அல்லது திருவடி வேண்டுமென்று அதாவது முக்தி வேண்டுமென்று வேண்டுவான். சுப்பிரமணியர் இவற்றையெல்லாம் இஷ்டப்படித் தர வல்லவனா என்று பார்ப்போம். வள்ளித்திருமணத்தால் நாம் சுப்பிரமணியர் மிக்க உல்லாசப் பிரியரென்று அறிகிறோம். வள்ளியோடு சகலபோகங்களையும் குறைவற அனுபவிப்பதினாலேதான் யாவரும் அவனை ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியரென்ற சிறப்புப் பெயரால் அழைக்கின்றார்கள். தெய்வயானை சுப்பிரமணியரென்று அழைக்கப்படுவதில்லை. வள்ளி காந்தன், வள்ளி மணவாளன் எல்லாம் அவனுடைய நாமங்கள்தானே! சில சந்தர்ப்பங்களில் மனைவி காலில் விழுந்தான் ஆகையால் மனைவி காலில் விழுந்தவனே என்றும் (தினைப்புனக் கிளி காந்த சௌந்தரி அழகு சென்றடி போற்றி மணஞ்செய்து சுகம் அறிந்திட வாழ்க்கை புரிந்திடும் இளையோனே—திருப்புகழ்) "வள்ளியின் பாதத்தைத் தலைக்கு முடியாக வைத்துக்கொண்டவனே" என்றும் கூறப்படுகின்றான். கந்தரனுபூதியும் "வள்ளி பதம்பணியும் தணியா அதிமோக தயாபரன்" என்று கூறுகிறது. "நாதா குமரா" என்னும் செய்யுளிலும் "குறமின் பத சேகரனே" என்றிருக்கிறது. இவைகளெல்லாம் முருகன் இவ்வுலகத்தில் அடியார்க்கு உயர்ந்த போகத்தைக் கொடுப்பவன் என்பதை விளக்குகின்றன. அவனுக்கு ஆசையுண்டா? கிடையாது. ஆசையில்லாதது தெய்வம். ஆசையுள்ளது ஜீவன்.

## சுப்பிரமணியர் வீரத் தெய்வம்

சூரபத்மன் முதலியோர் வச்சிர சரீரம் படைத்தவர்கள். சூரபத்மன் 1008 அண்டங்களையும் எண்ணிலா யுகங்கள் ஆண்டவனாயிற்றே. அவனுடைய வீரமும் தீரமும் சுப்பிரமணியர் எதிரில் என்ன ஆயின? இதனால் சுப்பிரமணியர் ஒரு சிறந்த வீரத் தெய்வமென்பது நன்றாக விளங்குகிறதல்லவா!

சுப்பிரமணியர் ஞானம் அருள வல்லவர் என்பது, அவர் கடவுளுக்கே உபதேச குருவாயிருந்ததனாலே நன்கு விளங்குகிறது. எனவே நாம் ஸ்நானம் செய்யும்போது இந்த சங்கல்பத்தோடு (சுப்பிரமணியர் அடியார்க்கு உயர்ந்த போகத்



தையும் ஞானத்தையும் வீரத்தையும் அருள வல்லவர்) செய்யவேண்டும். மன ஒருமையுடன் அவரது திருவடியையே நினைந்து தீர்த்தமாடுதல் வேண்டும். தீர்த்தமென்றால் பரிசுத்தம். பரிசுத்தம் அடைய இடுப்பில் வஸ்திரத்தோடு ஸ்நானம் செய்தல் வேண்டும். ஸ்நானம் செய்த உடனே சுப்பிரமணியர் வடிவத்தை மனத்தில் எண்ணி ஆறு நாமமோ, பன்னிரண்டு நாமமோ, நூற்றெட்டு நாமமோ ஆயிரத்தெட்டு நாமமோ ஏதேனும் ஒன்றே கூறி விபூதி தரிக்கவேண்டும்.

## பூசை

சுப்பிரமணிய மூர்த்தியைப் பெரிய தெய்வமென்று எண்ணிப் பூசிக்கக்கூடாது. ஏனெனில் சிறிய தெய்வம் என்ற ஒன்று இல்லை, தெய்வம் ஒன்றேதான். சமஷ்டித் தெய்வம். எல்லாப் பெயரும் அவனே. எல்லாச்செயலும் அவனே. சகல ஞானமும் அவனே. ஆகையால் தெய்வம் ஒன்றே என்ற நம்பிக்கையுடன் பூசை செய்யவேண்டும். நாம் சுப்பிரமணியரைப் பின்வரும் முறையே பூசிக்கவேண்டும். அதாவது ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான். நம் வீட்டுக்கு வருவோர்க்கெல்லாம் தக்க ஆசனமளிக்கின்றோம். நாம் குறித்தவேளையில் ஆண்டவனை வரவழைக்கிறோம். அவன் வருகிறான். அதே காலத்தில் எத்தனையோ பேரும் அவன் அழைக்கிறார்கள். அவன் எங்கும் இருக்கிறான். கருணை எப்படிப்பட்டது பாருங்கள்! பிற ஜீவன்களுக்குக் கருணைபுரிய எவ்வளவு பரிவுகாட்டுகிறான். ஆகையால் நாம் அவனுக்கு நல்ல ஆசனம் எற்படுத்தவேண்டும். மூர்த்தி என்றால் வடிவம். நாம் அவனுக்கு ஒரு வடிவத்தை உண்டாக்கவேண்டும். மூர்த்திமான் என்பது கடவுளின் சூக்ஷ்ம வடிவம். சுப்பிரமணியரின் சூக்ஷ்ம வடிவத்திற்கு ஸ்தூல அறிகுறி இந்தவடிவம் என்று எண்ண வேண்டும்.

இனி உருவம், படம், யந்திரம் என்று மூன்றுவகையால் சுப்பிரமணியரை வணங்கலாம். படங்கள் இக்காலத்தில் சாஸ்திரோக்தமாக இருப்பதேயில்லை. வேலைக் கறுப்பாகவும், வள்ளியை வளைந்தவளாகவும், படம் வரைகிறார்கள். உண்மையில் வள்ளி பருமனானவள்; வளையாதவள்; கஞ்சுகம் கொண்டவள். தாமரையுடையவள். ஆனால் தேவ

[illegible] வள்ளியினின்றும் வேறுபட்டவள், மெல்லியள். வளை[illegible]வள்; கஞ்சுகமில்லாதவள். நீலோற்பலம் வைத்திருப்பவள். இப்படியிருக்கத் தற்காலப் படங்களெல்லாம் ஒருபிரயோஜனத்தையும் தருவதில்லை. மிக்க அழகாகத் தோன்றுகின்றன. நாம் வெறும் படத்தைப் பூஜிக்கக் கூடாது. எல்லாமாயிருக்கும் தெய்வத்தை இதில் வரும்படி பூசிக்கவேண்டும். முதலில் வடிவத்தால் உபாசித்துப் பிறகு வடிவமில்லாத வியாபக ரூபத்தில் ஈடுபடவேண்டும். முற்காலத்தில் படத்தைத் துணியில் எழுதினார்கள். படம் என்ற வார்த்தைக்குத் துணி என்று அர்த்தம். பிறகு மரத்தில் எழுதினார்கள். இப்போது கண்ணாடியிலும் எழுதுகிறார்கள். நாம் மூர்த்தியை முதலில் வழிபட்டுப் பிறகு மந்திரம், யந்திரம் ஆகிய உருவமில்லாத நிலையைச் சிந்திக்கவேண்டும்.

## அபிஷேகம்

அபிஷேகம் என்ற பதத்திற்கு நனைத்தல் என்று அர்த்தம். நாம் சுத்தம் அடைவதற்காக ஸ்நானம் செய்கிறோம். நாம் சுத்தமடைய வாசனைத் திரவியங்களை உபயோகப்படுத்துகிறோம். ராஜாக்கள் ஸ்நானம் செய்வதற்கு 78 சாமான்கள் சேர்கின்றன என்று கூறப்படுகின்றது. ஆனால் இங்கு அபிஷேக ஜலத்தில் விளாமிச்சம்வேர் போட்டாலே போதும். திருப்புகழில் " குறத்தி முலை மீதில் கதம்பணி சுத்தர் " என்றும் சொல்லப்பட்டுள்ளது. நாம் பரிசிக்கப்பட, அவனை நாம் பரிசித்தல் வேண்டும். நாம் சுத்தமடைய அவனைச் சுத்தப்படுத்தல் வேண்டும். அவன் லீலாவிநோதன் ஆயினும் சுத்தன். சுத்தி இருவகைப்படும். இயற்கைச் சுத்தி. செயற்கைச் சுத்தி. இயற்கைச் சுத்தியாவது வாசனை, நிறம் இன்றி நீர் இருப்பது போன்று இருப்பதாகும். செயற்கைச் சுத்தியாவது மந்திரத்தால் பரிசுத்தம் செய்தல். சுத்த சத்து என்றாலும் சத்து என்றாலும் ஒன்றுதான். சுத்தஜலம் என்றாலும் ஜலம் என்றாலும் ஒன்றுதான். சுத்தாத்வைதம் என்றால் அத்வைதம் என்றுதான் பொருள். ஆகவே இறைவன் இயற்கைச் சுத்தன். நமக்கு மூவகையழுக்குகள் இருக்கின்றன. அவை உடம்பழுக்கு, வாயழுக்கு, மனஅழுக்கு என்பனவாகும். இந்த அழுக்குகளினின்று நாம் உய்யவேண்டும். பரிசுத்தமடையவேண்டும்.



ஆகையால் நாம் அவனுக்கு நல்ல திரவியங்களைக்கொண்டு அபிஷேகம் செய்யவேண்டும்.

நாம் அனுபவிக்கும் சொத்தெல்லாம் அவனுடையதே. நமக்கென்று என்ன இருக்கிறது ? எதையும் அவன் அனுபவித்த பிறகுதான் நாம் அனுபவிக்கிறோம். நம் உடலும் பொருளும் ஆவியும் அவனுடைய சொத்துக்கள். திருவிடைமருதூரில் வரகுண தேவன் தன் மனைவியை முதல்நாள் கண்டபொழுதே இவள் இறைவனுக்கே உரியவள் எனக் கருதி ஆலயத்திற்கு அழைத்துச்சென்று இறைவனுக்கு அர்ப்பித்தனன். இறைவனும் தேவியை விழுங்கினன் எனக் கூறப்படுகிறது. இதனை,

> " விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
> புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
> பெரிய அன்பின் வரகுண தேவரும்"

என வரும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 28-ஆம் செய்யுள் அடிகளால் அறியலாம். எனவே நாமெல்லாம் அவனுடைய பொருள்களாவோம். ஆகையால் அவனுக்குகந்த திரவியங்களைக் கொண்டே அவனுக்கு அபிஷேகஞ் செய்யவேண்டும். அவன் அவைகளையெல்லாம் கொண்டு அவைகளின் சத்தாகத் திருவருளை நமக்கு அருள்செய்கிறான்.

பாலையும், நெய்யையும், தயிரையும் தலையில் கொட்டி வீணாக்குகிறார்களே ! இவைகளை வைத்தியசாலைக்குக் கொடுக்கலாமே என்று சிலர் சொல்லுகிறார்கள். வைத்திய சாலைக்கு உதவலாம் என்றவரையில்தான் அவர் கூறுவது ஒவ்வுமே தவிர, எல்லாம் அவன்பொருள் என்று அவர்கள் எண்ணவேயில்லை. மேற்கூறிய பொருள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி பிரயோஜனமிருக்கிறது.

அபிஷேகத்துக்கு முக்கியமாக வேண்டிய பொருள் மூன்று. பால், பஞ்சாமிர்தம், சந்தனம் என்பனவாகும். சுப்பிரமணியருக்குப் பால்காவடி கட்டுகிறார்கள். ஆகையால் அது முக்கியம் என்று தெரிகிறது. பஞ்சாமிர்தங்களில் பழனி பஞ்சாமிர்தம் மிகச்சிறந்தது. பஞ்சாமிர்தம் ஐந்து அமிர்தங்களால் கூட்டப்படுவது. பால், பழம், நெய், தேன், கருப்பஞ்சாறு. இவைகளைந்தையும் ஐந்து கிண்ணங்களி

[illegible]று ஒன்றாய்க் கூட்டவேண்டும். இதற்குத்தான் பஞ்சாமிர்தம் என்று பெயர். இதுதான் சுப்பிரமணியர் அபிஷேகத்திற்குச் சிறந்தது. இதனை மாயை என்பவள் இறைவனைப் பூசிக்கும் முறையினைக் கூறும்,

" தயிலமுட னானிடத்தைத் தையமுத
  நறுநெய் பால்தயிர் செழுந்தேன்
வயலினெழு கரும்புடைத்துக் கொள்சாறு
  பழம் பிழிந்த மதுரச்சாறு
புயலளவு தாழையிளநீர் நறுஞ்சந்தனக்
  குழம்பு போற்று நாவி
னியலினமை தபனமிவை யொன்றன்பின்
  ஒன்றாமுறை யிறைவற் காட்டி"

என வரும் பிரபுலிங்க லீலைச் செய்யுளால் நன்கு அறியலாம். தயிலமொடு ஆனிடத் தைந்துமுதல் உயர்ந்தது; தாழ்ந்தது ஜலமாகும்.

### சந்தனம்

இது முக்கியமானது. இது சுப்பிரமணியருக்கு உவப்பானது. வைத்தீசுவரன் கோவிலில் சந்தனக் குழம்பு விநியோகமாவது யாவர்க்குந் தெரிந்தது. எனவே சந்தனம் சிறந்தது. அபிஷேகத்திற்கு மற்றைய திரவியங்களையும் தேர்ந்து சேர்த்துக்கொள்ளலாம்.

### அலங்காரம்

சுப்பிரமணியருக்கு இஷ்டமான வஸ்திரம் சித்திர வஸ்திரமாகும். அதாவது வெள்ளை வஸ்திரம் நீங்கலாகச் சிவப்பு அல்லது பல நிறங்கள் உள்ள வஸ்திரமே அவருக்குப் பிரியமானது என்று ஷண்முக தியான சுலோகத்தால் தெரிகிறது.

### புஷ்பம் :

அவருக்கு விருப்பமான புஷ்பம் 1. கடம்பு:— கடம்பு இருவகைப்படும். வெண்கடம்பு. செங்கடம்பு. இவருக்குச் செங்கடம்பே மிக்க பிரியமானது. இது நீர்நிலைகளின் ஓரங்



களில் இருக்கும் மரத்தில் உரிபோலத் தொங்கும். பூசக்கரம் போன்று இருக்கும். மகிழம் பூவைப்போன்று மணமும் நிறமும் உடையதாய் அதனை ஒருவாறு ஒத்திருக்கும்.

2. வெட்சிப்பூ :—இது கடம்புக்கு அடுத்தபடியாகச் சிறந்ததாகும். இது செசைப் பூவென்றும், விருட்சிப் பூ அதாவது சிவப்புப் பூ என்றும் பெயர்பெறும். இது தென்னாட்டில் வயலில் ஏற்றங்களினருகில் சிவப்பு அலரிபோன்று நான்கு இதழ்களோடு இருக்கும். செவ்வாய்க்கிரகத்திற்கும் சுப்பிரமணியருக்கும் சம்பந்தமுண்டு. செவ்வாய்க்கிரகத்தைப் பூசிக்க வேண்டுவோர் சுப்பிரமணியரைப் பூசித்தால் போதும். ஏனெனில் அந்தக் கிரகம் சுப்பிரமணியர் அனுக்கிரகம் பெற்றது. இதனாலேதான் செவ்வாயும் சனியும் க்ஷவரத்திற்குக் கூடாது என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். எந்தக் காரியங்களிலும் தற்காலத்தில் அந் நியமம் இல்லாவிடினும் வைத்தியர்களால் அந் நியமம் கையாளப்பட்டு வருகிறது. செவ்வாய்த் தினத்தில் வைத்தியர்கள் மருந்து கொடுக்கமாட்டார்கள். எனவே இந்த வெட்சிப் பூ செவ்வாய்க்கும் உரியதாகும். அதனைக்கொண்டு முருகனைப் பூசித்தாலே செவ்வாய்க்கிரகத்தைப் பூசித்ததாகும்.

3. செங்காந்தள் :—இது மலைகளில் நெருப்புக் கொள்ளிபோல் சிவப்பாய், அகலம் குறைந்தும் நீளம் மிகுதியாகவும் உள்ள ஒரு பூவாகும். இந்தப் புஷ்பம் பூத்தால் அதிக மழையில்லை என்று சொல்வார்கள்.

4. முல்லை :—மகாவிஷ்ணு முல்லைக்குத் தெய்வம். அவருக்கு விருப்பமான பூ முல்லை. அப் பூ சுப்பிரமணியருக்குச் சிறந்தது எப்படி ? வள்ளி குறிஞ்சி நிலப்பெண். அவளுக்கு விருப்பமான பூ, தன் தந்தைக்கு விருப்பமான பூவாகிய முல்லையே ஆகும். ஆதலினால் அதுவே முருகனுக்கும் உரியதாகும்.

5. தாமரை :—சுப்பிரமணியருக்கு முக்கிய அங்கமெல்லாம் தாமரைபோன்றவை. அவதரித்ததும் தாமரையில் என்று பேசினோம். அவருடைய கண்கள், வாய், கைகள், பாதங்கள், முகம், கொப்பூழ், திருவடி யாவும் தாமரை போன்றவையே என்றும், சிவபெருமான் செந்தாமரைக் காடு பூத்தாற்போலிருக்கின்றான் என்றும், வேதாகமங்

களிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அப்பர் சுவாமிகளும் திருஆரூர்ப் பதிகத்தில் "ஆயிரம் தாமரை போலும் ஆயிரம் சேவடியானும்" என்று பாடியுள்ளார். இப்படித் தனக்குரித்தான தாமரையை ஒருகால் பிரமன் எடுத்துக்கொண்டானே என்றே சுப்பிரமணியர் அவன் தலையில் குட்டினர் என்றும் கற்பனையாகக் கூறப்படுகிறது.

**நிவேதனம்**

சுப்பிரமணியருக்கு விருப்பமானது தினைமாவினால் செய்த மாவிளக்கு. தேனும் கலந்ததாகும். அதுவன்றியும் தயிர்ச்சாதமும் அவருக்கு உகந்தது. தற்போது கார்த்திகை மாதத்தில் வரும் விரதத்திற்கும் ஒரு கிருத்திகையிலாவது தினைமா உபயோகிப்பது அரிதாக இருக்கின்றது. சஷ்டியில் உபயோகிப்பதும் சந்தேகந்தான். எது உயர்ந்தது என்றால் காராம் பசுவின் நெய்யும் தாமரைத் தண்டின் நூலும் தேனிட்டுப் பிசைந்த தினைமாவுமே யாகும்.

**தோத்திரம்**

சுப்பிரமணியர் தமிழ்ப்பிரியர். "செந்தமிழ் நூலோன்" என்று திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் கூறுகிறது. "செந்தமிழ்க் குரவன்" என்றும் பேசப்பட்டுள்ளான். முருகன் செந்தமிழாசாரியன். அவன்தான் அகத்தியனுக்கு உபதேசித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அவனைத் தமிழால் திட்டினாலும் நம்மை வாழவைப்பான்.

"மொய்தாரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன் வெய்யவாரணம்போல்
கைதான் இருபதுடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே"

என்பது கந்தரலங்காரம்.

தமிழில் ஸ்தோத்திரம் பாடி முடித்துப் பிரதக்ஷணம் வந்து நமஸ்காரம் செய்யவேண்டும்.

**அபராதம்**

இதுவரையிலும் அசிரத்தை, அஞ்ஞானம் ஆகிய இவற்றின் பயனாகச் செய்த தவறுகளை யெல்லாம் மன்னிக்கும்



படி மந்திரத்தை ஜெபித்தல் வேண்டும். தன்னை உய்விக்கும் படி பரிந்து கேட்டுக் கொள்ளவேண்டும்.

**ஆகாரம்**

தற்காலத்தில் விரதம் விரதம் என்று சொல்லிக் கொண்டு மூன்றுவேளைக்கு மேற்பட்டும் உண்ணுகிறார்கள். அதற்காக அதிகச் செலவும் செய்கிறார்கள். அது தவறு. கிருத்திகை நட்சத்திரத்தில் சாப்பிடாமலிருத்தல் நல்லது. சிலர் தண்ணீர்கூடப் பருகாமல் இருப்பார்கள். அது நிற்சலமாக இருத்தல். சிலர் உமிழ்நீரும் விழுங்காமலிருப்பார்கள். இதுதான் மிக உயர்ந்தது. தற்காலத்தில் ஆங்கில அமெரிக்க மருத்துவர்களும் பட்டினிகிடப்பது உடலுக்கு நல்லது என்று சொல்லுகிறார்களே அதுவும் கவனிக்கத்தக்கது. சிலர் ஒரு நாள் முழுதும் பேசாமலே மௌனமாக இருப்பார்கள். வாரம் ஒரு கிழமையிலோ திருவாதிரையிலோ சஷ்டியிலோ இம்மாதிரி ஆண்டவன் அனுக்ரகம் புரிய உபவாசமிருந்தால் எவ்வளவோ ஆத்மலாபத்தை அடையலாம்.

அபிஷேகச் சந்தனக்குழம்பை மூன்று ஆசமன அளவு சாப்பிட வேண்டும். பால்பழம் முதலியவை சாப்பிடலாம். அதையும் தவிர்ப்பது சிரேஷ்டமானது. இலேசான பலகாரம் செய்யலாம். உடலின் சௌகரிய நிலைக்குத் தகுந்தபடி ரஜஸ், தமஸ்குண ஆகாரங்களைத் தள்ளிச் சத்துவத்தைத் தரக்கூடிய புஷ்டியைத தரக்கூடியதான ஆகாரங்களைச் சாப்பிடவேண்டும். கத்தரிக்காய் தாமசகுணத்தை அதிகரிக்கச் செய்யும். அது கூடவே கூடாது. பகலில் அரைவயிறு சாப்பிடவேண்டும். கால்வயிறு ஜலம் சாப்பிடவேண்டும். கால்வயிறு காலியாகவே இருக்கவேண்டும். அதுதான் நலம்தரும்.

சாப்பிட்ட பிறகு சுப்பிரமணியர் கிருபையைப் பெறத் தோத்திரமோ, சரித்திரமோ, சாஸ்திரமோ சுப்பிரமணியரைப் பற்றியதாக இருப்பதைப் படிக்க, கேட்க, சிந்திக்க, தெளிய அன்று நம் மனத்தைச் செலுத்தவேண்டும். ஏதேனும் மந்திரத்தைச் சொல்லலாம். வாக்காலும் மனத்தாலும் அவனைச் சிந்தித்துக் காலத்தைக் கழிக்கவேண்டும். மாலையில் சுப்பிரமணியரைப் பற்றிய ஜெபங்களைச் செய்யவேண்டும். மாலையில் ஆலயம் சென்று பிரதக்ஷணம் வரவேண்டும்

அல்லது சிரவணம், பஜனை முதலியவைகளில் ஈடுபடுவது
அவசியம். இரவைச் சிவராத்திரிபோல் அனுஷ்டித்தல் சாத்
தியமா? தூங்காமல் இருக்க முடியுமா? முடியும். தூங்கு
வதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டு தோத்திரம்
முதலியவை செய்து அவன் திருநாமத்தை உச்சரித்து
அவனையே எண்ணி நற்காலமாகக் கழித்தல் வேண்டும்.

விரதம் ஆரம்பித்துப் பிறகு விரோதமாக நடந்தால்
தோஷமாகும். அது கூடாது. பாவம் சம்பவிக்கும். சங்கல்
பிப்பது என்பது ஒருவன் தனக்குள்ளே நியமித்துக்கொள்
வது. சொல்வது என்பது பிறருக்கு அல்லது எதிர்பட்டார்க்
குத் தெரிவிப்பது. செய்தல் என்பது அன்னியருக்குப் பரவு
தல் அல்லது அறிவித்தல். சங்கல்பம் ஏற்படுத்திக்கொண்டு
செய்யத் தவறினால் பாவம். ஆனால் சங்கல்பம் செய்யா
மலும் இரவு தூங்காமலிருக்கலாம்.

மறுநாள் ரோகிணி நட்சத்திரத்தன்று அதிகாலையில்
எழுந்து பாரணை செய்யவேண்டும். அதாவது சக்தியைக்
கொடுக்கும் உணவு சாப்பிட வேண்டும். திராக்ஷை ரசம்
இக்காலத்திலும் விரதம் பூர்த்தியான பிறகு முதன்முதலில்
சாப்பிடப்படுகிறது. நாம் இப்போது சாப்பிடும் ஆகாரம்
மிக்க சத்துள்ளதாய் சீக்கிரம் ஜீரணமாகக் கூடியதாயிருக்க
வேண்டும். நீர் சாப்பிடவேண்டும். பழம், பழங்களின்
சாறு மிக நல்லது.

அடியார்க்கு அன்னமிடல் வேண்டும். நாம் எல்லா
அடியார்களையும் சுப்பிரமணிய மூர்த்தியாக எண்ணித் தரு
மம் செய்யவேண்டும். இவன் முன் கிருத்திகைக்கு வந்த
வன், இனி வரமாட்டான் என்றே எண்ணக்கூடாது.
வருபவனுடைய ஜாதி, மதம், ஊர் அறியவேண்டுவதில்லை.
சுப்பிரமணியர் சின்னங்கள் இருந்தால் போதும். சுப்பிர
மணியர் பழனியில் கௌபீனத்துடன் இருக்கிறார். அவ
ருக்குச் சாமிநாதன் என்பது காரணப்பெயர். தண்ட
பாணியும் அவரே. காவி வஸ்திரமும் அவருக்கே உகந்தது.
ஆகையால் எவனொருவன் விபூதி ருத்ராக்ஷத்துடன் கையில்
தடியுடன் ஈஸ்வர ஞாபகத்தை உண்டுபண்ணக்கூடியவனே
அவனைத்தான் பூஜிக்க வேண்டும். இக்காலத்தில் தண்டம்
என்னும் பதத்தின் அர்த்தமே விளங்குவதில்லை. வேறு
அர்த்தங்கள்தான் விளங்குகின்றன. ஒருவன் தன்னினும்



பெரியோரைக் கண்டால் சுவாமி தண்டம் என்று சொல்
கிறான். என்ன அர்த்தம்? 'நீ தண்டத்திற்காக இருக்கிறாய்;
அல்லது நான் தண்டம் வைத்திருக்கிறேன் ஜாக்ரதை' என்று
அர்த்தந்தான் தெரிகிறது. உண்மை அர்த்தம் என்னை
யெனின் 'சுவாமி! நான் திக்கற்றவன். ஓர் உதவியும் இல்
லாத ஒரு தண்டம் தரையின் வசமாக ஆவதுபோல் திக்கற்ற
யான் உன் வசமானேன். நான் தாசன். நீ எஜமான்.
என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று சொல்லி வழிபட
வேண்டும்.

அரசாங்க அலுவலாளர்களை உடையால் இன்ன
அதிகாரம் உடையவர்களென்றறிகிறோம். உடையில்லாத
காலத்தில் நாம் அவர்களுடைய அதிகாரத்தைக் கண்டு
பிடிக்க முடியாதல்லவா? உடைக்குத் தகுந்தபடி நாம்
மரியாதை செய்ய வேண்டும், ஆதலால் உடையைக்
கொண்டு ஒருவர் மேற்கொண்ட தொழிலை அறியலாம்.
அதுபோல் அடியார்களைச் சிவச் சின்னங்களால் அறிய
லாம். அதாவது காவி வஸ்திரம், விபூதி, உருத்திராக்கம், தண்
டம் முதலியன. இத்தகைய சின்னங்களைக்கொண்ட அடி
யார்களை விரத தினத்தன்று பூசிக்கவேண்டும். யாராயிருந்த
போதிலும் இத்திருச்சின்னங்களோடு வந்தால், அவர்
களுடைய ஊர், பெயர், தொழில் இவற்றை ஞாபகத்திற்குக்
கொண்டுவராமல் அவரைச் சுப்பிரமணியரென்றே கருதி
நம்மிடத்தும் அவரிடத்தும் சுப்பிரமணியர் இருப்பதாக
எண்ணி அவரை அழைத்துவந்து உபசரிக்க வேண்டும்.
அவர்களில் சிறியோர் பெரியோர் என்பதும் கிடையாது.
அங்ஙனம் இருப்பினும் நாம் அந்நிலையை எங்ஙனம் எண்ண
வேண்டும்? தயிரிலும் பாலிலும் வெண்ணெய் இருக்கிறது.
பாலில் வெண்ணெயிருப்பது தெரியவில்லை. அதுபோல்
கடவுள் சிறியோரிடத்து இருப்பர். தயிரில் வெண்ணெய்
வெளிப்பட்டு நன்றாகத் தெரிகிறது. அதுபோல் அடியாராக
வரும் சில பெரியோர்களிருப்பார்கள். வயதை அளவாகக்
கொண்டு சிறியோரை அவமதிக்கக்கூடாது. அன்றைய
தினமாவது அப்படிப்பட்ட அதிதிகட்கு அன்னமிட வேண்
டும். பின்னிட்ட போஜனம் கூடாது. அவர்களுக்கு முத
லில் உணவுபடைத்து உண்ணச்செய்துவிட்டுப் பிறகு நாம்
சாப்பிடுதல் வேண்டும். அல்லது உடனிருந்தாவது உண்ணு

தல் வேண்டும். ஆனால் நாம் சாப்பிட்டபின் உணவு படைப்பது பாவமான செயலாகும். நாம் சுப்பிரமணியரையே அவமதித்ததாகும். நமக்கு ஒரு பதார்த்தம், அவர்கட்கு வேறு பதார்த்தம். நமக்கு ஒரு அன்னம். அவர்கட்கு வேறு அன்னம். நமக்கு ஒரு காய்கறி அவர்கட்குவேறு காய்கறி. நமக்கு ஒருவித நெய். அவர்கட்கு வேறு நெய். அப்படியாகச் செய்யவேகூடாது. அங்ஙனம் எண்ணவும்கூடாது. அவருக்குத் திருப்தி செய்வதையே ஆண்டவனுக்குத் திருப்தி செய்வதாகக் கொள்ளவேண்டும். அவருடைய சரீரத்தையே ஆண்டவருடைய கோவிலாக எண்ணவேண்டும். இப்படி நாம் விரதத்தை அநுஷ்டித்தால் சுப்பிரமணியர் நமக்கு போகம், வீரம், ஞானம், ஆனந்த முக்தி இவற்றைத் தருவார்.

இனி நாம் விசாரிக்கவேண்டியது, யார் யார் அநுஷ்டித்தார்கள் என்பதைப்பற்றியாகும். முப்புவனங்களிலும் இந்தக் கிருத்திகை விரதத்தினை அநுஷ்டித்து முத்திப்பேறு அடைந்தவர்களுடைய தொகையை யாரால் சொல்ல முடியும்?

“ இப்படி யாரந் நாளில் விரதத்தை யியல்பின் நோற்று
முப்புவ னத்தின் வேண்டும் முறைமையை யடைந்த ரோர் ?
மெய்ப்படு தொகையை யாரே விளம்புவ ரீதே யன்றி
யொப்பரும் விரதம் வேறு மொன்றுள தரைப்பக் கேண்மோ ”

—க. தட். கந்தவிர 19

1. மறையோன் ஒருவன் கிருத்திகை விரதம் நோற்று முக்தியடைந்தான். மறையோன் என்றால் பிரம்மசாரி ஆசிரமத்திலிருப்பவன்.

2. அந்தணன் ஒருவன் நோற்று முக்தியடைந்தான். அதாவது இவ்விரதம் நோற்றுத் திரிசங்கு சக்ரவர்த்தியாய்ப் பிறந்து பெரும்பேறெய்தினான்.

3. ஓரரசன் கிருத்திகை விரதத்தை அநுஷ்டித்தான்.

4. ஒரு வேடன் இவ்விரதத்தை அநுட்டித்தான். இருவரும் முறையே அந்திமான் சந்திமான் ஆக ஆகிப் பன்னாள் இந்தப்பாரினை ஆண்டு, பின் முத்திபெற்றார்கள்.



5. நாரதர் எழுமுனிவர்களுக்கும் மேம்பட்ட பதவியைப் பெறுவான்வேண்டி விநாயகக் கடவுளை வணங்கிட, அவர் நாரதருக்குச் சுப்பிரமணியர் தொடர்புகொண்ட கார்த்திகை விரதத்தை அநுஷ்டிக்கும்முறைகளையும் அதன் சிறப்பையும் எடுத்து உபதேசித்தார். பின் நாரதர் அந்த விரதத்தை முறை வழுவாது அநுஷ்டித்துச் சப்தரிஷிகளிற் றலைமைப் பதவியைப் பெற்றார்.

6. பகீரதன், கோரன் என்னும் அவுணர்கோனால் தன் நாடு முதலிய இழந்து துன்புற்றுக் கானகத்திற் சென்று சுகர் என்ற முனிபுங்கவரைச் சந்தித்துத் தன் குறைகளைச் சொல்லவே அவர் அவனுக்குச் சுப்பிரமணியர் விரதத்தை உபதேசித்து இதனை அநுஷ்டிப்பாயாகில் நின் பகைவன் மடிவான். இழந்த நாட்டையும் பெறுவாய் என்றருளினார். அவனும் அங்ஙனம் நோற்றுப் பகையை வென்று இனிதே நாடாண்டுவந்தான். இப்படியாகத் தேவர்களும் மற்றையோரும் கார்த்திகை விரதத்தையும் சுக்கிரவார விரதத்தையும் அநுஷ்டித்து முத்திப்பேறு முதலியவற்றைப் பெற்றார்கள் என்றால் இதன் மகிமையை என்னென்றுரைப்பது?

நாம் நல்ல எண்ணங்களைப் பயிற்சி செய்ய வேண்டும். ஆசை கெட்ட எண்ணத்தின் அறிகுறி. அதை அறவே நீக்க வேண்டும். ஆசைக்கும் எண்ணந்தான் காரணம். ஆசையும் எண்ணமும் தனித்து இயலாத நெருப்பும் விறகும் போல இருக்கின்றன. எண்ணமின்றேல் ஆசை ஏது? இராமருக்கு விசுவாமித்திரர் கூறுகிறார்.

“இச்சையாம் விறகு மாண்டால், எண்ணமாம் வன்னி மாயும்” (ஞானவாசிட்டம்). திருக்குறளாசிரியரும் “ பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்” என்றார். வைணவ சித்தாந்தமும் அதுவே. நம்மாழ்வார் “ அற்றது பற்றெனின் உற்றது வீடு” என்றார். மனம் பரிசுத்தமடைந்தால் ஞானம் வரும். ஞானம் தோன்றின் பிறப்பு அறும். பிறப்பு நீங்கினால் மோக்ஷம் அடைவோம். அதுதான் துன்பமற்ற தூய ஆன்மாவின் ஆட்சி நிலையாகும்.

—

# 25. பெரியபுராணப் பெரியார் மூவர்*

பெரிய புராணத்திற் கண்ட பெரியார்களுள், மூவரைச் சிறந்தவர்களாகத் தேர்ந்தெடுத்தார் பட்டினத்தடிகளார். அம்மூவராவார் சிறுத்தொண்டர், திருநீலகண்டர், கண்ணப்பர் ஆவர். “செயற்கரிய செய்வார் பெரியர்” என வள்ளுவர் கூறியாங்கு இம்மூன்று பெரியாரும் செய்த செயற்கருஞ் செயல்கள் பட்டினத்தடிகளின் மனத்தைக் கவர்ந்தன போலும். அதனால் அம்மூவரையும் முறையே வைத்து, அவர்தம் செயல்போற் செய்யவல்லேன் அல்லேன். ஆதலின் நான் இறைவனுக்காளாவ தெப்படி? என இரங்குகின்றார். அம்மூவர் செயல்கள் யாவை?

**சிறுத்தொண்டர்:** வாளால் மகவறிந்து இறைவனுக்கு ஊட்டினார். **திருநீலகண்டர்:** மனைவியின் சூளால் இளமையைத் துறந்தார். **கண்ணப்பர்:** நாளாறிற் கண்ணிடந்து அப்பினார். இவைகொண்டு நாமறிய வேண்டுவதென்ன?

உலகத்துப் பிறவிகளுள் மக்கட் பிறவியே சிறந்தது. “துறக்கப்படாத உடலை” எடுத்த நாம் செய்ய வேண்டுவது நம்மைத் தோற்றுவித்த இறையை அறிந்து அடைவதற்கு வேண்டிய செயலே. அச்செயல் யாது? அதுவே தொண்டாகும். தொண்டு செய்ய முற்படுவோர் யாவரும் தம் பொருள்களையும், தமக்குரிய உடலையும், உயிரையும் தியாகம் செய்ய முன்னிற்க வேண்டும். இன்றைய உலகில் தொண்டு செய்ய முற்பட்ட பெரியார்களைக் காணின் அது நன்கு விளங்கும்.

உலகில் மக்களுக்குத் தொண்டியற்ற முற்படுவோர் தம் பொருள்களைத் தியாகம் செய்தாலும், பின்னரும் பொருள்களைச் சேமித்துப் போற்றி வருவார்கள். ஆனால் இறைவனுக்குத் தொண்டியற்றுவோர் பொருளைப் பெரிதெனப் போற்றார்கள். முன்னவர் பொருளைப் போற்றித்

*மறைத்திரு ஞானியாரடிகள் 1940-ல் செப்டம்பரில் திருக்கோவலூரில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம். மயிலம் - தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் வித்துவான் - ஆ. சிவலிங்கம் அவர்கள் குறிப்பெடுத்து உதவியது.



தொண்டியற்றுவர். பொருள் போயின் தொண்டில் இளைப்பர். பின்னவரோ என்னின் பொருள் போயின் தொண்டிற் சிறப்பர். அன்றிப் பொருளையே பெரிதென எண்ணுவராயின், அவர்தம் தொண்டு சிறவாது; இறை அருளும் கிட்டாது.

கடவுள் தொண்டர்களுக்குப் பொருள்கள்மேற் பற்று இராது. பற்று இருவகைப்படும். அவை: அகப்பற்று, புறப்பற்று. அகப்பற்று தன்னைப் பற்றியது. புறப்பற்று தன்னின் வேறாய மனைவி, மக்கள், பொருள் முதலியவற்றைப் பற்றியது. இவ்விருவகைப் பற்றுக்களும் இறைவனுக்குத் தொண்டியற்ற நீங்குவனவாம். இப்பற்றுக்கள் நீங்கினால் இறைவனை அடையலாம். இவ்வுண்மையினை அறிவிப்பனவே மேலோர் வரலாறுகள். எங்ஙனமென்பதைக் காண்போம்.

சிறுத்தொண்டர், தமது ஒரே மகனைத் தாய் பிடிக்கத் தந்தையாகிய தாமே அறுத்து இறைவனுக்குத் தொண்டியற்றினார். இதனால் மகனைத் தியாகம் செய்தவராகின்றார். ஆக இவர்களுக்குப் புறப்பற்று நீங்கியது. இறைவனை அடைந்தார்.

திருநீலகண்டர், தமதுமனைவியார் சூளுரைத்த காரணத்தால் தமது இளமையைத் துறந்து இறையருள் எய்தினார். இளமையைத் துறத்தல் ஒரு செயற்கரும் செயல். அதிலும் தம்மனைவியின் சூளைப் பொருளென எண்ணித் துறத்தல் போற்றத்தக்கது. ஆதலின் இவர் புறப்பற்றை (மனைவி இன்பத்தை)த் துறந்ததேயன்றி, அகப்பற்றையும் துறந்த பெரியாராகின்றார்.

கண்ணப்பர், காளத்தி மலைச் சிவனுக்கு இரவில் காவலிருந்து பகலில் வேட்டையாடி இறைச்சி கொண்டு சிவபூசை நிகழ்த்தித் தொண்டு செய்து வரும்போது ஆறாம் நாள் இறைவனின் கண்ணில் இரத்தம் வடியக் கண்டு, மயங்கித் தெளிந்து, தனது கண்ணை இடந்து அப்பினார். இவர் செய்த இச்செயல் (கண்ணை இடந்தது) செயற்கரும் செயலாம். உலகில் கண்ணையே பெரிதெனப் போற்றுவர். “எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” என்றார்களே தவிர, வேறு உறுப்புக்களுள் ஒன்றைக் கூறினார்களில்லை.

அவ்வளவு சிறந்ததாகிய கண்ணைத் துறந்த நம் அடியார் அகப்பற்றை விட்டவராகின்றார்.

ஆக இம்மூவரும் பற்றுக்களை நீக்கி, இறைவனை அடைந்தவர்களாகின்றார்கள். பட்டினத்தடிகள் இம்மூவரையே சிறந்தவராக எடுத்து வியந்திருக்கின்றார். அதிலும் பெரிய புராணத்தில், திருநீலகண்டர், கண்ணப்பர், சிறுத்தொண்டர் என முறை வைப்பு இருக்க, பட்டினத்தடிகள், சிறுத்தொண்டர் திருநீலகண்டர், கண்ணப்பர் என முறை மாற்றியதிலும் ஓர் உண்மை உண்டு.

புறப்பற்றை நீக்கிய சிறுத்தொண்டரை வியந்து அகப்பற்றை நீக்கிய மற்றையோரைப் பின்னர் வியந்துள்ளார். அன்றியும் சிறுத்தொண்டர், மனைவி, பிள்ளை (சீராளன்) ஆம், இவர்களோடு சேர்ந்து மூவராகத் தொண்டு இயற்றினார்; திருநீலகண்டர் மனைவியோடு சேர்ந்து இருவராகத் தொண்டு இயற்றினார். கண்ணப்பர் தனித்து ஒருவராகத் தொண்டு இயற்றினார். இதனால் பட்டினத்தடிகள் முறைவைப்புப் போற்றத்தக்கதாக இருக்கின்றது. இனி அவர் பாடலைக் கண்டு மகிழ்வாம்.

வாளால் மகவரிந் தூட்டவல்லே னல்லேன் ; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லேன் ; தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல்லே னல்லேன் ; நான்இனிச்சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பனுக்கே.

வாள், வெட்டுங் கருவியாயிருக்க, 'அரிந்து' என்று அடிகள் கூறியது, சிறுத்தொண்டர், ஆட்டை வெட்டி அறுப்பது போன்றின்றி, காய்கறிகளை அரிவது போன்று தமது மகனை, ஒருவித நடுக்கமும் இன்றி மன அதிர்ச்சியும் இன்றி அரிந்தார் என அவர்தம் தொண்டின் சிறப்பை வியந்திருக்கின்றார் என்பதை விளக்குன்றது.

இம்மூவரது தொண்டுகளும் வீரத் தொண்டுகளாக மிளிர்கின்றன.

தொண்டு வாழ்க! தொண்டர் வாழ்க!

# சொற்குறிப்பு அகராதி*

(எண் - பக்க எண்)


அகிலாண்டேசுவரி அம்மை பதிகம் 70
அச்சுத களப்பாளர் 53
அதர்வசிகை 72
அதிரா அடிகள் 4, 7
அத்வைதம் 58
அர்திமான் 260
அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் 5
அருட்டுறை 36
அருணகிரிநாதர் 8, 10, 19, 21, 28, 111, 118, 153
அருணந்திசிவம் 52, 75, 134, 140, 167, 172
அருந்ததி 201, 216
அன்னம்பட்டீயம் 65
அஷ்டோத்தர சஹஸ்ரநாமம் 2
ஆகமம் 45, 109, 184
ஆமாத்தூரார் 28
ஆறெழுத்தலங்காரம் 14
ஆனந்தக் கூத்தர் 63
இருபாவிருபஃது 52, 134
இரௌரவாகமம் 57
இளங்கோவடிகள் 196, 206
ஈசாவாஸ்யம் 41, 71
உண்மை விளக்கம் 52, 127,149
உத்ஸவம் 76, 81
உபநிஷத் 109
உமாபத்திரம் 91
உமாபதிசிவம் 53, 54, 55, 142, 144, 167
உருத்திரன் 48
ஊர்த்துவவீரியம் 192
எல்லப்ப நாவலர் 28
ஏகாம்பரநாதன் 93
ஐந்தவத்தைகள் 133
ஐந்திணை ஐம்பது 202
ஐந்தொழில்கள் 29
ஒருபா ஒருபஃது 17, 47
ஔவையார் 8, 139, 197, 199
கச்சியப்ப சிவாசாரியர் 155,172, 175, 179, 188
கச்சியப்ப முனிவர் 6, 65
கடவுள்மாமுனிவர் 54
கடுவன் இளவெயினனார் 36
கடோபநிஷத் 72
கணபதி உபநிஷதம் 3
கண்ணகி 198, 206, 207
கண்ணப்பர் 262, 264
கந்தர் அலங்காரம் 11, 256
கந்தர் அநுபூதி 10, 19, 25, 106, 111, 119, 169
கந்தர் கலிவெண்பா 10, 15, 22, 170
கந்தபுராணம் 9–11, 15, 16, 18, 19, 24–26, 29, 32–35, 128, 155–158, 173, 175, 177, 181, 186, 188–190, 196, 237, 238, 240, 260
கபில தேவநாயனார் 7
கமலாட்சன் 79
கம்பர் 139, 199, 216
கலித்தொகை 200
கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் 2, 3
கல்லாடம் 23
களவியல் 33, 180


*தொகுத்தவர் : புலவர் - முருகவேள், எம். ஓ. எல்.

காஞ்சனமாலை 209
காஞ்சிப்புராணம் 12, 45, 63, 91, 174, 186
காமாட்சி 93
காரைக்காலம்மையார் 114, 137, 149, 162
காளி 92
குட்வின் 38
குமரகுருபரர் 55, 127, 145, 152, 203
குமாரசுவாமியம் 25
குமார தந்திரம் 13
குருபரமாலை 16
குளஜிஹ்வா நியாயம் 187
குறுந்தொகை 177, 197, 200
கேடிலியப்பபிள்ளை 97
கொடிக்கவி 20
கோரான் 261
கௌமாரவிஜயம் 17, 24
கௌரி 92
சதருத்ரீயம் 14
சந்திரன் 260
சப்தகல்ப த்ருமம் 58
சம்ஹாரம் 30, 75
சரவணபவன் 174
சர்வஞானோத்தரம் 57
சற்காரியவாதம் 197
சாந்தலிங்கர் 31
சாமுசித்தர் 64
சிதம்பரசுவாமிகள் 28, 31, 178, 181
சித்தாந்தம் 55, 110
சித்தாந்த சிகாமணி 14
சிலப்பதிகாரம் 194, 198, 201
சிவகதி 111
சிவஞானசித்தியார் 13, 26, 30, 73, 84, 90, 120, 125, 131–136, 140, 156, 169, 170, 205
சிவஞான போதம் 54, 56, 66, 108, 124, 156, 198
சிவஞான முனிவர் 2, 5, 72, 106, 111, 134, 177
சிவதத்துவ விவேகம் 65
சிவப்பிரகாசம் 30, 110, 170
சிவப்பிரகாசர் 225, 235
சிறுத்தொண்டர் 96, 263, 264
சீராளன் 264
சீவக சிந்தாமணி 27, 203
சுசீலன் 79
சுதன்மன் 79
சுபுத்தி 79
சுப்பிரபேதாகமம் 55
சுப்பிரமணியம் 174
சுப்பிரமணியம்பிள்ளை (கா.) 28
சுமதி 213
சுவாயம்புவம் 57
சுவேதவனப் பெருமாள் 53
சுவேதாஸ்வதரம் 70, 190
சூரசேனன் 209
செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் 66, 67
செந்தில் நிரோட்டக யமக அந்தாதி 5
செவ்வந்திப் புராணம் 28, 195
சேக்கிழார் 38, 88, 96, 167
சேக்கிழார் பிள்ளைத்தமிழ் 146
சைவ எல்லப்ப நாவலர் 28
சோமாஸ்கந்தர் 175
சோமசுந்தரர் 215
சோமேசர் முதுமொழி வெண்பா 228
ஷண்முகத்தியான சுலோகம் 17, 18, 21, 254





ஞானக்கூத்தர் 44
ஞானசம்பந்தர் 53, 89, 166, 170
ஞானம் எட்டுவகை 95
ஞானவாசிட்டம் 32, 261, 268
தடாதகை 209, 211
தணிகைத் தசாங்கம் 23
தணிகைப் புராணம் 6, 19
தண்டபாணி சுவாமிகள் 24, 25
தத்துவநாதர் 167
தருக்க சங்கிரகம் 65
தாயுமானவர் 32, 58, 96–106, 110, 153, 183
தாரகாசுரன் 196
தாரகாட்சன் 79
திரிகடுகம் 228
திரிசங்கு 260
திருக்குறள் 1, 43–45, 51, 62, 68, 85, 86, 97, 98, 112, 117, 121, 137, 138, 139, 183, 197, 201, 219, 243
திருக்குற்றாலக்குறவஞ்சி 245
திருக்கோவலூர் 8
திருக்கோவையார் 186, 198, 202
திருச்செந்தூர் அகவல் 18
திருச்செந்தூர்க்கலிவெண்பா 18
திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் 256
திருப்புகழ் 8, 20, 21, 154
திருப்பெண்ணாகடம் 53
திருப்போரூர்ச் சந்நிதிமுறை 13, 14, 16, 22, 23, 24, 35, 178, 181, 246
திருமூலர் 50, 54, 55, 79, 96, 114, 136, 189, 198
திருவகுப்பு 18
திருவருட்பயன் 34, 134, 192
திருவாசகம் 22, 85, 113, 122, 128, 130, 150, 169, 203, 205
திருவிசைப்பா 89
திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 253
திருவிளையாடற் புராணம் 5, 31, 87, 206, 214, 216
திருவுந்தியார் 43, 109
திருவெங்கைக் கோவை 182
திருவையாற்றுப் புராணம் 46, 48
தேவந்தி 207
தைத்திரீயம் 70, 77, 88
தொல்காப்பியம் 21, 30, 182, 195, 199
நக்கீரர் 33, 153, 177, 179
நச்சினார்க்கினியர் 12, 20, 22, 27, 47, 90, 199
நந்தி 44
நமிநந்தி யடிகள் 88
நம்பியாண்டார் நம்பிகள் 1, 7
நம்பிராசன் 155
நம்மாழ்வார் 70, 261
நளவெண்பா 202
நன்னெறி 235
நாரதர் 156, 260
நாலடியார் 197, 204
நாவுக்கரசர் 32, 42, 70, 73, 69, 75, 137, 166
நான்மணிக்கடிகை 171
நிகண்டு 21, 25
நீதிவெண்பா 204
நீத்தல் விண்ணப்பம் 109
நீலகண்ட சிவாசாரியர் 71
பகவத் கீதை 37, 217, 219
பகீரதன் 261
பஞ்சபுராணம் 119

R6130
N50



பட்டினத்தார் 38, 44, 47, 231, 264
பதஞ்சலியார் 59
பதிற்றுப்பத்து 177
பதினான்கு சாத்திரங்கள் 168
பரஞ்சோதி முனிவர் 5
பாரக்யேயம் 57
பரிபாடல் 36, 154, 181, 195
பரிமேலழகர் 1, 37, 85, 87, 170, 201, 204
பழமொழிகள் 181, 191, 193, 204
பாணினி 59
பாம்பன் சுவாமிகள் 25
பிங்கலந்தை 184
பிரபுலிங்கலீலை 221, 224, 225, 227, 228, 244, 254
பிருகதாரணியகம் 184
பிராகிருதர் 64
புரூரவன் 87
புலவர் புராணம் 25, 180
புறநானூறு 180, 205
பெரியபுராணம் 7, 48, 137, 145, 146, 147, 167
போராசிரியர் 186
போதாயன சாகை 14
போதாயன சூத்திரம் 88
போப் 38
பௌஷ்கரம் [illegible]7
மகுடாகமம் 55
மங்கையர்க்[illegible]ியார் 38, 16[illegible]
மணி[illegible] 32, 44, 89, 108, 1[illegible], 150, 166, 191, 201
மது[illegible]க் காஞ்சி 12, 177
மயில் [illegible]மையன் 63
மயில் அலங்காரம் 14
மலயத்துவசன் 208, 209
மறைஞான சம்பந்தர் 58, 167
மனவாசகங்கடந்தார் 52, 126, 167
மிருகேந்திராகமம் 57
முண்டகோபநிஷத் 66, 71
முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் 24, 204
முக்திரி 287
முருகன் 175
முருகாற்றுப்படை 20, 87, 90, 153
மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை 7
மெய்கண்டார் 38, 131, 136, 167, 171, 198
மௌனகுரு 98
வரகுண தேவர் 253
வாபூசை 214
வாதுளாகமம் 13
வாயு சம்ஹிதை 55
வால்மீகர் 74, 80
விக்கிரம சிங்கபுரம் 63
விசாகன் 176
விச்சாவதி 206
விச்சுவாவசு 206
வித்யுர்மாலி 79
விநாயகர் 1, [illegible]
வியாச சூத்திரம் 71
வியாசபாரதம் 88, 187
வெண்பாமாலை 17
[illegible]ாரண்யம் 97
வே[illegible] அலங்காரம் 25, 27
வை[illegible]்தியலிங்க சுவாமிகள் 39
[illegible]யிகர் 64
[illegible]ராக்கிய தீபம் 3[illegible]

84253